www.tamilarangam.net

# பெண்கள் சந்திப்பு மலர் - 2004



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

பெண்கள் சந்திப்பு மலர்-8
2004
வெளியீடு
பெண்கள் சந்திப்பு குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Penkal Santhippu Malar

2004

Collection of Women's Writings
and
Paintings.

Compiled
by
Malar Kuzhu
Ranji (Swiss)
Theva (Germany)
Uma (Germany)
Viji (France)
Nirupa (Germany)

Published on:
Oct. 2004

Published by
Tamil Women's Forum
email:
penkalsanthippu@yahoo.com
Address:
Tamil Women*s Forum
C/O SALZ
Waiblingerstrasse 59
70372 Stuttgart
Germany

Layout by:
Ranji(Swiss)

Printed at:
Mani Offset
Chennai-5

Distribution in India:
Vidiyal Pathippagam
11, Periyar Nagar
Masakkalipalayam (North)
Coimbatore 641 015
email: vitiyal2000@eth.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | | |
|---|---|---|
| பெண்கள் சந்திப்பு - சிறு குறிப்பு | 007 | தேவா |
| விடுதலை | 012 | ஆழியாள் |
| பெண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் | 013 | வைகைச் செல்வி |
| நிஜங்களும் நிழலாம் | 016 | பாலறஞ்சனி |
| ஓவியம் | 017 | மோனிகா |
| நலங்கெடப் புழுதியில்... | 019 | பாரதி |
| மழை ஏன் வந்தது? | 020 | நிருபா |
| இருப்பின் பின்னால் வாழ்வின் வெளி | 029 | அனார் |
| மனநோயின் முன் பின் நிகழ்வுகள் | 030 | மாலதி மைத்ரி |
| பேட்டி | 031 | றஞ்சி |
| சிறகிழந்த பறவையாய் | 036 | *தமிழில்:*சந்திரவதனா |
| ஓவியம் | 049 | சுகந்தி |
| நான் | 051 | முகைசிரா முகைடீன். |
| என்று தணியும் இந்த சுதந்திர தாகம் | 052 | புதியமாதவி, |
| இன்னமும் ஏதோவொன்றிற்காய்... | 057 | எதிக்கா |
| நானும் ஓர் காவியம் தான் | 059 | விஜயலட்சமி சேகர். |
| அந்தி | 060 | பாமா |
| தீர்ப்பெழுதும் கரங்கள் பெண்களாகட்டும் | 064 | கோசல்யா சொர்ணலிங்கம் |
| கிறிஸ் கிராஸ் | 066 | *தமிழில்:*தயாநிதி |
| ஓவியம் | 079 | ஆரதி |
| தலைப்பில்லாத கவிதை | 081 | நளாயினி தாமரைச்செல்வன் |
| மரியானா | 082 | உமா |
| தீக்குள் விரலை வைத்தால்... | 089 | பாலரஞ்சினி சர்மா |
| கவிஞனின் மனைவி | 090 | *தமிழில:*புதியமாதவி |
| இன்னும் இருபது வருடங்களில் | 092 | ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் |
| ஓவியம் | 095 | அருந்ததி |

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| நாகதோஷம் | 097 | சுமதி ரூபன் |
| இளமைக்காலம் | 100 | சௌந்தரி |
| நகல்கிறது நதி | 102 | திலகபாமா |
| உரையாடல் | 103 | மல்லிகா |
| பனிமழையும் ஒரு சனிக்கிழமை மாலையும் | 106 | சந்திரா ரவீந்திரன் |
| ஓவியம் | 115 | வாசுகி |
| பிரச்சினைகளுக்கு முகவரியிடுவோம் | 117 | சுகந்தினி சுதர்சன் |
| விதைச்சொல் | 118 | மாலதி மைத்ரி |
| நான் பேச நினைப்பதெல்லாம் | 119 | முகைசிரா முகைடீன் |
| கைவிடப்பட்டவளாய்.. | 120 | மதனி ஜெக்கோனியாஸ் |
| வீடு | 125 | சாந்தினி வரதராஜன் |
| விக்னா துளிப்பாக்கள் | 132 | விக்னா பாக்யநாதன் |
| கற்பு நிலை என்று சொல்ல வந்தார் | 134 | சந்திரலேகா வாமதேவா |
| ஓவியம் | 139 | சுகந்தி |
| கட்டுடையும் நகரம் | 141 | திலகபாமா |
| குற்றமில்லை | 142 | விஜயலட்சுமி சேகர் |
| துர்க்கா கவிதைகள் | 144 | துர்க்கா |
| நமக்கான நட்பு | 146 | நளாயினி தாமரைச்செல்வன் |
| இணையத்தில் குடில் போடலாம் | 147 | மதி |
| புதியமாதவி கவிதைகள் | 151 | புதியமாதவி |
| தையல் | 152 | ஜெயந்தி சங்கர் |
| ஓவியம் | 157 | மோனிகா |
| கண்டறியாத பிள்ளை!! | 159 | வாசுகி |
| பெண்கள் சந்திப்பு மலர் 2002 | 161 | சந்திரவதனா செல்வகுமாரன் |
| யுத்தம் | 168 | பாமதி |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி:

படைப்புகளை தந்துதவிய தோழிகட்கும் .

எடுத்தாளப்பட்டிருக்கும் ஓவியத்தின் சொந்தக்காரர்களுக்கும்

அச்சிடுவதிலும் மற்றும் பல வகையிலும் உதவிபுரிந்த விடியல் பதிப்பத்துக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன் அட்டை ஓவியம்
வாசுகி
பின் அட்டை ஓவியம்
அருந்ததி
உள் ஓவியப் படைப்புகள்
வாசுகி (இலங்கை)
அருந்ததி (இலண்டன்)
மோனிகா (அமெரிக்கா)
சுகந்தி (ஜேர்மனி)
ஆரதி (11 வயது,சுவிஸ்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# பெண்கள் சந்திப்பு

-சிறு குறிப்பு-

1990இல் முதன் முதலாக ஜெர்மனியில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை இச் சந்திப்புக்களில் ஆராயப்பட்ட, விவாதிக்கப்பட்ட, விடைகாணா விடயங்கள் ஏராளம். ஆனால் இவைகள் பெண்களால் எடுத்தாளப் பட்டிருக்கின்றது. விவாதிக்கபட்டிருக்கிறது. ஆண்சிந்தனையில் உருவாக்கப்பட்டுள்ள பெண்ணின் மீள்உருவாக்கம் பற்றிய கேள்விகள். பெண் பெண்ணாகவே- ஒரு மனிதராக இல்லாததை விமர்சிக்க சந்தர்ப்பங்களை இச்சந்திப்புக்கள் உருவாக்கி கொடுத்தன.ஆக்க-செயல்திறனுக்கு ஊக்கமளித்தன. புலம்பெயர் பெண்களை எழுதுவதற்கு ஊக்கம் கொடுத்தது



**தேவா(ஜேர்மனி)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2004 ஒக்டோபர் மாதத்தில் 3வது தடவையாக சுவிசில் நடைபெற்ற பெண்கள் சந்திப்புக்கு முன், இதுவரை 22 சந்திப்புகள் நிகழ்ந்துள்ளன. எந்தவித ஆர்ப்பாட்டமும், தோரணையும் இல்லாமல் பெண்ணிய நிலைப்பாட்டை முன்னெடுப்பதற்கு இத்தொடர் கூடல்கள் புகலிடப் பெண்களுக்கு பெரும் வாய்ப்பளித்திருக்கின்றது என்பது மிகையாக சொல்லப்பட்டதல்ல. மேலும் இங்கே பல்வேறுபட்ட கருத்துக்களுக்கும், கொள்கைகளுக்கும் இடமளிக்கப்பட்டு, பங்குபெறும் ஒவ்வொருவரும் சுதந்திரமாக தம் எண்ணங்களை வெளியிடவும் முடிகிறது. ஒத்த கருத்துக்கள், கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள், கருத்துமோதல்கள், விவாதங்கள் போன்ற பலவகைப்பட்ட திருப்பங்கள் எந்த ஒரு அரசியல் நிலைப்பாடு கொண்ட குழுவிலும் காணப்படுவதே. அதற்கு பெ.சந்திப்பு மட்டும் விதிவிலக்கானதா என்ன?

மக்களின் முழு உரிமையை ஆயுதத்தை முன்வைத்து பறித்தெடுக்கும் சர்வாதிகாரப் போக்குக்கு அடிமையாவதை விட, இந்த முரண்படுதல் மனித சுதந்திரத்தை முன் நிலைப்படுத்துகிறது. புகலிடங்களிலும், தாய் நாட்டிலும் புலம்பெயர்ந்த பெண்களைப் பற்றிய பார்வை பல்வேறு விதமான முகங்களைக் கொண்டது. அவை இப் பெண்கள் ஒன்றுகூடலில் -இவர்கள் பெற்ற- வெவ்வேறு வகைப்பட்ட அனுபவங்களினூடாகப் பரிமாறப்படுகின்றன.

1990இல் முதன் முதலாக ஜெர்மனியில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை இச் சந்திப்புக்களில் ஆராயப்பட்ட, விவாதிக்கப் பட்ட, விடைகாணா விடயங்கள் ஏராளம். ஆனால் இவைகள் பெண்களால் எடுத்தாளப் பட்டிருக்கின்றது. விவாதிக்கபட்டிருக்கிறது. ஆண்சிந்தனையில் உருவாக்கப்பட்டுள்ள பெண்ணின் மீள்உருவாக்கம் பற்றிய கேள்விகள் மற்றும் பெண் பெண்ணாகவே- ஒரு மனித ஜீவியாக இல்லாததை விமர்சிக்க சந்தர்ப்பங்களை இச் சந்திப்புக்கள் உருவாக்கிக் கொடுத்தன. ஆக்க-செயல்திறனுக்கு ஊக்கமளித்தன. புலம்பெயர் பெண்களை எழுதுவதற்கு ஊக்கம் கொடுத்தது மட்டுமல்லாமல், அதை வெளிக்கொண்டு வந்தனர். அதனால் பல ஊடகங்களும் நன்மையடைந்தன.

நீங்கள் கூடிப்பேசி என்னத்தைக் கண்டீர்கள்? இதனால் யாருக்கு/உங்களுக்கு என்ன லாபம்? என்கிற கேள்விக்கணைகள் சந்திப்புக்குப் போகும், சந்திப்பை நடத்தும் பெண்களுக்கு எதிராக வீசப்படும் எறிகணைகள். இந்தத் தாக்குதலின் பொருட்டு வீட்டுக்கு வெளியேயும், உள்ளேயும் அரசியல் ஆணுக்கு மட்டுமே சொந்தம். இல்லத்தைவிட்டு பெண்ணே வெளியேறாதே. நீ போனால் உன்னை நிர்மூலமாக்குவோம் போன்ற மிரட்டல்களை விடுத்துக்கொண்டே, தமிழ்ப்பெண் வீரமுடையவளாய் இருக்கவேண்டும்; ஆனால் நாணிக் கோணி நடக்கணும், மற்றவர்களை மகிழ்ச்சிப் படுத்தணும். தான்மட்டும் சிரிக்ககூடாது போன்ற பல இத்தியாதிகள். ஒன்றுக்கொன்று முரணான எழுதப்படாத சட்டங்கள் அவளுக்கென்று இயற்றி வைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் பற்றி பெண்கள் கதைக்காமல் வேறுயார் கதைப்பார்களாம்?

பெண் படித்தால் போதும். மிஞ்சிப்போனால் ஒரு நல்ல தொழில் செய்தாலே சமூகத்தில் மதிப்பு. பணம் தேடுதல், குடும்பகௌரவம் ஆகியவற்றுக்குள் மட்டுமே அடங்கிப்போய் தமிழ்ச் சமூகமும் தன்னை இழந்து நிற்கிறது. இது சில சமயங்களில் தமிழ்மொழிப் பற்று, தமிழ்க் கலாச்சாரத்துள்ளும் மூழ்கி எழும்பும். அப்போது உடை விடயங்களில்கூட பெண்ணை நோக்கி ஒரு அதிகாரத் தலையீடு குறி வைக்கப்பட்டிருக்கும். பெண்கல்வி, தொழில் செய்யவும் பிள்ளை வளர்க்கவும் தேவை; வேறெதுக்கு? அது அவளுக்கே பயன்படக் கூடாதென்று இந்த நூற்றாண்டிலும் உலகின் பல மதங்களும், இனங்களும் கூறுகின்றன. ஒருவரின் உரிமையைப் பறிக்க இன்னொருவருக்கு உரிமை கிடையாது என்பது எல்லா சந்திப்புகளிலும் வலியுறுத்தப்படும் விடயமாக இருக்கிறது.

பெண்கள் சந்திப்புக்களில் பெண்ணியம் மட்டுமே பேசப்படுவதில்லை. இந்துசமய கேடான வர்ணாச்சிரமக் கொள்கை, தாயக,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலக அரசியல் நிலைப்பாடுகள், வளர்நாடுகளை சீரகுலைக்கும் சந்தைப் பொருளாதாரம், பெண்-சிறுவர்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள், போர், உலகமயமாக்கல், சாதி, தலித்தியம் என பலதரப்பட்ட கருத்தாடல்கள் விவாதமாக நடைபெற்று வருகின்றன.

ஜேர்மனிக்குள் மட்டுமே பெண்கள் சந்திப்பு நடைபெறாமல் அது பெண்களுக்கிடையே செயலூக்கத்தையும் ஆர்வத்தையும் தூண்டும் நோக்கத்தோடு பல இடங்களிலும் நடைபெற்றது. கேர்ன், ஸ்டுட்காட், கால்ஸ்ருக, டுயிஸ்பேர்க், பொன், பேர்லின் ஆகிய நகரங்களில் தன் சுவடுகளைப் பதித்ததோடு நின்றுவிடாது, ஜெர்மனியின் எல்லையையும் கடந்து, சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் சந்திப்புக்களை விசாலப்படுத்தியது

ஓவியம்: சுகந்தி சுதர்சன்



தாயகத்திலிருந்து சட்டக்கல்வி பயின்ற மங்களேஸ்வரி, மனித உரிமை அமைப்பில் இருக்கும் ருசாந்தி, தமிழகத்திலிருந்து சிவகாமி, பாமா, அனுபாமா, கனடாவிலிருந்து எமி, அவுஸ்திரேலியாவிலிருந்து (கவிஞை) பாமதி போன்றவர்கள் பெண்கள் சந்திப்புக்கென்று வந்து கலந்து கொண்டனர் அதைவிட ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, பிரான்ஸ், லண்டன் ஆகிய நாடுகளிலிருந்தும் பெண்கள் ஆர்வமாக கலந்து கொண்டு தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளனர். அவர்களோடு நடாத்திய கருத்துப் பரிமாறல்கள் புலம்பெயர்ந்து வாழும் பெண்களுக்கு புதிய அனுபவங்களையும், தாயக, இந்திய மற்றும் தாம் வாழும்நாட்டின் பெண்ணிய கொள்கையை தெரிந்து கொள்வதற்கும் உதவியிருக்கின்றன. பெண்கள் ஆக்கத்திறனுக்கு ஒரு களம்தரும் பரப்பாக பெண்கள் சந்திப்புமலர் வெளிவருகிறது.

இப்பொழுது புதிதாய்த் தோன்றியுள்ள ஊடகங்கள் (வானொலிகள் உட்பட) தாம்தான் பெண் ஆற்றல்களை வெளிக்கொணர தளம் அமைத்துக் கொடுப்பதாய் தம்பட்டம் அடிக்கின்றன. ஆனால் உண்மை நிலவரம் என்னவெனில், அவைகள் பாரம்பரிய சிகரத்திலிருந்து கொண்டு, தமக்கு இணைந்த ஊதுகுழல்களிலிருந்து மட்டும் பாட்டு ஒலிபரப்பிக்கொண்டு, தணிக்கை என்ற ஆயுதத்தை கையில் வைத்துக்கொண்டு கருத்துச் சுதந்திரத்தை மழுங்கடிக்கின்றன. ஊடகங்களில் பணியாற்றும் அல்லது அவ் ஊடகங்களில் கலந்துகொள்ளும் பல பெண்களிடமிருந்து பெறப்பட்ட அனுபவங்களை நாம் பார்த்தோமாயின் அது ஆணாதிக்கத்தின் வேர்களை புரிந்து கொள்ளவைக்கும் அந்தளவுக்கு ஊடகங்கள் ஆணாதிக்கக் கருத்துக்களை விதைத்து வருகின்றன.

ஆனால் பெண்கள் சந்திப்பு 13 ஆண்டுகளை சென்ற வருடத்தோடு கடந்துவிட்டது. இதில் பெண்கள் சுயாதீனமாக செயற்படவும் கருத்துப் பரிமாற்றம் செய்யவும் இதில் கலந்து கொண்ட பெண்கள் தம்மை ஆக்கியுள்ளனர் என்றால் அது மிகையாகாது. இதில் பங்கு பற்றும் பெண்கள் பல தொகுப்புக்களை தமது சொந்த செலவிலேயே (எந்த ஒரு அமைப்போ அல்லது நிறுவனத்தின் உதவியுடனோ அல்லாமல்) கொண்டுவந்தனர். வருகின்றனர். இதற்கு உதாரணமாக ஊதா, பெண்கள் சந்திப்பு மலர், புலம்பெயர் பெண்களின் கவிதைத்தொகுப்பான மறையாதமறுபாதி, சக்தி (நோர்வே), சக்தியினால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியிடப்பட்ட புலம்பெயர் பெண்களின் சிறு கதைத்தொகுப்பு, 'புது உலகம் எமை நோக்கி,' ஊடறு... என பெண்களால் கொண்டுவரப்பட்டன. இதுவரை 7 பெண்கள் சந்திப்பு மலர் வெளிவந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. பெண்களால் தனித்து செயற்படமுடியும் என்பதை இச் சந்திப்பு எடுத்துக்காட்டியுள்ளது. 13 வருடங்களைக் கடந்து 14வது வருடத்தில் காலடிவைக்கும் பெண்கள் சந்திப்பு பல புதிய பெண்களை உள்வாங்கியதோடு மட்டும் அல்லாமல் தொடர்ச்சியாக தனது செயற்பாட்டைச் செய்துவருவது வரவேற்கத் தக்கதேயாகும்.

**பெண்கள் சந்திப்பின்** 21வது தொடர் சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் சுவிஸில் நடைபெற்றது. இதை றஞ்சி (சுவிஸ்) ஒழுங்குசெய்திருந்தார். இச் சந்திப்பின் சில குறிப்புக்கள் இவை...

பிரான்சிலிருந்து வந்திருந்த பரிமளா 'தமிழ்ப் பெண்களின் முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கும் கலாச்சாரமும் பெண்களும்' என்ற தலைப்பில் பேசியபோது... சகல இனப் பெண்களுமே ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருக்கின்றோம். வெள்ளை இன, ஆபிரிக்க இன பெண்ணைவிட இந்திய, இலங்கைப் பெண் கலாச்சாரத்தினால் மிகவும் ஒடுக்கப்பட்டுள்ளாள் என்றார். தாலி செண்டிமென்டுக்குள் அடக்கமாயிருக்கும் பெண் பற்றிய பார்வையை ஒப்புவமை செய்தார். ஒன்றரைமணி நேரமாக நடந்த இந்த கலந்துரையாடலில் பல்வேறு கோணங்களிலும் பலரும் தமது கருத்துக்களைக் கூறினார்கள். பல நூற்றாண்டுகளாக பெண் கேள்வி ஏதுமின்றி இந்த அடையாளங்களுக்குள் தன்னை புகுத்திக் கொண்டதுபற்றி கலந்துரையாடப்பட்டது.

சாந்தினி 'புலம்பெயர் தமிழ்ப் பெண்களின் முற்போக்கு சிந்தனையும், அவர்கள் வாழும் பிற்போக்கு வாழ்க்கையும்' என்ற விடயம் குறித்து கருத்து தெரிவித்தபோது, இன்று பெண்கள் தாம் வாழும் வாழ்க்கையில் பின்தங்கி உள்ளார்கள். மனம்விட்டுப் பேசுவதென்பது முடியாத காரியமாயிருக்கிறது. முற்போக்கு சிந்தனையுடன் வாழ்கிறோம் எனக் கூறிக்கொண்டு தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தம்மைத்தாமே முடக்கிக் கொண்டுள்ளனர். அது தமிழ்ப் பண்பாடு என்பதை ஏற்றுக் கொள்ளமுடியுமா? வாசிப்பும், எழுத்தும் பெண்ணை ஒரு விரிந்த பரப்புக்கு இட்டுச்செல்லும். நான் முதல்முறையாக இப்படி ஒரு நிகழ்வில் அதாவது பெண்கள் சந்திப்பில் கலந்து கொள்கிறேன். இது எனக்கு வித்தியாசமான அனுபவம் தருகிறது. பெண்கள் கூடினால் அங்கு தேவையற்ற விவகாரம்தான் பேசப்படும் என்ற படுமுட்டாள்தனமான கருத்து கேட்டதுண்டு. ஆனால் இங்கு மனம்விட்டு எம்மால் பேசமுடிகிறது. பெண்சிந்தனையின் ஆற்றல், ஆக்கத்திறனை மேலும் செழிக்க, ஊடகங்களுக்குள் நுழையவேண்டும். இப்படியான சந்திப்பில் கலந்துகொள்ள வேண்டும் என்றார். இவரைத் தொடர்ந்து பலரும் தாம் சந்திப்பில் மிக சுதந்திரத்தோடு பேச, பழக முடிந்தது என்றும், கலந்துரையாடல் பல அனுபவங்களை தந்தது எனவும் குறிப்பிட்டனர்.

நிகழ்வின் தொடர்வில் சந்திரவதனாவின் 2002ம் ஆண்டு பெண்கள் சந்திப்பு மலர் மீதான விமர்சனக் கட்டுரை வாசிக்கப்பட்டது. உணர்வைக் கொட்டி தொடங்கியிருந்த அவரின் விமர்சனம் எல்லோரையும் பாதிப்பதாயிருந்தது. பால்வினைத் தொழிலுக்காக பெண்சிறுமிகளைக் கடத்துவது, பாலியல் வன்முறைக்கு பெண்களை, சிறுமிகளை உள்ளாக்குவது தொடர்வதை தெரிந்துகொண்டும், அது பொருள்ரீதியானதும், குடும்பகௌரவம் சம்பந்தப்பட்டதும் என மூடிமறைப்பது பலிக்கடாக்களை உற்பத்தி செய்யவே உதவிசெய்யும். கலந்துரையாடலில் பங்குபெற்றவர்களின் கருத்துக்கள் இப்படியிருந்தன. பால்வினைத்தொழில், பாலியல் கொடுமைகளை தமிழ்ச் சமூகம் பார்க்கவே மறுக்கிறது. ஒரு தூய்மையான இனமாக தம்மை இனம் காட்டிக் கொள்ள தமிழ்ச் சமூகம் முனைகிறது. பூனை கண்னை மூடிக் கொண்டால் உலகம் இருண்டுவிடுமா? தவிரவும் அநியாயங்களை கேள்விப்பட்டாலும் அதை மூடிமறைக்கின்றனர். வன்முறைக்கு துணை போவதற்கும், அதை மேலும் வளர்ப்பதற்கும் இவர்கள் ஒரு தூண்டுகோலாகத்தான் உள்ளார்கள். யாவருமே கலந்துகொண்ட இக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலந்துரையாடல் பல விமர்சனங்களை வெளிக் கொணர்ந்தது.

'ஒரு பெண்ணின் எழுதுகோலுக்குப் பின்னால்' என்ற தலைப்பில் நளாயினி உரையாடியபோது... தமிழ்ச் சமூகம் ஒரு ஆண்எழுத்தாளனின் படைப்புக்களை, அவனை-அவன் வாழ்வை வைத்து விமர்சிக்கத் தயங்கும். (ஆக்கங்களை இப்படி விமர்சிக்க வேண்டும் என்பது கூற்றாகாது) ஆனால் பெண் எழுத்தாளரை எழுந்தமானமான விமர்சனங்களாக அவர் சொந்த வாழ்வை விமர்சிப்பதாலும், இவளுக்குத்தான் அப்படி நடந்திருக்குமோ என்ற சந்தேகப் பார்வைகளாலும் அவர்களை துளைப்பதால், அவர்கள் மனம்நொந்து தற்கொலை செய்யுமளவிற்கு தள்ளப்படுகிறார்கள். உதாரணத்துக்கு ஆண் எழுத்தாளன் காதல், காமம் என்று எந்த வரம்பு முறையுமின்றி எழுதலாம். அதே சுதந்திரம், உரிமை ஏன் பெண் எழுத்தாளருக்கு இல்லையா? இருக்கிறது. நிலைமை என்னவெனில், பெண் படைப்பாளி தன் சுதந்திரத்தை எடுத்து விட்டால், உடனே ஊடகங்களும் தமிழ்க் கலாச்சாரமும் (இதன் தாற்பரியம் யாருக்குமே பிடிபடாதநிலை) கைகோர்த்துக்கொண்டு தமது கருத்துக்களை வலுப்படுத்தி வருவதை கண்கூடாக பார்க்கிறோம். இவைகள் பெண் எழுத்தாளருக்கு தரும் மனஅழுத்தத்தால் அவர்கள் எழுதாமல் விடுகிற ஆபத்தும் உண்டு. இத் தலைப்பு பெண்படைப்பாளிகளுக்கு மட்டுமல்லாமல் பொதுவில் எல்லாப் பெண்களுக்குமே விவாதிக்கக் கூடியதாயிருந்தது.

நிகழ்வுகளின் இறுதியாக அடுத்த பெண்கள் சந்திப்பு மலருக்கான குழு தெரிவு செய்தலும், பெண்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து எடுக்கப்பட்ட குறும்திரைப்படங்களான மத்தம்மா, மல்லி, தூக்கம், ஆயிசா, ராஜாங்கத்தின் முடிவு என்பன காண்பிக்கப்பட்டன.


அடுத்த பெண்கள் சந்திப்பு பிரான்சில் நடைபெற இருக்கின்றது என அறியத்தரும் சந்தர்ப்பத்தில், இச் சந்திப்புக்களினால் பெண்களின் பிரச்சினை தீர்ந்துவிடுமா? பெண்ணுரிமை கிடைத்துவிடுமா போன்ற கேள்விகள் சந்திப்பை சிறுமைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு கேட்கப்படுகின்றன. இவைகளுக்கு பதில்தர வேண்டிய அவசியம் பெண்கள் சந்திப்புக்கு இல்லை. இருந்தாலும் ஒரு விளக்கம் பெண்களின் பிரச்சினை தீரவில்லை, பெண்ணுக்கு உரிமை கிடைக்கவில்லை என்பது இந்தக் கேள்விகளை கேட்பவர்களாலேயே ஒத்துக் கொள்ளப்படுகின்றன என்பதையே காட்டுகின்றன.

(2004/10)

## இரு சஞ்சிகைகள்



**பெண்**
தொகுதி-9, இலக்கம்-1
வெளியீடு:
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
20, டயஸ் வீதி
மட்டக்களப்பு
email:suriyaw@slt.lk



**நிவேதினி**
-பால்நிலைக் கற்கைநெறிச் சஞ்சிகை-
இதழ்-9, மலர்-1, ஆனி2003
வெளியீடு:
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
Women's Education and Research Center
58, Dharmarama Road
Wellawatta
Colombo-06



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலை

வேகத்தாளகதிக்கு ஏற்ப
பத்து விரல்களிற் பல
ஊதாக் காலுறைகளை விட்டு வெளியேறாதபடி
தாளமிடுகின்றன - அவற்றையும்
மேவிப் போர்த்துப் பாதுகாத்தபடிக்கு
கருஞ் சப்பாத்துக்கள் மினுக்கிய
பளபளப்போடு.

அவனோ கோடை கழுத்திற் கசியும்
மேடையிலிருந்து
liberdade, liberdade, liberdade என
குரல்வளையை உயர்த்திக்
காற்றை இசைக்கிறான்.


காற்று வாத்தியக் கருவியொன்றின்
குழறலுக்கும், மனிதத்தின் அலறலுக்கும்
இடைப்பட்டதான அப் பிரதேசத்தில்,

குழந்தைகள் ஓடி விளையாடுகிறார்கள்.
நீலப் பச்சை விழிக்காரி தன் சீனத்துத் துணைவியுடன்
அடவு வைத்துச் சுழல்கிறாள்.
பல விடலைச் சோடிகள்
மேலும் தலைகலைத்து ஆடுகின்றனர்.

ஆமாம் அங்கே
இறுக்கிய கழுத்துப் பட்டிக்காரர்களுக்கு
இடமேதும் இருக்கவில்லை.

சிதறும் அதிர்வுத்துகள்கள் நரம்பெங்கும் பரவிப் பெருக்கெடுக்க
உடலசைத்து ஆடவும்
அபிநயிக்கவும் முயல்கிறேன் - எனினும்
காலுறைகளைத் தாண்டி அசைவுகள்
வெளிப்பரவாது போயின - மரத்தோ ஒழிந்தோ.

ஏறி நின்றபடியே
என் மூதாதையரின் தோள்களைக்
கூவிச் சபித்துக் கொண்டு - அவ்விடத்தைவிட்டு
அகலாது
நிற்கிறேன் ஆடுவதற்காய்.
(21.02.2004).



ஆழியாள்
(அவுஸ்திரேலியா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



ஒவ்வொரு பெண்ணுக்கும் பிறப்பிலிருந்து இறப்புவரை பல போராட்டங்கள் இருப்பினும், இன்றையநாளில் பெண்கள் இல்லாத துறையே இல்லை எனலாம். பெண்கள் படித்து முன்னேற்றம் அடைந்துள்ள இந் நாட்களில் ஆண்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், இராணுவம், காவற்துறை போன்றவற்றோடு பாரம்பரியத் தொழில்களான விவசாயம், நெசவு, கட்டுமானம், பூ விற்றல், சமையல், ஆடு மாடு கோழி வளர்த்தல் ஆகிய அமைப்புசாரா பணிகளையும் இன்றளவும் செய்கின்றனர். இவைகளோடு... ஒரு பெண் குழந்தையை மட்டுமல்ல, இலக்கியத்தையும் பெற்றெடுக்கிறாள் என்பது அற்புதமான விஷயமே.

பண்டைத் தமிழர்கள் வாழ்க்கையை இரு கூறாகப் பிரித்துவிட்டிருந்தனர். இத்தகு சிறப்பு வாய்ந்த நம் பழந்தமிழ் இலக்கியத்தின் அனைத்துத் தளங்களிலும் வாழ்க்கை நிலைகளிலும் புலமை வாய்ந்த பெண்கள் இருந்திருக்கின்றனர். பாணா குலப்பெண்கள் மட்டுமல்லாது, மறக்குடி மகளிர் மற்றும் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் உள்ளங் கவர்ந்த பெருங்கோப்பெண்டு, பாரி மகளிர் போன்ற கவிதை பாடிய அரசியர்களையும் சங்க காலத்தில் காணலாம்.

**இன்றைய பெண் படைப்பாளிகளில் பலருக்கும், அன்றைய படைப்பாளிகளுக்கும் இடையே படைப்பிலும், மொழியிலும், கொள்கையிலும், வாழ்க்கை நெறிகளைச் சித்தரிப்பதிலும் பெரிய இடைவெறி இருப்பதாகவே தோன்றுகிறது. சகலவிதத்திலும் வாய்ப்பு மறுக்கப்பட்ட அன்றைய காலகட்டத்தில் படைக்கப்பட்ட பெண் எழுத்துக்களில் இருந்த வலிமையும், வீரியமும், உயிர்ப்பும் காலத்தை வென்று நிற்கும் தன்மையும் தற்காலப் பெண் படைப்பாளிகள் பலரின் எழுத்துக்களில் இன்னும் வரவில்லையோ என்ற ஐயப்பாடு எழுகிறது.**


painting of Jawlensky

# பெண்ணும் எழுத்தும் கண்ணைத் தகும்

-வைகைச் செல்வி (இந்தியா)-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண் படைப்பாளிகட்கு பெண்பாற்புலவர் என்ற அடைமொழி பிற்காலத்தில்தான் வந்த தாகக் கருத இடமிருக்கிறது. புலமையைப் பொறுத்த மட்டில் ஆண் பெண் என்ற பாகுபாடு அந்தக் காலத்தில் இருந்ததாகத் தெரிய வில்லை. ஆழ்வார்களில் தலை சிறந்தவராக ஆண்டாளும், கம்பர் மற்றும் ஒட்டக்கூத்தருக்கு இணையாக அவ்வையாரும் கருதப்பட்டதிலி ருந்தே இதனை அறியலாம். ஆண்டாளும் காரைக்கால் அம்மையாரும் பக்தி இலக்கி யத்தில் சிறந்து நிற்க, அவ்வையார் அற இலக்கியத்தைப் படைத்தார். படிப்பவர்க்குக் கசப்பைத் தருகின்ற, கடும் இலக்கணத்தில் நிபுணராகத் திகழ்ந்தார் காக்கை பாடினியார் என்பது வியப்புக்குரியதே.

அவ்வையார் தன் சமகாலத்தில் வாழ்ந்த மிகப் பெரிய ஆண்புலவாகளுக்கு இணையாகத் திழ்ந்தாரெனில், அதற்குக் காரணம் அவரது கூர்மதியும், உயர் பண்புகளுமே. வேற்று நாட்டிற்கு ஒரு தூதுவராகச் சென்று நடைபெறவிருந்த போரைத் தன் விவேகத்தால் தடுத்த சிறப்பிற்குரியவா இவர். பெண்பாற் புலவராக இருந்தும், அவர் மொழியில் பெண்மையின் சாயல் இல்லை. கவிதையும் புலமையும்தான் கைகோர்த்துச் செல்கின்றன. மொழியின் எளிமையும், இலக்கிய நயமும், வாழ்க்கை நெறியும்தான் இன்றளவும் அவரைப் பள்ளிப் புத்தகங்களில் இடம்பெறச்செய்துள்ளன.

சங்க காலத்திற்குப்பின் அதாவது அவ்வைக் குப் பின் 20ம் நூற்றாண்டு வரை பெண்பாற் புலவர்களோ கவிஞர்களோ இல்லையென்று தோன்றுமளவிற்கு களப்பிரர் காலத்தைப் போன்ற ஒரு இருண்ட காலம் இலக்கியத்தில் காணப்படுகிறது. சமுதாயத்தில் காலங் காலமாய்ப் பெண்கள் அடிமையாக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்ததைத் தவிர வேறெந்தக் காரணத்தையும் இதற்குக் கூற இயலவில்லை. ஆனால் சென்ற நூற்றாண்டில் கவிஞர்களைத் தவிர்த்து, உரைநடை இலக்கியத்தில் பெயர் சொல்லக்கூடிய பல பெண் எழுத்தாளர்கள் இருந்துவந்தனர் என்பதில் ஐயமில்லை.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் பெண்கள் கவிதை, சிறுகதை, நாவல் மற்றும் கட்டுரை எனப் பெருமளவில் படைக்கத் துவங்கியிருப்பது மகிழ்ச்சியான செய்தியே. சகல தளங்களிலும், சுதந்திரமாக தங்கள் எண்ணங்களை வெளிப் படுத்துகின்றனர். ஆயினும் இந்தப் பெண் படைப்புகள் எப்படி உள்ளன? அவற்றின் நோக்கம் என்ன? என்பது குறித்து அனைவரின் கவனமும் பெண் படைப்புகள்மீது திரும்பி யிருக்கிறது. சமீபத்தில் ஒரு கவிஞர் குஜராத் கலவரம் பற்றிப் பாடியுள்ள பெண் கவிஞர்களின் கவிதைகளைச் சேகரிக்க நேர்கையில், இரண்டு மூன்று பெண் கவிஞர்கள் மட்டுமே இச் சரித்திரச் சம்பவத்தினைப் பதிவுசெய்துள்ளாகத் தொவித்தார்.

**தமிழ்ப் பெண் படைப்பாளிகள் பெரும்பாலானோர்களது அனுபவ உலகம் தங்கள் குடும்பம், உறவுகள், வீடு....இன்னும் கொஞ்சம் விரிந்தால் அலுவலகம் என்ற அளவில் மட்டுமே நின்றுவிடுகிறது என்ற கருத்தினை இது மெய்ப்பிப்பது போலிருக்கிறது இலக்கின்றிப் படைக்கப்படும் இலக்கியமும், சமுதாயத்தைப் பிரதிபலிக்காத எழுத்தும் காலப்போக்கில் நீர்த்துப் போகும** என்பது அனைவரும் அறிந்ததே.

அப்படிப் பார்க்கையில், இன்றைய பெண் படைப்பாளிகளில் பலருக்கும், அன்றைய படைப்பாளிகளுக்கும் இடையே படைப்பிலும், மொழியிலும், கொள்கையிலும், வாழ்க்கை நெறிகளைச் சித்தரிப்பதிலும் பெரிய இடைவெறி இருப்பதாகவே தோன்றுகிறது. சகலவிதத்தி லும் வாய்ப்பு மறுக்கப்பட்ட அன்றைய கால கட்டத்தில் படைக்கப்பட்ட பெண் எழுத்துக் களில் இருந்த வலிமையும், வீரியமும், உயிர்ப்பும் காலத்தை வென்று நிற்கும் தன்மையும் தற்காலப் பெண் படைப்பாளிகள் பலரின் எழுத்துக்களில் இன்னும் வர வில்லையோ என்ற ஐயப்பாடு எழுகிறது. இத்தனைக்கும் அன்றைய படைப்பாளிகட்கு இல்லாத ஊடகம் என்ற மிகப் பெரிய ஆயுதமும், எழுத்துக்களை வாசகர்களிடம் கொண்டு சோக்கும் வணிகத் தளங்களும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளும், வீர சுதந்திரமும் இன்றைய படைப்பாளிகட்குக் கிடைத்துள்ளன. இவ்வளவு இருந்தும், பெண் படைப்புகள் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும், சமுதாய பிரக்ஞையோடும் உள்ளனவா என்ற நியாயமான கேள்வி எழத்தான் செய்கிறது.

இதனையொட்டிச் சிந்திக்கையில் பெண் படைப்பாளிகள் அவ்வையிடமிருந்தும் சரோஜினி நாயுடுவிடமிருந்தும், வை.மு.கோதைநாயகி யிடமிருந்தும் கற்றுக் கொள்ள வேண்டிய பல பாடங்கள் உள்ளன. ஆணாதிக்கம் கோலோச்சிக் கொண்டிருந்த சூழலில், பெண்ணும் தேசமும் அடிமைப்பட்டுக் கிடந்த கால கட்டத்திலேயே ஜெகன் மோகினி என்ற பத்திரிகையை நடத்திச் சாதனை புரிந்தவார் வை.மு.கோ. சுதந்திரம் இல்லாத வேளையில் ஒரு பத்திரிகை தனது கையில் இருக்கிறது என்பதற்காக கண்டதையும் எழுதவில்லை. நச்சு இலக்கியம் படைக்கவில்லை, பாச எழுத்தை அங்கீகரிக்கவில்லை. அவர் படைத்த 115 நாவல்களும் 115 விதமான வித்தியாசத் தன்மை உடையன. எழுத்திலும், இசையிலும், மேடைப் பேச்சிலும், வல்லவராயிருந்த வை.மு.கோ, சமூக வாழ்விலும், சுதந்திரப் போராட்டத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். கவிக்குயில் சரோஜினி தேவியின் கவிதைகள் நுண்கல்வித் திறமுடையன. இவர் தேர்ந்த சொற்பொழி வாளரும் கூட. பெண் விடுதலைக்காகவும், இந்து, முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் போராடி யவர். மகாத்மா காந்தி, கோகலே மட்டுமல்லாது சம காலத்திய ஆங்கிலக் கவிஞர்களுடன் தோழமை பூண்டிருந்த பண்பாளர்.

அவ்வையாரும், வை.மு.கோதை நாயகியும், சரோஜினி நாயுடுவும் நேற்றைய படைப்பாளி களாக இருக்கலாம். ஆனால் இவர்களெல்லாம் வெறும் பரபரப்பிற்காக அதிர்ச்சியலைகளை உண்டாக்கவில்லை. சமுதாயத்தை உலுக்கும் அதிர்வலைகளை இப் பெண்களின் எழுத்துக் கள் உருவாக்கின. அதனால்தான் இவாகளின் எழுத்துக்கள் இன்றும் பேசுகின்றன. பன்முகத் தன்மையும் கூர்மதியும், சமுதாயப் பார்வையும் உடைய இப்பெண்களின் எழுத்துக்களைப் போலவே அவாகளின் வாழ்க்கையும் இறவாக் காவியங்கள் ஆகும். பெண்களாக இருந்து கொண்டே பெண்மை மற்றும் பெண் சம்பந்தப் பட்ட உணர்ச்சிகள், பெண் மொழி ஆகிய உள் வட்டங்களைக் கடந்து மனிதம் மற்றும் மனித உணர்வுகளுக்காகவும், எளிய மொழி பேசும் வெகு ஜனங்களுக்காகவும் பரந்த எல்லைகளில் பிரவேசித்தவர்கள்.

அப்பளமிடுதலும் ஊறுகாய் போடுவதும், துணி தைத்தலும் மட்டுமே பெண் தொழில்கள் என்றிருந்த கால கட்டத்திலிருந்து ஆணுக்குச் சமமாக தொழில் முனைவோர் என்ற நிலைக்கு இடம் பெயர்ந்துள்ளாள் இன்றைய நிர்வாகப் பெண். அதைப் போல,

**பெண்ணியம் அல்லது பெண் மொழி என்பதை மட்டும் மையப்படுத்தும் கால கட்டத்திலிருந்து நகர்ந்து ஆளுமை மிக்க பன்முகத் தன்மை வாய்ந்த படைப்பினைத் தரும் நிலைக்கு இடம்பெயர வேண்டும் இன்றைய இலக்கியப் பெண் .**

போட்டியும் ஆணாத்திக்கமும் மேலோங்கி யிருக்கும் வணிக உலகில் ஒரு பெண் தொழில் முனைவோர் வெற்றி பெறுவதற்கு கூடுதல் அறிவு, பொறுப்பு மற்றும் கடமையுணர்வோடு பல் நோக்குடன் உழைக்க வேண்டியுள்ளது. இது படைப்பாளியாயிருக்கும் பெண்களுக்கும் பொருந்தும்.

ஆண் எழுத்து, பெண் எழுத்து என்ற பாகு பாடின்றி உலக இலக்கியத்தில் பெண்களின் எழுத்துக்கள் சேர வேண்டுமெனில் அவ்வையார், வை.மு.கோ மற்றும் சரோஜினி நாயுடு போன்ற வர்களின் ஆளுமைக் கூறுகளின் உயாந்தபட்ச நிலைகளை இன்றைய பெண் எழுத்துக் கள் குறைந்த பட்சமாவது பிரதிபலிக்க வேண்டும். இவையன்றி பெண்களின் படைப்புகள் குறுகிய வட்டத்திற்குட்பட்டு இருக்குமானால், அவை தனிமைப்படுத்தப் பட்டு, கால நீரோட்டத்தில் தீவுகளாகவே இயங்க நேரிடும்.

(2004/10)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிஜங்களும் நிழலாம்


வாழ்வதற்கு உயிரையே
விலையாகக் கேட்கும்
வியாபார சந்தையில்....
சஞ்சலங்களின் சாக்கடையில்
நிமிடந்தோறும்
புதுக்குளியலால் துர்நாற்ற இம்சைகள்...

இம்சிக்கப்படும் கணம்தோறும்
பாவம்...
இன்பத்தை யாசிப்பது
அட்சய பாத்திரத்தில் என்றெண்ணி

யாசித்திருப்பது
கறைபடிந்த வெறும்
ஓட்டைகள் மட்டுமே நிறைந்த
பிச்சைப்பாத்திரத்தில்....
நீயே ஓர்
அட்சய பாத்திரம் என்றறியாது!

இன்றைய நிஜங்கள்கூட
நாளைய நிழல்கள்தான்
நிஜங்கள் சுட்டெரிக்கின்றன பெண்களை
அக் கறைபடிந்த நிஜங்களை
தொலைவானில் சேர்த்து
தொடுவானமாய் ஆக்கிவிடு
துன்பிக்கும் நிஜங்களும் நிழலாம்.

(2004/10)



பாலறஞ்சனி
(மட்டக்களப்பு, இலங்கை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net




# நலங்கெடப் புழுதியில்...

மண்ணுலகின் தேவதையாய்
மானிடத்தின் தெய்வமாக்கி
பெண்மையென்று படைத்தவனே  இன்று...
பேச்சிழந்து நின்றிடுவான்.

கண்ணே! மணியே! என்று காதல் மொழிந்தவர்கள்
சொல்லால் எரிக்கையிலே கல்லாய்ப் போனாயோ?
உன்னைப் பகிர்ந்து உன்னில் பாதியென்றவர்கள்
மண்ணில் எறிகையிலே மடிந்து மௌனம் கொண்டாயோ?

விலங்கிடா அடிமையாக்கி வீட்டினில் அடைத்தவர்கள்
விட்டிலாய் உன்னையாக்கி வேடிக்கை பார்த்தவர்கள்
குனியவைத்து உந்தன் குரல்வளை நெரித்தவர்கள்
குறுமதி கண்டு நீயும் ஊமையாய்  மாறினாயோ?

ஜகத்தினில் ஜனனம் எல்லாம் உருவாக்கும் வலிமை பெற்றாய்.
அகத்தினில் அன்பு மட்டும் அருவியாய்ப் பெருக்கி நிற்பாய்.
இகத்திலே உன்னைப்போல இன்னுமோர் பிறவியுண்டோ?
இருளினைத் துடைத்தெறிந்து ஒளியினாய் நீ எழும்பு!



(2004/10)

பாரதி (ஜேர்மனி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மழை ஏன் வந்தது?

நிருபா

ஜேர்மனி

ஒரு சின்ன அட்டைபோலத்தான் இருந்தது. சிறிது சிறிதாய் வளர்ந்து பெரிய ஒரு உருவமாய் மாறிவிட்டது. பாம்பு! பெரிய ஒரு பாம்பு. மெல்லம் மெல்லமாய் அசைந்து அவளுக்குக் கிட்ட வந்தது. தலையை உயர்த்தி விரித்து பின்னர் அங்கும் இங்குமாக ஆட்டியது. துளசிக்கு முன்! ஆடாமல் அசையாமல் நின்றாள். அப்படியே எல்லாம் விறைத்துவிட்டதுபோல், இரத்தமே உடலில் இல்லாததுபோல்! ஆனால் அந்த நாகம் விட்டதாக இல்லை. மேலும் தனது கரிய உடலை அசைத்து அவளையே பார்த்தபடி நெருங்கியது.

நாகம்!

,,ஐயோ அம்மா! ஓடியாங்கோ.,,

உரத்துக் கத்தினாள். அந்த நடுச் சாமத்தில் எல்லோரது நித்திரையையும் கலைப்பதாக. எத்தனை தடவைகள் கத்தினாள் என்று அவளுக்கே தெரியாது. கண்களை இறுக்கி மூடியபடி கத்தினாள்.

ஏன் ஒருத்தரும் எழும்பினமில்ல? ஒருத்தருக்கும் என்னைக் காப்பாத்த வேணும் எண்டு நினைப்பில்லையோ?

,,ஐயோ! காப்பாத்துங்கோ!,,

எங்கோ தொலைவினில் தூங்கிக்கொண்டிருந்த சூரியனுக்குக் கூடக் கேட்டிருக்கும். சிலவேளை அதுகூட நடையைக் கட்டத் தொடங்கியிருக்கும். ஆனால் இந்த முண்டங்கள் ஒருத்தருக்கும் கேட்கவில்லையே.

ஏன் ஒருத்தரும் வரீனம் இல்ல. கிட்டக் கிட்ட வருகிது. கொத்தப்போகுது.ஹீ

,,காப்பாத்துங்கோ!,,

அங்கு படுத்திருந்த அனைவருக்கும் மட்டுமல்ல முகட்டில் மிகவம் ஆறுதலாகவும் அமைதியாகவும் ஊர்ந்துகொண்டிருந்த சின்னச் சிவப்பு அட்டைக்குக்கூட கேட்கவில்லை. ஏனெனில் அவள் எழுப்பிய சத்தம் வாயிலிருந்து வரவில்லை. நெஞ்சத்திலிருந்து வந்தது. அதுவும் ஆழமான இடத்திலிருந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

விழித்துப் பார்த்தாள். இருட்டின் இதயத்துடிப்பு படபடவென்று கேட்டது.

உண்மையாவே அப்பிடியொரு பாம்பைக் கண்டிருந்தால் செத்தே இருப்பன். கனவில் கூட எவ்வளவு பயமாக் கிடந்திது. இப்ப திரும்பவும் நித்திரை வருகிது. ஆனால் கண்களைமூட அவளுக்குப் பயம். திரும்பவும் நாகம் வந்தால்...?

விழித்தபடி படுத்திருந்தாள். இருட்டு மட்டும் அசையாமல் நின்றது. அந்த இருட்டைப் பார்க்க, உற்று உற்றுப் பார்க்க இரண்டு கண்கள் தெரிவது போலும் அவை அவளை அண்மித்து வருவதாகவும் உணர்ந்தாள். சிறிது நேரத்தில் புரிந்தது. அது தன் கண்களிலிருந்துதான் வருகின்றது மூடியும் திறந்தும் பார்த்தாள். உறுதியானது.

இரவு எவ்வளவு நேரமாக விழித்தே இருந்தாள். பன்னிரண்டு மணி? அல்லது இரண்டு மணி? மழைவந்த நாளிலிருந்து அவள் நித்திரையும் போச்சு. எவ்வளவு நித்திரை தூக்கி அடித்தும் விழித்தே இருந்தாள். ஆனால் தூக்கமே வெற்றி கொண்டு ..... இவளை மடக்கிப் போட்டது. அந்த நேரமாப் பாத்து சனியன்பிடிச்ச நாகம் வந்திட்டிது. நாகம் வந்ததாலோ வழமையாக வரும் அந்த உருவ மும் இன்று அவளை தொந்தரவு செய்யவில்லை.. ஒருவேளை அந்த உருவத்திட்டையும் நாகம் போயிருக்குமோ?


ஓவியம்: மோனிகா

இவளது பிரச்சினைகள் தெரிந்துதானோ சேவல்கள் கூவத்தொடங்கிவிட்டன? ஒன்று இரண்டு என்று தொடங்கி பின் ஊர்ச் சேவல்கள் எல்லாம் ஒன்றுதிரண்டு பாட்டுப்போட்டி வைப்பதுபோல் கூவிக்கொண்டன.

துளசி எழுந்து பிறசை எடுத்துக்கொண்டு முன்பக்கமாக வந்தாள். அப்பாவையும் அம்மா வையும் தவிர எல்லோருமே தூங்கிக் கொண்டிருந் தார்கள். அவர்களைப் பார்க்குபோது எரிச்சலாக இருந்தது. தண்ணியடிச்சு எழுப்புவமா, தட்டி எழுப்புவமா என்றுகூட நினைத்தாள். சின்னண்ணா வுக்குத் தண்ணி அடிச்சால் குட்டுத்தான் விழும். அது ஒரு குட்டு குட்டிச்சிது என்றால் காணும் ஒரு கிழமை முழுக்க நோகும். பெரியண்ணாவுக்கு தண்ணியடிச்சா பள்ளிக்கூடத்துக்கு சயிக்கிளில ஏத்திக்கொண்டு போகாது. ஆகவே இந்த யோசனையை உடனேயே விட்டுவிட்டாள்.

அப்பா குந்தியிருந்தபடி முற்றத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். மழை பெய்யும் சந்தோசத்தை எப்படிக் கொண்டாடுவது என்று யோசிக்கிறாராக்கும். அம்மா எழும்பியவுடன் செல்லும் முதல் இடம் சமயலறை. நேற்றய சாம்பலை அள்ளி எடுத்து துப்பரவு செய்துகொண்டிருந்தாள். இரவு முழுக்க மழை பெய்திருக்க வேண்டும். கோடி, கிணற்றடிப் பக்கம் எல்லாம் வெள்ளம் நின்றது. பற்பசை முடிந்துவிட்டதால் பற்பொடியை கையில் எடுத்து ஒரு சொட்டுத் தண்ணீரை விட்டு அதைக் குளிப்பாட்டிய பின் பிறசால் எடுக்க முயன்றபோது அது சேர பஞ்சிப்பட்டது. தேய்ந்துபோன பிறஸ். புதுசு வாங்க வேணும் எண்டு ஒவ்வொருநாளும் காலையில் நினைத்து பகல் முழுக்க மறந்து பிறகு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதைப் பார்கிற நேரம்தான் மீண்டும் ஞாபகம். பற்பொடியுடன் ஒட்ட முடியாமல் பல்லோடு தேய சக்தியிழந்தும் கிழடாகிப் போய் என்னை விடுதலைசெய் என்று சொல்வது போல் பரிதாபமாகிக் கிடந்த பிறசை தூர இருந்த குப்பை கிடங்கிற்குள் எறிந்துவிட்டு விரலால் தொட்டு மினுக்கினாள்.

சேவல்கள் கூவி ஓய்ந்தபின் குருவிகளும் பறவைகளும் எழுப்பியதில் சூரியன் கால்களையும் கைகளையும் மடக்கி விரித்து காலைத் தூக்கத்திலிருந்து எழுந்து கொண்டிருந்தது.

அந்தப் பாம்பு! அந்த நாகபாம்பு! இன்னும் அவள் மனதிற்குள் அசைந்துகொண்டிருந்தது. கறுப்பாய்த் தோலும்... அரியண்டம். பிணைஞ்சிருந்த நாகங்களில ஒண்டைக் கொண்டால் மற்றது மறக்காமல் எங்க போனாலும் கண்டுபிடிச்சுக் கொத்து மெண்டு சொல்லுறவை. நான் ஒரு நாகத்தையும் கொல்லேல்லை. பாம்பெண்டாலே பயந்து ஓடிவிடுவன். ஏன் எனக்கு கனவில வந்து வெருட்டிது?

தேத்தண்ணி குடித்து. வீடு கூட்டி, குளித்து. வெள்ளைச் சட்டை போட்பின்னர் தான் துளசிக்கு புத்துயிர் பெற்றதான உணர்வு வந்தது.

,,இன்னும் நீ சாப்பிடேல்லையோ. வேளைக்கு வாபாப்பம்,,

தனக்கு பின் எழும்பி முன்னரேயே வெளிக்கிட்டு நிற்கும் பெரிய அண்ணனின் அதிசயம் அறிய அவள் ஆர்வம் காட்டவில்லை. நின்ற நிலையிலேயே சாப்பிட்டு தயாரானாள். கொஞ்சம் பிந்தினால் விட்டுவிட்டுச் சென்றுவிடுவான். நடந்து போவதென்றால் நேரம் எடுக்கும். அதோடை சேறடிச்சு வெள்ளைச் சட்டையெல்லாம் ஊத்தையாகிவிடும்.

நடையிலும் சயிக்கிளிலும் எதிர்காலத்தின் உழைப்பாளிகள். இன்றய மாணவர்கள் பாடசாலைகளை நோக்கி விரைந்துகொண்டிருந்தார்கள். நடந்து கொண்டிருந்த ஒரு சில பெட்டைகளின் வெள்ளைச் சட்டையில் சேறு பொட்டுகள் வைத்துக்கொண்டிருப்பதனை துளசி ரசித்தாள்.

வயல்களில் தண்ணீர் நிறைந்து இருந்தது. நெல்மணிகள் எல்லாம் தலைகளை அசைத்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண் டிருந்தன.

பள்ளிவாசலை நெருங்முன்னரே தர்சியை கண்டதால்,

,,அண்ணா தர்சியோட கொஞ்சத்தூரம் நடந்துபோறன். இறக்கிவிடு,, என்று துளசி கேட்டதற்கு இணங்க தமயனார் இறக்கி விட்டார். கொஞ்சத் தூரம் சென்று தர்சி துளசிக்காகக் காத்திருந்தாள்.

,,பிறகு வந்து ஏத்தமாட்டன். நடந்துதான் வரவேணும்,, என்று சொன்னவர் சயிக்கிளை வெட்டித் திருப்பினார்.

,,ராத்தியெண்டாலும் நல்ல நித்திரை கொண்டனீரோ? ,,

நக்கலாகக் கேட்கிறாளா அல்லது உண்மையான அக்கறையுடன் கேட்கிறாளா என்று துளசிக்குச் சந்தேகமாக இருந்தாலும் நித்திரை பற்றி கதைக்கும் ஒரே ஒரு ஆள் இவளாக இருப்பதால்.

,,கொஞ்சம் கொண்டனான்..ஆனா,,

,,ஏன் திரும்பவும் கனவு கண்டனீரோ?,,

நேற்றும், இன்னும் பல இரவுகளும் அவள் திரும்பத்திரும்பக் கண்ட கனவுகள் வேறு. தலையில் ஒரு பெரிய பாறாங்கல். ஆனால் பாரமில்லை. விழுகிறாள் விழுகிறாள். விழுந்துகொண்டே இருக்கிறாள். முடிவே இல்லையோ? விழித்தபின்னர் தடவிப் பார்த்தாள். பாயில் தான் பக்குவமாகப் படுத்திருந்தாள். அந்தக் கனவு பறவாயில்லை. இண்டைக்குக் கண்டது வேறை.

,,ராத்திரி ஒரு பயங்கரக் கனவு,,

,,நீர் நெடுகலும் பயங்கரக் கனவுதானே காணுறனீர்.,,

,,சீ இது பேப் பயங்கரம்,,

,,அப்பிடியே. சொல்லும். சொல்லும்.,,

தர்சி கண்களை விரித்து ஆர்வமானாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டுபேரும் வகுப்பில் இருந்து படக் கதைகள் கதைக்கும்போது இவள் கண்கள் இப்படித்தான் விரிவதுண்டு.

,,பாம்புக் கனவு,,

,,அரியண்டம்,,

,,ஒரு நாக பாம்பு மெல்லம் மெல்லமா வந்து எனக்குக் கிட்ட நிண்டு படம் எடுத்திது. நான் பயந்து கத்து கத்தெண்டு கத்தினன்,,

,,உண்மையாவோ,,

,,இல்ல அதுவும் கனவிலதான்,,

சொல்லிக் கொண்டிருக்கும்போதுதான் துளசிக்கு ஞாபகம் ஒன்று வந்தது.

கிட்ட பாம்பு வந்து படம் எடுக்கேக்க அதில ஒரு ஆளுன்ர முகம் தெரிஞ்சது. யார் ஆளெண்டு நினைச்சு நினைச்சுப் பார்க்க ஞாபகமாக இல்லை. ஆனால் அது தெரிஞ்ச முகம்தான். யோசித்துப் பார்க்க ஞாபகமே வருகிதில்ல.

அவளுக்கு தலைவெடிப்பது போல் இருந்தது.

,,என்ன யோசிக்கிறீர். எனக்கும் சொல்லுமன்,,

,,சீ ஒண்டுமில்ல,,

இருவரும் பள்ளிக்கூட வாசலை வந்த டைந்தனர்.

இன்றும் அவள் கதிரை மேசை நனைந்தே இருந்தது.

எத்தின நாளா மழைபெய்யிது. ஒவ்வொரு நாளும் என்ர மேசை கதிர நனஞ்சுதான் கிடக்கு. நேற்று கொஞ்சம் தள்ளிவச்சிட்டு வந்தனான். ஆரோ திரும்ப இழுத்து ஒழுகிற இடத்துக்குக் கிட்ட வச்சிட்டினம். எனக்குத் தெரியும் ஆர் இந்த வேலை செய்திருப்ப தெண்டு.

ரத்தினம் மாஸ்ரர் லிங்கம் மாஸ்ரரோட கதைச்சுக் கொண்டு இருந்தார். முறை யிட்டாள்.

,,உனக்கு நேற்று ஒரு இடம் தந்தனா னெல்லோ. அதிலயே இண்டைக்கும் இரு,, என்று அவளைத் திருப்பிவிட்டார்.

ஒழுக்கை அடைக்கத் தெரியாது. பின் னுக்கு முன்னுக்கெண்டு பிடிச்சு விடுறது. எனக்கு தர்சிக்குப் பக்கத்தில இருக்கத் தான் விருப்பம். ஆனா நாலு நாளா பள்ளிக்கூடம் முழுக்கவே ஒழுக்குத்தான்.

தனது புத்தகங்கள் கொப்பிகளுடன் தர்சியைவிட்டு நிறையத் தூரம் தள்ளி வந்திருந்தாள். இந்த இடம் அன்பழகன் இருப்பதற்குக் கிட்ட. அவன் இன்னும் வரவில்லை. இண்டைக்கு அவன் வராமல் விட்டால் நல்லது என்று நினைத்தாள்.

அன்பழகனுடன் ஒரு கவுஸ்ஸில் தான் இருந்து வினோத உடைப்போட்டிக்குக்கூட ஒன்றாக நடித்தது. ஆனால் துளசி சாமத்தியப்பட்டு ஒரு மாதத்துக்குப் பிறகு திரும்பவும் பள்ளிக்கு வந்தபோது அவன் பார்த்த பார்வையும் கதையும் பிடிக்கவே யில்லை. ஒரு நாள் வேற பெடியனோடை நின்று, துளசி அவர்களைக் கடந்து செல்லும்போது ,,எனக்கு ஏன்ரா நீ கொண்டாட்டத்துக்குச் சொல்லேல்ல,, என்று நக்கல் அடித்ததும், ஏதோ உள்நரம்புகள், உறுப்புகள் எல்லாம் கூசுவதுபோல் உணர்வு ஏற்பட தலையைக் குனிந்தபடி வந்து விட்டாள். அன்பழகன் என்றாலே வெறுப்பாக இருந்தது. மழையென்றால் இன்னும் வெறுப்பாக இருந்தது.

முந்தியென்றால் மழை நல்ல விருப்பம் துளசிக்கு. கப்பல் விடுவது, சேறு தப்புவது, மழையில் குளிப்பது, நல்ல அடைமழை யென்றால் தொடர்ந்து பல நாட்களுக்கு பள்ளிக்கூடம் இருக்காது. எவ்வளவு சந்தோசம்? சாமத்தியப்பட்டபின் எத்தனை முறைகள் மழைநாட்கள் வந்துவிட்டன. விளையாட குளிக்க எல்லா அனுமதிகளும் பறிபோய்விட்டன.

இதுகள்கூட பறவாயில்ல. மற்றப் பெட்டயளுக்கும் அப்பிடித்தானே. ஆனா... நினைத்த ஒரு கணமே துளசிக்கு உடல் நடுங்குவதுபோல் இருந்து. சித்தனையைத் திரும்பி பாடத்தில் கவனம் கொள்ள முயன்றாள். எப்ப வாத்தியார் வந்தார்? என்ன தொடங்கினார்?

இப்போதாவது கவனம் செலுத்துவம் என்று அவள் முறன்றபோது நித்திரைதான் வந்தது. உடம்பெல்லாம் அலுப்பாக இருந்தது. தலையை சரித்து மேசையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்டு தூங்கிவிட்டாள். வாத்தியார் வந்து தடியால் ஒரு தட்டுத் தட்டும்வரை என்ன நிகழ்ந்தது என்றே தெரியாது.

,,நித்திரைகொள்ளவோ வந்தனீ,,என்று உறுமிய வாத்தி ,,போய் அந்த இடத்தில நில்லும் பாப்பம்,, என்று தடியாலேயே வகுப்பறைக்கு கொஞ்சம் தள்ளி இருந்த இடத்தைக் காட்டினார்.

துளசி மெதுவாக எழுந்து அந்த இடத்தில் சென்று நின்றாள். அவமானமாக இருந்தது. அழுகை வந்தும் கஸ்ரப்பட்டு அடக்கினாள். மற்றக் கிளாஸ் பிள்ளைகள் எல்லாம் பார்க்கிறார்கள். யாராவது போய் அண்ணன்களுக்கும் சொல்லுவார்கள். பேச்சு விழும். குட்டு விழும்.

சின்னச் சின்ன கம்பிகளினூடே வெளியே பார்த்தாள். மழை மட்டும் எந்தப் பிரச்சனையும் இன்றி தொந்தரவுமின்றி தன்னை வார்த்துக்கொண்டிருந்தது.

இடைவேளைக்கு ஒருத்தரும் வெளியில் செல்லவிலை. விளையாட முடியவில்லை என்று பெடியள் சொஞ்சப்பேர் கிறவுண்டுக்குப்போகும் வாசற் பக்கமாக நின்று மழையைத் திட்டிக் கொண்டிருந்தனர்.

அங்குமிங்குமாக கூடிக் கதைத்துக் கொண்டிருந்த ஆசிரியர்கள் நல்ல செய்திகளை மாணவர்களுக்குக் கொண்டுசென்றனர். மழை ஓரளவு ஓய்ந்தவுடன் எல்லோரும் வீட்டுக்குப் போகலாம் என்பதுவே அந்த நல்ல செய்தியாகும்.

துளசி புத்தகங்களை அடுக்கி எடுத்துக் கொண்டு தர்சியிடம் வந்தாள். ஆனால் அவள் மேசையை நெருங்கியதும் அவளுக்கு முதலில் திக்கெண்டது. பின் கோபம்தான் வந்தது. ஏன் தெரியுமா? அவள் ஒரு நாகபாம்பின் படத்தை கீறிவைத்திருந்தாள்.

,,உமக்கு உதுதான் ஒண்டும் சொல்லுறேல்ல. போம்,,

இப்ப யாராவது பார்த்தால் என்னவென்று கேட்டால் தான் கண்ட கனவு பற்றிச் சொல்லிவிடுவாளோ என பயமாக இருந்தது.

,,ஒருத்தருக்கும் ஒண்டும் சொல்லக் கூடாது,, என்று இரண்டுபேரும் தலையில் அடித்துச் சத்தியம் செய்து கொண்ட பின்னர்தான் இருவரும் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனாலும் துளசி எல்லா விடயங்களையும் சொல்வதில்லை. அப்படிச் சொல்லாமல் விட்டது நல்லதே என்று இப்போது யோசித்தாள்.

அவ சொன்னாவெண்டா அவ சொன்ன கதையளெல்லாத்தையும் நானும் சொல்லிப் போடுவேன்.

,,ஒரு படம்தானே கீறினனான். ஏன் கோவிக்கிறீர்,,

தர்சி படத்தை எடுத்து பத்து பதினைந்து துண்டுகளாகக் கிளித்து கையிக்குள் அடக்கினாள்.

மழை ஓய்ந்த பின்னரே மாணவர்கள் எல்லோரும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். தர்சி சின்னச் சின்னத் துண்டுகளாக கிளிக்கப்பட்டிருந்த நாகத்தினை தண்ணிக்குள் எறிய அவைகள் நனைந்தும் நனையாமலும் சிலதுகள் மிதந்தும் கொண்டிருந்தன. நாளை அல்லது மறுநாள் அவைகள் அடையாளமே இல்லாமல் போய்விடும்.

இருவரும் ஆறுதலாகக் கதைத்தபடி நடந்து வந்தார்கள். சயிக்கிள் பாதையும் இவர்கள் நடை பாதையும் வேறு வேறு. இது குறுக்குப்பாதை. ஒரே ஒரு இடம் மட்டும் தான் பிரச்சனையானது. வயல்களைத் தாண்டி சென்ற பின்னர் வரும் இடம். அது கொஞ்சம் சரிவு. மழைகாலத்தில் வழுக்கும். ஆனால் இந்தப் பாதையால் வந்தால், அதுவும் நடந்து வந்தால், வயற் காட்சிகள் எல்லாவற்றையும் வடிவாகப் பார்க்கலாம்..

மணிமணிகளாய் தலைநிமிர்த்தி நின்ற நெற்களுக்கு பாதுகாப்பு அளிப்பதுபோல் மழைநீர் நின்றது.

துளசி இன்னும் சின்னதாக இருக்கும் போது அதாவது 'பெரிய பிள்ளை' ஆவதற்கு முன்னர், விதைத்த ஆரம்பகாலங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிளி கலைக்வென்று அண்ணாக்களுடன் அனுப்பி வைக்கப் படுவாள். அண்ணாக்கள் சிலவேளைகளில் இவளுக்கு டிமிக்கி விட்டிட்டு பந்தடிக்கப் போவார்கள். வீட்டில் சொல்லாமல் இருக்க அவளுக்கு பரிசாக இனிப்பு கிடைக்கும். ஒருநாள் வயலுக்கு இவர்களை அனுப்பி சிறிது நேரத்தில் அப்பாவும் வந்தார். அண்ணாக்களின் டிமிக்கியும் பிடிபட்டது.

மழை ஓய்ந்ததென்றுதான் நினைத்தார்கள். அது திரும்பவும் சிணுங்கத் தொடங்கி விட்டது. முகில் கூட்டங்கள் எல்லாம் திரண்டு வந்திருப்பதனைப் பார்த்தால் ஏதோ திட்டத்துடன்தான் என்று புரிந்தது. மழை கத்தியழுவதற்குள் வீட்டிற்குப் போய்விடவேண்டும் என்று அவசரமாக நடந்தார்கள். வழுக்கல் இடத்தில் செருப்பைக் கழற்றி கையில் பிடித்தபடி நடந்தார்கள்.

இருவரும் பிரிந்து செல்லும் சந்தி வந்ததும் துளசி கேட்டாள்,

,,நாளைக்கு பின்னேரம் வீட்ட வாறீரோ,, என்று.

,,அப்பா விட்டாரெண்டால் சிலநேரம் வருவன்,, என்றதும், அவர்கள் பிரிவும் வந்தது.

இரு அண்ணாக்களையும் தவிர ஏனையவர்கள் வீட்டில்தான் இருக்கிறரர்கள். அப்பாவுடன் வயலில் உதவியாக இருக்கும் மாமாகூட அங்குதான் இருக்கிறார். அம்மாவின் கடைசித்தம்பி. துளசியின் அம்மம்மாவும் தாத்தாவும் இறப்பதற்கு முன் அவர்களுடன்தான் மாங்குளத்தில் இருந்தார். பின்னர் அவர்கள் இறந்தபின்னர் வயல்களை விற்றுவிட்டு ஒரேயடியாக அக்காவீட்டிற்கே வந்துவிட்டார். அவருக்கென்றும் இங்கேயே ஒரு வயல் வாங்கி விட்டிருக்கிறார்.

தங்கச்சியும் தம்பியும் கப்பல் செய்து தண்ணிக்குள் விட்டார்கள். அது அசையாமல் இருக்கவே கையால் தட்டி விட்டார்கள். அது மாட்டன் என்று அங்கேயே நின்றது.

புத்தகம் கொப்பிகளை உள்ளே போட்டு விட்டு அம்மாவிடம் வந்து துளசி தேத்தண்ணி கேட்டாள்.

,,இப்பதான் எல்லாருக்கும் ஆத்தினனான். மிச்சம் இருக்கு, எடுத்துக்குடி. பதமாத்தான் இருக்கும்,,

துளசிக்கு பசித்தது. கேட்டால் பேச்சுத்தான் கிடைக்கும். அதனாலேயே தேத்தண்ணீர்.

,,மழையே மழையே மெத்தப் பெய். மண்ணில் வெள்ளம் நிறையப் பெய்,,

கோலுக்குள் இருந்து தேனீர் குடித்தவளுக்கு சிறிது நேரத்தில் இந்த மழைப் பாட்டு தூரத்தில் கேட்பதுபோல் இருந்தது. பின் மெல்லமாகக் கேட்டது. அம்மா தட்டி எழுப்பும்வரையில் நல்ல நித்திரை.

எல்லோரும் ஒன்றாகச் சாப்பிடுவது சனி ஞாயிறுகளில் அல்லது மழைபெய்யும் நாட்களில்தான். மழைபெய்யும் நாட்கள் என்றால் மதியம் மட்டுமின்றி இரவிலும் ஒன்றாக இருப்பார்கள். வீட்டுப் பக்கமும் அனேகமாக ஒருவரும் வரமாட்டார்கள். இவர்களும் ஒரு இடமும் போக மாட்டார்கள். எல்லோரும் கூடுக்குள் அடைந்த கோழிகள் போல் இருப்பார்கள்.

யன்னல் கரையோரம் நின்றபடி, பெய்யும் மழையைப் பார்ப்பது அல்லது முன் குந்தில் இருந்து பார்ப்பது என்றால் இப்போது துளசிக்கு விருப்பமாக இருந்தது. சில வேளை எவ்வளவு வெறுக்கக்கூடிய மழையில் எவ்வளவு விருப்பமும் ஏற்படுகிறதே. நல்லமழை பெய்யும்போது யன்னற் கரையோரம் நின்றால் அல்லது விறாந்தையில் நின்றால் சின்னதாய்த் தெறித்து காலிலும் கைகளில் முகங்களில் பறக்கும். ஒருவகையான கூதலாக இருக்கும்.

,,ஒரு நாளும் மழையைப் பாக்காத மாதிரி புதினமாப் பாக்கிறா. இருண்டுபோச்சு. உள்ள போ,, என்று மாமா கட்டளையிட உடனே துளசி உள்ளுக்குப் போகவில்லை. கொஞ்சநேரம் இருந்து ஆறுதலாக மழையிடமிருந்து பிரியாவிடை பெற்றுத்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளே சென்றாள்.

இரவுச் சாப்பாட்டின் பின் துளசி கொஞ்ச நேரம் மூத்த அண்ணரிடம் கணக்குப் படித்தாள்.

,,எவ்வளவு சொல்லிக் கொடுத்தும் அவளுக்கு மண்டைக்குள் ஏறாது,, என்றே அவர் கருதினார். ஆனாலும் அப்பாவின் வேண்டுகோள், துளசியின் கெஞ்சல் சொல்லிக் கொடுக்க வைத்தது.

ஒவ்வொரு வருடமும் நல்ல புள்ளிகள் தான் எடுத்தாள். இரண்டு வருடங்களாக ஏன் இவள் இப்படி வர வர மக்காக வருகிறாள் என்று எல்லோரும் வியந்தனர்.

,,படிப்பில கவனமேயில்லை. பள்ளிக் கூடத்தால வந்து கொப்பியள அங்குமிங்கும் எறியிறது,,என்று அம்மா சொன்னபோது துளசிக்கு பயமாக இருந்தது. இண்டைக்கு வகுப்பில் வாத்தியார் பிடிச்சுவிட்ட கதை கேள்விப்பட்டா துலைஞ்சிது. எப்பிடியோ ஆராவது வந்து சொல்லுவினம். இவளுக் குத் திட்டு நடக்கத்தான் போகுது.

வளர்ந்தவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் படுக்கைகளைத் தயார்படுத்தினார் கள். ஏற்கனவே தூங்கிவிட்ட தம்பியையும் தங்கைகயையும் அப்பா தூக்கிக் கட்டிலில் கிடத்தினார்.

துளசி அறைக்குள் இருக்கும் தனது கட்டிலுக்கு வந்தாள். அம்மா அப்பா எல்லோரும் கோலுக்குள்ள. அண்ணாக் களில் ஒரு ஆள் பட அறைக்குள். மற்றவ ரும் மாமாவும் மற்றக் கோலுக்குள்.

நல்ல வெய்யில் காலத்தில் வீடு வெறிச்சோடிக் கிடக்கும். உள்ளுக்குள் படுப்பவர் அரிது. சாமத்தியப்படமுன்னர் துளசிகூட வெளியில் படுப்பாள், விறாந்தை யில். ஆனால் இப்ப அப்பிடி முடியாது.

இவ்வளவு பெரிய வீடு என்னத்துக்கு என்று சிலநேரம் துளசி நினைத்திருக் கிறாள். ஆனால் மழைகாலங்களில்தான் அதற்கான அர்த்தம் தெரிந்தது. மழை காலமென்றால் எல்லோருமே உள்ளேதான் படுப்பார்கள். எல்லோருடைய மூச்சும் கொறட்டையும் இவளுக்குக் கேட்கும். சிலவேளை எது யாருடையது எங்கிருந்து வருகின்றது என்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும். இதுபற்றி ஆழமாக இவள் தேடிய தில்லை. அவளுடைய பிரச்சினைகள் வேறு.

இந்த இதமான மழைகாலத்தில்தான் துளசியின் நித்திரையும் பறிபோனது.

இன்றைக்கு எப்பிடியாவது நித்திரை கொள்ளாமல் இருப்பது. அந்த உருவம் வந்தால் ஏதாவது சத்தம் செய்து கலைத்துவிடுவது என்ற திட்டத்துடன் கிடந்தாள். போர்வையை இழுத்து எல்லாப் பக்கங்களையும் சுற்றி பாதுகாப்புக் கொடுத்தாள். கொற கொறவெண்டு கொறட்டைகள் கேட்டன. வெளியில் மழைபெய்ந்து ஓய்ந்து சொட்டுச் சொட்டாய். துளிகளை எண்ணுமளவிற்கு ஆறுதலாகக் கேட்டுக்கொண்டிருந்தது. மெல்லம் மெல்ல மாக இவளும் தனது சாவாலிலிருந்து தோற்றுக் கொண்டிருந்தாள். மிகவும் மெதுவாகத்தான் வந்திருக்கவேண்டும். நிறைய நேரத்தின் பின்னர்தான் துளசி விழித்தாள். அன்னிய உருவம் ஒன்று அவள் உடலை...

,,ஐயோ ஆரிது. விடுங்கோ. என்ன விடுங்கோ,, என்று கத்தவேண்டும் போல் இருந்தது. கண்ணீர் வந்தது. நெஞ்சு அடைத்தது.

இப்ப கத்தினா எல்லோரும் முழிச்சிடு வினம். ஆர் எண்டு தெரிஞ்சா என்னப்பற்றி என்ன நினைப்பினம்? வீட்டில எவ்வளவு பிரச்சனை வரும்? என்னத்தான் பேசுவினம் என்று நினைத்தாலும் இந்த உருவத்தை எப்படிக் கலைப்பது என்று யோசித்து உடலை அங்கும் இங்கும் அசைத்தாள். சத்தமாக இருமினாள். அந்த உருவம் இவள் உடலிலிருந்து விலகியது. நெஞ்சுக்குள் திரும்பவும் தண்ணி வந்தது.

யார் இது? மா..மா? அண்..ணா? அ.....ப்.....பா.?

நினைக்க நினைக்க அழுகையாக வந்தது? நெஞ்சு வெடித்து கண்ணீராய்ப் பாய்ந்தது. உள்ளுக்குள் இழுத்து இழுத்து சத்தமில்லாம அழுதாள். அரியண்டமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தது. இந்த இரவு விடியக்கூடாது. யாருமே எழுந்திருக்கக்கூடாது என்று நினைத்தாள். யாரையுமே பார்க்கக்கூடாது என்று தோன்றிற்று. இன்று சேவல்கள் கூவும் வரையில் துளசி நித்திரையே கொள்ள வில்லை.

,,இவ்வளவு நேரமாச்சு பொம்பிளப் பிள்ளக்கு இவ்வளவு நேரம் நித்திர. எழும்பு,, அம்மா தட்டிவிட்டு,

,,நான் கோயிலு ஓடிப்போட்டு வாறன். தேங்காயெல்லாம் திருவி மிளகாய் பொரிச்சு வைச்சிருக்கு. சம்பல இடிச்சு வை,, என்றபடி வெளியே போய்விட்டாள்.

துளசி கிணற்றடிக்கு வந்தாள். இண்டைக்கும் கையாலதான் தீட்டவேணும். தம்பிய விட்டு ஒரு பிறஸ் வாங்கலாம். ஆனால் அதெல்லாம் அவசியமில்லை என்று நினைத்தாள்.

இந்தப் பல்லத் தீட்டினால் என்ன தீட்டாட்டி என்ன?

தன் உடம்பே தன்னிடம் இல்லாததுபோல் இருந்தது. வெறுப்பாக இருந்தது. அழுக்குப் படிந்த ஊத்தைபோல் மணத்தது.

குளிச்சுப்போட்டுத்தான் மற்ற அலுவல்கள் செய்யவேணும் என்று முடிவெடுத்தாள். அறைக்குள் சென்று தோய்த்து மடித்து வைத்த துவாயை எடுத்துக் கொண்டு வரும் வழியில் மாமா மறித்து:

,,துளசி ஒரு தேத்தண்ணி போடன்,,

,,குளிக்கப் போறன். குளிச்சிட்டு வைக்கிறன்,,

,,வைச்சுத் தந்திட்டு குளிக்கலாம்தானே,,

துவாயைக் கம்பியில் எறிந்துவிட்டு கிடு கிடு என்று குசினிக்குள் சென்று தேத் தண்ணீர் போட்டு வைத்துவிட்டு தூரவே நின்று,

,,குசினிக்குள்ள ரீ இருக்கிது,, என்று கத்திச் சொல்லிவிட்டு குளிக்கப்போனாள்.

இன்றைக்கு ஒரு வாளி இழுப்பதுகூட கஸ்ரமாக இருந்தது. அரைவாசிக்குக் கிட்ட முட்டிக் கிடந்த கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளுவதுகூட. மழைத்தண்ணீர் என்று வித்தியாசமாக தெரிந்தது. மணம்!

யார் அது?

அப்பா....? மாமா...? அண்ணா.? சீ அப்பிடி ஒருத்தரும் இருக்காது. கடைசிவரையும் இருக்காது. யாரோ மாய மனிதனாய் இருக் குமோ? அவர்களில் வீணாகச் சந்தேகப் பட்டுவிட்டோமே என்று வெட்கமாக இருந்தது. ஆனாலும் யாரையும் நேருக்கு நேர் பார்க்கவேண்டும்போல் இல்லை. ஒருவேளை பேயா இருக்குமோ?

துளசிக்கு கால் கையெல்லாம் நடுங்கியது.

அம்மாட்டச் சொல்லுவமே? சீ வேண்டாம்! சொல்லுவமே? வேண்டாம்வேண்டாம்.

தர்சி இண்டைக்கு வந்தால் எவ்வளவு நல்லது?

துளசி குளித்து உள்ளுக்குள் வர அம்மாவும் கோயிலில் இருந்து வந்துவிட்டா. மழை ஓய்ந்திருந்ததால் எல்லோரும் இத் தருணத்தை தமது காரியங்கள் முடிக்க பிரயோசனப் படுத்தினர்.

இங்கும் பல உருவங்கள் காணமற் போயிருந்தன.

,,ஒருவேல சொன்னா ஒழுங்காச் செய்யிறேல்ல. இன்னும் சம்பல் இடிக்கேல்லையே,,

,,சரியான வயித்துக்குத்து,,

என்று சொன்னபடியால் (திடீரெண்டு தனக்கு பொய்சொல்லும் பழக்கம் எங்கிருந்து வந்ததென்று துளசி அதிசயித் தாலும்) ஒரே கல்லி இரண்டு மாங்காய்கள்! சம்பலும் இடிக்கத் தேவையில்லை, இன்று ரியூசனுக்கும் போகத்தேவையில்லை.

என்ன எவ்வளவு பேசினாலும் வயித்துக் குத்து வரும் நேரங்களில் துளசியில் மிகுந்த அக்கறைஅம்மாவிற்கு.

பின்னேரம் தர்சி வந்தாள்.

,,வீட்டில எல்லாரும் சுகமாய் இருக்கினமோ?,, என்று சம்பிரதாயத்திற்கு கேட்டு விட்டு அம்மா தேத்தண்ணி ஊத்திக் கொடுத்தாள்.

தர்சி வந்தது துளசிக்கு எவ்வளவு சந்தோசம். ஆனாலும் சந்தோசத்தைக் கொண்டாடமுடியாமல் இருந்தாள். அந்தக் கேள்வி மட்டும் அரித்துக் கொண்டிருந்தது. தவிரவும் இன்று இரவு எப்படியோ என்று நினைத்ததில் அங்கமெல்லாம் விறைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருவரும் பின்கோடிப் பக்கமாக வந்தனர்.

,,ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்?,, என்று தர்சி கேட்டதுமே துளசிக்கு அழுமையாக வந்தது. என்ன சொல்லுவது, சொல்லக் கூடாது என்று நினைத்தாள். யோசிக்கவும் நேரமில்லை.

,,நேற்று பேய்... பேய் வந்தது,, என்றாள்.

,,திரும்பவும் கனவு கண்டனீரோ?,,

,,இல்ல. உண்மையாத்தான்,,

,,எப்பிடி இருந்தது சொல்லும் பார்ப்பம்,,

,,இருட்டுக்கை தெரியேல்ல .: ஆனால் எனக்குக் கிட்ட வந்திது,,

தர்சிக்கு சிரிப்புத்தான் வந்தது.

,,பே இருட்டிலதான் தெரியும். நீர் கனவுதான் கண்டனீர்,,

தர்சி விடைபெற்று நிறைய நேரம் ஆகிவிட்டது. வீட்டில் விளக்கேறும் நேரம். அம்மா படஅறைக்குள் இப்போது விளக்கு ஏற்றியிருப்பாள்.

முகம் கழுவ கிணற்றடிக்கு வந்தாள் துளசி.

பேயெண்டால் இருட்டிலதான் தெரியும். தர்சி சொன்னது சரிதான். இருட்டிலதானே பேய் வாறது. அப்பியெண்டா இரவில வந்தது பேயில்ல. கனவுமில்ல. அப்ப. ஆ..ர..து?

மாமா...?? அண்ணாக்களில் ஒரு ஆள்...?? அப்பா...??

துளசிக்கு தலைசுற்றியது. நிறைந்திருந்த கிணற்றைப் பார்த்தாள். அப்படியே விழுந்து விட வேண்டும் போலிருந்தது. விழுந்தால் எல்லாப் பிரச்சினையும் முடிந்துவிடும்.

ஆனால் விழுந்தவுடன் செத்துப்போவினம் என்றில்லத்தானே.

ஆராவது காப்பாற்றீட்டா...?

பழுத்து விழுந்த சில இலைகள் தண்ணீரில் மிதந்துகொண்டிருந்தன. எத்தனை நாட்களாக மிதக்கிறனவோ தெரியாது. பார்க்கப் பரிதாபமாக இருந்தன.

அவைகளைப் பார்க்கும்போது தானே மிதப்பதாக உணர்ந்தாள். இன்று வரப் போகும் இரவு பற்றியே சிந்தித்தாள்.

வழமைபோல எல்லாக் காரியங்களும் கடமைகளும் முடிந்து எல்லோரும் தத்தமது இடங்களில் தூங்கிக்கொண்டிருந்தனர். துளசியும் விழித்திருந்தாள்.

மழைக்குப் பஞ்சியே இல்லைப்போல். தனது கடமை தவறாமல் காரியம் நடத்துவது போல் சோவென்று பெய்தது. கிணற்றிற்குள் வெடிவைப்பதுபோல் தூரத்தில் இடியும் இடித்துக்கேட்டது. அவள் எதிர்பாத்ததுபோலவே அந்த உருவம் அவளை நெருங்கி அவள் போர்வையை விலக்க முயன்றது. அவள் தனது போர்வையை இறுக்கிப் பிடித்திருந்தாள். அது பல பக்கமாக முயற்சித்தது.

,,ஐயோ பாம்பு. ஐயோ பாம்பு,,

உரத்துக் கத்தினாள். மனதால் அல்ல. வாயால்!

யாரோ எழும்பி உடனே லயிற்றைப் போட்டார்கள்.

,,எங்க எங்க,, எண்டு எல்லாரும் ஓடிவந்தார்கள்.

,,இதாலதான் இப்பிடி ஏறி இப்பிடி என்ர கால்மாட்டால ஊர்ந்து போச்சிது,,

,,நீ கண்டனியோ,, பெரிய அண்ணை கேட்டபடி கட்டிலுக்குக் கீழே குனிஞ்சு பார்த்தான்.

,,நீ கனவுதான் கண்டிருக்கிறாய்,,

,,இல்ல, பாம்புதான் வந்தது,,

,,அதுக்குள்ள ஓடியிருக்காது. வடிவாத் தேடுங்கோ,, என்று அப்பா சொல்ல ஆமாப் போட்டு மாமா பொல்லுடன் தேடிப்பார்த்தார்.

,,நான் நினைக்கேல்ல பாம்பெண்டு. தம்பி சொன்னமாதிரி கனவாத்தான் இருக்கும்,, என்றார். சின்ன அண்ணண்கூட பொல்லு வைத்திருந்தான்.

துளசிமட்டும் திடமாகச் சென்னாள்,

,,பாம்புதான் வந்தது. எனக்குப் பயமாக்கிடக்கு. அம்மா இங்க வந்து எனக்குப் பக்கத்தில படுங்கோ. எனக்குப் பயமாக் கிடக்கு,, என்று துளசி ஒற்றைக் காலில் நின்று அம்மாவை தனக்குப் பக்கத்தில் படுக்கவைத்தாள். கோயிலில் ஒரு நேர்த்தி வைக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டார் அப்பா. எல்லோரும் தத்தமது படுக்கைகளுக்குச் சென்றுவிட்டனர். துளசிகூட இன்று நிம்மதியாகத் தூங்கினாள். மழைமட்டும் களைப்பில்லாமல் சலிப்பில்லாமல் தன்னை அள்ளிக் கொட்டியவண்ணமிருந்தது. (27.06.2004)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இருப்பின் பின்னால் வாழ்வின் வெளி

காற்று வெளியின்
ஒவ்வொரு துணிக்கையிலும்
என் வேட்கைகளை எழுதுகிறேன்

ஓய்விடத்தை நோக்கிப்
பயணிக்கின்ற
சூரியன் மீதும்
விரைந்து செல்லத் தூண்டப்படும்
காலைப் பொழுதின் மீதும்


என்னுள்ளிருந்தே
விரிகின்றது வாழ்வு

இடிபாடுகளை
அதிகாரத்தை
வெறுமையை
எழுதுகிறது காலம்

என்னைச் சுற்றியெழுப்பப்பட்ட
சுவர்களிலெல்லாம் எழுதுகிறேன்
என் பெருமைகளை
தன்னம்பிக்கைகளை
சுயமரியாதைகளை

இணைக்கவும்
விடுபடவுமான
நிர்ணயங்களோடு
சாபத்தை உடைத்துப்
பூத்திருக்கின்றேன்

மீளும் உரிமை கோரி
ஆற்றலை உறுதி செய்து
என் உள்ளம் திறந்து கொள்கின்றது
பூமியில் முடிவற்ற பிரமாண்டமாய் !!



அனார்
(இலங்கை)

(2004/10)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனநோயின் முன் பின் நிகழ்வுகள்

தெருவில் மாடுகள்
சானிடரி நாஃப்கினை மென்றபடி
சாக்கடை ஓரங்களில்
காலி கோக் டப்பிகள்

இயலாதவர்கள் அடைபட்டுக்கிடக்கும் வீடு
தணலைப் பொழியும் மதியம்
நாய்கள் தொலைந்துபோன வீதிகளில்
கோக் டப்பிகள் ஓடிப்பிடித்து
விளையாடிக் கொண்டிருக்கின்றன

பொழுதெங்கும்
இந்த இரைச்சல் தொடர்ந்தபடி
வெறுமையின் மஞ்சள் பூத்த மாலை
வழக்கமாக வீடு திரும்பும்
மனித மிருக சலசலப்புடன்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
அலறத் தொடங்குகின்றன


குண்டு பொழியும் இயந்திரப் பறவை
இரும்பு மிருகமென உலவும் டாங்கிகள்
சிதறு தேங்காய் உடல்கள்
தரைமட்டமான கட்டடங்கள்
ஊனமுற்ற குழந்தைகளின் ஓலம்
அனைத்து வீட்டுத் தொலைக்காட்சியும் கக்கும்
முன்னிரவு

பீதியின் கருமையைப் போர்த்தியபடி படுக்கையில்
பின்னிரவில் காலி டப்பிகள் ஒவ்வொன்றாக
வீதியை முற்றுகையிட ஆரம்பித்துவிட்டன
மண் அரைபடும் நாராச ஒலி
துளித் துளியாகப் பெருக
பேரோசையுடன் ராட்சஸ கோக் டப்பிகள்
சுவர்களைத் தரைமட்டமாக்கியபடி
என்னை நோக்கி வருகின்றன.

இரவு முழுவதும் என் மண்டைக்குள்
ஊர்ந்துக் கொண்டிருக்கும்
இரும்பு மிருகங்களை
வெளியேற்ற முடியவில்லை
என் மயிரை ஒவ்வொன்றாகப்
பிடுங்கி எறிகிறேன்

மாசிச சகதியில் அமிழ்ந்து கிடக்கும்
சூரியனை
யார் காலையில் விடுவிப்பது.

(2004/10)



மாலதி மைத்ரி
(இந்தியா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓவியர் வாசுகி தனது பாடசாலைக் காலத்தில் ஓவிய ஆசிரியர் திருமதி எம்.ஆர்.சின்னப்புவிடமும், பின்பு பிரசித்திபெற்ற ஓவியர் அ.மாற்கு விடமும் ஓவியப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர். இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் தனிநபர் மற்றும் குழுநிலையிலான ஓவியக் கண்காட்சிகளில் பங்கெடுத்துக் கொண்டிருப்பவர். ஒடுக்கப்பட்டவர்களது -குறிப்பாக பெண்களது- வெளிப்பாடுகளை ஓவியப் பயிற்சிகள் மூலம் வெளிக்கொண்டு வருபவர். இவரது ஓவியங்கள் பொதுவாக எதிர்ப்புத்தன்மை வாய்ந்ததாகவும், சிறப்பாக பெண்நிலைவாத நோக்கை வெளிப்படுத்துபவனவாகவும் இருக்கின்றன.



- கேள்விகளுடன் றஞ்சி (சுவிஸ்)
பதில்களுடன் கமலா வாசுகி (இலங்கை) -

**உங்களுக்கு இந்த ஓவியக் கலை கையகப்பட்டதைப் பற்றிய சிறு அறிமுகத்தைத் தாருங்களேன்?**

எல்லாப் பிள்ளைகளையும் போலவே சிறுவயதில் எனக்கும் வர்ணங்களிலும் வெவ்வேறு வடிவப் பொருட்களிலும் ஆவலிருந்தது ஞாபகமிருக்கிறது. மரக்குத்திகள், வர்ணக் கடதாசிகள், சிகரட்பெட்டிகள், சில்லறைக் குற்றிகள், சிப்பிகள் என கையில் அகப்படுபவற்றை எல்லாம் வெவ்வேறு வடிவங்களாக அடுக்கி அழகு பார்ப்பதும் சுவரில் பூச்சு விட்டிருக்கும் வர்ணங்களை இன்னும் கொஞ்சம் சுரண்டிப் படங்களாக்கியதும் ஞாபகமிருக்கிறது. ஆனால் பள்ளிக்கூடத்தில் சித்திரப் பாடத்துக்கு பெ..யில் மார்க்ஸ் தான் வாங்கிக் கொண்டிருந்தேன். வேம்படியில் எட்டாம் வகுப்பில் சித்திர ஆசிரியர் திருமதி எம்.பி.ஆர்.சின்னப்புவிடம் எனது கற்பனைகள் அடையாளங்காணப்படும் வரை இதுதான் நிலைமை. அவர்தான் எங்களுக்கு ஓவிய வெளியை அறிமுகப்படுத்தியவர். பாடசாலைக் காலத்தின் பின் மாற்கு மாஸ்டர் அவ்வெளியில் எனது பயணத்துக்கான வெவ்வேறு சிறகுகளை அடையாளங் காட்டினார். வர்ணங்களும் வடிவங்களோடு மட்டுமின்றி வாழ்க்கையின் பல தளங்களிலும் யாழ்ப்பாணத்தின் சாதாரண ஒரு பெண்ணுக்கு கிட்டாத பல வெளிகள் எனக்கு சாத்தியமாயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உங்கள் ஓவியங்கள் தமிழ்ச் சூழலில் முறையாக அறிமுகமாகியிருக்கின்றன என நீங்கள் கருதுகின்றீர்களா?**

எங்கள் சூழலில் 'முறையான அறிமுகம்' கிடைத்த பெருமை தென்னிந்திய தமிழ்ச் சினிமாக்களுக்கும் தொலைக்காட்சி நாடகங்களுக்கும் மட்டும் தானுண்டு. நான் ஓவியர் (பெண்பால் என்ன?) என்பது என்னைத் தெரிந்த பலருக்கும் தெரியும். என்னுடைய ஓவியங்கள் பற்றி இங்குள்ள ஓவிய ஆர்வலர்களுக்குத் தெரிந்துள்ளது. மற்றப்படி ஓவியம் என்பது சிறுசஞ்சிகைகள் போல சிறுவட்டத்துக்குரியதாகத்தான் இருக்கிறது.

**கலைகளை அன்றைய காலத்தின் பிரதிபலிப்பு என்ற வகையினுள் மட்டும் அடக்கும் போது கலைஞனின் இயற்கை மீதான ரசனை, எதிர்காலம் பற்றிய கனவுகளின் பிரதிபலிப்பு, தனிநபர் உளவியல் பிரதிபலிப்புக்கள் என்பன அடிபட்டுப்போகலாம் என்பது பற்றி ஒரு ஓவியர் என்ற வகையில் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

இதைத்தான் பிரதிபலிக்க வேண்டும், இப்படித்தான் பிரதிபலிக்க வேண்டும் அல்லாதவை கலைகள் அல்ல எனும் போக்கு எக்காலத்திலுமே இருந்துதான் வந்துள்ளது. அரசு, மதங்கள் என பலமாக இருப்பவர்களால் இவை தீர்மானிக்கப் பட்டு வந்திருக்கின்றன. இதில் இன்று தொடர்பு சாதனங்களும் பங்குவகிக்கின்றன. வரலாற்று ரீதியாக இன்றுவரை அரசு, மதம் போன்றவை சாராத கலைவடிவங்கள் கிடையாதிருப்பது இதற்கு ஒரு உதாரணமாகும். அவற்றைப் பிரதிபலிக்காதவை நிராகரிக்கப்பட்டிருப்பதுவும் உண்மை. அக்காலத்தில் பெண்களும், சிறியவர்களும், சாதாரணர்களும் கலைகளில் ஈடுபடாதிருந்தார்கள் என்று யாராலும் கூற முடியாது. ஆனால் அவைபற்றி எந்தத்தகவலும் இல்லை. இப்பொழுதும் அதேவிதமாகப் பிரதானமாகக் கருதப்படும் ஒரு விடயம் அல்லது பிரச்சனை சமகாலத்துக்குரியதாக வரையறுக்கப்படுகிறது. எமது உதாரணத்தில் போரைக் குறிப்படலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை ஒரு குறித்த காலத்தில் வாழும் ஒருவரது வாழ்வு முழுமையுமே, அவரது அனுபவம், உணர்வுகள், கனவுகள், மனவியல் சஞ்சாரங்கள் அனைத்துமே அவரது சமகாலத்துக்குரியவை தான். இத்தகைய கலையின் பலபரிமாண அனுபவத்தை ஏற்றுக் கொள்ளும் தன்மை இப்பொழுது அதிகரித்து வருவதும் உண்மை.

**ஈழத் தமிழ்ச் சூழலில் எண்பதுகளின் பின்னான அரசியல் சூழல் வாழ்வியலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இதில் தமிழில் கவிஞர்கள் தோன்றிய அளவுக்கு ஓவியர்கள் குறிப்பிட்டளவில் தோன்றாமைக்கு என்ன காரணம் என நினைக்கிறீர்கள்?**

எழுத்து மொழிக்கு ஒரு நீண்ட தொடர்ச்சி இருந்தது. அது வாய்மொழியின் நேரடி உறவில் இருந்தது. எமது வாழ்வியலையும், வெவ்வேறு வாழ்க்கைச் சூழல்களயும் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தும் திறனையும், தனித்துவத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இன்று நாம் பாவிக்கும் 'ஓவியமொழி' இலங்கைத் தமிழருக்குப் புதிது. அதற்கென எந்தவொரு நீண்ட பாரம்பரியமும் இல்லை. எங்களுக்குரிய ஓவிய மொழியாக என்ன இருந்தது. அதன் பயிலுகை பற்றி எந்தத் தகவலும் இல்லை. நாங்கள் பிறநாட்டு ஓவியக்கற்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறைகளையே கற்கிறோம். பிற இடங்களில் தயாராகும் ஊடகங்களைப் பாவிக்கிறோம் இது பிறமொழியொன்றைக் கற்று அதில் எழுதுவதும், அந்த மொழியை எமக்கானதாக்க முயலும் வேட்கையும் போன்றது. இந்த அந்நியத்தன்மை எல்லாருக்கும் வரவேற்பானதாக இராது. மேலும், ஓவிய வெளிப்பாட்டுச் சாதனங்களின் பணப்பெறுமானமும் இதை முழு நேரத்தொழிலாகக் கொள்ள முடியா நிலைமையும் காரணமாக அமையும்.

***ஓவிய வாசிப்புப் பற்றிய அறிவு தமிழ்ச்சூழலில் என்ன நிலையில் இருக்கிறது?***

முதற்கேள்விக்குரிய பதிலே இதற்கும் பொருந்தும். எமக்குரிய ஓவிய வாசிப்புத் தொடர்ச்சியற்றது. கண்காட்சிகளோ ரசனை பற்றிய உரையாடல்களும் இன்னமும் குறைவாகவே உள்ளன. நவீன ஓவிய மொழி பலருக்கும் புரியாத ஒன்றாகவே இருக்கிறது. ஆயினும் சிக்கலான விடயங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் ஓவிய மொழி மீதான அங்கீகாரமும், புரிந்து கொள்ளும் ஆர்வமும் தேடலும் அதிகரித்து வருகிறது. கண்காட்சிகளில் இது என்ன சொல்கிறது, எதை வெளிப்படுத்துகிறீர்கள் போன்ற விளங்கிக்கொள்ள முனையும் கேள்விகள் குறைந்து ஆழமாகப்பார்த்து உணர முனைபவர்கள் கூடி வருகின்றனர். ஓவியங்களில் ஓவியர்களது வெளிப்பாடுகளுடன் அற்புதமாகத் தொடர்பு கொள்ளும் சிலரும் இருக்கின்றனர்.

***உங்கள் ஓவியங்களில் பெரும்பாலானவை பெண்நிலையில் நின்று வெளிப்பட்டிருக்கின்றன. இதற்கு நீங்கள் பெண் என்பதால் மட்டுமன்றி ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வும், பெண்ணியம் பற்றிய கோட்பாட்டுப் புரிதலும், இத்தளத்திலான செயற்பாடும் உங்கள் ஓவியத்துக்கு கனம் சேர்க்கின்றன என எடுத்துக்கொள்ளலாமா? இதுபற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.***

ஒரு விஞ்ஞான மாணவியாக போர்ச்சூழல் தந்த அனுபவங்களையே பிரதானமாகத் தீட்டிக் கொண்டிருந்த எனக்கு சமூகத்தில் பெண்கள் நிலை பற்றியும் குறிப்பாக் வன்முறைக்குட்பட்ட பெண்களுடன் வேலைசெய்யக் கிடைத்த போது (சூரியா பெண்கள் அமைப்பில்) ஓவியத்தின் இன்னொரு பரிமாணத்தை திறக்க வேண்டி ஏற்பட்டது. ஓவியம் என்னுடைய தோழியாக, உளவளத் துணையாளியாகத் துணை வந்தது. அந்த ஓவியங்கள் எல்லாம் எனது துயரங்களையும் ஆத்திரங்களையும் வாங்கி இருண்டு கிடந்தன. இந்த காலப் பகுதிக்குரிய எனது ஓவியங்கள் எல்லாம் நீர் வர்ணங்களைத் தீட்டி கழுவி கழுவி செய்யப்பட்டவை. அது சமையலறையிலோ குளியல் அறையிலோ, கிணற்றடியிலோ தமது உணர்வுகளைக கழுவிக் கழுவிக்காயும் எனது சகோதரிகளது வெளிப்படாத கலைப்படைப்புக்கள் போன்றது. எனக்கு மட்டுமல்லாமல் மற்றப் பெண்களுக்கும் வர்ணங்களுடனான உறவைத்தர முடிந்தது. பின்னர், பெண்நிலைவாதிகளுடனான பயிற்சிப்பட்டறைகளில் கருத்தியலை மட்டுமன்றி, உடலையும் உளத்தையும் பலப்படுத்தும் பயிற்சிகளில் ஈடுபட்டபோது




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாச்சார ரீதியாக, எங்கள் உடல்களில் கொண்டிருந்த கட்டுப்பாடு தளர்ந்தது. நாடகப்பயிற்சிப் பட்டறைகளும் இதற்கு உதவின.

1999 இல் பங்களாதேசத்தில் இவ்வாறான ஒரு மாதப் பயிற்சிப் பட்டறையில் தெற்காசியாவின் பல அற்புதமான பெண்ணிலைவாதிகளுடன் வாழக் கிடைத்தது முக்கியமானது. அங்கு கம்லா பாசின் ஒலிக்கவிட்ட மீராபாயினுடைய பாடலுக்குள் ஒன்றித்திருந்து அது முடியக் கையிலிருந்த ஒற்றையில் ஒரு கிறுக்கல் இருந்தது. அந்தக் கிறுக்கல்கள் தான் இன்று நான் தீட்டிக்கொண்டிருக்கும் பெண் தொடர்களுக்கான தொடக்கம். வன்முறைகள் தந்த அழுத்தங்களையும், பிரச்சனைகளையும் தாங்கி இருண்டு கிடந்த என்னுடைய படங்கள், பிரகாசமாகி அலையத் தொடங்கிற்று. நிஜத்தில் சாத்தியமற்ற மனதின் பிரயாணம் ஓவியத்தில் சாத்தியமாயிற்று.

***கிருஷாந்தியின் மீதான கோரவெறியினை பால்கடந்த நிலையில் நின்று விளக்கமுடியாது என்பதை உங்களது இந்த ஓவியம் மிக அழகாகவே படம் பிடித்திருக்கிறது. இதுபற்றி ஆண்நோக்கிலான எதிர்ப்பு விமர்சனங்கள் எதையும் முகம் கொடுக்கவேண்டி ஏற்பட்டதா?***



குறிப்பிட்ட இந்த ஓவியத்துக்கு எந்த எதிர்ப்பும் வரவில்லை. அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒரு சம்பவத்தை அது நேரடியாகச் சுட்டியதாலும் சம்பவத்தின் எதிரி ஆண் என்றதை விட ஒரு பொது எதிரியாகக் கருதப்பட்டதாலும் ஓவியத்தில் உள்ளுறைந்திருக்கும் எனது கோபத்தை ஒரு பெண்ணின் கோபமாக அநேகர் பார்க்கவில்லை. அது ஒரு தமிழனின் கோபம் (தமிழிச்சியினதாகக் கூட இருக்கத் தேவையில்லை). ஆனால் எனது சமூகத்துள் பலவிதமான வன்முறைகளுக்கு உட்பட்டுக்கொண்டிருக்கும், எனது உடன்பிறவா சகோதர தமிழிச்சிகளுடன் ஒவ்வொரு நாளும் வேலை செய்த பொழுது எழுந்த உணர்வுகளுடனான ஓவியங்கள் ஒரு சிலரால் பலமாக விமர்சிக்கப்பட்டன. ஆனாலும் இந்த உணர்வுகளை உணர முயலும், திறந்த மனதுடன் விளங்கிக்கொள்ள முயலும் ஆண்களையும் சந்தித்திருக்கிறேன்.

***நீங்கள் பிரபல ஓவியர் மாற்குவிடம் ஓவியக்கலையைக் கற்றிருக்கிறீர்கள். இதன் பாதிப்புக்கள் உங்கள் ஓவியங்களில் இழையோடுவதாக நீங்கள் கருதுவதுண்டா? அல்லது அதிலிருந்து முறித்துக்கொண்ட ஒரு பாணியில் அவை ஓவியமாகின்றனவா?***

அவருக்குக் கிட்ட இருந்த காலத்திலெல்லாம் அவருடைய பாணிகள் தான் எனக்குப் பயிற்சிக்குரியனவாகவும், பரீட்சார்த்தமாக ஆர்வம் ஊட்டுவனவாகவும் இருந்தன. அந்தக் கோடுகளும் வளைவுகளும் அவற்றின் சந்தமும் கன காலம் பிரிய முடியாதவையாகவே இருந்தன. மாஸ்டருடைய ரசனையும் பாராட்டுமே முதற்தேவையாகவும் இருந்தது. அவரை விட்டுத் தூரப்போன காலங்களில் நிலக்காட்சிகள் தவிர வேறு விடயங்களை வரைய முடியாதிருந்த காலமும் உண்டு பிறகு கிடைத்த வெவ்வேறு துறை அனுபவங்கள் திடீரென்று மீண்டும் வரையத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தூண்டிய போது பாணியிலும் மாற்றம் வந்திருந்தது. அது பற்றி முதலும் கூடச் சொல்லியிருக்கிறேன். மாற்கு மாஸ்டருக்கு ஆரம்ப காலத்தில் புகழ் தேடிக்கொடுத்தவை அவருடைய கழுவுதற்பாணி நீர்வர்ண ஓவியங்கள். ஆனால் அதைப்பற்றி நாங்கள் கேட்டிருக்கிறோம் கற்றுக்கொண்டதில்லை. ஆனால் பின்னர் என்னுடைய அழுத்தங்க ளிலிருந்து மீள்வதற்கு மாஸ்டர் வாயால் கூறக் கேட்டிருந்த அந்த நுட்பம் தான் கை கொடுத்தது. அது மாஸ்டரின் கழுவுதற்பாணி ஓவியங்களிலிருந்து வேறுபட்டேயிருந்தது. ஓவியங்களில் இப்பொழுது நேரடியாக மாஸ்டரின் பாதிப்புக்களைப் பார்க்க முடியாது.

**ஓவியம் பல பாடசாலைகளில் ஒரு பாடமாக கற்பிக்கப்படுகிறது. ஓவியம் ஒரு கலைவடிவம் என்ற தளத்தில் வைத்து அங்கு நிகழ்த்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

எமது பாடத்திட்டங்களில் ஓவியம் மட்டுமன்றி கணிதமோ விஞ்ஞானமோ, ஏனைய கலைகளோ ஏற்கனவே நிறுவப்பட்டவற்றை கற்பித்தலையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. பரீட்சார்த்த முயற்சிகள், சுயவெளிப்பாடு, கற்பனைகளுக்கான இடம் மிகக்குறைவு. ஏற்கனவே உள்ளவற்றைக் உருப்போட்டுத் திறன் பெறல் மட்டுமே அங்கு சாத்தியம். ஆக்க உந்து சக்தி உள்ளவர்களும், அவ்வாறானவர்களது தொடர்பு கிடைக்கப் பெற்றவர்களும் பாடசாலைகளுக்கு வெளியே தான் உருவாக வேண்டியிருக்கிறது.

**உங்கள் ஓவியங்கள் சில "வண்ணங்களில் உணர்வெழுதி" என்ற சிறு கையடக்கமான (கார்ட் வடிவில்) தொகுப்பாக வெளிவந்தது. இதை வெளியிட்டு ஊக்கம் தந்தவர்களை கூறுவீர்களா? இத்தொகுப்பு எவ்வாறான வரவேற்பைப் பெற்றது?**

இவ்வாறான தொகுப்பை வெளியிட வேண்டும் என ஆர்வம் கொண்டிருந்தது ஜெயசங்கர்தான். அதீத ஆர்வத்தில் சில ஓவியங் களையும் பணத்தையும் தன் நண்பர்களிடம் கொடுத்து ஏமாந்ததும், இன்றுவரைக்கும் எங்கள் குடும்பத்தில் சண்டைக்கான ஒரு தலைப்பாக அது இருப்பதும் ஒரு தனிக்கதை. ஒரு பெண்ணாக இந்தத் துறையில் என்னை நிலைநிறுத்திக் கொள்வதிலான ஒரு இழுக்காகத்தான் இதை நான் பார்த்தேன். எப்பொழுதும் எனது ஆர்வங்களை ஏனென்று கேட்காமல் ஊக்குவிக்கும் என் மாமாக்களில் ஒருவர் (திரு.கோபாலகிருஸ்ணன்) அந்தப் போர்ச் சூழலிலும் எனக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பணம் அனுப்பினார். எனக்கு எட்டக்கூடிய தூரத்திலிருந்த அச்சகத்தில் அதைப் பதிப்பித்தேன். அதன் அச்சுத் தரத்தில் இன்றும் கூட எனக்குக் குறையுண்டு. நண்பர்கள் வட்டத்துக்குள் மட்டும் தான் அதற்கான அறிமுகமுண்டு. மற்றப்படி சிறப்பாக வரவேற்பு என எதுவும் கிடைத்ததில்லை.




(2004/10)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'குட்மோர்னிங் அசோக்! ஹவ் ஆர் யூ?'

சாதாரணமாக இதற்கான எந்தவித பதிலும் அசோக்கிடமிருந்து எனக்குக் கிடைக்காது. நான் இந்தியாவிலிருந்து இங்கு எனது இனிய பெரியப்பாவிடமும், பெரியம்மாவிடமும், அசோக்கிடமும் வந்ததிலிருந்து எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் என்னால் அசோக்கைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அவனைப் புரிந்து கொள்வதற்கான முயற்சி பற்றி அவன் எந்தவிதமான அக்கறையும் கொள்ளவும் இல்லை. பெரியப்பாவுக்கும் பெரியம்மாவுக்கும் அவன் தனிப் பிள்ளையாகவே இருந்ததனால் அவனுக்கு அவர்களுடனான நெருக்கம் மிகவும் அதிகமாகவே இருந்தது. அதனால் மற்றைய விடயங்களையும் மற்றையவர்களையும் அவன் சுலபமாக அலட்சியப் படுத்தினான்.

# சிறகிழந்து பறவையாய்...



ஆங்கிலத்தில் – ஷாமிலா

தமிழில் – சந்திரவதனா

அவனது இந்த அலட்சியப் போக்கு எப்போதும் என்னைச் சீண்டிக் கொண்டிருக்கும் எனது அண்ணாவையும் தம்பியையும் அதிகமாக நினைத்து என்னை மிகையாக ஏங்க வைத்தது.

நான் வாழ்ந்த எங்கள் அந்த சிறிய வீடு எப்போதும் அன்பாலும் சந்தோசத்தாலும் நிரம்பியிருக்கும். எனது அம்மாவின் அன்பான கதகதப்பான சிரிப்பு எப்போதும் என்னை இதமாகத் தழுவிக் கொண்டே இருக்கும். எனது அப்பாவின் குறும்பான தன்மைகளும் அவருக்குள் இருக்கும் திறமைகளும் எப்போதும் என்னை வசீகரித்துக் கொண்டே இருக்கும். ஓ... நான் எனது வீட்டை விட்டு வெளிக்கிடும்போது இவையெல்லாவற்றையும் இழக்கப்போகிறேன் என்று துளியும் உணர்ந்து கொள்ள வில்லையே!

என்னுடைய அப்பா உள்ளுக்குள் மிகவும் மென்மையானவர். ஆனால் அவர் அதை வெளியில் காட்டிக் கொள்வதேயில்லை. எனது சிறுபராயத்தில் அப்பாவுக்கு என்மேல் அன்பில்லையென நான் பல தடவைகள் நினைத்திருக்கிறேன். அதற்காக எனது அறையின் ஓர் மூலையில் போய் இருந்து அழுதிருக்கிறேன். இப்போதுதான் எல்லோர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீதும் அப்பா எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் அவரால் மற்றவையர்களைப் போல அந்த அன்பை வெளிக்காட்டத் தெரிவதில்லை. நான் நினைக்கிறேன் சின்ன வயதிலேயே தந்தையை இழந்த அவரது கடினமான சிறுபராய வாழ்க்கைதான் அவரை இப்படி ஆக்கியிருக்க வேண்டும் என்று. தனது சிறுபராய ஏக்கங்களின் தாக்கங்களை அவர் நன்கு உணர்ந்திருந்ததால் தனக்குச் சின்ன வயதில் கிடைக்காத எல்லாவற்றையும் எங்களுக்கு வேண்டித் தர முயற்சிப்பார்.

எனக்குப் 14 வயதாக இருக்கையில் ஒரு பாடசாலை விடுமுறையின் போது அப்பா எங்கள் எல்லோரையும் அமெரிக்காவுக்கு கூட்டிச் சென்றார். நாங்கள் அந்தப் பயணத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தோம். பாடசாலையில் நண்பர்களோடு இதுபற்றி மிகுந்த உற்சாகத்தோடு கதைத்தோம். அமெரிக்காவில் எனது அப்பாவின் மூத்த சகோதரனும் அவரது மனைவியும் மகனும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்பாவின் சகோதரியும் தாயாரும் கூட அங்குதான் இருந்தார்கள்.

நாங்கள் உடனேயே எமது மைத்துனருடனும் ஒன்றுவிட்ட சகோதரர்களுடனும் மிக நெருக்கமாகி விட்டோம். அந்தப் பொழுதுகள் மிகவும் ஆச்சரியமான அழகிய இனிய பொழுதுகள்.

எனக்கும் எனது சகோதரர்களுக்கும் பெரியப்பா தனது மகனை நடாத்தும் விதம் மிகவும் ஆச்சரியத்தையும், ஒரு வித ஏக்கமான தாக்கத்தையும் ஏற்படுத்தியது. அவர் தனது மகனுடன் மிகவும் கூடிய நேரத்தைச் செலவழிப்பது மட்டுமல்லாது 'நான் உன்மேல் நிறைந்த அன்பு வைத்திருக்கிறேன்.' என்றும் அவனுக்கு அடிக்கடி சொல்லுவார்.

நாங்கள் இந்தியாவுக்குக்குத் திரும்பிய பின்னர் 'ஏன் அப்பா நீங்கள் பெரியப்பா போலை இல்லை. அவருக்கு தன்ரை பிள்ளையிலை உள்ள அன்பு போலை உங்களுக்கு எங்கள் மேலை ஏன் இல்லை?' என்று நான் அப்பாவிடம் கேட்டு விட்டேன். இப்போது நினைத்தால் கூட 'ஏன் அப்படியொரு கேள்வியை என் அப்பாவிடம் கேட்டேன்' என்ற குற்றவுணர்வு கலந்த வேதனை என்னை சங்கடப்படுத்துகிறது. ஒரு போதும் நான் அப்பாவை அப்படிக் கேட்டிருக்கக் கூடாது.

சில வருடங்களின் பின், எனக்குப் 17 வயதாக இருக்கும் போது, ஒரு நாள் அப்பா என்னைக் கேட்டார், 'உனக்கு அமெரிக்காவுக்குப் போய் ஆங்கில மீடியத்தில் படிக்க விருப்பமோ? நீ அங்கு பெரியப்பாவோடை இருந்து படிக்கலாம்' என்று.

அப்பாவின் இந்த ஆலோசனை என்னை அசாதாரண மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது. எனக்குப் பெரியப்பாவில் நல்ல விருப்பம். அவர் மிகவும் அன்பானவர். சினேகத்துடன் பழகக் கூடியவர். அதிர்ந்து பேசத் தெரியாதவர். அதனால் அங்கு போக வாய்ப்புக் கிடைத்தால் அது எனக்குக் கிடைக்கப் போகும் பெரும் பாக்கியம் என்றே நினைத்தேன். மிகவும் சந்தோசப்பட்டேன். ஆனால் அதற்குப் பிறகு எத்தனையோ விடயங்களை இழக்கப் போகிறேன் என்பதை மட்டும் அப்போது நான் துளி கூட உணரவில்லை.

அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முதல்நாள் இரவு நான் எனது அறையில் இருந்தேன். திடீரென்று என்னை பயம் சூழ்ந்து கொண்டது. 'எனது பாதுகாப்பான வீட்டை விட்டு நான் போகப் போகிறேன். எனது இந்த வீட்டை நிரப்பியிருக்கும் காற்றில் எனது சிறுபராயத்துச் சந்தோசங்கள் நிறைந்திருக்கின்றன. சுவர்களிலும் முகடுகளிலும் எனது குடும்பத்தவர்களின் சந்தோசச் சிரிப்புகள் ஒட்டியிருக்கின்றன. இவையெல்லாவற்றையும் விட்டு நான் போகப் போகிறேன்'. பயமும், ஏக்கமும், இன்னதென்று சொல்ல முடியாத ஆதங்கமுமாய் ஏதேதோ நினைவுகள் என் தலைக்குள் புகுந்து என்னைக் குடைந்தன. என்னால் அழுகையை நிறுத்த முடியவில்லை..

'நீரா சமையல் முடிஞ்சுது. சூடாற முன்னம் வந்து சாப்பிடு. இண்டைக்கு உனக்கு விருப்பமான சாப்பாடு சமைச்சிருக்கிறன்'. அம்மாவின் அன்பான அழைப்பில் அலைபாய்ந்து கொண்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருந்த எனது எண்ணங்கள் இடைநிறுத்தப்பட்டன. நான் எனது கன்னங்களில் வழிந்துகொண்டிருந்த கண்ணீரை அழுத்தித் துடைத்துக் கொண்டு சாப்பிடுவதற்காக வெளியில்போனேன். இன்று கடைசித் தடவையாக எனது குடும்பத்தவருடன் ஒன்றாக இருந்து சாப்பிடப் போகிறேன்.

மேசையில் பொரியல், பிரட்டல், குழம்பு, சொதி என்று பல்வகை விடயங்கள் இருந்தன. கூடவே பிட்டு, இடியப்பம் என்று அம்மா நிறையவே சமைத்திருந்தா. எனக்குப் பிடித்தமான கத்தரிக்காய் பிரட்டலும் இருந்தது. நான் அப்பாவின் பக்கத்தில் அமர்ந்து விளிம்பில் நீலப்பூப் போட்ட எனது சீனக் கோப்பையில் சாப்பிடத் தொடங்கினேன்.

அது எனக்கு மிகவும் பிடித்தமான சாப்பாடாக இருந்த போதும் தொண்டையால் உள்ளிறங்க மறுத்தது. காய்ச்சல் போலவும், உடம்பெல்லாம் நோவது போலவும் இருந்தது. ஆனாலும் எனது அந்த உணர்வுகளையோ, உளவலியையோ வெளியில் காட்ட முடியாதிருந்தது. நாங்கள் ஒரு போதும் எங்கள் உள் உணர்வுகளை வெளிக் காட்டியதில்லை. அதனால் எனது அப்பா, அம்மா, அண்ணா, தம்பி எல்லோரையும் நான் ஆழமாக நேசிப்பதையோ, அவர்களைப் பிரிய என்னால் முடியாதென்றோ, நான் எடுத்துக் கொண்ட முடிவு பிழையென்றோ, அப்போதுள்ள எனது மனநிலையில் எனக்கு அமெரிக்காவுக்குப் போக விருப்பமில்லையென்றோ சொல்ல முடியாதிருந்தது. வழமைக்கு மாறான இறுக்கத்துடன் அன்றைய சாப்பாடு முடிந்தது. யாரும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை.

இரவு எனது அம்மா எனது படுக்கையறையினுள் வந்து எனக்கு முத்தம் தந்து 'குட்நைற்' சொன்னா. இது அம்மா எனக்கு கடைசித் தடவையாகத் தரும் முத்தம். நாளை அதிகாலையில் நான் புறப்பட வேண்டும். எனது உணர்வுகளை இப்போதாவது அம்மாவிடம் சொல்லி விடலாம் என நினைத்தேன். ஆனாலும் இறுதியில் சொல்லவில்லை. அம்மாவின் பளபளக்கும் அழகிய முகத்தையும், அதில் தோன்றும் அன்பு நிறைந்த புன்சிரிப்பையும் பார்த்தேன். நான் ஒரு போதும் காணாத சோகம் அந்த அழகிய கனிவான கண்களில்...

இன்றுகூட நான் என் அம்மாவுடன் எனது அறையில் இருந்த அந்தக் கடைசிப் பொழுதை நினைத்தால் மனசு தாங்காமல் என் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடும்.

எனது அப்பா, 'பெரியப்பாவும் பெரியம்மாவும் எனது சொந்தப் பெற்றோர் போல என்னைப் பார்த்துக் கொள்வார்கள்' என்றும், 'தனக்கும், அம்மாவுக்கும் நான் கொடுக்கும் மதிப்பை அவர்களுக்கும் கொடுக்க வேண்டும்' என்றும் எனக்குச் சொன்னார். ஓ... எனது அப்பா தனது அண்ணன்மேல் எத்துணை பாசம் வைத்துள்ளார். அதை அவர் அவரது அண்ணன் பற்றிப் பேசும்போதெல்லாம் தாயின் கையில் தனக்காக ஒரு விளையாட்டுச்சாமான் இருக்கும்போது ஒரு குழந்தையின் கண்கள் எப்படிப் பிரகாசிக்குமோ அப்படிப் பிரகாசிக்கும். அதை அவரது கண்களிலிருந்து நான் கண்டுகொள்வேன்.

எனக்கு எனது பெரியப்பாவிலும் நல்ல விருப்பம். அவர் அப்பாவுக்கு நேர்மாறானவர். அன்பை வெளிக் காட்டுவார். என்மேல் உள்ள பிரியத்தைச் சொல்லுவார். அவரோடு எனது மன உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதும் மனந்திறந்து பேசுவதும் மிகவும் சுலபமானது.

நான் அமெரிக்காவில் வாழத் தொடங்கிய முதல் சில மாதங்கள் எனது குடும்பத்தின் பிரிவைத் தாங்க முடியாது மிகவும் தவித்தேன். ஆனாலும் எனது பெரியப்பாவின் குடும்பத்துடன் திறந்த மனத்துடன் சந்தோசமாகப் பழக முனைந்தேன். எனது உணர்வுகளையும், எதிர்காலம் பற்றிய எனது கனவுகளையும், திட்டங்களையும், இன்னும் பல விடயங்களையும் பெரியப்பாவுடன் பேசத் தொடங்கினேன். அவரோடு நெருக்கமாகப் பேச முடியும் தருணங்களில் எனக்கு இத்தனை இனிமையான இரு தந்தையரைத் தந்ததற்காக ஆண்டவனுக்கு மனதார நன்றி சொன்னேன்.

எனது பெரியம்மாவுடனும் இதேபோல நெருக்கமாகப் பழக நான் முயற்சித்தேன். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவ ஒரு பழைய பஞ்சாங்கம். அவவுடன் இணைவதென்பது எப்போதும் சற்றுக் கடினமான தாகவே இருந்தது. மனம் விட்டுப் பேசுவதோ நட்போடு பழகுவதோ இயலாமல் எப்போதும் ஒரு இறுக்கத்துடன் இருந்தா. எந்த நேரத்தில் அவவின் மனநிலை மாறும் என்று தெரியாமல் இருந்தது. அதனாலோ என்னவோ அவவுடன் என்னால் உள்ளார்ந்த நெருக்கமாகப் பழக முடியாதிருந்தது. பெரியப்பாவை அவ சரியாகக் கவனிப்பதில்லை. வார்த்தைகளால் குத்துவா. தாழ்த்திப் பேசுவா. இது என் நினைவில் எப்போதும் இருந்து கொண்டே இருந்தது.

எனது அம்மா ஒரு போதும் அப்பாவுடன் இப்படிப் பேசி நான் கண்டதில்லை. அம்மாவிடம் எப்போதும் அன்பு கலந்த ஒரு பணிவு இருக்கும். ஆனால் பெரியம்மா அப்பம்மாவைக் கூட வார்த்தைகளால் குத்திக் காட்டுவா. தாழ்த்திப் பேசுவா. அப்பம்மா அவவின் கணவனின் தாயார். அப்படியிருக்க அவ இப்படி நடக்கும் போது, இவ என்ன வகையான பெண் ஜென்மம்...! என்று அடிக்கடி நான் எனக்குள் யோசிப்பேன்.

'ஒரு உதவாத நாளாகத் தொடங்கியது அங்கு எனது முதலாவது பாடசாலைநாள். எனக்கு பாடசாலையில் அட்மிசன் கிடைத்து முதல் நாள் நான் பாடசாலைக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருக்கும் போது... 'உன்ரை அம்மாவுக்கு பொம்பிளைப் பிள்ளையை எப்பிடி வளர்க்கோணுமெண்டு தெரியாதோ...? சனங்க ளுக்கு மத்தியிலை நீ இப்படியோ நடமாடுறது? என்ன ஒரு வெட்கங் கெட்ட குடும்பம்..?' பெரியம்மா கத்தினா. பாடசாலைக்கான யூனிபோர்மையே அணிந்திருந்தேன். வெள்ளை மேற்சட்டையும், மஜந்தா நிறத்தில் சுருக்குப் பாவாடையும் அதற்குப் பொருத்தமாய் மஜந்தா நிறத்தில் ரை யும் (கழுத்துப் பட்டி) பார்ப்பதற்கு நன்றாகவே இருந்தன. எனக்கு அந்த உடை மிகவும் பிடித்திருந்தது. ஆனால் பெரியம்மா வுக்குப் பிடிக்கவில்லை. நான் அளவுக்கதி கமான ஸ்ரைலான உடுப்புகள் போடுகிறேன் என்று சொல்லி, எனது அம்மா எனக்கு வேண்டித் தந்த, நான் ஆசை ஆசையாக வைத்திருந்த எனது அழகிய உடைகளை யெல்லாம் எடுத்து எறிந்து விட்டு, எனக்குப் பழைய நீளமான உடைகளை அணியத் தந்தா.

இது என்னை மிகவும் சங்கடத்திலும் கவலையிலும் ஆழ்த்தியது. எனக்கு அழுகை வந்தது. என்னோடு யாருமே ஒரு அதிகாலை யில் இப்படிப் பேசியதில்லை. உடனேயே எனது தாயகத்தில் இருக்கும் எனது அம்மாவுடன் தொலைபேசியில் பேசவேண்டும் போல இருந்தது. ஆனால் பெரியம்மா விடவில்லை. அதனால் நான் கவலையால் நிரம்பிய மனதுடனும், கண்ணீரால் நிரம்பிய குளமான கண்களுடனும் பாடசாலைக்குச் சென்றேன்.

மாலை வீடு திரும்பிய போது எனது அப்பம்மா எனக்காகச் சமைத்திருந்தார். ஒரு கோப்பை நிறையச் சோறு போட்டு சுவையான கறிகளுடன் தந்தார். பெரியம்மாவும் கூட இருந்து சாப்பிடத் தொடங்கினா. திடீரென 'யாருக்காகச் சமைச்சனிங்கள்? பக்கத்து வீட்டு நாய்க்காகவோ அல்லது வேறை ஏதுக்குமோ? என்னெண்டு மனுசர் இவ்வளவு உப்போடை எதையாவது சாப்பிடேலும்?" என்று கத்தியபடி எழுந்து குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து தயிர் எடுத்து சோறு நிறைந்த கோப்பைக்குள் போட்டா.

எவ்வளவு வித்தியாசம் அமெரிக்காவில் வாழும் தமிழ்ப்பெண்கள். எனக்கு மிகுந்த அதிர்ச்சியாக இருந்தது. பெரியம்மா அப்படி அப்பம்மாவுடன் கதைத்ததை என்னால் நம்ப முடியாமல் இருந்தது. இந்த வயதுபோன நேரத்தில் அப்பம்மா எங்கள் எல்லோருக்குமாகச் சமைத்திருந்தா. எவ்வளவு அநாகரீகமான செயல்...! பெரியம்மா ஏன் இப்படி ஒரு பேய் போல நடந்து கொள்கிறா? இவவுக்கு என்ன பிரச்சனை.? ஏதாவது நடந்து விட்டதோ..? என்னுடைய அம்மா வயது வந்த மனிதர்க ளுடன் ஒருபோதும் இப்படிப் பேசியதில்லையே!

இன்னொரு விடயம் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தையே தந்தது. பெரியம்மா இப்படித் தனது தாயைக் கீழ்த்தரமாகப் பேசும் போது, ஏன் பெரியப்பா எதுவுமே சொல்லவில்லை. எனது அம்மா இப்படிப் பேசியிருந்தால் எனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பா ஒரு போதும் பெரியப்பா மாதிரி, இப்படி எதுவும் நடவாதது போல இருந்திருக்க மாட்டார். நான் ஊகித்துக் கொண்டேன்.. அப்பாவுக்கும் பெரியப்பாவுக்கும் இடையில் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன என்று.

எனது வழமையான அமைதியான நேரான வாழ்வு நான் அமெரிக்கா வந்ததில் இருந்து மெது மெதுவாக மாறத் தொடங்கியது. நான் அதிகாலையிலேயே தூக்கத்திலிருந்து எழுப்பப் பட்டேன். எனக்கும், பெரியப்பாவுக்கும், அசோக் குக்குமான காலைச் சாப்பாட்டை ஆயத்தப் படுத்தி, நாங்கள் மூவரும் மதியம் சாப்பிடு வதற்கான சாப்பாட்டையும் சமைத்து, அவரவர் சாப்பாட்டுப் பெட்டிகளில் போட்டு வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டேன். சில சமயங்களில் பெரியம்மாவுக்கு தேநீர் தயாரித்து படுக்கையில் கொண்டு போய்க் கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்கும் உள்ளாக்கப் பட்டேன்.

அதனால் மாலையில் பாடசாலை முடிந்தால் நான் எனது கூடிய நேரத்தைப் பாடசாலை வாசிகசாலையிலேயே கழித்தேன். இதன் மூலம் எனது பெரியம்மாவை வேளைக்குச் சந்திப்பதை முடிந்தவரை தவிர்த்துக் கொண்டேன்.

நான் ஏறக்குறைய மாலை ஆறு, ஏழு மணிவரை வாசிகசாலையிலேயே இருப்பேன். அதன் பின்தான் எனது பெரியப்பா என்னைக் கூட்டிச் செல்ல வருவார். அவர் போகும் போது இடையில் கடற்கரைக்கருகில் காரை நிற்பாட்டி விட்டு என்னுடன் கதைப்பார். நான் எப்பொழுதும் அந்தப் பொழுதை மிகவும் சந்தோசமாக அனுபவிப்பேன். பெரியப்பாவுக்கு எனது அன்றைய நாள் எப்படிக் கழிந்தது என்பதைச் சொல்லுவேன். அதனால் எனக்குள்ளே இருக்கும் அழுத்தங்கள் வெளியேறி எனது மனசு இலேசாகும். அதன்பின் நாங்கள் வீட்டுக்குப் போய்ச் சாப்பிடுவோம்.

விரைவிலேயே நானே தினமும் முழுநாளுக்கும் சமைக்க வேண்டிய நிலை அங்கு உருவாக்கப்பட்டு விட்டது. எனது அப்பம்மா அங்கு நின்றால் அவவின் உதவி எனக்குக் கிடைக்கும். மற்றைய பொழுதுகளில், இந்தியாவின் ஒரு மூலையில் இருந்த, பாசவலையால் பின்னப்பட்ட காற்றைக் கொண்ட என் வீட்டில், எனது அப்பாவுக்கும அம்மாவுக்கும் செல்ல மகளாக வாழ்ந்த நான், வசதியான அமெரிக்காவில் ஒரு வேலைக்காரி போல எல்லோருக்குமாகச் சமைத்தேன். அங்கு வோசிங்மெசின் இருந்தபோதும் எனது உடைகளைக் கையாலே தோய்க்கவே நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

எனது எல்லா வேலைகளையும் செய்து முடித்து, அதனால் எனது பெரியம்மாவுக்குத் திருப்தியேற்படும் பட்சத்தில்தான் போய் இருந்து படிப்பதற்கு அனுமதிக்கப் பட்டேன். எனது பெரியப்பா சில சமயங்களில் வந்து எனது படிப்புக்கு உதவி செய்வார். இப்படியே எனது அன்றாட வாழ்வு, காலையில் சமையலோடு தொடங்கி, பாடசாலையில் தொடர்ந்து, மாலையில் கூட்டல், கழுவல், துடைத்தல், துவைத்தலின் பின்னான எனது அன்றைய படிப்புக்கள் முடியும்.

ஒரு மாலைப்பொழுது நானும், அசோக்கும் பெரியப்பாவின் உதவியுடன் படித்துக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென பெரியம்மா அறைக்குள் வந்து 'நானும் இந்த வீட்டிலை இருக்கிறன் எண்டதை நீங்கள் நினைச்சுப் பார்த்தனீங்களோ? நீங்கள் சாப்பிட்டதும் இந்த அறைக்குள் வந்திருந்து மாநாடு கூடுகிறீங்கள். என்னைப் பற்றி ஏதாவது சிந்திக்கிறீங்களோ..? என்று சத்தமாகக் கேட்டா.

பெரியப்பாவிடம், 'எந்தவகையான புருசன் நீ..?' உன் தம்பியின் மகள் எங்களுடன் வாழ என்று இங்கு வந்ததிலிருந்து நீ ஒரு துளி நேரம் கூட என்னோடு செலவழிப்பதில்லை. பார் அவளை.. அவள் தனது வாழ்வை எனது வீட்டில் இருந்து சந்தோசமாக அனுபவிப்பதை.. ஆனால் அவள் என்னோடு எதுவும் பேசுவதில்லை. என்னை ஒரு பொருட்டாக கருதுவதுமில்லை. எனக்கு மதிப்புத் தருவதுமில்லை'. என்றா.

ஒட்டுமொத்தமாக மூவரின் மேலும் குற்றஞ்சாட்டத் தொடங்கியது எனக்கு அதிர்ச்சியைத் தரவில்லை. தொடர்ந்து பெரியப்பாவின் மீது அவ சீறிவிழத் தொடங்கியபோது கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் பெரிதாக எதுவும் நினைக்கவில்லை. நான் தன்னுடன் பேசுவதில்லை. தன்னை மதிப்ப தில்லை... என்று தொடர்ந்த போது தான் நான் அதிர்ந்து போனேன். ஒவ்வொரு முறையும் என்னை ஒரு வேலைக்காரிபோல அவ நடத்து கையில் கூட நான் எனது அப்பாவுக்காக அவவுக்குரிய மதிப்பைக் கொடுத்து மௌனம் காத்திருக்கிறேன்.

'பார் உன்ரை அம்மா உன்னை எப்பிடி வளர்த்திருக்கிறா எண்டு. எப்பிடி ஒரு பொம்பிளைப் பிள்ளை இருக்க வேணுமெண்டு அவ உனக்குச் சொல்லித் தரேல்லையா? ம்... அவளுக்கே எப்படி ஒரு பெண் இருக்க வேணுமெண்டு தெரியாது. பிறகெப்படி அவளால் உனக்கேதும் சொல்லித்தர முடியும்.' இப்போது அவவின் கூரிய சொல்லம்பு என் மீது பாய்ந்து என்னைப் பலமாக இரணப்படுத்தியது. எத்த னையோ அவமானங்களைப் பொறுத்துவிட்டேன். கூனிக் குறுகி விட்டேன். ஆனால் என் பிரிய அம்மாவை, பெரியம்மா பகடைக்காயாக வைத்தபோது என் பொறுமை கடந்து விட்டது. வாய் திறந்து விட்டேன்.

'எப்பிடி உங்களாலை என்ரை அம்மாவைப் பற்றிச் சொல்ல முடியும்..? என்ரை அம்மா உங்களை விடப் பண்பான, மற்றவர்களுடன் சினேகமாகப் பழகத் தெரிந்த, நாகரீகமான பெண்.' நான் கோபமாகச் சொன்னேன்.

பெரியம்மா கோபாவேசத்துடன் ஓடி வந்தா. 'நீ எப்பிடி என்னோடை இப்பிடிக் கதைப்பாய். இப்பிடித்தான் உனது பண்பான, மற்றவர்களு டன் சினேகமாகப் பழகத் தெரிந்த, நாகரீகமான அம்மா சொல்லித் தந்தவவோ. இதுதான் சொல்லித் தந்தவவோ..?' என்று கேட்டு என்னை அடித்தா. பெரியப்பா அவ எனக்கு அடிப்பதை நிறுத்தி, அவவை அவசரமாக வெளியில் தள்ளி இழுத்துக் கொண்டு போனார்.

எனக்கு அங்கே என்ன நடந்தது என்றே விளங்கிக் கொள்ள முடியாமல் ஒரே குழப்ப மாக இருந்தது. 'ஏன் பெரியம்மா முதலில் வந்து என்னோடு கத்தினா. நான் அவவைக் குழப்பும் படியாக என்ன செய்தேன். ஏன் அவ சூதுவாது எதுவுமறியாத கள்ளங் கபடமற்ற எனது அம்மாவை இதற்குள் இழுத்தா.' புரியாத விடை தெரியாத இந்தக் கேள்விகள் 'ஏன்...? ஏன்..?' என்று எனது தலையைக் குடைந்தன. என்னால் அழுகையை நிறுத்த முடியவில்லை.

அசோக் பேசாமலிருந்து படித்துக் கொண்டி ருந்தான். 'இந்தளவு பிரச்சனை நடந்த போதும் எந்தவிதமான உணர்வுகளையும் வெளிக்காட்டிக் கொள்ளாது இருக்கிறானே! ஏன் இவன் எதுவுமே சொல்லவில்லை. இவனுக்கு என்ன பிரச்சனை?'

அந்த மாலை நான் வேளைக்கே படுக்கை யில் சாய்ந்து விட்டேன். எனக்கு எனது அம்மா அப்பாவுடன் கட்டாயம் கதைக்க வேண்டும் போல இருந்தது. ஆனாலும் அழுததினால் ஏற்பட்டிருந்த அசதியில் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டேன்.

அடுத்த காலை சனிக்கிழமையாக இருந்தது. ஆனாலும் வேளைக்கே எழுந்துவிட்டேன். ஒன்றும் செய்யத் தோன்றாததால் தன்னிச்சை யாக யன்னலினூடே வெளியில் பார்த்துக் கொண்டு நின்றேன். என்னையறியாமலே கன்னங் களில் கண்ணீர்த் துளிகள் வழிந்தோடின.

எனது குடும்பத்திடம் திரும்பிவிட விரும்பி னேன். எனது குடும்பத்தோடு இருந்த அந்தக் காலம் எவ்வளவு இனிமையானது என நினைத்துக் கொண்டேன். ஏன் எனது சகோதரர் கள் அந்த வீட்டிலிருந்து என்னைப் போக விட்டார்கள்? அவர்களாவது என்னைத் தடுத்தி ருக்கலாமே...! எனது இந்தப் பயணத்தைப் பற்றிய முடிவுகளைத் தீர்மானிக்குமளவுக்கு அவர்களுக்கு வயது போதவில்லையோ?

யன்னலினூடே பார்வைகள் இருந்தாலும் நினைவுகளை என் குடும்பத்தோடு விட்டு நான் போராடிக் கொண்டிருந்த போது, பெரியப்பா வேலைக்குப் போவதற்காகக் காரை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தார். நான் அழுவதை அவர் பார்த்து விடக்கூடாது என்பதையே விரும்பினேன். ஆனாலும் எனது அழுகையை நான் மறைப்பதற்கு முன் அவர் என்னைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்துவிட்டார். காரை நிறுத்திவிட்டு காரினுள்ளிருந்தே என்னைப் பார்த்தார். நான் இன்னும் யன்னலிலேயே நின்று கொண்டிருந்தேன். இப்போது முன்னரையும் விடக் கூடுதலாகக் கண்ணீர் துளிகள் கன்னங்கள்வழியே உருண்டு கொண்டிருந்தன. அவர் காரை நிறுத்திவிட்டு வெளியில் இறங்கி வீட்டுக்குள் நுழைந்து எனது அறைக்குள் வந்தார்.

என்னை முதுகுப்புறமாகக் கைகளால் அணைத்து 'எல்லாம் நல்லபடி நடக்கும். கவலைப்படாதே. நாங்கள் இருவருமாக இந்தக் கஸ்டங்களைத் தாண்டுவோம்.' என்றார்.

அந்தக் கணத்தில் ஒருக்கழித்துச் சாத்தப் பட்டிருந்த எனது அறைக்கதவு திறக்கப்பட்டது. பெரியம்மா உள்ளே நுழைந்தா. திடுக்கிட்டபடி மிகவும் அதிர்ச்சியடைந்தவளாகப் பெரியப்பாவைப் பார்த்தா.

'நீ என்னை ஏமாற்றுகிறாய். மீண்டும் நீ இப்படி ஒரு தவறைச் செய்வாய் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. நான் உனது தம்பியைத் தொலைபேசியில் அழைத்து அவனது பெட்டைநாய் மகளை திரும்ப இந்தியாவுக்கே கூப்பிட்டு விடும்படி சொல்லப் போகிறேன். எனக்குத் தெரியும் இது நடக்குமென்று....!' என்று குரலெடுத்துக் கத்தினா. அப்படியே அழத் தொடங்கிவிட்டா. அழுது கொண்டே தொலைபேசியை நோக்கி ஓடினா. பெரியப்பா அவவின் பின்னால் ஓடினார்.

என்னால் என்ன நடந்தது என்றோ, இப்போ என்ன நடக்கிறது என்றோ பகுத்துணர முடியாதிருந்தது. திடீரென அவ என் பக்கம் திரும்பி 'நீ பெரியப்பாவோடை சேர்ந்து என்னை ஏமாற்றுகிறாய். எனக்குத் துரோகஞ் செய்கிறாய்.' என்று என்னைக் குற்றஞ் சாட்டினா. எப்படி அவவால் இப்படியொரு விடயத்தைச் சொல்ல முடிந்தது. அவவுக்குத் தெரியாதா நான் பெரியப்பாவின் மேல் எத்துணை மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறேன் என்று. அத்தோடு அவர் எனக்கு ஒரு அப்பா போல. பெரியம்மாவின் வார்த்தைகள் குரூரத்தனமாய் என்னை நெரித்தன. என்னால் தாங்க முடியாதிருந்தது.

உடனேயே எனது அம்மா அப்பாவிடம் இந்தியாவுக்குத் திரும்பி விட வேண்டும் போல இருந்தது. நான் எனது உடைகளை எடுத்து எனது சூட்கேசினுள் அடுக்கத் தொடங்கினேன். அதைக் கண்ட அசோக் என்னிடம் வந்து 'என்ன செய்கிறாய்...?' என்று கேட்டான். நான் அவனிடம் 'நான் எனது வீட்டுக்குப் போகப் போகிறேன். இதற்குமேல் ஒரு நொடிப்பொழுதுகூட இங்கு இருக்க நான் விரும்பவில்லை.' என்றேன்.

அந்த நேரம் பெரியம்மா எனது பெற்றோரைத் தொலைபேசியில் அழைத்து, தனது கணவன் என்னோடு சேர்ந்து தன்னை ஏமாற்றுவதைத் தான் இப்போ சில நிமிடங்களின் முன்பு கண்டு பிடித்து விட்டதாகச் சொல்லி அழுதா. இதைக் கேட்கும்போது எனது அம்மாவுக்கும், அப்பாவுக்கும் எப்படி இருந்திருக்கும்...! என்ன உணர்ந்திருப்பார்கள்...! பெரியம்மாவுக்கு என்ன நடந்தது? எப்படி அவவால் இப்படியொரு அபாண்டத்தை எண்ணிப் பார்க்க முடிந்தது? எனக்கு அதிர்ச்சியாகவும், குழப்பமாகவும் இருந்தது.

எனக்கு எனது பெற்றோருடன் கதைப்பதற்கு ஒரு வழியும் கிடைக்கவில்லை. தேற்ற யாரும் இல்லாத தனிமையை உணர்ந்தேன். எனது அம்மாவும், அப்பாவும் இந்த விடயத்தை எப்படி எதிர்கொண்டிருப்பார்கள்..! எப்படித் தாங்கிக் கொண்டிருப்பார்கள்..! என்ற நினைப்புகள் என்னை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கின. அவர்களின் அமைதியைக் குலைத்து விட்டு பெரியம்மா அமைதியாகி விட்டா. அசோக் தனது தந்தையிடம் சென்று என்னைப் போக வேண்டாம் என்று சொல்லும்படி அழுதான். அவன் அப்படிக் கேட்டழுதது உண்மையிலேயே என்னை நெகிழச் செய்தது.

நான் எனது பெற்றோருடன் கதைத்த பின் அவர்களின் வேண்டுதலுக்கிணங்க இந்தியா திரும்பும் எண்ணத்தை விட்டு அமெரிக்காவிலேயே நின்றேன். ஒவ்வொரு விடயங்களும் வழமைபோல் தொடர நாட்கள் கலகலப்பின்றி நகர்ந்து கொண்டிருந்தன.

ஒருநாள் பெரியப்பாவுக்கும் பெரியம்மாவுக்கும் இடையில் பாரிய வாக்குவாதம் நிகழ்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குற்றத்துக்குரியவளாக நான்தான் நிந்தனை செய்யப்பட்டேன். நான் எனது கூடிய நேரங்களை பெரியப்பாவுடனேயே கழிக்கத் தொடங்கினேன். பெரியம்மாவுடன் என்னால் எது பற்றியும் பேச முடியாதிருந்தது. போகப் போக வீட்டில் நிற்கும் சமயங்களில் என்னால் பெரியப்பாவுடன் கூடப் பேச முடியாதிருந்தது. பேசினால் வெறி பிடித்தவள் போலவோ அன்றி ஒரு மனநோயாளி போலவே பெரியம்மா நடந்து கொள்ளத் தொடங்கினா.

அதனால் பெரியப்பா மதிய இடைவேளையின் போது பாடசாலைக்கு வந்து என்னோடு சிறிது நேரத்தைச் செலவழித்து, எல்லாம் ஓகேயா என்று கேட்டுச் செல்வார். எனக்கு அவர் ஒரு நல்ல நண்பனாகவே தெரிந்தார். அதனால் எனது பிரச்சனை களையெல்லாம் நான் அவருடன் மனம் விட்டுப் பேசுவேன். அவரும் குடைந்து குடைந்து எல்லாவற்றையும் கேட்பார். எனக்காக வருந்துவார்.

திரும்பத் திரும்ப நான் ஒரே பிழையைச் செய்து கொண்டிருந்தேன். எனக்கு அதிகம் நண்பர்கள் இல்லையென்பதை அவருக்குச் சொன்னேன். இதனால் நான் பாடசாலைக்குச் செல்ல மட்டுமே அனுமதிக்கப்பட்டேன். பாடசாலை தவிர்ந்த வேறெங்கும் போக அனுமதிக்கப் படவில்லை. எந்த நண்பரையும் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வரவோ, அல்லது யார் வீட்டுக்காவது நான் போகவோ எனக்கு அனுமதி இருக்கவில்லை. அதனால் பெரியப்பா மட்டுமே எனக்கு நண்பன்.

ஒரு விடுமுறைக்கு பெரியம்மா வேலைக்குப் போய்விட்டா. அசோக்கும் நண்பரோடு விளையாடப் போய்விட்டான். அதனால் நான் தனியேதான் வீட்டில் இருந்தேன். அந்தப் பொழுதுகள் எனக்கானவை. நான் குளியலறைக்குள் நுழைந்து ஷவரைத் திறந்து விட்டுக் குளித்துக் கொண்டிருந்தேன். திடீரென வெளியில் ஏதோ சத்தம் கேட்டது. அசோக்தான் திரும்பி வந்து வந்து விட்டான் என நினைத்துக் கொண்டேன்.

'அசோக் நீயா? எப்படி வேளைக்கு வந்தாய்? பாத்ரூமுக்குள்ளை வராதே. நான் இன்னும் குளித்துக் கொண்டிருக்கிறேன்.' சத்தமாகச் சொன்னேன்.

அந்த பாத்ரூமுக்குப் பூட்டு இல்லை. அசோக்கிடம் அப்படியொரு கரெக்டர். அவன் எப்போதும் தனது உலகத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பான். அவனைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அவன் கவனத்தில் கொள்வதே இல்லை. யார் குளித்துக் கொண்டிருந்தாலும், அது அப்பம்மாவாக இருந்தாலும் கூட.... அது பற்றிக் கவனியாது கதவைத் திறந்து ரொயிலற்றுக்குள் போவான். அது அற்றாச் பாத்ரூம். எனக்கு அசோக்கிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. ஆனால் குளியலறைக் கதவு திறபட்டது. என்ன ஏது என்று நான் நிதானிக்க முன் எனது ஷவர் திரைச்சேலை இழுக்கப்பட்டது. நான் அதிர்ந்து போனேன். என்னையறியாமலே துவாயை இழுத்து எனது உடலை அவசரமாகச் சுற்றிக் கொண்டேன். என்ன காரியம் செய்கிறாய் என்ற தொனியில் 'அசோக்...!' என்று கத்தினேன். ஆனால் என் முன்னே நின்றது அசோக் இல்லை. இரட்டிப்பு அதிர்ச்சியில் ஆடிப் போய்விட்டேன். அது பெரியப்பா. பெரியப்பா என்னையே பார்த்துக் கொண்டு நின்றார். அவர் என்னைப் பார்த்துக் கொண்டு நின்ற விதம் என்னை மிகவும் அச்சப்படுத்தியது. அருவருப்பாக இருந்தது.

சில விநாடிகள் கழித்து அவர் 'சொறி'. நீ இதுக்குள்ளை நிற்பாய் எண்டு நான் நினைக்கேல்லை என்றபடி என்னை இறுகக் கட்டி அணைத்தார். எனக்கு மிகுந்த சங்கடமாகவும், கூச்சமாகவும், அந்தரமாகவும் இருந்தது. நான் எனது உடலை வெறுமே ஒரு துவாயால்தான் சுற்றியிருந்தேன். அந்தத் துவாயை என்னிலிருந்து நழுவிவிடாமல் அதை இறுகப் பிடித்தபடியே 'இப்ப வெளியிலை போறிங்களோ இல்லையோ' என்று கத்தியபடி அவரைத் தள்ளினேன்.

நான் உடையணிந்து வெளியில் வந்தபோது அவர் வீட்டில் நிற்கவில்லை. மீண்டும் வேலைக்குப் போயிருந்தார். எனக்கு நாள் முழுவதும் நெஞ்சு 'திக் திக்' என்று கொண்டு, ஒரே படபடப்பாக இருந்தது. கூச்சத்திலும், அருவருப்பிலும் மனசு வெட்கியது. இதைப்பற்றி அம்மாவிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் எப்படிச் சொல்வது என்றுதான் தெரியா மல் இருந்தது.

அன்று மாலை பெரியப்பா வேலை முடிந்து வீட்டுக்கு வந்தபோது, என்னால் அவரை நேர் கொண்டு பார்க்க முடியாமல் இருந்தது. திடீரென்று என்னைத் தனிமை நிறைந்த பயம் சூழ்ந்து கொண்டது. இரவு படுக்கையில் சாய்ந்ததும் நான் அழத் தொடங்கி விட்டேன். நடந்ததெல்லாம் 'எதேச்சையாக நடந்தவையே' என்று நானே எனக்கு சாமாதானம் சொன்னேன். நான் வீட்டில் தனியாக நிற்கும் போது, வேலையின் இடையில் வந்த பெரியப்பாவின் செயல் ஒன்றும் திட்டமிட்ட செயலல்ல என்று என்னையே நான் கண்மூடித்தனமாக நம்ப வைத்தேன். நான் ஒரு பைத்தியம்.

பெரியப்பா ஒரு திறமைசாலி. அவர் நாடகங்கள் எழுதி, நடிக்கப் பழக்கி மேடையேற்றுவார். ஒருமுறை அவர் நாடகம் எழுதிவிட்டு, அதில் நடிப்பதற்கென இரண்டு மிக அழகிய பெண்கள் உட்படச் சிலரைத் தேர்வு செய்திருந்தார். அவர்களில் ஒருத்தி சாந்தி அக்கா. மற்றவ வாசுகி அக்கா. இரண்டு பேருமே திருமணமானவர்கள். இருவருக்குமே இரு சிறு குழந்தைகள் இருக்கிறார்கள். இருவருமே நாடக ஒத்திகைகளில் நிறைய நேரங்களைச் செலவழிப்பார்கள். இவர்களில் சாந்தி அக்காவின் கணவன் பிரத்தியேகமானவர். முஸ்பாத்தியாகக் கதைக்கவும், மற்றவர்களுடன் இனிமையாகப் பழகவும் கூடியவர்.

எனது பெரியப்பாவும் எல்லோருடனும் கலகலப்பாகப் பழகக் கூடியவர். தன்னைச் சுற்றியுள்ளவர்களுடன் நகைச்சுவையாகப் பேசுவதிலும், பெண்களுடன் சரசமாடுவதிலும் வல்லவர். அதனால் அவர் எப்போதும் பெண்களின் கவனத்தைப் பெற்றிருப்பார். அவரது கதைகளைக் கேட்டுப் பெண்கள் சிரித்துக் கொண்டே இருப்பார்கள். அவரது வசீகரமான மயக்கும் கதைகளால் அனேகமான பெண்கள் அவர் வலையில் வீழ்ந்து விடுவார்கள். அவரது சுண்டி இழுக்கும் கண்களின் கூர்மையான வீச்சுக்கு அடிமையாகி விடுவார்கள். ஆனால் இதை யாரும் தவறான கண்கொண்டு பார்ப்பதில்லை. அந்தப் பெண்களின் கணவன்மார்கள் கூட இதைத் தப்பாக நினைப்பதில்லை.

அந்தச் சமயத்தில் பாடசாலை விடுமுறைக்கு எனக்கு எனது பெரியப்பாவின் அலுவலகத்திலேயே சிலநாட்கள் வேலை செய்ய வாய்ப்புக் கிடைத்தது. அங்கு சில சமயங்களில் தொலைபேசியில் அழைப்பவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியுமிருந்தது. ஒருநாள் தொலைபேசியில் ஒரு பெண் எனது பெரியப்பாவுடன் கதைக்க விரும்பினா. அந்தக் குரல் எனக்கு மிகவும் பரிச்சயமான குரல் போல இருந்தது. ஆனாலும் அது யாருடைய குரல் என்பதை என்னால் உடனடியாக அனுமானிக்க முடியாதிருந்தது. தொடர்ந்த நாட்களிலும் அந்தப் பெண் அலுவலக நேரங்களில் பெரியப்பாவுடன் தொடர்பு கொண்டா. நீண்ட நேரம் கதைத்தா. சில சமயங்களில் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் கதைத்தா.

ஒரு நாள் மதிய உணவுக்குப் போவதாகச் சொல்லி பெரியப்பா வேளைக்கே வெளியில் போனார். நான் யன்னலால் வெளியின் அழகைப் பார்த்துக் கொண்டு நின்றேன். அங்கே பெரியப்பா போய்க் கொண்டிருந்தார். அவர் போகும் திசையில் ஒரு மூலையில் சாந்தி அக்கா நின்றா. இருவரும் ஒருவரையொருவர் சந்தித்ததும் பெரியப்பா சாந்தியக்காவைக் கட்டித் தழுவினார். பின்னர் இருவரும் பெரியப்பாவின் கார் நிற்குமிடத்துக்கு நடந்தார்கள். இப்போ எனக்கு அந்தக் குரலுக்குரிய பெண் யார் என்பது விளங்கி விட்டது. சாந்தி அக்காதான் பெரியப்பாவுடன் தினமும் மணித்தியாலக் கணக்கில் கதைக்கிறா. இருவருக்கும் இடையில் என்ன நடக்கிறது...? எனது எண்ணங்களுள் மீண்டும், மீண்டுமாய் ஒவ்வொரு நிகழ்வும் வந்து வட்டமிட்டன. விடைகாண முடியாத ஆயிரத்தெட்டுக் கேள்விகள் என் தலையைக் குடைந்தன.

எனது பெரியப்பா திரும்பி வந்ததும் 'ஏன் அவளைச் சந்திச்சனீங்கள்..? எனக் கேட்டேன். அவர் மிகவும் இயல்பாக அவள் என்னோடை பேச விரும்பினாள். அவள் என்ரை நல்ல நண்பி' என்றார். எனக்கு அதற்கு மேல், ஐம்பது வயது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிரம்பிய நரைத்த தலைமயிர்களையுடைய எனது பெரியப்பாவுக்கும், அழகே உருவான 23 வயதுகள் மட்டுமே நிரம்பிய இளம் பெண் சாந்தி அக்காவுக்கும் இடையில் வேறெதையும் முடிச்சுப் போட்டுப் பார்க்கத் தோன்றவில்லை.

இப்போதெல்லாம் சாந்தி அக்கா வீட்டுக்கும் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு பெரியப்பாவுடன் மணிக்கணக்கில் பேசத் தொடங்கி விட்டா. ஒருநாள் அவ தொலைபேசியில் அழைக்கும் போது தொலைபேசியை பெரியம்மா எடுத்துவிட்டா. உடனேயே பெரியம்மா கோபத்துடன் 'இனி இங்கை நீ தொலைபேசி அழைப்பை மேற்கொள்ளக் கூடாது. என்ரை கணவரோடை வேறை எந்தப் பெண்ணும் கதைக்கிறதை நான் விரும்பேல்லை.' என்று கடுமையாகக் கூறினா. இது சற்று அநாகரீகமாக இருந்தது.

பெரியம்மா காரணமில்லாமல் கோபப்படுகிறா. ஏன் அவ வேற்று மனிதருடன் இப்படிக் கதைக்கிறா? இது அழகில்லையே! ஏன் பெண் நண்பிகள் ஒரு ஆணுக்கு இருக்கக் கூடாது, அவர்களுக்குள் எந்தப் பிழைகளும் நடவாத போது..! அல்லது ஏதாவது பிழை நடக்கிறதா..? என நான் எனக்குள் நினைத்துக் கொண்டேன். அன்று அது பெரியப்பாவுக்கும் பெரியம்மாவுக்கும் இடையில் பெரிய சண்டையாகி விட்டது.

சில காலங்களில் நான் எனது பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு பல்கலைக்கழகப் படிப்புக்காக அடுத்த நகருக்குச் சென்று விட்டேன். அதன் பின் நான் பெரியப்பாவைப் பற்றிச் சிந்திப்பதை ஓரளவு குறைத்திருந்தேன். எனது நினைவுகள் பல்கலைக்கழகத்துடன் நின்றன.

விடுமுறை வரும் ஒவ்வொரு முறையும் அவர்களைப் பார்ப்பதற்காக அவர்களது வீட்டுக்குச் செல்லும் போது நான் மிகுந்த அசௌகரியத்தையே உணர்ந்தேன். சில சமயங்களில் பெரியப்பா வேண்டுமென்றே என்னோடு உரசுவது போலவும், படக்கூடாத இடங்களில் என்னில் படுவது போலவும் உணர்ந்தேன். பின்னர் சீ.. அப்படி இருக்காது. என்று நானே எனக்குச் சமாதானமும் சொன்னேன். என்னால் எதையும் நம்ப முடியாதிருந்தது. அங்கு நிற்கும் சமயங்களில் அவர் என்னை அடிக்கடி கட்டிப் பிடிப்பார். இறுக அணைப்பார். அது எனக்கு மிகுந்த அசௌகரியமாகவும், அருவருப்பாகவும் இருந்தது. அந்த அணைப்பை முன்னரைப்போல ஒரு தந்தையின் பரிவோடான அணைப்பாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது. அவரது அருகாமையையே நான் வெறுத்தேன்.

தொடர்ந்த காலங்களில் முடிந்தவரை அவர்களிடம் போவதைத் தவிர்த்து பல்கலைக் கழகத்திலேயே இருக்கத் தொடங்கினேன். பல்கலைக்கழக விடுமுறையின் போது எனது வகுப்பினர் எல்லோரும் தத்தமது வீடுகளுக்குச் சென்று விட, நான் மட்டும் பல்கலைக்கழக அறையிலேயே முடங்கிக் கிடந்தேன். அங்கு எனக்கு என் மீதும் என் வாழ்வின் மீதும் அன்பும் அக்கறையும் கொண்ட பண்போடு பழகக் கூடிய சில நண்பர்கள் கிடைத்தார்கள்.

நான் அடிக்கடி பெரியப்பா, பெரியம்மாவிடம் போக வேண்டுமென்பதும், அவர்களுக்கு மதிப்புக் கொடுத்துப் பழக வேண்டுமென்பதுவும் எனது அன்பு அப்பாவின் வேண்டுகோள். அப்பாவின் ஒவ்வொரு கடிதத்திலும் இந்தக் கருத்தோடு ஒட்டிய வாசகங்கள் மறக்காமல் எழுதப் பட்டிருக்கும். அதனால் மீண்டும் ஒருநாள் எனது பெரியப்பாவையும் பெரியம்மாவையும் பார்க்கவென்று அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். வழக்கம் போலவே அந்தப் பொழுதுகளும் மிகவும் அசௌகரியமாகவே இருந்தன.

எனது பெரியம்மா கடைக்குப் போய் விட்டா. நான் பெரியப்பாவுடன் தனித்து விடப்பட்டேன். பெரியப்பா என்னருகில் வந்திருந்து என்னுடன் கதைக்கத் தொடங்கினார். கதை நன்றாகத்தான் இருந்தது. எல்லாம் அவரது கைகள் எனது இடது தொடையில் மேயும் வரைதான்.

அவரது கை எதேச்சையாகப் படுவதுபோலப் பட்டு, சில விநாடிகளில் எனது தொடையில் மேயத் தொடங்கியதும், நான் அவசரமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரது கையைத் தட்டிவிட்டு அவ்விடத்திலி ருந்து விலகி எங்காவது போய்விட எழுந்தேன். ஆனால் அவர் என்னை விடவில்லை. இராட்சதத் தனமான மூர்க்கத்தோடு என்னை இழுத்து அணைத்தார். நான் போட்டிருந்த எனது சட்டை அவர் இழுத்த இழுவையில் நெஞ்சடி யில் கிழிந்து தொங்கியது. எனக்குச் சரியான பயமும் குழப்பமுமாய் இருந்தது.

நான் என் வாழ்நாளிலேயே முதல் முறை யாக எனது பெரியம்மா விரைவில் வீட்டுக்கு வந்து விட வேண்டுமென்று பிரார்த்தித்தேன். அவர் எனக்கு மூர்க்கத்தனமான வெறியோடு முத்தம் கொடுக்கத் தொடங்கினார். நான் அவரைத் தள்ளினேன். அவரது அந்த விலாங்குப் பிடியிலிருந்து என்னால் விலக முடியாதிருந்தது. அவரிடமிருந்து என்னை விலத்த நான் போராடிக் கொண்டிருந்தேன். ஆனால் என்னை விடுவிப்பது மிகவும் கஸ்ட மான காரியமாக இருந்தது.

அந்தப் பொழுதில் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. பெரியப்பா சடாரென என்னைத் தள்ளி விட்டு, எழுந்து ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டார். அது அசோக்.

'நன்றி கடவுளே..! எனக்காக இந்த தேவதையை உரிய நேரத்தில் அனுப்பி வைத்ததற்கு உனக்கு நன்றி' மானசீகமாகக் கடவுளுக்கு நன்றி சொன்னேன். அந்த நேரத்தில் ஒரு தேவதூதன் போலவே அசோக் என் கண்களுக்குத் தெரிந்தான்.

நான் அவசரமாக எனது அறைக்குள் சென்று எனது உடைகளை எனது சூட்கேசினுள் அடுக் கிக் கொண்டு, அசோக்கிடம் 'bye' சொல்லி விட்டுப் புறப்பட்டேன். பெரியப்பாவுக்கோ, பெரியம்மாவுக்கோ சொல்லாமல் இப்படி வீட்டை விட்டுப் போவது பெரிய பிரச்சனைக்கு வழி கோலும் என்பது எனக்குத் தெரியும்.

அதன்பிறகு பெரியப்பா அடிக்கடி பல்கலைக் கழகத்துக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு என்னை வீட்டுக்கு வந்து விடும்படி கரைச்சல் தந்தார். ஆனால் நான் போகவில்லை. அதனால் கோபம்கொண்டு எனது பெற்றோரை தொலைபேசியில் அழைத்து நான் பெடியன் களுடன் ஊர் சுற்றுகிறேன். பல்கலைக்கழக விடுமுறைகளுக்கு வீட்டுக்கு வருவதில்லை' என்பது போன்றதான அபாண்டங்களை என்மேல் சுமத்தினார். நான் இப்படி நடந்து கொள்வதால் தனக்கு அவமானம் என்றும் கூறினார். உடனேயே அப்பா என்னை தொலைபேசியில் அழைத்து, மிகுந்த கோபத்துடன் 'ஒரு பொம்பிளைப் பிள்ளையாக, அழகாக இருக்கத் தெரியாதோ... என்ன பழக்கம் இது? எங்கடை குடும்பத்திலை ஆருக்கும் இல்லாத பழக்கம்' என்று என்னை கடுமையாகப் பேசினார். உடனடியாக என்னை பெரியப்பா வீட்டுக்குப் போகும்படி வற்புறுத்தினார்.

எனக்கு நடந்தவைகளை எல்லாம் அப்பா விடம் சொல்லி விட வேண்டும் போலத்தான் இருந்தது. ஆனாலும் அப்பா இதையெல்லாம் நம்புவாரா என்றொரு பயமும், எப்படிச் சொல்வது என்ற தயக்கமும் என்னைத் தடுத்தன. அத்தோடு அப்பா தனது அண்ணன் மேல் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறார். இப்படியொரு விடயத்தைச் சொன்னால் தாங்கு வாரா என்றும் மனசு யோசித்தது. அதனால் எந்த உண்மையையும் நான் சொல்லவில்லை.

அதன் பின்னான அப்பாவின் தொலைபேசி அழைப்புக்கள் எல்லாமே கோபத்தால் என்னைத் திட்டுவதானதாகவே இருந்தன. அதனாலோ என்னவோ தொலைபேசி மணியோசையே ஒரு அலறல் போல் என்னைத் திகில் கொள்ள வைத்தது. தொலைபேசி அலறிய பல பொழுது களில் எதிர்முனையில் அப்பாவோ அன்றிப் பெரியப்பாவோ என்ற பயத்தில் நான் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்திருக்கிறேன்.

என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் பெரியப்பா ஓரிரு தடவைகள் பல்கலைக்கழகம் வரை வந்து போயிருந்தார். நல்லவேளையாக அந்தப் பொழுதுகளில் நான் அங்கு நிற்கவில்லை. சாட்சியாக துண்டு எழுதிக் கதவில் ஒட்டி விட்டு பக்கத்து அறை நண்பர்கள் ஷ்யாம், ரேணுகா போன்றோரிடமும் சொல்லிவிட்டுப் போயிருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஷ்யாமும், ரேணுவும் என்னோடுதான் படித்தார்கள். அவர்கள் என்னோடு மனம்விட்டுப் பழகக் கூடிய நல்ல நண்பர்களாகக் கூட இருந்தார்கள். பெரியப்பா அவ்வளவு தூரம் வந்து போனபின் எனது பாதுகாப்புக் கருதி நான் சில உண்மைகளை அவர்களுக்கும் சொல்லி வைத்தேன். அதன் பின் சற்றுப் பயம் குறைந்து மனசு லேசாகியது போல இருந்தது.

என்னை எந்த வழியிலும் சந்திக்க முடியாமற் போய் விட்ட நிலையில், பெரியப்பா என்னை பளாக்மெயில் பண்ணத் தொடங்கி விட்டார். எனக்கான செலவுகளுக்கான பணத்தை எனது வங்கியில் போடுவதை நிறுத்தி விட்டார். பணமின்றிச் சமாளிக்க முடியாத ஒரு கட்டத்தில் அவரைத் தொலைபேசியில் அழைத்துக் கதைத்த போது வீட்டுக்கு வந்தால் மட்டுமே பணம் தருவேன் என்று சொல்லி விட்டார்.

நான் என் அப்பாவின் மேல் வைத்திருக்கும் பாசமும், அதனால் அப்பாவின் மனதைத் துன்புறுத்தும் எந்தக் கதையையும் நான் அப்பாவிடம் சொல்ல மாட்டேன் என்பதும் அவருக்குத் தெரிந்ததால், துணிந்து என்னை ப்ளாக்மெயில் பண்ணிக் கொண்டே இருந்தார். என்னாலும் எந்தப் பிரச்சினையையும் அப்பாவிடம் சொல்ல முடியாமலே இருந்தது.

எனது அப்பா எனக்கென அனுப்பும் பணத்தை எனக்குத் தருவதற்கு பெரியப்பா மறுத்தபோது தாங்கமுடியாத கோபமும், வெறுப்புமே என்னுள் எழுந்தன. பணத்துக்காக அவர் காலடியில் விழுவேன் என நினைத்தாரோ..?

நான் வேலை தேடினேன். ஒரு வாசிகசாலையில் தினமும் சில மணி நேரங்களும், ஒரு உணவு விடுதியில் சனி ஞாயிறுகளிலும் கிடைத்தன. படிப்புக்களின் மத்தியில் வேலை செய்வது என்பது கடினமானதாகவே இருந்தது. பல்கலைக்கழகம் முடிந்த கையோடு வாசிகசாலைக்குச் சென்று கவுண்டரில் மீளளிக்கப் பட்ட புத்தகங்களை உரிய இடங்களில் அடுக்குவது சுவாரஸ்யமான வேலைதான். ஆனால் அன்றைய படிப்புகளை மீட்டவேண்டிய நினைவுகள் ஒருபுறம் பாரமாக இருக்க, புத்தகங்களுடன் வாசிகசாலையின் அந்த அந்தத்திலிருந்து இந்த அந்தம்வரை ஓடுவதிலும், மேல் மாடிக்கும் கீழ் மாடிக்குமாக ஏறிஇறங்குவதிலும் நான் களைத்து விடுவேன்.

சனி ஞாயிறுகளில் உணவு விடுதிகளில் உணவைப் பரிமாறும் வேலை. வேலை கடினமில்லாவிட்டாலும், நிற்க இருக்க நேரமின்றி சாப்பாடுகளுடனும் தட்டுக்களுடனும் ஓடிக் கொண்டே இருக்கவேண்டி இருக்கும். சில மாத வேலைகளுடனேயே உடலில் ஒரு வித அசதி தோன்றத் தொடங்கி விட்டது.

ஆனாலும் பல்லைக் கடித்துக்கொண்டு படித்து முடித்தேன். பரீட்சையிலும் சிறப்பாகச் சித்தியடைந்து, அப்பாவின் கனவுகளைச் சிதைத்து விடாது ஒரு பட்டதாரியாக வெளியில் வந்தேன். அமெரிக்காவில் எனக்கு உடனேயே நல்ல வேலை வாய்ப்புக்கள் இருந்தாலும் என் மனம் ஏனோ இந்தியா திரும்பி விடவே விரும்பியது. அப்போதுதான் ஷ்யாம், தான் என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறினான். மறுப்பதற்கு அவனில் எந்தக் குறையும் எனக்குத் தெரியவில்லையென்றாலும் திருமணம் செய்து கொள்ளும் ஆர்வமோ எண்ணமோ அந்த நேரம் எனக்கு இருக்கவில்லை. அதனால் அவகாசம் தரச் சொல்லிவிட்டு இந்தியா திரும்பி விட்டேன்.

இடையில் பெரியப்பாவால் எனக்கும் அப்பாவுக்கும் இடையில் ஏற்பட்ட விரிசல், நான் இந்தியா திரும்பிய பின் மெதுமெதுவாகக் குறையத் தொடங்கியது. அப்பா என்னை அளவுக்கதிகமாகக் குடையவில்லை. ஓரிரு தடவைகள் ஏன்..? ஏன் அப்படி நடந்து கொண்டாய்..? என்று மட்டும் கேட்டார். எனது பதில் சரியாக அமையாத பட்சத்தில் அதை அப்படியே விட்டுவிட்டார். ஆனாலும் நான் பெரியப்பாவிடமோ பெரியம்மாவிடமோ போகாமல், அவர்களுக்கு ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் இந்தியா திரும்பி விட்டதில் அப்பாவுக்கு நிறையவே மனவருத்தம் இருந்தது. அதற்காக, உண்மைகள் என்று எதையாவது உளறி என் அன்பு அப்பாவின் இதயத்தைச் சுக்கு நூறாக்கும் தைரியம் எனக்கு இருக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்னும் கூட பெரியப்பாவுக்குத் துணிச்சல். அவர் அடிக்கடி அப்பாவைத் தொலைபேசியில் அழைத்து, தான் எனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை பார்த்திருக்கிறேன் என்றும், சீதனம் எதுவும் தேவையில்லையென்றும், என்னை அங்கு அமெரிக்காவுக்கு அனுப்பி விடும்படியும் சொன்னார்.

அப்பாவும் பெரியப்பாவின் ஆலோசனையை என்னிடம் சொல்லி என்னை அமெரிக்காவுக்கு போய் திருமணம் செய்து கொள்ளும் படியும், அங்கு நல்ல வேலையில் இருக்கும் நல்ல குணமுடைய அந்த மாப்பிள்ளையைத் திருமணம் செய்தால் எனக்கு நல்ல வாழ்க்கை அமையும் என்றும் சொன்னார். நான் முற்று முழுதாக அதை மறுத்து விட்டு 'எனக்கு மாப்பிள்ளை பார்ப்பதானால் இங்கை இந்தியாவிலையே பாருங்கோ' என்று சொல்லி விட்டேன். அங்குதான் மீண்டும் மக்குத்தனம் பண்ணினேன்.

அப்பா அவசரமாக மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கி விட்டார். எனது பட்டப் படிப்புக்கான வேலையை நான் தொடங்கி ஓரிரு மாதங்களிலேயே எனது திருமணம் நிட்சயமாகி விட்டது.

சித்தார் அழகு மட்டுமல்ல, அறிவோடும் பேசினான். நல்ல வேலையில் இருந்தான். சாதகம் கூட நல்லாகப் பொருந்தியிருந்தது. சித்தார் அவனது பெற்றோருக்கு, ஒரே ஆண் பிள்ளை என்பதால், திருமணத்தின் பின்னும் சித்தார் தங்களுடனேயே இருக்க வேண்டும் என சித்தாரின் அம்மாவும், அப்பாவும் வேண்டிக் கொண்டார்கள். நான் எந்த மறுப்பும் சொல்லவில்லை. அந்த நேரத்தில் தனிக்குடித்தனம் பற்றிய அவசியம், அவசியமின்மை பற்றி எதையும் நான் சிந்திக்கவுமில்லை. எல்லாம் கதைத்து முடித்து அவர்கள் சம்மதம் தெரிவித்து, நானும் தலையாட்டிய போது அப்பாவினதும் அம்மாவினதும் முகத்தில் தெரிந்த நிம்மதிக்களை எனக்கு வாழ்நாள் முழுவதுக்கும் போதுமென்பது போன்றதொரு திருப்தியைத் தந்தது.

திருமண நிட்சயதார்த்தத்தின் பின், சித்தார் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து போனான். இடையிடையே அப்பாவின் சம்மதத்துடன் நாங்கள் சினிமா, நண்பர்கள்... என்று கைகோர்த்தபடி சுற்றினோம். சித்தாரின் ஒரு எல்லை வைத்துப் பழகும் தன்மை என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது. அவனுடனான பொழுதுகள் மிகவும் இனிமையாகவே தொடர்ந்தன. நான் மெதுமெதுவாக என் கடந்தகாலக் கசப்புக்களை மறந்து நிகழ்கால சுகங்களுடன் இணையத் தொடங்கினேன்.

திருமணநாளும் நெருங்கியது. எமக்கான உடைகளை நானும், சித்தாருமாகவே தேடித் தேடி வாங்கினோம். களைப்போடு அன்று அவன் வீட்டுக்கே சென்றோம். முகம் கழுவலாம் போல இருந்தது. குளியலறைக்குள் நுழைந்தேன். கதவைச் சாத்தி விட்டு பைப்பைத் திறந்த போது யாரோ அவசரமாகக் கதவைத் தள்ளித் திறந்தார்கள். அது யாருமில்லை. சித்தாரின் அப்பா. எனது மாமா. நான் குளியலறைக்குள் நுழையும் போது அவர் என்னைக் கண்டார். ஆனாலும் நான் நுழைந்தது தெரியாது என்பது பொல 'சொறி' சொன்னார். சொல்லும் போது அந்தக் கண்கள்...அந்தப்பார்வை...ஓ... கடவுளே! மீண்டுமா?... அதிர்ச்சியில் ஒரு கணம் நான் உறைந்து போனேன்.

ஒரு லயத்தோடு அசைந்து கொண்டிருந்த எனது மனப்பறவையின் சிறகுகளையெல்லாம் யாரோ வலிக்க வலிக்கப் பிடுங்கி எறிந்தார்கள். சந்தோச வானில் பறந்து கொண்டிருந்த நான் தொப்பென்று கீழே வீழ்ந்தேன். வேதனையில் மனசு முனகியது. குளியலறையில் இருந்து வெளியில் வந்த போது என்னால் பறக்க முடியவில்லை. நான் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வெளிக்கதவைத் திறந்து ஓடத் தொடங்கினேன். (9.7.2004)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுகந்தி ஓவியம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



# நான்


கட்டுப்பாடுகளை விரும்பவில்லை
விட்டுக்கொடுத்தும் பழக்கமில்லை
சிலதை...
தட்டிக் கழிக்கவும் முடியவில்லை
வாழ்வின் எச்சங்களை நான்
ஏற்பதுமில்லை
வானின் உச்சம் போகும் வரை
ஓய்வதுமில்லை..!

உரிமைகளை இழப்பதுமில்லை.
பொய் உறவுகளில் நாட்டமுமில்லை
சுய உணர்வுகளை விற்பதுமில்லை
எவர்க்கும் நான் அடிமையுமில்லை!

போலிகளில் மயக்கமுமில்லை
தோல்விகள் என் வளர்ச்சிக்கு...
தடையுமில்லை!
தாலி எனக்கு புனிதமானாலும்
அதை
வேலியாக்க இஸ்டமுமில்லை!

தனித்து வாழும் தைரியம் எனக்கு
தந்ததென் தாய் விளக்கு!

(2004/04)



செல்வி முகைசிரா முகைடீன்.
பாலையூற்று (இலங்கை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்!

புதியமாதவி, மும்பை, இந்தியா.

**அடிவாங்குவதற்கு என்று வந்துவிட்டால் பட்டிக்காடா பட்டணமா, அதிகம் படித்தவளா, குறைவாகப் படித்தவளா, உயர் அதிகாரியா, வெறும் குடும்பப் பெண்ணா என்பதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல.**

மகாகவி பாரதி மண்ணின் விடுதலைக்காகப் பாடிய குரல் இன்று மண்ணில் பெண்ணின் விடுதலைக்காய்த் தொடர்கின்றது. மண்ணின் விடுதலைப் போராட்டங்களில் பெண்ணின் விடுதலை?

காணும் வெளிச்சம் எல்லாம் பெண்ணுலகில் விடியலாக இருப்பதில்லை. பெண்ணின் பெருமையைத் தாய்மை என்றும் காதல் என்றும் தியாகம் என்றும் தெய்வீகம் என்றும் வானுயரப் புகழும் அத்தனைப் புகழ்ச்சியிலும் இருப்பதெல்லாம் பெண்ணின் பெருமைகளும் அல்ல.

சென்ற நூற்றாண்டு பெண்ணின் கண்கள் கட்டப்பட்டிருந்தன. அவள் காலகளின் தடங்களுக்கு அவள் பொறுப்பாளி அல்லள். ஆனால் இந்த நூற்றாண்டின் பெண் எல்லாத் துறைகளிலும் ஊடகங்களிலும் தன் முகம் காட்டும் அறிவும் துணிச்சலும் உடையவள். அப்படியானால் பெண்ணியல் சிந்தனைகளில் பெரும்புரட்சி நடந்திருக்க வேண்டுமே, ஆணாதிக்கம் இல்லாத சுதந்திரக் காற்று அவள் சுவாசித்தில் வசப்பட்டிருக்க வேண்டுமே. ஏன் அப்படி எதுவும் நடக்கவில்லை..அவள் நுழைந்திருக்கும் துறைகளில் எல்லாம் அவள் நிலைமை என்ன? அவள் எங்கே நின்று கொண்டிருக்கின்றாள்..? யாராக நின்று கொண்டிருக்கின்றாள்? எந்தக் கருத்தாக்கத்தின் உருவமாக அவள் நிற்கின்றாள்..? என்பதை எல்லாம் பார்க்கின்ற போது பெண்ணின் வளர்ச்சி உண்மையான வளர்ச்சியா அல்லது வீக்கமா?

இப்படிச் சிந்திக்கின்றபோது நமக்கு கிடைக்கும் உண்மைகள், தகவல்கள், சம்பவங்கள் அனைத்தும் அதிர்ச்சியையே தருகின்றன. ஊடகங்கள், தனிமனித வாழ்க்கை முறைகள், அரசியல் என்று மூன்றாகப் பிரித்துக் கொண்டு வகைப்படுத்துவது (என் வசதிக்காக) எளிதாக இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

**ஊடகங்கள்**

இன்றைய வெள்ளித்திரை, சின்னத்திரையின் கதை, காட்சிகள் அனைத்தும் பெண்ணையே மையமாக்கிக் காட்டுகின்றன.பெண்களைக் கவரும் அம்சங்கள் மட்டுமே அவைகளின் வெற்றிக்கு காரணமாகின்றன. மருத்துவம் படித்த பெண்ணிலிருந்து மண் சுமக்கும் பெண் வரை.. அனைவரையும் திரைக்கு முன்னால் உட்கார்ந்து அழவைக்கின்றன. அவர்களின் மூளையைச் சலவைச் செய்துவிடுகின்றன..

“அளவுக்கு அதிகமாக கோபப்படற பொம்பளையும் அளவுக்கு அதிகமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசைப்படற பொம்பளையும் உருப்பட்டதா சரித்திரமே கிடையாது..."

"அவ பொம்பளை ஆச்சேனு பாக்கேன். இல்லாட்டி இந்நேரம் நடக்கறதே வேற.."
"பொம்பளை இப்படித் தூங்கினா வீடு உருப்பட்ட மாதிரிதான்..!!"

இந்த மாதிரி வசனங்கள் வராத காட்சிகள் உண்டா? இந்த மாதிரி வசனங்களே அந்தக் குறிப்பிட்ட திரைப்படத்தின் அல்லது தொடரின் வெற்றிக்கான முத்திரையாக்கப்பட்டு மீண்டும் மீண்டும் காட்சியாகக் காட்டப்படுகின்றன.

பெண்ணின் உடலும் பாலியல் உணர்வு களும் ஆணின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு இருப்பதையே பெண்ணும் விரும்புவதாகவே சித்தரிக்கப்படுகின்றது.

போதை மருந்துக்கு அடிமையான பெண் அந்தப் போதையிலிருக்கும்போது அவளைப் போலவே போதையிலிருக்கும் ஆண் நண்பனால் ஏற்பட்ட பாலியல் உறவில் கருவுறுகின்றாள். அப்படிக் காட்டப்படும் பெண் ஒரு மருத்துவம் படிக்கும் மாணவி..! அவன் குழந்தையைச் சுமப்பதாலேயே அவனையே தன் கணவனாக அடைய வேண்டும் என்று போராடுகின்றாள். அதுவும் அவன் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட பின்னும் தன் போராட்டத்தைத் தொடர்கின்றாள்...பெண்ணும் அவள் உறுதியும் அவள் போராட்டக் குணமும் இந்தளவுக்குச் சிறுமைப்படுத்தப்பட்டு கேலிக்கூத்தாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆண் அடித்தால் அதற்காக பெண் சந்தோசப்படுவாள்.. "அவர் அடிப்பதற்காக வாவது என்னைத் தொட்டாரே" என்று. இன்னும் சிலர் ஒருபடி மேலே போய் "அடிச்சிட்டாரே .. சந்தோசமா இருக்கு.. அவர் என் கணவர் என்கிற உரிமையை நிலைநாட்டிவிட்டார்" என்று புளகாங்கிதம் அடைவதைக் காட்டுகின்றது.

வெள்ளித்திரைக்கும் சின்னத்திரைக்கும் போட்டியாக விளம்பரத்துறை பெண்ணை இன்னும் ஒரு விற்பனைப் பொருளாக, அழகியல் பண்டமாக, திருமணச் சந்தையில் ஆணின் வரவிற்காக காத்திருக்கும் இணையாக மட்டுமே காட்டுகின்றன.

பெண்ணின் சருமத்தை இரண்டே வாரங் களில் சிவப்பு நிறமாக்கும் 'பேர் அண்ட் லவ்லி' விளம்பரத்தில் உண்மை என்பது சிறிதளவும் இல்லை என்பதை தொலைக்காட்சியின் நேர்க்காணல் விவாதமேடை வெளிச்சமாக்கியது. (NDTV 24/7)

அண்மையில் ஒரு முகப்பவுடருக்கு வந்த விளம்பரம் வரதட்சணை கேட்கும் வரனை திருமண மேடையில் மணப்பெண் வேண்டாம் என்று துணிச்சலுடன் மறுப்பதற்கு காரணம் அவள் மேனியின் அழகு என்றும், அந்த அழகை அவளுக்கு கொடுத்தது அவர்களின் முகப்பூச்சு பவுடர் என்றும் காட்டி பெண்ணின் அடிப்படையான விழிப்புணர்வை வரதட்சனைக்கு எதிராக அவர்கள் போராடத் துணிந்திருக்கும் சிந்தனைத் தெளிவை அழகியலாக்கி வியாபாரமாக்கிக் கொண்டிருக்கின்றது.

அழகான சிவப்பான மணப்பெண் தேவை என்ற வரிகள் இல்லாத மணமகள் தேவை விளம்பரத்தை எந்தப் பத்திரிகையிலும் காண முடியாது. அறிவியல் படித்த மணமகனின் அறிவியல் இந்தத் தேவையில் மட்டும் எப்போதும் பூஜ்யமாகவே காட்சியளிக்கும் கொடுமை இந்தத் தலைமுறையில் தலை விரித்தாடுகின்றது.

ஆண்-பெண் யாராக இருந்தாலும் சருமத்தின் நிறம் என்பது அவர்கள் வாழும் மண்ணின் தட்பவெட்பநிலை, அவர்கள் வம்சா வழியினர் வாழ்ந்த இடத்தின் தட்பவெட்ப நிலையைப் பொறுத்ததுதான். அழகியல் என்பது சருமத்தின் நிறம் சார்ந்தது என்ற அறிவியலுக்கு ஒத்துவராதக் கருத்தையே ஊடகம் எல்லா வகையிலும் பரப்பி ஓரளவு நிலைநிறுத்திக் கொண்டிருக்கின்றது. சருமத்தின் நிறம் வெளுப்பாக, சிவப்பாக, மஞ்சளாக எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் ஆனால் கருமையின் சாயல் மட்டும் இருக்கவே கூடாது அதுவும் பெண்களுக்குத்தான் இந்த விதிகள்.!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படி ஒரு பெண்ணுக்கு இருந்துவிட்டால் அவளுக்குத் திருமணமே நடக்காது. இந்தக் கருத்துகளை நம் நடுவீட்டில் அரைமணி நேரத்திற்கு ஒருமுறை காட்சியாகவும், வசனமாகவும் காட்டிக்கொண்டே இருக்கின்றது. புத்தகங்களை வாசிக்கும் போது ஏற்படும் கருத்தியல் தாக்கத்தைவிட ஒரு காட்சியைப் பார்க்கின்ற போது ஏற்படும் கருத்தியல் தாக்கம் வலுவானது, காட்சியின் தாக்கம் எல்லா தரப்பு மக்களையும் வயது, கல்வித் தகுதி என்ற வரம்புகளை எல்லாம் தாண்டி எளிதில் சென்றடையும்.

பத்திரிகைகளில் காணப்படும் மகளிர்பக்கம், மகளிர் அரங்கம், மங்கையர் மலர் என்பதெல்லாம் என்னவோ பெண்களுக்காக பெண்களே நடந்துகின்ற... என்றெல்லாம் மேம்போக்கான புதுமைகளைக் காட்டினாலும் அவற்றில் சொல்லப்படும் கருத்துகளனைத்தும் மரபியலான சிந்தனைகள் மட்டுமே.

குழந்தை வளர்ப்பு, சமையல் குறிப்பு, தையல்கலை, தோட்டக்கலை, பாட்டி மருத்துவம், வீட்டு அலங்கரிப்பு... சரிதான் போனால் போகிறது என்று இரண்டு காதல் கதைகளும் காதல் கவிதைகளும் இருக்கும். இதைத் தாண்டிய மகளிர் அரங்கம் எப்போது திறக்கப்படும்? மேலே குறிப்பிட்ட விசயங்கள் எல்லாமே ஏன் மகளிருடன் மட்டுமே தொடர்பு படுத்திப் பார்க்கப்படுகின்றது? இவை எல்லாம் குடும்பம், வீடு என்ற கட்டுமானத்தில் இருவரும் சேர்ந்தே செய்ய வேண்டிய வேலைகள்தானே.

**என்று தணியும்**
**எங்கள்**
**சுதந்திர தாகம்!**

**இன்றைய அரசியல் தளத்தில் பெண்ணின் நுழைவு என்பதே ஓர் ஆணின் பிரதிநிதியாகத்தான் நிகழ்கிறது. ஆணின் விதவை மனைவியாக, வாரிசு அடிப்படையில் வந்த மகளாக, சகோதரியாக மட்டுமே அவளின் அறிமுகமும் அரசியல் பயணமும் அமைகிறது.**

ஊடகங்கள் பேசும் காதல், திருமணம், தாய்மை, குடும்பம் ஆகிய சிந்தனைகள் அனைத்தும் ஏற்கனவே காலம் காலமாய் சொல்லி வைக்கப்பட்டிருக்கும் மரபியலின் தாக்கத்தையே காட்டுகின்றன.

## இல்லங்கள்

ஆண்-பெண் இருபாலாரும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் ஆண் இல்லத்தில் பெண்ணுக்குத் துணையாக வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்வது தவிர்க்க முடியாத காலத்தின் கட்டாயமாகிவிட்டது. பெண் வேலைக்குப் போகின்ற இல்லங்களில் தான் இந்த எண்ணமும் பகிர்தலும் சரியானது என்பதும் எழுதப்படாத சட்டமாகிவிட்டது. ஆண் இல்லத்தில் வேலைகளைப் பகிர்ந்து கொள்வதை அவனுடைய இமாலயச் சிறப்பாக வர்ணிக்கப்படுவதும் நடைமுறையாகிவிட்டது.

"அவன் எவ்வளவு நல்ல கணவன்.. அவளுக்கு எவ்வளவு உதவியாக இருக் கின்றான்.!!."

அவன் செய்கின்ற வேலைகள் அவனுடைய இல்லத்தின் வேலைகள், அவனுடைய குடும்பத்திற்கு அவனுடைய பங்களிப்பு என்ற அடிப்படைச் சிந்தனைத் தெளிவு பெண்ணுரிமை பேசும் ஆண்களிடம் கூட காண்பதற்கு அரிதாகவே உள்ளது. ஆனால் ஆணுக்கு நிகராக ஏன் பல இல்லங்களில் ஆணைவிட அதிகமாக சம்பாதிக்கும் பெண்ணைப் பற்றிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லும்போது மட்டும்,

"அவள் படிச்சிருக்கா.. வேலைக்குப் போறா.."

என்று மட்டுமே சொல்லப்படுகின்றது.

இன்னும் சிலர் "அவளை யாரு வேலைக்குப் போகச் சொல்றா" என்கிற வீராப்பு வசனமும் பேசுவார்கள். ஆனால் இவர்களில் யாருமே இந்தப் பெண் காலம் காலமாய் ஆணின் தோள்களில் மட்டுமே சுமத்தப் பட்டிருக்கும் பொருளாதர சுமையைப் பகிர்ந்து கொள்வ தற்காக வேலைக்குப் போகின்றாள் என்று சொல்லவும் எழுதவும் சிந்திக்கவும் மாட்டார்கள். இந்தச் சிந்தனை யாரிடமும் ஏற்படுவதில்லை என்பதுதான் உண்மை.

ஆண் குழந்தைகளை விட பெண்குழந்தை களே பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பிலும் அதிக மதிப்பெண்கள் எடுத்து தங்களின் திறமைகளை உறுதி செய்கின்றார்கள். ஆனால் இவர்களில் எத்தனை பெண் குழந்தைகள் IIT, IIM, IAS, IPS போன்ற துறைகளுக்குப் போகின்றார்கள்?

ஏன் போவதில்லை? பெற்றோர்களே பெண் குழந்தைகளை அதிகம் செலவுசெய்து ஏன் படிக்க வைக்க வேண்டும் என்று நினைப்பது எல்லா மட்டத்திலும் இன்றும் நடைமுறையில் காணப்படும் வாழ்வியல் எண்ணம்தான்.

பெண்கள் இல்லங்களில் அனுபவிக்கும் மனக்காயங்கள், வெளியில் தெரியாத ஊமைக் காயங்கள். இதுவரை பேசவும் எழுதவும் படாத அவளின் பக்கங்கள் நிறைய உண்டு.

இல்ல வன்முறைகள் (domestic violence) குறித்து தமிழகத்தில் செய்யப் பட்ட ஆய்வில் தமிழ்நாட்டில் மட்டும் ஆண்டுக்கு 90 வீதம் பெண்கள் தம் வாழ்நாளில் சில முறையேனும் கணவனிடம் அடி வாங்கு கின்றார்கள் என்று அறிவிக்கின்றது.

"மனைவியைத் துன்புறுத்தினாலும் அதைச் சகித்துக் கொண்டு குடும்பத்தைப் பேணுவது பெண்ணின் தலையாயக் கடமை என்று 74 வீதமான நீதிபதிகள் கருத்துச் சொல்லி இருக்கின்றார்கள்"

அம்னெஸ்ட்டி இண்டர்நேஷனல் அமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கல்வியிலும் சமூகத்திலும் பெண்கள் உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ள ஐரோப்பிய நாடுகளிலும் அவர்களின் பாதுகாப்பு பெரும் வினாக்குறியே என்று அதிர்ச்சி தரும் தகவலைத் தருகின்றது.

"பிரான்சில் ஐந்து நாட்களுக்கு ஒரு பெண் இல்ல வன்முறைக்குப் பலியாகிறாள். ஸ்பெயினில் ஆண்டுக்கு நூறு பெண்கள் கணவனால் அடித்துக் கொல்லப்படுகின்றனர். இங்கிலாந்தில் மூன்று நாளைக்கு ஒரு பெண் என்ற கணக்கில் மனைவிக் கொலை நடைபெறுகிறது. நலவாழ்விலும் தொழில்துறை யிலும் பெரும் வளர்ச்சி பெற்ற, பெண்கள் நூற்றுக்கு நூறு கல்வியறிவு பெற்ற பெருமைக்குரிய சுவிட்சர்லாந்தும்கூட மனைவிக் கொலைகளில் சற்றும் சளைத்ததன்று.

பிரான்சில் தேசிய மாதர் ஒற்றுமைக் கூட்டமைப்பு தலைவியான மேரி-டொமினிக் என்பவர் அம்னெஸ்ட்டி கொடுத்துள்ள மேற் சொன்ன புள்ளி விவரங்கள் பெரிதும் குறைமதிப் பீடானவை என்று கருத்துரைக்கின்றார். பிணஆய்வு செய்யும் பாரிஸ் மருத்துவமனை அமைப்பு பாரிசில் மட்டும் ஆண்டுக்கு 60 பெண்களைக் கணவன்மார்கள் கொன்று குவிக் கிறார்கள் என தன் அறிக்கையில் சொல்கிறது.

"அடிவாங்குவதற்கு என்று வந்துவிட்டால் பட்டிக்காடா பட்டணமா, அதிகம் படித்தவளா, குறைவாகப் படித்தவளா, உயர் அதிகாரியா, வெறும் குடும்பப் பெண்ணா என்பதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல. சொல்லப் போனால் உயர்ந்த இடத்தில் உள்ள பெண்களைக் கண்டுதான் ஆண்களுக்கு அதிக எரிச்சல். நாட்டின் சனநாயகம், வளம், கல்வி ஆகியவை எந்தளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தாலும் அதற்கும் இல்ல வன்முறைக்கும் எந்தத் தொடர்புமில்லை" என்கிறார் சுவிட்சர்லாந்து சமூகவியலார் எலிசபெத் ராட்-க்ரானெஜ். அவரின் கருத்து பெண்ணுரிமை பேசுபவர்களின் கற்பனை அல்ல என்பதை உறுதி செய்கின்றது மேரி டிரின்டிக்னன்ட் என்ற பிரஞ்சு நாட்டின் மாபெரும் பெண்ணியத் தலைவியின் முடிவு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மேரி** பெண் விடுதலைக்காகப் பெரும் **போராட்டங்களை** நடத்தியவர். சிறந்த திரைப்பட நடிகை. அவள் துணைவர் பெட்ரன்ட் கேட்டன்ட் பெரிய பாடகர். இடதுசாரிக் கொள்கையாளர். ஈராக் போரில் அமெரிக்க வல்லரசைக் கடுமையாக எதிர்ப்பவர். இப்படிப்பட்ட கொள்கைவீரர்தான் தன் காதல் துணைவியை ஒரி விடுதியில் வைத்து அடித்து நொறுக்கினார். அடி தாங்காத மேரி கோமா நிலையில் இருந்து இறந்து போனார். இதனால் தான் எலிசபெத் ராட்-க்ரானெஜ் சொல்கிறார்..."இல்ல வன்முறை யில் எல்லாச் சமூகத் தகுநிலையையும் தாண்டி ஆணாதிக்கம் செயல்படுகிறது" என்கிறார்.

தென்னாப்பிரிக்காவில் உள்ள சில பெண்கள் சொல்கிறார்கள் : "எங்கள் தந்தை, கணவர், சகோதரர், காதலர் என எல்லோரும் எங்களை அடிக்கிறார்கள்" என்று. பல ஆபிரிக்க நாடு களில் பெண்கள் கணவனால் எரித்துக் கொல்லப்படுவது சர்வ சாதாரணம் என்கிறது அம்னெஸ்டி அறிக்கை.

**அரசியல்**

மனிதனால் படைக்கப்பட்ட மதம் தனி மனிதர்களின் நம்பிக்கை என்கிற தளத்தை விட்டு அரசியல் தளத்தில் நுழைகின்ற போதெல்லாம் கற்பனை செய்ய முடியாத கொடுமைகளை எல்லாம் மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து மக்களாட்சிக் காலம் வரை மாற்ற முடியாமல் அனுபவித்துக் கொண்டி ருப்பது பெண்கள்தான். 2002ல் இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் நடந்த வன்முறைகளில் பெண்கள் எப்படி எல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பதை உலகமே அறியும். ஜஹீரா ஷேக் பெஸ்ட் பேக்கரி வழக்கில் என்னவெல்லாம் நடந்தது, எத்தனை நீதிமன்றங்களில் அவர் மேல் முறையீடுகளுக்காக நின்று கொண்டிருக் கின்றார் என்பதையும் அனைவரும் அறிவர்.

இவரைப் போலவே கொடுமையை அனுபவித்த இன்னொரு பெண் பில்கிஸ் யாகூப் ரசூல். மதக் கலவரங்களில் உயிர் பிழைத்தால் போதும் என்று குடும்பத்துடன் கிளம்பிய பில்கிஸின் ரந்திக்பூரின் ஊர்த்தலைவர்களால் வெறித் தாக்குதலுக்கு உள்ளானார். "எட்டுப் பெண்கள் பாலுறவு வன்செயலுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். தாயின் கண்ணெதிரிலேயே பில்கின்ஸின் வயதுக் குழந்தையின் தலை வாளால் சீவி ஏறியப்படுகிறது, 5 மாதக் கருவுற்றிருந்த பில்கிஸின் மூன்று முரடர்களால் சூறை யாடப்பட்டார்....:"

அரசியலில் மதவெறி தலைவிரித்தாடிய இந்தச் சம்பவங்களில் எல்லாம் இவர்களுக்கு நீதி கிடைக்குமா? நம்பிக்கையுடன் காத்திருப் பதைத் தவிர வேறு வழியில்லை.

இன்றைய அரசியல் தளத்தில் பெண்ணின் நுழைவு என்பதே ஓர் ஆணின் பிரதிநிதி யாகத்தான் நிகழ்கிறது. ஆணின் விதவை மனைவியாக, வாரிசு அடிப்படையில் வந்த மகளாக, சகோதரியாக மட்டுமே அவளின் அறிமுகமும் அரசியல் பயணமும் அமைகிறது. மக்களாட்சியில் தேர்ந்தெடுக்கப்படும் கிராமப் பஞ்சாயத்து தலைவிகள் கூட கணவன், தந்தை, சகோதரன் இவர்களின் பினாமியாகவே செயல்படுவதையும் காண்கிறோம்.

பெண்ணுக்கு தனிப்பட்ட அரசியல் சித்தாந்தங்கள், கருத்துகள் இருப்பதில்லை. ஆணாதிக்கத்தின் அடையாளமாகவே பெண் இன்றும் அரசியல் தளத்தில் நிற்கிறாள்.

தொடர்கிறது பெண்ணுக்கான விழிப்புணர்ச்சி சிந்தனைப் போராட்டங்கள்.. மொழி, இன , மத அடையாளங்களுக்கு அப்பால், எல்லைக் கோடுகளை உடைத்துக்கொண்டு...

எங்கெல்லாம் பெண்ணினம் கொடுமைப் படுத்தப் படுகின்றதோ அங்கெல்லாம் எழுந்து நின்று குரல் கொடுக்கும் ,போராடும் மனித இனத்தின் உரிமைக்குரலாக தொடர்கிறது பெண்களின் பயணம்...!

குறிப்புகள்:
தமிழர் கண்ணோட்டம் ஏப்ரல் 2004,
ரூ அவுட்-லு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னமும் ஏதோவொன்றிற்காய்...

இடி இடிக்க பூமி நடு நடுங்க
பித்தம் தலைக்கேறி
வாந்தியெடுத்தது வானம்


கிருதயுகம, திரேதயுகம், துவாபரயுகம்
எல்லாம்
சுமூகமாக முற்றுப்பெற்றபோதும்
கலியுகத்தில் மட்டும்..
பூமாதேவியின்
கோரத்தனமான ஆட்டத்தில்
அண்டம் - ஆங்காங்கே சரிந்து
நிமிர்ந்தது

அச் சரிவுகளுக்கு
அசைவுகொடுக்க முடியாமல்
ஏழுகடல்களும் ஆட்டம்கண்டு
கொடுங்கோபத்தோடு கொந்தளித்தது
பெருக்கெடுக்கும் கடல்நீரை
குடிமனைகள் மீது
உழிந்துகொட்டியது

வெறித்தனமான சூறாவளியின் வேகத்தில்
கட்டடங்கள் முதற்கொண்டு
மரங்கள், மனிதஉயிர்கள்
மற்றும் எல்லா உயிரினங்களும்
ஒன்றாய் துவைக்கப்பட்டது
சாவுக்கஞ்சி அவை எழுப்பிய
கூக்குரல்கள்
வங்கம் முதல் வைகுண்டம்வரை
பேரதிர்வைக் கிளப்பியது.
அதிர்வின் எதிரொலியில் வானமும் பல
துண்டங்களாய் வெடித்துச் சிதறியது

மண்ஆசை
பெண்ஆசை
பொன்ஆசை கொண்டவர்கள்
கொள்ளாதவர்கள்
எல்லோரும் ஒன்றாய்
சாதி, மதம், இனம், பால் வேறுபாடின்றி
ஒரே படுக்கையில்
மூர்ச்சையடைத்துப்போய்ப்
பிணங்களாய்ப் பிரண்டுபோயினர்

சொற்ப இடைவெளிகளின் பின்
வெடித்துப் பிளந்த வானம்
இருளை மட்டுமே மெழுகியிருந்தது
ஆடிய ஆட்டம் எல்லாம்
ஓய்ந்து போனபோது
அண்டம் - எங்கும் மௌனவிரதத்துடன்
ஏதோவொன்றிற்காய்க் காத்துக்கிடந்தது.



எதிக்கா
(கனடா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நானும் ஓர் காவியம்தான்

நிலவையே சுட்டுவிடும்
விழிகளை கொஞ்சம்
சுருட்டிக் கொள்ளுங்கள்
உங்கள்
பார்வைகள் பட்டு
இன்று
நான் ஓர் அக்கினிதான்

போலியை உடுத்தி
பொய்மை பேசும்
உங்கள் நாக்குகள்
தேனில் நனைந்து
விசத்திற்கு உத்தரவிடும்
நம்பிக்கைத் துரோகிகள்.

இவ்வளவு காலமும்
இவள்
முதுகெலும்பில்லாதவள் தான்
உங்கள் நரம்பில்லா நாக்கின்
சுழற்றிய சுற்றலில்
சின்னா பின்னப்பட்டவள்தான்

இன்று
சூரியக் குஞ்சாய்
நத்தை ஓட்டிற்குள் வளர்கிறாள்.


'டார்வின்' பரிணாம வளர்ச்சியில்
நத்தைக்கும் ஓர் நாள்
முள்ளந்தண்டு உண்டாகும்.
அன்று என்
வாழ்வின் வசந்தங்களை விற்றுவிட்ட
உங்கள்
வாழ்க்கையின் வேஷத்தை
வேகமாய் அழிப்பேன்.

மதுரையை அழிக்கும்
காவியம் அல்ல... இவள்
தன்னையே எரிக்கும் சூரியன்

தினம் தினம் தீக்குளிப்பேன்
நிருபிக்க அல்ல
என்னை நான் புதுப்பிக்க.

இன்று
அண்டங்களை உண்டு
அக்கினியை குடித்த பின்னும்
அடங்கவில்லை என் அகோர பசி.
பல எரிமலைகளை
வெடிக்காமல் வைத்துள்ளேன் என்
உள்ளத்தில்!

(2004/10)



விஜயலட்சமி சேகர்.
(இலங்கை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அந்தி

நசநசன்னு மழ பெஞ்சுக்கிட்டு இருந்துச்சு. ரெண்டு வாரமா இப்பிடியே பிசுபிசுத்துக்கிட்டு இருந்தா, சனங்க என்னனு வேல வெட்டிக்குப் போறது? ரவைக்கு ரவ ஆன மோண்டது கணக்கா சோன்னு ஊத்துது. விடுஞ்சா இந்த நசநசப்பு. நல்லா பெஞ்சம்னு இல்ல; காஞ்சம்னு இல்ல. இதென்ன எழவெடுத்தபெய மழயோ!

கொளத்தூர்ல ஒத்த சனம் பாக்கி இல்லாமெ அம்புட்டுப் பேரும் பொலம்பிக்கிட்டுக் கெடந்தாக. குண்டுங்குழியுமாக் கெடந்த தெருவுகள்ள பூராந் தண்ணி ரொம்பிக் கெடந்துச்சு.. வீடுகளுக்கு முன்னால மாடுக கெட்டுன எடம்பூராம் சாணியுஞ் சகதியுமா பாக்கவே அரோசியமா இருந்துச்சு. பசுமாடுகளாச்சும் பரவாயில்ல. இந்த எருமைக கெட்டுன எடங்கள சொல்லவே வேண்டாம். மாடுகன்னுகள வேற எங்க கொண்டு போயிக் கெட்டுவாக? சனங்க குடியிருக்குறதே இத்தினிக்கானு குடிசு. அவுகளுக்கே இருக்க எடம் பத்தாது; மாடுகன்னு களுக்கு எடத்துக்கு எங்க போறது? அதுனால எல்லார் வீட்டுக்கு முன்னாலயும் பசுவோ, எருமையோ நிக்கும். மாடுகன்னுகள நம்பித்தான் அவுகளோட பொழப்பே இருக்குது. பகல் பொழுதுல மாடுகள கொண்டுபோயி காடுகரைகள்ள மேய உடலாம்னா எங்க பாத்தாலும் தண்ணிக்காடா இருக்கு. முன்ன மாதிரி கம்மாயிலயும் உட முடியாது. கம்மாயில கூட தண்ணி வந்துருக்குன்னு சொல்லிக்கிட்டாக. ஆடு வச்சுருந்தவுக பாடு பரவாயில்ல வீட்டுத் தாவரத்துலயே அதுகள கெட்டிப் போட்டுக்கிட்டாக. செலபேரு வீட்டுக்குள்ளயே ஆட்டுக்குட்டிகளக் கெட்டிப்போட்டாக.



ஓவியம்: செள்ந்தர்

தவசிப் பாட்டியும் ஒரு ஆட்டுக்குட்டி வச்சுருந்தா நல்லாத் தெடமா இருந்த காலத்துல எம்புட்டெம்புட்டோ ஆடுமாடுக வச்சு வளத்தா. இப்ப அவா இஸ்டப்பட்டாலும் வச்சு வளக்க முடியாது. ஒடம்பு ரொம்பா பலவீனமாகிப்போச்சு. இந்தத் தள்ளாத வயசுலயும் தனியா வேலஞ்சு காச்சிக் குடிச்சுக்குட்டு இருக்கா ஏழெட்டு மக்களப் பெத்து ஆளாக்கி எல்லாருக்கும் பொண்ணு புள்ள பாத்துக் கெட்டிக்குடுத்துட்டு புருசனயுஞ் சாகக் குடுத்துட்டு இப்ப ஒத்தயில ஒலவச்சுக் காச்சிக்குடிக்கிறதப் பாக்கயில கருமாயமா இருக்கும். மக்கமாரெல்லாம் ஓரளவுக்குப் படுச்சுட்டு எங்கெங்கயோ வேல வெட்டி பாத்துக்குட்டுத்தான் இருக்காக. அவுக கூப்புட்டாலும் இவா போகமாட்டா. ரொம்பா ரோசக்காரக் கெழவின்னு ஊர்ல சொல்லுவாக. புருச இருக்குறவரை யில கொஞ்சம் நல்லாத்தான் இருந்தா. அந்தக் கெழவ என்னைக்கு மண்டயப் போட்டானோ,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்னைக்கே அவளுக்கு அற உழுந்தது கணக்கா ஆகிப்போச்சு. புருசனுக்கு முன்னால போயிச்சேந்துரனும்னு வாய்க்குவாயி சொல்லிக்கிட்டே இருப்பா. ஆனா அவளுக்கு முன்னால மாடசாமிக் கெழவம் போயிட்டான். இப்பயும் அந்தக் கெழவஞ் செத்து அந்தா இந்தான்னு ஏழெட்டு வருசத்துக்கு மேலாகிப்போச்சு. தவசிக்கெழவியும் ஏதோ அவளுக்குத்தக்கன வேலஞ்சு கொதிக்கவச்சுக் குடிக்கா. வருசத்துல ஒருவாட்டி ஊருத்திருநா வரும்போது மக்கமாரு, மருமக்கமாரு, பேரனுக, பேத்திமாருக ரொம்பப் பெருகளமா வந்து போவாக. அப்பத்தா அவா கைல அஞ்சோ, பத்தோ குடுத்துட்டுப் போவாக.

இந்த ஒரு மாசமா இப்பிடி அடமழ புடிச்சுக்குட்டதுனால தவசிப் பாட்டி வேல வெட்டி எதுக்கும் போக முடியல. அறுப்புக் காலத்துல வைக்கப் போட்ட தரைக, களத்து மேட்டுகளத் தூத்துப் பெறக்கிச் சேத்து வச்சுருந்த நாலு மரக்கா நெல்ல அவுச்சுப் போட்டு குத்தி வச்சுருந்த அரிசியத்தான் காச்சிக்குடிச்சுக்கிட்டுப் பொழுத ஓட்டுறா. வையாசி மாசம் திருநாளைக்குப் பிள்ளைக வரும்போது அந்த அரிசிய காச்சிக் குடிக்கலாம்னு இம்புட்டு நாளாப் பொத்திப் பொத்தி வச்சுருந்தா. இப்ப இந்த மழைன்னால வேல வெட்டிக்குப் போகமுடியாம அரிசிய எடுக்க வேண்டியதாயிப்போச்சு.

தவசிப்பாட்டியோட சொந்த பந்தங்கள்லாம் இதே ஊர்லதான் இருக்காக. ஆனா தவசி ஒருநா ஒருபொழுது அவுககிட்டப் போயி கையேந்தி நின்னது கிடையாது. ரொம்ப வைராக்கியமான கெழவிதான்னு ஊர்ல சொல்லுவாக. தவசிக்கெழவியோட கூடப்பொறந்த தம்பி கிட்ணங்கூட கூடியமட்டும் சொல்லிப்பாத்தான்.

“இந்த வயசான காலத்துல ஏம்கா இப்பிடிக்கெடந்து ஒத்தையில கஸ்டப்படுற? பேசாம ஏங்கூட வந்துரு; இல்லன்னா மக்கமாருககிட்டயாச்சும் போயி இரு. நடக்க மாட்டாமெ நடந்துக்குட்டு வேலவெட்டிக்குப் போற, தண்ணிக் கொண்டுக்குற, கஞ்சி தண்ணியுங் காச்சிக்கற பத்தாக்கொறைக்கு ஒரு ஆட்டுக்குட்டி வேற... இந்த வயசுல நீயி எந்த மரத்துல ஏறி கொழ ஒடிச்சுப்போட்டு அந்தக் குட்டியக் காப்பாத்தப் போற? பேசாம வித்துருன்னாலும் கேக்கமாட்டேங்க... வீம்புக்காரிதான் நீயி...”

தம்பி எம்புட்டுத்தாஞ் சொன்னாலும் ஆட்ட விக்கிற மாதிரி இல்ல. எங்குட்டுக்கூடியாச்சும் அதுக்கு கொழ ஒடிச்சுக் கொண்டாந்து போட்டுருவா கெழவி. தம்பிக்காரனும் நாலஞ்சு ஆடுக வச்சுருந்தான். ஒரு தடவ தவசிக்கெழவிட்ட அவஞ்சொன்னான், “ஏக்கா நீயி வேணும்ணா ஒ ஆட்ட ஏங்குட்டிகளோட உட்டுரு. ஏங்குட்டிகளோட அது மேயட்டும். பெருசாகுற காலத்துல புடிச்சு வித்துக்கோ என்ன சொல்ற?”.

**பாமா**



“ஒனக்கிருக்கற சள்ளையில இதென்னத் தூக்குடா? நானு எங்குனயாச்சும் வேல வெட்டிக்குப் போகயில இத்தினி கொழ ஒடிச்சாந்து போட்டம்னா அது பாட்டுக்குத் தின்னுக்குட்டு கெடக்கு. அது இங்ன ஏங்கூடயே நின்னுட்டுப் போட்டும்டா”, இப்பிடிச் சொல்லிட்டு குட்டியக் குடுக்க மாட்டம்டா.

“எங்க சாகப்போற நாளைல குட்டிய ஏங்கிட்ட உட்டா நானு குட்டிய வச்சுக்கிருவம்னு கெழவிக்குப் பயம். அவா என்ன லேசுப்பட்ட கெழவின்னா நெனச்சீக... எம்புட்டுத் தடவ கேட்டுப் பாத்துட்டேன். குடுக்கவே மாட்டம்ங்கா. அவளே வச்சுக்குட்டு லோளுப்படட்டும்”. கிட்ணன் தெருச் சனங்ககிட்ட சொல்லி ஆத்துரப்பட்டான். தவசியோட புருசங்கூட பெறந்த நாத்துனாக் காரி கூட தவசிகிட்ட சொல்லிப்பாத்தா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொழாயில தண்ணி புடுச்சுக்கிட்டு இருந்த தவசி சொன்னா, "நீங்கள்ளாம் புரியாமப் பேசுறீகத்தா. ஏந்தம்பிக்காரனும் அவம்பாட்டுக்கு வாயிக்கு வந்ததெல்லாம் பேசிக்கிட்டுத் திரிரான். நீங்க நெனைக்கிற மாதிரி நானு இந்த வயசுல ஆடு வளத்து சொத்து சொகமாச் சேக்கப்போறேன்? எந்த நேரமும் ஒத்தயிலயே கெடக்குறது வெருக்கு வெருக்குன்னு இருக்குது. கூட இந்த ஆட்டுக்குட்டி இருக்குறது கொஞ்சந் தெம்பா இருக்குது. சாகுந்தட்டிக்கும் இந்த வாயில்லாச் சீவங்கூட இருந்துட்டுச் செத்துப் போகலாம்னு பாத்தா ஆளாளுக்கு என்னென்னமோ சொல்லுறிக".

இதக்கேட்ட அன்னம்மா பாட்டி சொன்னா, "அவா சொல்றதும் நாயந்தான... அவளுள்ளும் ஒரு தொண வேணும்ல.... என்னமோ பேரம்பேத்திக கூட பேசுறது கணக்கா தவசி அந்தக் குட்டிக்கிட்டப் பேசிக்கிட்டுக் கெடப்பா அந்தக் குட்டியும் எந்த நேரமும் இவாக் காலசுத்திக்கிட்டு இவாகிட்ட ரொம்பப் பிரியமாத்தா இருக்குது.... அதுதான் அவளுக்குத் தொணையா நிக்கிது."

"கெழவம் போயிச் சேந்துட்டான். இன்னமும் எம்புட்டு நாளைக்குத்தான் கடவுளு எனியச் சோதிக்கப் போறாரோ தெரியலயே... காலு கையி நடமாட்டத்துல இருக்கயிலேயே கடவுளு எனிய எடுத்துகிரனும். இந்தக் கொடத்தத் தூக்கி உடுத்தா", ஆராயி தூக்கி உட்ட கொடத்த வாங்கி இடுப்புல வச்சுக்குட்டுப் போனா தவசிப்பாட்டி..

ரெண்டு நாளா மழ செத்த ஒஞ்சிருந்துச்சு. மத்தியானம் கூழக்கரச்சுக் குடுத்துட்டு செத்தப் படுத்து எந்திருச்சு. தவசிக்கெழவி ஆட்டுக்குட்டியப் பத்திக்கிட்டு வயக்காட்டுச் செம போனா. குட்டிய மேய உட்டுட்டு அடுப்பெரிக்க ரெண்டு முள்ளுப் பேற்ககிட்டு வரலாம்னு ஓடப்பக்கம் போனா. "கொமரிகுட்டச்சியா இருக்கயில சேதரகாரப் பிள்ளைகளச் சேத்துக்கிட்டு சன்ன முள்ளாப் பெறக்கிக் கெட்டியாருவோம்! போட்டி போட்டுக்கிட்டுப் பெறக்குவோம்... பச்ச உயிர்வேலி முள்ளக்கூட வெட்டிக் கொண்டாந்து நறுக்கி கெட்டு கெட்டாக் கெட்டி வெளித்திருண நிமுர அடுக்கி வச்சுருவோம்.... இப்பிடி மழ நாளுல எரிக்க வெறகுக்கு அலமோத் வேண்டாம்... இப்ப எங்க அருவாப் புடுச்சு வெட்டவா முடியுது? காஞ்ச முள்ளுககூட இந்த மழயில நமத்துப் போயிக்கெடக்கு...," தன்னால பேசிக்கிட்டே முள்ள அள்ளிக்கெட்டிக்கிட்டு வந்தா. பொழுது போயி மசங்குற மாதிரி இருந்துச்சு. இப்பயெல்லாம் வெள்ளனத்துலயே மசங்கிருதுன்னு நெனச்ச தவசிக்கெழவி இருட்டமுன்ன ஆட்டுக்குட்டியப் புடிக்கனும்னு எட்ட இழுத்து வச்சுப் போட்டா... கெழவி தொலவுல வாரதப்பாத்த ஆடு மே.. மேன்னு கத்துச்சு.

"என்னடி ஏஞ்செல்லம் ரொம்ப நேரமாக் காணம்னு தேடுறியாக்கும்டி... ரவைக்கிக் கஞ்சி காச்ச இத்தினி முள்ளுப் பெறக்கியாரலாம்னு போனேன்... எங்க இந்த மழைக்குள்ள பூரா நமத்துப் போயிக்கெடக்கு.... ரெண்டு வரட்டியும் ரெண்டு முள்ளுமா வச்சு ஒப்பேத்தனும்... வெறன்ன செய்றது சொல்லு.....ஒத்த பெயமக்களக் காணும்.... மழைக்கிப் பயந்துக்கிட்டு அம்புட்டுச் சனமும் இப்பயெல்லாம் வெள்ளன வெடுக்குல காச்சிக் குடுச்சுட்டு வீட்டுக்குள்ள சட்டுன்னு மொடங்கிக்கிதுக. எம்மாடியோ... கூதக்காத் தென்ன இப்பிடி அடிக்கி... மழ வார மாதிரில்ல இருக்கு.... இனி எந்நியாரம் போயி அடுப்புப் பத்த வச்சு ஒல வைக்கவோ... இந்தப் பச்ச முள்ளு வேற பொகஞ்சுக்கிட்டே கெடக்கும்... இந்தா பே... பே... வா.... வா... வாம்மா.... இந்தா வந்துட்டேண்டி....," சொல்லிக்கிட்டே ஆட்டப் பாத்து வேகமா நடந்தா. தவசி வாரதப் பாத்த ஆட்டுக்குட்டி அவள நோக்கி கத்திக்கிட்டே ஓடியாந்துச்சு.

ஆட்டப்பாத்துக்கிட்டே வந்த தவசி தண்ணி கெட்டிக்கெடந்த வெட்டுக்குழிக்குள்ள உழுந்துட்டா. தண்ணி அவளுக்கு நெஞ்சு வரைக்கு இருந்துச்சு. அவளால அந்தக் குழிக்குள்ள இருந்து மேல எந்துருச்சு வர முடியல. கைய வச்சு எம்ப எம்ப வழுக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழுக்கி உள்ளேயே உழுந்தா குழியும் நாலடி ஆழத்துக்கு இருந்துச்சு. பூராஞ் சேறுஞ்சகதியுமா இருக்கவும் அவளால அம்புட்டுச் சாமானியமா ஏறி வெளிய வரமுடியல. இதுக்குள்ள ஆட்டுக்குட்டியும் அவா இருந்த எடத்துக்கு வந்துருச்சு. அவளப் பாத்துக்குட்டு மே... மே...ன்னு கத்திக்கிட்டே அந்தப் பள்ளத்தயே சுத்திச் சுத்தி வந்துக்கிட்டு இருந்துச்சு.

'இன்னைக்குன்னு பாத்து ஒத்தச்சனத்தக் காணுமே... இங்ன இருந்து கத்துனாக்கூட தெருச்சனங்களுக்கு கேக்காதே... குளுருல வெரச்சே நானு இன்னைக்குச் செத்துப்போவேன்... மழ வேற தூறுதே.... இப்பிடியே இந்தப் பள்ளத்துலயே செமாதி ஆயிருவேன் போல.... கடேசி ஏங்கெதி இப்பிடியா ஆகனும்? ஏ உசுரு இப்பிடித்தாம் போகனும்னு கடவுள் எழுதி இருப்பாரு போல.... அம்புட்டுத்தான் எனக்கு விதி முடிஞ்சு போச்சு.... ஏ மக்கமாரு பேரம்பேத்திமாரு ஒருத்தரக்கூட பாக்க முடியாமப் போறேனே.... வந்தது வந்தேனே கொஞ்சம் மேப்பகல்லயே வந்திருந்தம்னா நம்ம தெருச் சனங்களாவது இருந்து காப்பாத்தி இருப்பாகளே... ஏந்தம்பி கிட்ணங்கூட இப்ப வீட்லதான இருப்பான்.... ஒரு வாத்த சொன்னா ஓடியாந்து மேல இழுத்துப் போட்டுருவானே.... பெத்த மக்கமாரு இருந்தும் சொந்த சாதிசன மெல்லாம் இருந்தும் இப்பிடி அனாதையாச் சாகனும்னு ஏந்தலைல எழுதிட்டானே....' துக்கத்துல தவசி குமுறிக் குமுறி அழுதா.

அவளயே சுத்திச் சுத்தி வந்த ஆட்டுக்குட்டி, அந்த ஏகாந்தர வெளில மே... மே...ன்னு அலறுனதக் கேக்கயில மனசே ரெண்டா வகுந்துரதுகணக்கா இருந்துச்சு பொழுது போயி நல்லா இருட்டத் தொடங்கியிருச்சு. தவசி மேல ஏறி ஏறிப் பாத்துட்டு சறுக்கிச் சறுக்கி உழுந்து சோந்து போனா. குளுருல வெட வெடன்னு நடுங்கிக்கிட்டு ஆட்டுக் குட்டியப் பாத்துச் சத்தம் போட்டு அழுதா. ஆட்டுக்குட்டி அவளப் பாத்துட்டு இன்னங் கொஞ்சம் சத்தமாக் கதறுச்சு. இந்த ரெண்டு கதறல் சத்தத்தத் தவுர அந்தச் சுத்து வட்டாரத்துல ராப்பாடி வண்டுகளோட ரீங்காரமும் தவள கத்துர சத்தமுந்தாங் கேட்டுச்சு.

'நெலாக்கூட இல்ல.... கும்மிருட்டா இருக்கு.... சாகப்போற கழுத இருட்டுல கெடந்து செத்தா என்ன...... வெளுச்சத்துல கெடந்து செத்தா என்ன... நெலா இருந்தா யாராச்சும் தப்பித் தவறி இப்படிக்கூடி வந்தா நம்ம இந்தப் பள்ளத்துக்குள்ள கெடக்குறது தெரியும்.... இந்நியாரத்துக்குப் பெறகு யாரு இங்க வந்து எனியப் பாத்துத் தூக்கப் போறாக? அப்பிடின்னாலும் ஒரு வெயிலுக் காலமா இருந்தாலும் சனங்கா வருங்க... போகுங்க... இந்தக் குளுருக்குள்ள ஒத்த ஈங்குஞ்சி வராது' இந்த நெனப்புல தவசிக்கு நெஞ்சே வெடிச்சிரும்போல இருந்துச்சு.. ஆட்டுக்குட்டியும் அந்த அத்துவானக் காட்டுக்குள்ள பரிதாபமாக் கத்திக்கிட்டே இருந்துச்சு.



ஆட்டுக்குட்டியப் பாத்துட்டு தவசி அதுட்ட ஆத்தமாட்டாமெ பொலம்பத் தொடங்குனா.

"ஏ நெலமயப் பாத்தா நீயி அழுகுற? என்ன செய்ய? ஏ விதி அம்புட்டுத்தான். ஏழெட்டு மக்கமாரப் பெத்து, வளத்து, ஆளாக்கி, ஏதோ என்னால ஏண்ட மட்டும் அவுகளப் படிக்க வச்சு, கடப்பட்டு ஒடப்பட்டு கலியாணங்காச்சி முடுச்சு.... எல்லாந்தாஞ் செஞ்சேன். அம்புட்டுப்பேரும் உட்டுப்போட்டு அதது வாழ்க்கையப் பாத்துட்டு எங்கயோ பட்டணத்துக்குப் போயிருச்சுக. கெழவனும் உட்டுட்டுப் போயிட்டான். மக்கமாருக எனியக் கூப்புட்டாலும் அங்னக்குள்ள போயி எம்புட்டு நாளைக்கு இருக்க முடியும்? நம்ம வகுத்துப் பிள்ளைகளான்னாலும் விருந்தும் மருந்தும் மூணே நாளைக்குதான்னு பெரியவுக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரியாமலா சொன்னாக? எம்புட்டுத்தான் வசதி வாய்ப்புன்னாலும் நாம் பொறந்த மண்ண உட்டுட்டு எப்பிடிப்போயி அங்க கெடக்க முடியும்? இப்ப இந்த மண்ண உட்டே நாம் போறேன்னே...'' துக்கத்த அடக்கமாட்டாமெ விம்மி விம்மி அழுதா.

'என்னைப் பெத்த ஆத்தா கடேசில நானு இந்தச் சாவா சாகனும்? குளுருல கை காலெல்லாம் வெரைக்குதே... மழ வேறயில டுச்சுக்குட்டு அறையும்போல இருக்கே... இந்த நடுக்கத்துல எம்புட்டு நேரந்தாங் கெடக்குறது? நாளைக்குக் கால வரையில இந்த உசுரு நிக்கிமா?' சத்தம்போட்டு அழுதா ஆட்டுக்குட்டியும் சேந்து கத்துச்சு.

"நீயி என்னத்துக்கு அழுகுற? போம்மா... நீயி வீட்டுக்குப் போ... நாம் பொழைக்கமாட்டேன். நீயி எந்தம்பி கிட்ணங்கிட்டப் போயிரு... என்ன? ஏதோ இந்த மட்டுக்கும் யாருக்கும் தொந்தரவு குடுக்காமெ, கால் கையி உழுந்து கெடக்காமே, இழுபறியாக் கெடக்காமெ போயிச் சேந்துர்ரேன். நீயி கத்திக்கத்தி ஒனக்குந் தொண்டந்தண்ணி வத்திப் போகும்". அப்படியே மயங்கி உழுந்துட்டா.

அதிகாலைல அவா வெறச்சுப்போயிக் கெடந்தா.

(2004/10)

## கோசல்யா கவிதை

# தீர்ப்பெழுதும் கரங்கள் பெண்களாகட்டும்

களத்திலும் நாங்களில்லை களமேட்டிலும் நாங்களில்லை
சூரியப் பொழுதுமில்லை சுடரொளி வீச்சுமில்லை
களமதைக் கண்டதில்லை கால்வலி நொந்ததில்லை
நிலத்தினில் தீர்ப்புக்காக புலத்தினில் காத்திருப்பு

கருவிலே சுமந்தாரை போர்க் களத்திலும் தருபவளாக
அறிவியல் ஞானம் அதிகாரச் சட்டம் கையில்
இயல் இசை நாடகம் இத்தனையும் எடுத்தவளாக
இத்தனை வடிவங்களை கையிலே எழுத்திலே எழுதிடும் பெண்ணே
தீர்வினை தீட்ட இன்னும் திகைப்பது ஏனோ?

எமக்கென விதிப்புமில்லை மனு இருக்கையில் சரிபாதி
உடற்கூற்றினை விலத்தி ஊரினை மீட்பில் பெண்கள்
வெறும் நிலத்தினை மட்டுமல்ல பெண்ணிலையினை மீட்பினிலும்
புறம்போக்கினை புறக்கணித்தே தீர்ப்பினை எழுது பெண்ணே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனக்கென தீர்வினை தந்திடும் ஞானம் வேண்டும்
உனக்கான உரிமையை உனதாக்கி உரையிட வேண்டும்
பெண்ணது விதியினை பெண்ணே நீ எழுத வேண்டும்
உன்னது சுகத்தை கொஞ்சம் ஒதுக்கியே வைக்க வேண்டும்!

ஆலயம் தன்னில் பெண்ணையிருத்தி அர்ச்சகராகும் நிலையும் வேண்டாம்
அர்ச்சகரே அம்மனை விற்றதாக அறிந்திட்ட சேதியுமுண்டு
வித்தகராக வேதமோதி வேள்வியில் விலையிட வர்த்தகர் வேண்டாம்
இனத்தினது வலியை இனமதாய உணர்வாய் பெண்ணே!

ஆளுமை சுரண்டல் பாலியல்வல்லுறவு சீதனம் சாதியம்
சீர்கேடு அனைத்துமே தீயினில் போட்டு தீர்வாக தீர்ப்பொன்று எழுது
சீதனம் கேட்கமாட்டேன் சீர்வரிசை தொடவே மாட்டேன்
பேருக்காய் சொல்லெடுக்கா பெரும் சபதம் வேண்டும்!


காரியம் கூடும் வேளை ஆண்களின் சுமையிறங்கும்
இப்போ ஆண் பெண் சமத்துவம் அழகாகத் தோற்றமாகும்
இத்தினமல்ல எத்தினமும் இறுமாப்பாகப் பேசு இனி
இகழ்ந்திடும் புத்தியினரை புறந்தள்ளியே எழுது பெண்ணே!

போரினால் மடிந்த நாட்டினை மீட்டனர் ஐரொப்பியப் பெண்கள்
அவர்களும் இங்கே அடைந்ததாக இல்லை சுபீட்சம்
தேசத்தின் விடிவில் தீர்வில்லை பெண்ணெனில் - எந்த
புரட்சியிலும் வெற்றியில்லை புறக்கணித்தால் பெண்ணினத்தை

ஏட்டிலே பெண்களாக எழுத்தினை திருத்தவேண்டும்
எங்களுக்கானதோர் கௌரவத்தை எழுத்திட்டு வென்றவர்கள்
பல புரட்சியை தொட்டு புதுமையை விரித்தவர்கள் பெண்கள்
புலத்திலே வாழும் பெண்ணே நிலத்தினை நோக்கும் வேளை!

புலத்திலே புற நாகரீகத்தின் போர்வைக்குள் முடங்காது
காழ்ப்பினை கரவினை கண்களில் நீ ஒடுக்கிடாது ஆதிக்கமிதை
ஜலமோடு தெளித்து தீட்டழித்து யாப்பெழுதி விழிப்பெழுது
தீர்ப்பெழுதும் கரங்கள் பெண்களாகட்டும்!

(8.3.2004)



கோசல்யா சொர்ணலிங்கம் (ஜேர்மனி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சில இடங்களுக்கு செல்வது என்னை பயம் கொள்ளச் செய்கிறது



# ஆணாதிக்கத்திற்கு முகம்கொடுப்பது பற்றிய சில தனிப்பட்ட பிரதிபலிப்புக்கள்

● Chris Crass ●

"நான் ஓர் ஆணாதிக்கவாதி என ஏன் கூறுகின்றீர்கள்?" நான் அதிர்ச்சியடைந்தேன். நான் பகிடியாகச் சொல்லவில்லை. நான் பெண்களை வெறுக்கவில்லை. நான் கொடுமையான தீங்கு விளைவிக்கும் நபரல்ல. நான் எப்படி ஒரு ஆணாதிக்கவாதியாக இருக்கமுடியும்? நான் ஒரு புரட்சியாளன். நான் பதட்டமாகவும் கவலையாகவும் இருந்தேன். என்னுள் எதிர்வாதங்கள் மேல் எழுந்தன. நான் அரசு மற்றும் முதலாளித்துவத்திற்கும் எதிராக போராடும் விடுதலையில் நம்பிக்கை கொண்டவன். 1993 ஆம் ஆண்டு அப்போது எனக்கு 19 வயது. 4 வருடங்களுக்கு பின்பு நான் அரசியலுக்குள் நுழைகிறேன்.

பகுதி1
நான் ஒரு புரட்சியாளன். எப்படி ஆணாதிக்கவாதியாக இருக்கமுடியும்?

நீலு என்னுடைய கையைப் பற்றியிருந்தார். பொறுமையாக விளங்கப்படுத்தினார். "நீங்கள் தீங்கு விளைவிக்கும் நபர் என நான் சொல்லவில்லை, நீங்கள் ஒரு ஆணாதிக்கவாதி. ஆணாதிக்கம் பல நுண்ணிய சாதுரிய முறைகளில் வெளிப்படுத்தப்படுகிறது. நான் கதைக்கும்போது என்னை வெட்டிவிடுகிறீகள் ஆண்கள் பேசும்போது அதில் கூடிய கவனம் செலுத்துகிறீகள். அன்றொரு நாள் கோப்பிக்கடையில் மைக் என்பவருடன் அமர்ந்திருக்கும் போது நீங்கள் இருவரும் ஒரு உரையாடலை நிகழ்த்திக் கொண்டிருப்பதாகவும் நான் பார்வையாளராக இருப்பதாகவும் இருக்கிறது. நான் ஏதாவது சொல்லி சம்பாசனையில் கலந்து கொள்வதற்கு முயற்சிக்கிறேன் ஆனால் நீங்கள் இருவரும் என்னை சாதாரணமாகப் பார்த்துவிட்டு உங்களுடைய சம்பாசணைக்கு மீளச் சென்றுவிடுகிறீர்கள். குழுவில் இருக்கும் ஆண்கள் ஒருவருடன் ஒருவர் கண்களைப் பார்த்துக் கதைப்பதுடன் பெண்கள் அங்கே இல்லாதவர்கள் போன்று நடந்து கொள்கின்றனர். கல்விவட்டம் தனியே குழுவிலுள்ள ஆண்களுக்குரிய பொதுமன்றமாகிவிட்டது. இதில் அந்தப் புத்தகம், இந்தப் புத்தகம் எனத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்தது. அவர்களுக்கு எல்லாம் தெரிந்த தாகவும் எங்களுக்கு இவைகள் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டியதாகவும் எங்களுக்கு பல விடயங்களை கற்பிக்க வேண்டிய தேவை இருந்ததுபோலவும் தென்பட்டது. நீண்டகாலமாக நான் இதுபற்றி நினைத்துப் பார்த்தேன். எனக்கு மட்டும் இந்த உணர்வு தோன்றுகிறதா?? சிலவேளை நான் சொல்லும் விடயங்கள் பயனுள்ளதாகவோ, ஆர்வத்தைத் தூண்டுகின்ற விடயங்களாகவோ இல்லையோ என நினைத் தேன். சிலவேளைகளில் எனது அணுகு முறையை மாற்றவேண்டுமோ அல்லது நான் மேலதிக எதிர்விளைவுகளைக் காட்டுகின் றேனோ?? இது எனது தலைக்குள் இருக்கும் விடயம்; இதைக் கடந்து நான் வரவேண்டும் என்றும் நினைத்தேன். ஆனால் இந்தக் குழுவிலுள்ள வேறு சில பெண்களுக்கும் திரும்பத் திரும்ப இப்படி நடைபெறுவதைப் பார்த்தேன். இவற்றில் எல்லாவற்றிற்கும் உங்களைக் குற்றம் சாட்டவில்லை. ஆனால் நீங்கள் இந்தக் குழுவில் பெரும்பங்கினை வகிக்கிறீர்கள்; அத்துடன் நீங்கள் இதில் சுறுசுறுப்பான ஒருவர்" எனக் குறிப்பிட்டார். இச் சம்பாசணை என்னுடைய வாழ்வை மாற்றிய துடன் இதனை ஒரு சவாலாகக் கொண்டு இக் கட்டுரையிலும் போராட்டத்தைத் தொடர்ந் துள்ளேன்.

இக் கட்டுரை வெள்ளையின நடுத்தரவர்க்க ஆண்களாக தம்மை அடையாளம் காண்போருக் கும், விடுதலைக்கான போராட்ட அமைப்புகளை கட்டியெழுப்ப முயலும் இடது, புரட்சிகர அமைப்பாளர்களுக்குமானது. நான் எனது சொந்த அனுபவத்தில் ஆணாதிக்கம் (பாலாதிக்கம்) மற்றும் ஆணாதிக்கத்திற்கு (பாலாதிக்கத்திற்கு) எதிரான விடயங்களை எதிர்நோக்கிய அனுபவங்களை உணர்வுரீதி யாகவும் உளவியல் ரீதியாகவும் முதன்மைப் படுத்தும் பார்வையில் கூர்மைப்படுத்துகிறேன். இக் கவனக்குவிப்பை ஏன் செய்கிறேன் என்றால் இது தனிப்பட்ட முறையில் சவாலாகவும், ஆணாதிக்கத்திற்கு எதிராக போராட்டத்தில் சக்தி வாய்ந்தாகவும் பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது என்பதால். இக் கருத்துக்களை அலட்சியப்படுத்தக் கூடாது என பெண்களிட மிருந்து தகவல்கள் கிடைக்கின்றன.

'டிக்லாண்ட் நகரத்திலுள்ள இளைஞர் அதிகார நிலையத்தின் Rona Fernadez எழுதுகையில், ஆண்களை உற்சாகப்படுத்தும் சிறப்பான உணர்வுகளின் பாத்திரத்தை (அல்லது தமது அனுபவங்களின் சிறப்பை) பரீட்சிக்கையில் இதனை நான் கூறுகின்றேன். நான் நினைக்கிறேன், ஆண் எனும் சலுகை யைப் பெற்ற இவர்களும் தந்தைவழி சமூக அமைப்பில் கஸ்டங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் இதில் மனிதாபிமானமற்ற வழியில் அவர்கள் கஸ்டப்படுவதற்கு பலவீனமும் அவர்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்து வதிலுள்ள கஸ்டங்களும் அடங்குகின்றன எனவும். சர்வதேச நீதி மற்றும் நிறவாதத்திற்கு எதிரான அமைப்பின் Clare Bayard விசேடமாக ஆண்பால் செயற்பாட்டாளர்கள் பற்றி தெரிவிக்கையில், "எமது அரசியல் ஆய்வுகளை உருவாக்குவதற்கு நீண்டகாலமும் கடுமையான உழைப்பும் தேவைப்பட்டுள்ளது, உணர்வுரீதியான புரிந்துணர்வு உங்களுக்கு மட்டும் வரவேண்டும். இதற்கும் ஒரு கடுமை யான உழைப்புத் தேவைப்படுகிறது.'

இந்தக் கட்டுரை பெண்களின் தலைமைத்து வத்தையும், குறிப்பாக கறுப்பினப் பெண்களை யும் சமூக அமைப்பிலுள்ள ஆணாதிக்கத்திற்கு எதிராக எழுதும் மற்றும் சமூகத்தில் தந்தைவழி அமைப்புக்கும் எதிராக, அமைப்பிலுள்ள ஆணாதிக்கத்திற்கு எதிராக அணிதிரளும் பெண்களையும் கவனத்தில் கொள்கிறது. Barbar Smith, Gloria Anzaldua, Ella Baker, Patricia Hi. Collins, Elisabeth Betita, Martinez bell hooks மற்றும் பலர் அரசியல் அடிப்படைகளையும், சலுகை பெற்ற வெள்ளையின ஆண்கள் எவ்வாறான பணிகளில் ஈடுபட வேண்டிய தேவைகள் இருக்கின்றன என்பது பற்றியும் எதிர்வுகூறல்கள் மற்றும் தந்திரோபாயங்களைத் தயாரித்துள்ளனர். அமைப்புக்களிலுள்ள சலுகைபெற்ற வெள்ளை இன ஆண்கள் பலர் ஆணாதிக்கத்திற்கு எதிராகப் போராடி வருகின்றனர். எம்மில் பல ஆயிரக்கணக்கானோர் தந்தைவழி சமூக அமைப்பு நிலவுகிறது என்பதை இனங்கண்டு உள்ளோம். இதன் விளைவாக பல நன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் எமக்குக் கிடைத்துள்ளன. பாலாதிக்கம் அமைப்பினை மறைமுகமாக அழிக்கிறது. இந்தப் பெண்கள், அலிகள் மற்றும் பாலின தனிப்போக்குள்ள மக்கள் திரும்பத் திரும்ப விளங்கப்படுத்திக் கூறியுள்ளார்கள். நீங்கள் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் கதைக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் சவாலாக இருந்து நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைக் கண்டறிய வேண்டும், நீங்கள் எல்லோரும் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதைக் கண்டறிய வேண்டும், சமூகத்தில் ஆணாதிக்கம் நிலவுகிறது என்பதை புரிந்து கொண்ட இன்னும் பல வெள்ளை ஆண்கள் அமைப்பினுள் இருப்பதை ஏற்றுக் கொண்டாலும் தாம் அதில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளதை மறுத்துள்ளார்கள்.

சான் பிரான்ஸ்சிஸ்கோ சுதந்திர ஊடக நிலையம் மற்றும் ஏகே பிரஸ் ஆகியவற்றில் பங்காளரான Lisa Sousa தெரிவித்தார், அண்மையில் குழுக்களில் ஆணாதிக்கம் மற்றும் பால்நிலை பற்றி நடாத்திய கலந்துரையாடல்களில் ஆண்களிடமிருந்து 'நாங்கள் எல்லோரும் வருத்தப்படுகிறோம் வெட்கப் படுகிறோம். நாம் வர்க்கம் பற்றி கட்டாயம் பேசியிருக்க வேண்டும். நீங்கள் பால் வேறுபாட்டை வேறுபட்ட விடயங்களை விமர்சிப்பதற்கும் பயன்படுத்துகிறீர்கள்' போன்ற கருத்துக்கள் வெளிப்பட்டன.

ஆண்கள் பெரும் பான்மையாக அங்கம்வகித்து வந்த குழுக்களில் இணையும் பெண்கள் குறுகிய காலத்தில் அமைப்பிலிருந்து வெளியேறிய நிலைமையை சந்தித்த அமைப்புக்களில் அவர் இந்தக் கேள்விகளை எழுப்பியபோது, 'ஆண்களும் எங்கள் அமைப்பிலிருந்து விலகிக் கொள்கிறார்கள்; பெண்கள் மட்டும் அதிகமாக விலகிக் கொள்ளவில்லை. தொண்டர் அமைப்புகளிலிருந்து மக்கள் விலகுவது வழக்கம். நாம் மேலதிகமாக பெண்களை அமைப்பில் இணைத்துக்கொள்ள வேண்டும், பெண்கள் அமைப்பிலிருந்து விலகுகிறார்கள் என்றால் அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதைப் பொறுத்ததாக அது அமையும்' என்பன போன்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இக் கருத்துக்கள் மிகவும் பரீச்சயமானவை. அத்தோடு இக் கருத்துக்களை உருவாக்கிய ஆண்களிலிருந்து என்னை வேறுபடுத்திப் பார்க்கவேண்டியது சோதனைக்கு உட்படுத்துவதுமாகும். நான் இவ் விமர்சனங்களை எப்போது முன்வைத்தேன் என்பதை நினைவு கூர்வது அவசியமாகும். ஒரு அமைப்பைக் கட்டுவதிலும், கூட்டான விடுதலையிலும் நம்பிக்கை கொண்ட எனக்கு நான் இணைந்து வேலை செய்யும் மக்களுடன் தொடர்புகளை வைத்திருப்பது முக்கியமாகும். அமைப்பை உருவாக்கும் வாய்ப்புப் பெற்ற ஒருவர் சலுகைகளைக் கொண்ட பிற ஆண்களுடன் இணைந்து அமைப்பாகும் போது, என்னை நான் நன்கு புரிந்து கொண்டு அந்த மக்களில் நான் யாரை விமர்சிக்க வேண்டும், யாரிடமிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்பதை கற்றுக்கொள்வதையும் எனது சொந்த அனுபவங்கள் பற்றி நேர்மையாக இருப்பதையும் அது குறிக்கிறது.

நீலுவுடனான சம்பாசணைகள் பற்றியும் அவரது ஆணாதிக்கம் எவ்வாறு நடைமுறையில் இயங்குகிறது என்ற விளக்கத்தையும் நான் நினைவுபடுத்திப் பார்க்கிறேன். நான் அவரை நிறுத்துவதற்கு முயற்சிக்காமல் அவற்றைக் கேட்பதற்கு முயற்சி செய்தேன் என்பதை நினைவு கூர்கிறேன்.

'ஆனால்...' என்ற சொல் மீண்டும் மீண்டும் பல தடவைகள் எனது மனதில் வந்துபோனது. இதைத் தொடர்ந்து, இது தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டது, நான் இந்த அர்த்தத்தில் கூறவில்லை, நான் இதனை கருத்தில் கொண்டு கூறவில்லை, நான் அப்படி செய்ய முயற்சிக்கவில்லை, நீங்கள் மேலதிகமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதை நான் பெரிதும் விரும்புகிறேன், எனக்கு உண்மையிலேயே விளங்கவில்லை, நீங்கள் கூறுவதைக் கேட்க விரும்பவில்லை என யாரும் கூறவில்லை, நாம் எல்லோரும் சம உரிமையில் நம்பிக்கை உடையவர்கள், நான் உங்களை நேசிக்கிறேன் உங்களை வருத்தும் எந்த விடயத்தையும் ஒருபோதும் செய்யமாட்டேன், இது ஒரு சந்தர்ப்பம் சம்பந்தப்பட்டது, இதற்கும் ஆணாதிக்கத்திற்கும் சம்பந்தமில்லை, எனக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னசெய்வது என்று தெரியவில்லை. பத்து வருடங்களுக்குப் பின்பு திரும்பிப் பார்க்கும் போது எத்தனை தடவைகள் இந்த 'ஆனால்'கள் ஒரேமாதிரி திரும்ப திரும்ப வந்து போனது என்பது எனது மனதில் வந்தது. நானும் 'ஏனைய' பிற ஆண்களை ஒத்தவன் என்பதை ஒத்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீலூா ஆணாதிக்கம் பற்றி பல மணித்தியாலங்கள் என்னுடன் உரையாடியிருந்தார். இது மிகவும் கடினமானது. என்னுடைய அரசியல் கருத்துக்கள் எவை நன்மையானவை, எவை தீமையானவை என்பது பற்றிய இருபொருள் வாதக் கட்டமைப்புடைய ஒரு தெளிவான வரையறைகளைக் கொண்டு அமைக்கப் பட்டிருந்தன. நான் ஒரு 'ஆணாதிக்கவாதி' என்பது உண்மை. எனவே எனது முன்னைய அறிவு பற்றி நான் கேள்வியெழுப்ப வேண்டி உள்ளதுடன், என்னுடைய வரையறைகள் மாற்றப்படவேண்டும் என்பதையும் -கடந்தவற்றை திரும்பிப் பார்க்கையில்- இது என்னுடைய வளர்ச்சியில் மிகவும் பிரதான நிலையாகும் என்பதையும் விளங்கிக்கொண்டேன். அவ்வேளை நான் ஒரு குற்றவாளியாக உணர்ந்தேன்.

இரண்டு வாரங்களுக்குப் பின் எங்கள் புரட்சியாளர் குழுச் சந்திப்பில் நீலூா கையை உயர்த்தி, ஆணாதிக்கம் இந்தக் குழுவிலும் நிலவுகிறது எனக் கூறி, அவர் எனக்குக் கூறிய உதாரணங்களைப் பட்டியல் படுத்தினார். நான் அனுபவப்பட்ட தற்காப்பு எதிர்விளைவு தற்போது அந்த அறையிலுள்ள வேறு ஐந்து ஆண்களால் தாராளமாக முன்வைக்கப்பட்டது. ஏனைய பெண்களும் பேசுவதற்கு ஆரம்பித்தார்கள். அவர்களும் சக்திவாய்ந்த தந்திரோபாயங்களை அனுபவித்திருந்தார்கள். அத்தோடு இதுபற்றிக் கதைத்துக் களைத்து விட்டார்கள் எனத் தெரிவித்தார்கள். ஆண்கள் ஆச்சரியம் அடைந்தவர்களாக தற்காப்பு வாதங்களில் ஈடுபட்டனர். நாங்கள் ஆணாதிக்கம் என பிழையாகவும், தவறான புரிதலுடனும் உணர்ந்து கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கான காரணங்களை அடுக்கத் தொடங்கினோம். ஆனால் மிகவும் மனப்பூர்வமாக நேர்மையான உணர்வுடன் கூறினோம். ஆனால் நாங்கள் புரட்சியை விரும்புகிறோம். இச் சந்திப்புக்குப் பின், நீண்டகாலமாக அங்கம் வகித்த பெண் என்னருகில் வந்தமர்ந்தார். ஏப்ரல் புரட்சியாளர் கூட்டணியில் ஒரு வருடத்திற்கு மேலாக அங்கம் வகிக்கிறார். அவரும் கூட ஆணாதிக்க நடத்தை பற்றி மேலும் பல உதாரணங்களை எடுத்துக் கூறினார். குழுவில் இருந்த ஆண்கள் ஒருவரும் அவர் பொறுப்பான வேலைகளை செய்வார் என நம்பவில்லை, புதிய ஆண்களாக இருந்தாலும் கூட. குழுவைப் பற்றிய தகவல்களை ஆராய்ந்து பார்க்கவோ, அல்லது அரசியல் விடயங்கள் பற்றிய கருத்துக்களோ அவரிடம் கேட்கப்படுவதில்லை. வேறு சிலரும் எமது சம்பாசணையில் கலந்து கொண்டனர். ஆண்கள் தொடர்ந்தும் ஆணாதிக்கத்தின் வலியுறுத்தலுக்கு முகம் கொடுத்த வண்ணம் இருந்தனர்.

ஏ.்.ப்ரல் ஒரு உதாரணத்தை முன்வைத்து எனக்கு தெளிவாக விளங்கப்படுத்தியதையும் ஆண்களால் 'அது பிழையாக விளங்கிக் கொண்டுள்ளப்பட்டுள்ளது' என்பதை மறுத்துள்ளதையும் தெரிவித்தார். ஐந்து நிமிடங்களின் பின், ஏப்ரல் கூறிய அதே உதாரணத்தை நான் திரும்ப ஆரம்பித்தேன். ஆனால் இந்நேரம் இச் செய்தி ஏனைய ஆண்களிடமிருந்து பொறுப்பற்ற வாதங்களைச் சந்தித்தது. இந்த விடயத்தில் இது ஒரு ஆணாதிக்கச் செயல் என ஏப்ரல் உடனடியாக சுட்டிக்காட்டினார், உண்மையில் என்ன நடந்தது என்பதை என்னால் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியவில்லை. நான் ஏப்ரலைப் பார்த்தேன். அவர் மிகவும் உடைந்து போயிருந்தார். ஏப்ரலின் சொற்கள் எனது வாயிலிருந்து வந்தபோது அவை கடுமையாகவும் சீரியசாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டது. இங்கேதான் இருக்கிறது ஆணாதிக்கம். இங்கும் நிகழ்கிறது நடைமுறையிலுள்ளது என்பதை உண்மையிலேயே என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் தற்போது அதை நான் நேரில் பார்க்கிறேன். நான் மிகவும் அசௌகரியத்தை உணர்ந்தேன். இது எனக்கு வயிற்றில் உதைப்பதைப் போன்ற ஒரு பயத்தை உணர்ந்தேன். நீலுவும் ஏப்ரலும் இது ஒரு பிரச்சனை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு துணிவாகவும் கடுமையாகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயன்றவரை முயற்சித்தார்கள். உண்மையிலே இப்படி நடந்துகொள்ளவேண்டும் என நினைக்கா மலே எப்படி இது நடக்கமுடியும்? எதையும் கூறுவதற்கும் நான் பயந்தேன்.

இரு மாதங்களுக்குப் பின், நான் ஆண்களின் அரசியல்குழு சந்திப்பில் அமைதியாக அமர்ந்திருக்கிறேன். எதைப்பற்றிக் கதைப்பது என்று தெரியாமல் இருந்தோம். குறிப்பாகச் சொன்னால் நாம் மிகவும் பயத்துடன், பதட்டத்துடன், கைநெகிழ விட்டவர்களாகவும் காணப்பட்டோம். ஆணாதிக்கம் பற்றி பயனுள்ள விவாதங்களை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை. நீலுவும் ஏப்ரலும் ஆலோசனை கூறினார்கள். நாம் ஒரு நாள் ஆணாதிக்கம் பற்றி உரையாடுவதில் கழித்தோம். பின்பு மீண்டும் ஆண்கள் நாம் அரசியல் குழுவை ஆரம்பித்து விட்டோம். 'இந்தப் பெண்கள் எதைப் பற்றிக் கதைக்கிறார்கள்' என நம்மை நாம் கேட்டுக் கொண்டோம். இந்தக் குழு திரும்பவும் கூடிய போது விவாதம் விரைவாக... பெண்கள் தம்மைப் பாதுகாக்கும் விவாதங்களிலும், தமது அனுபவங்களையும் அதன் அடிப்படையிலான புரிந்து கொள்ளல்களையும் முன்வைத்தனர். நான் கேட்டுக் கொண்டிருப்பதை நம்புவதற்கு எனக்கு மிகவும் கஸ்டமாக இருந்தது. இதனை எவ்வாறு பயனுள்ள வழியில் மாற்றலாம் என்பது பற்றி ஒரு யோசனையும் இல்லாதவனாக இருந்தேன்.

பல ஆண்களும் பெண்களும் கண்ணீருடன், ஏமாற்றத்துடன் அதிகாரமின்னையால் அழுத்தப்பட்டவர்களாகவும் வெளியேறினர். விவாதத்தின் பெரும்பகுதியை அவதானித்த எனது தாய் என்னுடன் உரையாடினார். "நீங்கள் எல்லோரும் மிகப் பெரிய விடயங்கள் பற்றி விவாதிக்கின்றீர்கள். நீங்கள் இளம் பிள்ளைகள் இவ்வாறான கனதியான விடயங்கள் பற்றி கதைப்பதையிட்டு நான் மிகவும் சந்தோசமடைகிறேன். நீங்கள் உண்மையிலேயே போராடுவதாக நம்புகிறீர்கள். இது ஒரு நாளில் நடைபெற்று முடிவுக்கு கொண்டும் வரும் விடயமல்ல. அந்த அறைக்குள் நடைபெற்ற விவாதங்களின் கனத்தையும் முக்கியத்துவத்தையும் என்னால் உணர முடிந்தது. நாங்கள் ஒருவரை ஒருவர் கண்ணீருடன் பார்த்துக் கதைத்தோம். பலரின் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது. ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டம் என்பது ஒரு விவாதத்தில் பெண்களுடன் நேருக்குநேர் பார்த்து உரையாடலில் ஈடுபடுவது போன்றதல்ல என்பது தெளிவாகத் தெரிந்தது, இது ஒரு அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார, உளவியல் ரீதியான பலம்வாய்ந்த கட்டமைப்புக்கு எதிரான போராட்டம். அத்துடன் எனது உட்புறமுள்ள மேலாதிக்கம் என்பது பனிமலையின் முனைப்பகுதி போன்றது. இது சுரண்டலாலும் அடக்குமுறையினாலும் கட்டப்பட்டது."

"உங்களுக்குத் தெரியுமா நீங்கள் எந்த வர்க்கம் என்பது?." ஒரு வெள்ளை, மத்தியதர வர்க்க, ஆண். நான் பெண்கள் பற்றிய கல்வியைப் பயின்று கொண்டும் இனம் பற்றிய கல்வியை கடந்த ஏழு வருடங்களாக படித்துக் கொண்டும் இருந்தேன். இக் கேள்வி என்னிடம் பல தடவைகள் கேட்கப்பட்டவை. கறுப்புப் பெண்களுக்கான வரலாற்று வகுப்பில் சிலர் எனக்கு உதவ முன்வந்தார்கள். நான் எங்கே படிக்க வேண்டும் என்பதைக் கண்டுபிடிக்க உதவினார்கள்.

ஏன் மக்கள் இதை என்னிடம் கேட்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன் இந்த வகுப்பு என்பது ஒரு வகுப்பறையுடன் மட்டும் சம்பந்தப்பட்ட கேள்வியல்ல. ஆனால் முதலாளித்து சமுதாய சமூகப் பிரிவில் வெள்ளையின மேலாதிக்கவாதம் தந்தை வழி, இருபாலின கட்டுப்பாடுகளை தொடர்ந்து பேணுகிறது. எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவன் நான் என்பதை தெரிந்திருந்தேன் என்பதுடன் பெண்கள் பற்றிய கல்வி மற்றும் இனம் பற்றிய கல்விக்குமான உறவு முரண்பாடுகள்கொண்டது என்பதையும் அறிந்தேன்.

என்னுடைய சமூகமளிப்பு மற்றவர் களுக்கு அசௌகரியமாக அமைந்திருக்கும் என்பதை உணர்ந்தேன். அத்துடன் பல ஆசிரியர்களும் மாணவர்களும் நான் கலந்து கொள்வதையிட்டு சந்தோசம் அடைவதாகக் கூறியிருந்தனர். இந்தப் போராட்டங்கள் எவ்வளவு சிக்கலானது என்பதுடன் இவைகளுக்கு இலகுவான பதில்களும் இல்லை என்பது தெளிவாகவே தெரிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கமியூனிட்டி கல்லூரியில் 4 வருடங்கள் சென்றபின்பு சான்பிரான்சிஸ்கோ மாகாணத்தில் 3 வருடங்கள் படித்தேன். பெரும்பாலான எனது ஆசிரியர்கள் கறுப்பினத்தவர்கள். நான் ஒரு சாதாரண தனியாக ஒதுக்கப்பட்ட சமூகத்தில் வளர்ந்தேன். சில சிறந்த முன்மாதிரிகள் மட்டுமே அங்கு காணப்பட்டன. அதிகாரம் கொண்ட மாதிரிகள், நம்பகமான ஆலோசகர்கள் அல்லது ஆசிரியர்கள் எல்லோரும் கறுப்பினத்தவர்கள்.

பகுதி 2
சரித்திர ரீதியில் நான் எந்த வர்க்கத்தில் இருக்கிறேன்

நான் கல்லூரியில் படித்தவை வாசித்தவை கறுப்பினப் பெண்ணியம், கறுப்பின விடுதலைப் போராட்டம், தந்திரத்தால் மோசமாக்கப்பட்ட வரலாறு, மதிப்புமிக்க இந்திய அமெரிக்கர்களின் காலனித்துவ வரலாறு, தொழிலாளர் அமைப்பாதலும் வரலாறும், மற்றும் அமைப்பியல் தத்துவம், புலம்பெயர்ந்த பெண்கள், அகதிப் பெண்கள் பார்வையில் இனவாதத்திற்கு எதிரான பார்வைகள் என்பன என்னில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. அவ்வாறாயினும் கறுப்பின மக்களுடன் குறிப்பாக கறுப்பினப் பெண்களுடன் பழகியமை என்னை வளர்ப்பதற்கும் எனக்கு அறிவுரைகள் வழங்குவதற்கும் வழிகாட்டியாகவும், நம்பமுடியாதளவிற்கு எனது வளர்ச்சிக்குரிய வழிகாட்டியாக உளவியல் ரீதியான படிமங்களில் என்னை வளர்த்துக் கொள்வதில் பிரதான பங்கை வகித்தன. இதனை அவ்வேளை நான் உணர்ந்து கொள்ளவில்லை.

கறுப்பின மக்கள் மற்றும் முன்னேற்றம் மிக்க கருத்துக்கள் இடது தீவிர அரசியலுடைய பெண்கள் எனது கல்வி முன்னேற்றத்திற்கு தலைமை தாங்கினர். அதிகார உறவு நிலையில் தலைகீழாக மாற்றியுள்ளது என்பது பற்றி பாடத்திட்டத்தில் குறிப்பிடப் படாவிட்டாலும் எனது கல்வியில் பிரதானமாக இருந்தது.

கறுப்பினப் பெண்கள் பெரும்பான்மையாக உள்ள அமைப்புக்களில் சூழ்நிலைகளை கற்றுக் கொள்வதும் கூட ஆழமான தாக்கத்தை கொண்டிருந்தது. ஏனெனில் முதல் தடவையாக முன்பு ஒருபோதும் இல்லாதவாறு இனம் மற்றும் பால் அடிப்படையில் நான் சிறுபான்மையினனாக இருந்தேன். திடீரென இனமும் பாலும் பல விடயங்களுக்கு ஒன்றாக அமையவில்லை. ஆனால் இவைகள் பிறருடைய அனுபவங்கள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதற்கு பிரதான மானதாகவும், உலகைப் புரிந்து கொள்ளவும் தேவைப்படுகிறது. சிலவேளைகளில் நான் ஏன் எந்நேரமும் இனத்தை பற்றியும் பால்நிலை பற்றியும் எப்போதும் பேசவேண்டும் என அமைதியாக யோசித்ததுண்டு. 'இனத்தையும் பாலையும்' பற்றி எப்போதாவது சிந்திக்காமல் இருக்க முடியுமா? என என்னுடைய தலையினுள் திடீரென்று வந்து போவதுண்டு.

காலப்போக்கில் நான் பாடசாலையில் ஒரு தந்திரோபாயத்தை வளர்த்துக் கொண்டேன். முதல் மாதம் அல்லது முதல் வகுப்பில் நான் மிகவும் அமைதியாக இருந்து விடயங்களை கவனமாகக் கேட்டுக் கொண்டு இருப்பதற்கு என்னை வற்புறுத்துகிறேன். முதல் வாரம் நான் தெளிவாக நான் வெள்ளை மேலாதிக்கத்திற்கு எதிரானவன் எனவும் தந்தைவழி சமூக அமைப்புக்கு எதிரானவன் எனவும் சிலவேளைகளில் (முதலாளித்துவத்திற்கு எதிரானவன்) இந்த அமைப்புக்களின் மூலம் நான் சலுகைகள் பெற்றவன் என்பதையும் தெரியப்படுத்துகிறேன், இதன் மூலம் மக்கள் நான் எங்கிருந்து வந்துள்ளேன் என்பதைப் புரிந்து கொள்வார்கள். இது பொதுவாக ஆச்சரியத்தை எதிர்கொண்டது. ஆர்வமிக்கதாகவும் ஆறுதலாகவும் இருந்தது. நான் உரையாடல்களில் சரித்திரங்கள் கதைகள் என்பவற்றை மிகவும் ஆர்வமாகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேட்டுக்கொண்டிருப்பதிலும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதிலும் ஆர்வம்மிக்கவனாக இருப்பதன் மூலம் ஒருவித நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முயற்சித்தேன். இந்தத் தந்திரோபாயம் பாலாதிக்கத்திற்கு எதிரான நோக்குகளில் இணைவதற்கும் என்னை ஒருவகையில் அறிமுகப்படுத்தும் வழியாகவும் அமைந்திருந்தது.

தந்திரோபாயத்தின் மறுபகுதி விவாதங்களில் கலந்து கேள்வி எழுப்புவதுடன் வெள்ளை ஆண்கள் அதிகமுள்ள வகுப்புக்களில் மேலைத்தேய குடியியல், அரசியல் விஞ்ஞானம் பற்றி எனது பிற பார்வைகளை முன்வைத்தலுமாகும். நான் இணைந்து வேலைசெய்த கறுப்பின மக்களும் பெண்களும் நான் இதுசம்பந்தமாக ஏதாவது செய்வதற்கு கடமைப்பட்டவன் என உணர்ந்திருந்தனர். அவர்கள் எங்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். ஆனால் எம்மை கோபக்காரர்கள் எனவும் உணர்ச்சி வசப்படுபவர்கள் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் என்ற பாத்திரங்களுக்குள் சிக்கவைக்கிறார்கள். நீங்கள் உங்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகளைப் பயன்படுத்தி வெள்ளையின மக்களும் ஆண்களும் நிலைமையைப் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

பேராசிரியரின் பார்வையை மாற்ற வேண்டியது அவசியமோ நோக்கமோ அல்ல. ஆனால் இனம், வர்க்கம், பால்நிலை பற்றி பிற மாணவர்களுடன் அதாவது பெரும்பான்மையான வெள்ளையின ஆண் மாணவர்களுடன் கலந்துரையாட, விமர்சனம்மிக்க பார்வைக்கு இடமளித்தலும் அவசியமாகும். இது மிகவும் பயனுள்ள அனுபவங்களைப் பெற்றுத் தரவல்லதும் கூட. ஏனெனில் அடிக்கடி நான் ஒரு கருத்தற்ற, கோபமிக்க, சுய நேர்மையான அல்லது நிச்சயமற்ற தன்மையை சந்திக்கிறேன். இதில் குறிப்பாக எதுவும் உதவி செய்வதில்லை.

ஆண்கள் மற்றும் வெள்ளையின மக்களை நோக்கி இலகுவாக எனது வெள்ளையின ஆணாக இருப்பது பற்றிய குற்றவுணர்வையும் வெட்கத்தையும் பற்றி சத்தமிடுவதாயின் இந்த வழிமுறையைப் பயன்படுத்தலாம். ஆனால் உண்மையிலேயே மக்களுடன் இணைந்து இனவாத்திற்கு எதிராகவும் பெண்ணியத்திற்காகவும் பேராடுவது நோக்கமாயின் நான் என்னை கடுமையாக விமர்சனத்துக்கு உட்படுத்துவதுடன் நான் என்னளவில் உண்மையாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

○○○

நோர்வேஜிய மொழி மூலம்:
chirs crass
தமிழில்:
தயாநிதி (நோர்வே)

நான் வளரும்போது முன்னேற்றத்திற்கான உறுதியை தன்னுள் கொண்டிருக்கும் இறந்தகாலமற்ற தனிமனிதன் என நம்பியிருந்தேன். வரலாறு பல திகதிகளையும் சம்பவங்களையும் உள்ளடக்கியிருந்தது. இது படிப்பதற்கு ஆர்வம்மிக்கது, எனது வாழ்வுடன் எந்தத் தொடர்பும் உடையதல்ல. நான் எனது விடயங்களில் ஈடுபடும் ஒரு தனி மனிதன். நான் ஒரு வெள்ளையின நடுத்தரவர்க்க, ஆணாக, வல்லமையும் நலனுமுடைய இருபாலினசேர்க்கை யாளனாகவும் அமெரிக்கப் பிரஜையாகவும் இருப்பதென்பது தனியே நன்மைகளைக் கொண்டது மட்டுமல்ல. சரித்திரத்திலும் வேரூன்றியிருக்கிறேன். நான் சமூகப் பிரிவுகளில் ஒரு பகுதி. அதாவது வெள்ளையின, ஆண், இருபாலினசேர்க்கையாளர், நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்தவன். இந்த எல்லாக் குழுக்களுக்கும் வரலாறுகள் இருக்கின்றன அவைகள் வரலாறுகளால் கட்டமைக்கப்பட்டவை. இந்தக் குழுக்களில் ஒரு பகுதியாக அங்கம் வகிப்பது என்பது சாதாரணமாகக் கருதுவது, எல்லோராலும் மதிப்பிடப்பட்ட பொதுவான வரையறை கொண்டதாகும். ஒரு சுய மனிதனாக இருப்பது பற்றிய எனது கற்பனைகள் இப்போது அடிமைக்கப்பல்கள் பற்றிய கற்பனைகள். ஆட்சிசெலுத்தும் வெள்ளையின அதிகாரமிக்க ஆண்கள் வெள்ளையின வறுமையான ஆண்களையும் வெள்ளையினப் பெண்களையும் கறுப்பின மக்களையும் உலகை அடிமையாக்குவதற்கு பயன்படுத்துகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் ஆபிரிக்க அமெரிக்கப் பெண்கள் வரலாறு வகுப்பில் அமர்ந்திருக்கிறேன். நாங்கள் இருவர் மட்டுமே வெள்ளை ஆண்கள். மிகுதி 15 பேர்களும் கறுப்பினப் பெண்கள். நான் ஒருவன் மட்டும் படிக்கும் வெள்ளை ஆண். நாங்கள் அடிமைகள் பற்றி படித்துக்கொண்டிருக்கிறோம் Ida B.Well இனது சட்டமுறைப் படாத வழக்குமன்ற நடவடிக்கைக்கு எதிரான போராட்டம் கருத்துப் பரப்புரை பற்றியும் அடிமையாக்கப்பட்ட மில்லியனுக்கு மேற்பட்ட ஆபிரிக்கப் பெண்கள் எவ்வாறு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறாள் எனவும் வெள்ளையின ஆண்களும் அடிமைகளின் சொந்தக்காரர்களும் தடுப்பு நடவடிக்கைளினாலும் சட்டத்தின் உதவியினாலும் எவ்வாறு பாதுகாக்கப்பட்டனர் என்பது பற்றியும் வெள்ளை இனப் பெண்களை கறுப்பின பாலியல் வன்முறையாளர்களிடமிருந்து பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு பல்லாயிரக்கணக்காண கறுப்பின ஆண்கள் விசாரணைகள் எதுவுமின்றி தண்டிக்கப்பட்டார்கள் எனவும் படித்தோம். நான் தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தேன். வரலாற்றை என்னால் உணரக் கூடியதாக இருந்தது. எனக்கு வயிற்றைக் குமட்டுவது போல ஒரு அசௌகரியமான உணர்வுடன் அமர்ந்திருந்தேன். எனது கண்கள் கண்ணீரால் நிரம்பியிருந்தது. யார் இந்த வெள்ளை ஆண்கள் தம்மை யார் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? தம்மை என்னவாக உணர்கிறார்கள்? அந்த அறையில் அமர்ந்திருந்த கறுப்புப் பெண்களின் முகத்தைப் பார்ப்பதற்கு நான் பயந்தேன். காதலினால் இனக்கலப்புக்கள் ஏற்பட்டுள்ளன என பேராசிரியர் கூறினார். எங்கள் மக்களில் பலர் கறுப்பு நிழல்களாக இருக்கிறோம். சந்ததி சந்தியாக ஸ்தாபனமயப் படுத்தப்பட்ட பாலியல் வன்முறையினால் பலர் கறுப்பினத்தின் நிழல்களாக இருக்கிறர்கள். நான் யார்?

Robin Morgan சகோதரத்துவம் பலம்மிக்கது என்பதன் அறிமுகத்தில் இங்கே பிற்போக்கான அரசியல் கொள்கைகளை மீண்டும் கொண்டுவர முயலும் அதிகாரக் கும்பலகள் இருந்து வருகின்ற நிலையில் இருபாலினச் சேர்க்கையாளர் வெள்ளையின ஆண்கள் எவ்வாறான புரட்சிகரமான பாத்திரத்தில் பூரணமான பங்களிப்பை வழங்கலாம் என்பது பற்றி தெளிவில்லாத கருத்தை உடையவனல்ல எனக் குறிப்பிடுகிறார்.

**பகுதி3**
**இந்தப் போராட்டம் என்னுடைய போராட்டம்**

பயத்தை எதிர்கொள்; நீங்கள் தான் ஆபத்து; நீங்கள் தப்பி ஓட முடியாது; நீங்கள் ஒழிந்து கொள்ள முடியாது; முடிவில், நீங்கள் என்ன செய்தீர்கள்; நீங்கள் செய்தவற்றால் ஏற்படுத்தியிருக்கும் நன்மையை விட சேதம் அதிகமானது என்பது உண்மையாக இருக்கலாம். உங்கள் பயத்திற்கு முகம் கொடுங்கள்; வலி கொள்ளும் உட்புறம் உண்மையானது; அதனை வெளிப்படுத்துங்கள்; சமூக மயமாக்கம் முடிவடைந்ததும் என்ன எஞ்சியிருக்கிறது? பயம் நீங்கள் உருவாக்கும் நம்பிக்கையை விட உண்மையானது. எங்கே செல்வீர்கள்? என்ன செய்வீர்கள்? நான் முன்நோக்கி நகராலாமா? எல்லாவற்றையும் திறந்து வெளி விடுங்கள். உங்களுக்குத் தெரியும் எல்லாம் உண்மை என்பது. நீங்கள் தான் அந்த நம்பிக்கை வெள்ளை ஆண்.

ஒரு காலப்பகுதியில் நான் என்னை வெறுத்தேன், குற்றவுணர்வுடனும் பயத்துடனும் நான் இருந்தேன். என் இதயத்தினுள் விடுதலைப் போராட்டத்தில் எனக்கு ஒரு பங்கு இருக்கிறது என்பதையும் உணர்ந்தேன். நாளாந்த வாழக்கையில் நான் பயனுள்ள வேலைகள் செய்யலாம் என உணர்ந்தேன் ஆனாலும் இன்னமும் நான் என்னை ஏமாற்றிக் கொள்கிறேனா, பிரச்சனையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட நான் முக்கியமானவன் என நினைத்து என்னை ஏமாற்றுகிறேனா என்ற அந்தக் கேள்வி என்னைத் துரத்துகிறது. திடமாக இருக்க வேண்டும். Robin Morgan இனின் பங்கு போராடுவதற்கு பயனுடையது, ஆனால் தொடர்ந்து பின்பற்றுவதற்குரியதல்ல. நான் வளரும்போது நான் எல்லாவற்றைக்கும் தகுதியுடையவன் என நம்பியிருந்தேன். நான் எங்கும் போகலாம் எதுவும் செய்யலாம். நான் எங்கே போனாலும் எனது தேவையும் அவசிய மும் இருந்தது. தந்தை வழியும் இருபாலினச் சேர்க்கைத் தன்மையும் சூட்சுமமான முனைப் பான வழிகளை எனக்குக் கற்றுத் தந்தது. நான் பெண்களின் உடல்கள் மீது தனியுரிமை கொண்டாடலாம்; உரிமை எடுத்துக்கொள்ள லாம்; பிறரைப் பற்றிக் கருத்தில் கொள்ளாமல் எனது கருத்துக்களையும் எண்ணங்களையும் எங்கே வேண்டுமானாலும் முன்வைக்கலாம்.

சமூகத்திலுள்ள பெரும்பாலான மக்களுக்கு பேசுவதற்கு உரிமை மறுக்கப்பட்டும், உங்க ளுக்குள் வைத்திருங்கள் என பணிக்கப்பட்டும், நீங்கள் உண்மையிலே யார் என்பதை மறைத் துக் கொள்ளும்படியும், தடையாக இருக்காதீர் கள் எனவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு வேறுபட்ட சமூகமாயமாக்கல் என்றே கூறவேண்டும். எமது தேவை எப்போதும் இருக்கிறது என எண்ணாமல் கற்பனை செய்யாமல் இருப்பது ஆரோக்கியமானது என நினைக்கிறேன். அதிகாரத்தையும் பதவியையும் பகிர்ந்து கொள்ள கற்றுக் கொள்ளல் மற்றும் பிறருடன் இணைந்து வேலை செய்யும் போது உண்மையில் நீங்கள் என்ன பாத்திரத்தை வகிக்கலாம் எனவும் எதை கட்டாயம் செய்ய வேண்டும் எனவும் உணர்ந்து கொள்ளலாம். இதில் சலுகைபெற்ற ஆண்பாலர்கள் இவ்விடயங்களை ஒருவருடன் உரையாடி ஒருவருக்கொருவர் ஆதரவாக இந்த காலமாற்ற திட்டத்தில் பங்களிப்புகளை வழங்காமல் இருப்பது ஆராக்கியமற்றதாகும்.

Laura Close (பொட்லாந்திலிருந்த மாணவர் ஒற்றுமைக்கான அமைப்பின் ஏற்பாட்டாளர்) கீழே குறிப்பிட்டுள்ளவற்றை தனது 'அமைப்புக்களில் ஆண்கள்' எனும் கட்டுரையில் ஆராய்ந்துள்ளார். அவர் எழுது கையில், 'இளம் வாலிபர்கள் விழிப்புணர்வுற்று செயற்பாடுகளில் கலந்து கொள்ள முடிவு செய்கின்றனர் அங்கே அவர்கள் எதிர்ப்பை பெரிதும் சந்திக்கின்றனர். தமக்குக் கிடைத்த ஆண் எனும் சலுகை விரோதங்களை ஏற்படுத்துவதைப் பற்றி விவாதிக்கின்றனர். உண்மையிலே அவர்களின் மனங்களிலுள்ள கருத்தாக்கத்திலிருந்து விடுபட உதவி வழங்காமல் விடுகின்றனர். எல்லா ஆண்களும் இணைந்து எமது இளைய தலைமுறையினரை யும் புதிய இளைஞர்களையும் புதிய ஆண்களையும் கோப்பிக் கடைக்குக் கூட்டிச் சென்று அமைப்பில் ஆணாக இருப்பது பற்றிய சொந்த அனுபவங்களை விபரிக்கும்படியும் நீங்கள் என்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பது பற்றியும் கதைத்தால் எப்படியிருக்கும் யோசித்து பாருங்கள். ஒரு ஆண் இன்னொரு ஆணை உற்சாகப்படுத்தி நண்பர்களாகிக் கொண்டிருக்கும் நிலை எப்படி இருக்கும் என்பதை கருத்தில் எடுத்துப்பாருங்கள்' என்கின்றார். இவர் ஆணாதிக்கத்திற்கு எதிரான வேலைகளில் ஈடுபடும் ஆண்கள் ஏனைய ஆண்களுக்கு நல்ல நம்பகமான ஆலோசகராக இருப்பது பற்றிய சவால் ஒன்றை விடுத்துள்ளார்.

அவர் கூறியது சரி என நான் நினைக்கிறேன். ஆனால் இதனைச் செய்யலாம் எனும் யோசனை என்னை உண்மையிலேயே பதட்ட மடையச் செய்கிறது. எனக்கு நிறைய ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள் ஆனால் அரசியல் ரீதியான பொறுப்புக்கள் தொடர்பாக உறவு களை வேறு ஆண்களுடன் ஏற்படுத்துவது தொடர்பாகவும் எமது ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டம் பற்றியும் மனம் திறந்து கதைப்பது என்னை மிகவும் பயப்படுத்துகிறது. ஏன் பயப்படுத்துகின்றது என்றால் மேலாதிக் கத்தை பகிரங்கமாகக் கண்டனம் செய்வதை சமாளிக்க, எதிர்கொள்ள முடியும். அத்துடன் காலத்திற்குக் காலம் பிற ஆண்களை இவர்கள் இப்படி என கூறவும் முடியும். ஆனால் என்னுடைய ஆணாதிக்கம் பற்றி நேர்மையாக பார்ப்பதும், அரசியல் ஆய்வுகளுடன் சம்பந்தப் படுத்திப் பார்ப்பதும், எனது சொந்த உணர்ச்சி பூர்வமான நிலைமையை நடைமுறைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்துவதும், உளரீதியான போக்கும், செய்கை ஒழுங்கும் மிகவும் பலவீனமானதாக இருக் கிறதா?

இடைவேளை எதற்கு பலவீனமாக இருப்பது? பெண்களின் விடயங்கள் பற்றிய வகுப்புக்களில் நான் கூறியவற்றை நினைவு கூர்கிறேன். என்னை நான் மேலாதிக்கத்திற்கு எதிரான ஒருவனாக வெள்ளை ஆதிக்கத்திற்கு எதிராக சிலவேளை முதலாளித்துத்திற்கும் எதிரான ஒருவராக அடையாளம் காண்கிறேன் எனக் கூறியிருந்தேன். பெண்ணியம் பற்றி உணர்வின் அளவு, என்னுடைய கல்லூரியில் இருந்த சலுகைபெற்ற பாலாகிய ஆண்களை நோக்கிய ஓர் அரசியல் நடவடிக்கையாக எடுத்துச் செல்லும் அளவிற்கு போதியதாக இருக்க வில்லை. பெண்ணியம் சம்பந்தமான ஒரு புத்தகத்தை வாசித்துவிட்டு 'ஆணாதிக்கம் நிலவுவதை நான் உணர்கிறேன்; அடையாளம் காண்கிறேன்' எனக் குறிப்பிடுவது ஒருவகையில் முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. அதேவேளை உணர்வு பூர்வமாகயும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் தன்மை செயபாட்டாளர்கள் வட்டங் களில் அதிகளவு இருக்கிறது, ஆனாலும் இது மிகவும் உயர்ந்தாக இருப்பதாக சொல்ல முடியாது.

எனது அரசியல் வாழ்க்கையில் இரு பெரிய போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே காரணம் என்ன என்பதைக் கண்டறிய விரும்புவதுடன், அந்தப் பொறுப்பினை என்னால் நெருங்கமுடியாமல் போய்விடலாம் என்னும் ஒரு ஆழ்ந்த பயத்தை உணர்கிறேன். வகுப்பறை களில் தந்தைவழி அமைப்பு முறைக்கு எதிரான பிரகடனங்களை ஏற்படுத்துவது, அரசியல் சந்திப்புக்கள், எழுதுதல் மற்றும் எனது தனிப்பட்ட உறவுகளில் நண்பர்களுடன் குடும்பத்துடன் துணையுடன் நடைமுறைப் படுத்துவது மிகவும் இலகுவானது. இது குறிப்பாக கடினமாக இருப்பது எப்போதெனில், என்னைப் போன்ற அரசியல் ரீதியாகச் செயற்படும் ஆண்கள் ஒருவருடன் ஒருவர் இதைப்பற்றிக் கதைப்பதற்கு மிகக் குறுகிய நேரத்தைச் செலவிடுவதாகும்.

நான் எதனை ஏற்றுக்கொள்ள பயப்பிடு கிறேன்? நான் நாள்தோறும் பெண்களின் குரல்களை அடையாளம் காணப் போராடு கிறேன் என்பதையா? எனக்குத் தெரியும் எனக்கே இது ஆச்சரியமானது. என்னுடைய உடனடியான பிரதிபலிப்பு ஆண்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் என்று எனக்குத் தெரியும் செயற்பாட்டாளர் கள் குழுமியிருக்கும் அறைகளினுள் செல்லும் போது நான் உடனடியாக அறையை ஒரு மதிப்பீடு செய்துவிடுவேன் கூட்டத்தில் அதிகாரத் தின் அடிப்படையில் கூடியதிலிருந்து குறைந் தது வரை ஒரு படத்தைப் போட்டு விடுவேன். (எவ்வளவு காலம் செயற்பாட்டாளராக வேலை செய்கின்றனர், எந்தக் குழுவில் அங்கம் வகிக் கிறார், என்ன எழுதியுள்ளார், எங்கே பிரசுரிக்கப் பட்டது, இவர்களுடைய நண்பர்கள் யார்... என) நான் என்னை அவர்களுக்கு எதிரான ஒரு நிலையில் நிறுத்துவதுடன் ஆண்களுடன் போட்டிமிக்கதாகவும் உணர்கிறேன்.

நான் அதிகார அடிப்படையில் அமைக்கப் பட்ட அதே வரையறைகளை வைத்தே நானும் பெண்களை அடையாளம் காண்கிறேன். ஆனால் என்னுடைய இருபாற்சேர்க்கையின் பாலியல் விருப்புத்தன்மைகள் தோன்றுகின்றன. ஆரோக்கியமான பாலியல் ஆர்வம், விருப்பம் எது என்பதும், இது எவ்வாறு என்னைச் சூழவுள்ள பெண்களை திட்டமிட்டு பாற்பண்பு உடைய பெண்களாகப் பார்க்கின்ற தன்மை யிலிருந்து விடுபட்டுக் கொள்வதற்கு நான் பயிற்சி எடுப்பதும் உயிர்வாழ்வதுடன் எவ்வாறு தொடர்புடையன? இது நாளுக்கு நாள் உருப்பெருப்பிக்கப்பட்டு நடைமுறையில் சமூகம் பெண்களை ஒரு குரலிழந்த உடல்களாகவும் இருபாலினச் சேர்க்கை ஆண்களின் விருப்பத் திற்கு சேவை செய்யவதாகவும் வெளிப்படுத்து கிறது. இது எங்களுக்குத் தெரியும். ஆனால் நான் உறவாடும் தொடர்பு வைத்திருக்கும் எனது பெண் சகபாடிகள் மற்றும் நான் இணைந்து வேலை செய்வோருக்கு என்ன அர்த்தத்தைத் தரும்? நான் உறவு கொள்வதை, அன்பைப் பெற விரும்புவதை, அன்பை வெளிப்படுத்துவதை, நேசத்தை பொதுவான கருத்தில் சொல்ல முற்படும் போது எவ்வாறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுத்துப் பார்க்கப்படும்? நான் எனது துணை யிடம் சென்று நான் உங்களை நேசிக்கிறேன் என சொல்லாமல் இருப்பதைப் பற்றி நான் சொல்லவில்லை. நான் சாதாரண நிலைமையில் எமக்கிடையே உண்மையான பெறுமதி மிக்க சமமான தன்மை வேண்டும் என்பதைப் பற்றியே கூறுகிறேன்.

உண்மையில் எனது துணைவி மனரீதியாக வும் பொருளாதார ரீதியாகவும் நான் அவருக்கு வழங்கிய ஆதரவைவிட அதிகமாக எனக்கு வழங்கியுள்ளார். ஒரு சலுகை பெற்ற ஆணிடம் அவருடைய பாற்தன்மை பற்றி ஒருபோதும் பிரித்து எல்லைப்படுத்தி பார்க்கவில்லை என்பது பற்றிக் கூறுகிறேன்.

அமைப்பு உருவாக்கத்தில் பங்கு கொள்ளும் பெண்கள், தலைவர்கள், எதிர்கால இலக்கு உடையவர்கள், என்னுடைய நண்பர்கள், தோழர்களின் உரையாடலைக் கேட்கும் போது பால் பற்றி பிரித்துப் பார்ப்பதை இனங் காண்கிறேன். நான் அனைத்து நெருக்கடிகள், ஆரோக்கியமான பாலீடுபாடு மற்றும் பால் வேறுபாடு கொண்ட அரசியல் இவைகள் பற்றி நான் பேசவில்லை. இருபாற்சேர்க்கை ஆண் களின் ஆர்வத்தில் பெண்களின் தலைமைத் துவம் மிகவும் எல்லைப்படுத்தி வகுக்கப்பட்ட தாகவும், அதிகாரம் மற்றும் ஏகபோகஉரிமை பற்றியும் குறிப்பிடுகிறேன். சாதாரண நிலையில் பாதுகாக்கின்ற ஒருவனாக இருக்காவிட்டால் நல்லது என விரும்புகிறேன். ஆனால் நான் செய்கிறேன்.

எனது துணைவிக்கும் எனக்கும் இடையில் எவ்வாறு அதிகாரம் செயற்படுகிறது எனும் சம்பாசணையின் போது நான் எரிச்சலுற்று சம்பாசணைகளை நிறுத்துகிறேன். இந்த உலகம் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது எனவும் எமது செயற்பாட்டில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைப் பற்றியும் எனது பக்கப் பாதுகாப்பு வாதங்களை முன்வைக்கிறேன். எனக்குத் தெரியும் சில தடவைகள் நான், 'சரி நான் யோசிக்கும் போது இதுபற்றி மேலும் சிந்திக் கிறேன், என்னை தனியே விடுங்கள்' எனக் கூறியுள்ளேன்.

இது ஒரு குற்றத்தை உணர்ந்து ஒப்புக் கொடுத்த பின்பு மன்னிக்கப்படுவது போன்ற தல்ல. நான் எவ்வாறு இந்த ஆழமான தந்தைவழி சமூக அமைப்பினாலும் அடக்கு முறை வடிவங்களினாலும் வடிவமைக்கப் பட்டுள்ளேன் என்பதைப் புரிந்து கொள்ள நடைபெறும் தொடர்ச்சியான போராட்டம் இது. இச் சமூக அமைப்பு எனக்கு பல நெருக்கடி களை ஏற்படுத்துகிறது. நான் ஆரோக்கியமான நேச உறவுகளைக் கையாள்வதற்குரிய தன்மைகளைக் கொண்டிருக்கவில்லையோ என்ற பயம் எனக்கிருக்கிறது. நான் என்னுடன் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொண்டு, அதுபற்றி பிறருடன் மனம் திறந்து பேசுவேனா என்ற பயமும் எனக்கிருக்கிறது. அமைப்பு வேலைகளில் ஈடுபடும் போது உண்மையிலேயே பிறருடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள அமைப்பை உருவாக்க முடியுமா எனவும் பயப்பிடுகிறேன்.

தந்தைவழி சமூகஅடையாளங்கள் ஒவ்வொரு தனிமனிதனிலும் என்னிலும் ஒன்றில் ஒன்று தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நான் அதைக் கண்டுகொள்ள என்னை கட்டாயப்படுத்துகிறேன். உண்மையிலேயே அதைக் கூடிய கவனத்துடன் அதுபற்றி யோசிப்பதற்கான நேரத்தையும் எடுக்கிறேன். நான் கவலையும் ஆத்திரமும் நிரம்பியவனாக இருக்கிறேன். Bell hooks தனது All about love எனும் புத்தகத்தில் ஆதிக்கம் செலுத்தும் விருப்பம் இருக்கும் இடத்தில் காதல் சாத்தியமில்லை எனக் குறிப்பிடுகிறார். நான் உண்மையிலேயே நேசிக்கமுடியுமா? நான் நம்புகிறேன். சலுகைபெற்ற ஆண்பாலர்கள் அரசியல் நடைமுறைகளின் போது தந்தைவழி சமூக அமைப்புக்கு எதிராக முன்னேற வேண்டும் என விரும்புகிறேன்.

அடக்குமுறைக்கு எதிராக நாம் என்லோரும் போராடுகிறோம் என நான் நம்புகிறேன். எமது பங்களிப்புக்களை நடைமுறையில் எவ்வாறு செய்யலாமோ அவற்றைச் செய்வோம். நாம் உண்மையாக எமது மனிதத் தன்மையை வெளிப்படுத்துவோம். தந்தைவழி சமூக அமைப் பில் பல சந்தர்ப்பங்கள், அனுபவங்கள் எல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலினங்களுக்கும் சவாலாக அமைந்திருக் கின்றன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இது நான் போராடலாம் என்பதைக் காட்டுகிறது. இது எங்கள் வாழ்வு முழுவதற்குமான வேலை என நான் நம்புகிறேன். அத்துடன் இதன் மையம் இதில் எமது வாழ்விற்கான போராட்டம். இந்த பேராட்டத்தின் மூலம் நாம் இந்த அமைப்பின் அடக்குமுறைக்கு முகம் கொடுப் பதன் மூலம் வாழ்க்கையின் எமது காதல் அழகு படைப்பாற்றல் பொறுமை கௌரவம் மற்றும் சக்தி வளர்வதை எம்மால் உணர முடியும். எம்மால் இதைச் செய்யமுடியும்.

கடுமையான உணர்ச்சிகள் சம்பந்தப்பட்ட மட்டும் அகநிலை உணர்வுக் குரிய விடயங்கள் பற்றி ஆழமாகப் பார்க்கும் வேளை அங்கு ஆணாதிக்கத் திற்கு சவாலாக செய்ய வேண்டிய பல படிகளை அவதானிக்கலாம்.

பலஸ்தீனிய விடுதலை அமைப்பில் பணிபுரியும் ஒரு அமைப்பாளர் எனக்கு எழுதுகையில், 'இந்தச் சலுகை பெற்ற ஆண்கள் குறிப்பாக சந்திப்புக்களில் குறிப்பெடுத்தல், தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தல், சந்திப்பு நடைபெறுவதற்கான இடங்களை ஒழுங்கு செய்தல், பிள்ளைகளை கவனித்துக்கொள்ளல், பிரதி எடுத்துக் கொடுத்தல் மற்றும் கவர்ச்சி குறைந்த வேலைகளைச் செய்தல் போன்றவற்றில் ஈடுபடலாம். குழுவில் ஆண்கள் எப்போதும் ஆதிக்கம் செலுத்தும் பாத்திரங் களை பெண்கள் -பால் ரீதியாக அடக்கப்பட்டவர்கள்- வகிப்பதற்கு ஊக்குவித்தல்.உதாரணமாக தந்திரோபாயம், நிகழ்வுகளை உருவாக்குதல், ஊடகத்தொடர்பு என்பனவற்றை குறிப்பிட்ட பெண்களை செய்ய விரும்புகிறார்களா எனக் கேளுங்கள். அத்துடன் நீங்கள் இதைச் செய்வதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி விளக்குங்கள். அவர்கள் கூறுவதைக் கேட்பதில் கவனம் செலுத்துங்கள். அத்துடன் அதிகாரம் சம்பந்தமான இடங்களில் நீங்கள் தடுமாறுகின்றவராக இருக்கின்றீர்களா என்பதையும் பார்த்துக் கொள்ளுங்கள்' என்கிறார்.

பிற்சேர்க்கை, இந்தப் பேராட்டத்தை நாம் சாத்தியமாக்க வேண்டும்

பல்லாயிரக்கணக்கான பால்ரீதியாக ஒடுக்கப் பட்ட பெண்களில் இவர் ஒருவர். இவர் தெளிவாகவும், குறிப்பிட்ட விடுதலைக்காகவும் பால் மேலாதிக்கத்திற்கு எதிராகவும், குறிப்பான கருப்பொருள்கள் பற்றி படிப்படியாக எவ்வாறு பால்ரீதியாக சலுகைபெற்றவர்கள் போராடலாம் என்பது பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளார். செய்யப்பட வேண்டிய வேலைகள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. எனக்கு மிகப்பெரிய விடயமாக இருந்தது என்ன வென்றால், இந்த வேலையை நான் உண்மையிலேயே செய்வதற்கும் நடைமுறை யில் முன்னுரிமை வழங்கி அதனைத் தொடர்ந்து செய்வதற்கும் என்ன தேவைப் படுகிறது? மேற்குறிப்பிட்டவற்றை ஆண்களுடன் தொடர்ந்து விவாதித்தலுடன் இதனூடாகத் தொடர்ந்து செயற்படுவதற்கு நாம் ஒருவருக்கு ஒருவர் பதிலளிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இந்த வேலையைச் செய்யும் போது மிகவும் கனதியான உணர்ச்சிகள் சம்பந்தமான விடயங்களை சந்திக்கவேண்டி ஏற்படும். அத்துடன் இதில் நாம் ஒருவரிடமிருந்து தொலைந்து போகாமல் கவனித்துக் கொள்வதுடன் ஒருவருக்கொருவர் உதவி குறிப்பான திடமான வழிகளை முன்னெடுக்க வேண்டும். பெண்களின் தலைமைத்துவத் திற்கு எங்களுடைய வேலை எவ்வாறு ஆதரவாக அமைகிறது என எம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். அதிகாரத்தைப் பங்கிடுவது தொடர்பாக நான் அணிதிரட்டும் வேலைகளில் ஈடுபடும் போது எவ்வாறு நடந்து கொள்கிறேன். என்னுடைய வேலைகள் பற்றி பால்ரீதியாக அடக்கப்பட்டவர்களின் விமர்சனங்களைக் கேட்பதற்கு நான் தயாராக இருக்கிறேனா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொரு வினாவும் அடுத்தபடியை உருவாக்கு வதற்கும் சாத்தியமாக்குவதற்கும் உதவுகிறது. சலுகைகளை பரீட்சிப்பதும் அதற்கு சவாலாக இருப்பதும் எங்களுடைய வேலையில் ஒரு தேவையான பண்பாகும். ஆனால் இது போதுமானதல்ல. ஆண்கள் பிற ஆண்களுடன் இணைந்து பால் மேலாதிக்கத்திற்கு எதிரான பணிகளில் ஈடுபடுவது என்பது பலவற்றுள் ஒன்று. பெண் தலைமைகள், பல்லினத்தவர்கள், நிறவாதத்திற்கு எதிராகப் போராடுபவர்கள், பெண்ணியவாதிகள் மற்றும் போராளிகள் ஆகியோருடன் உழைக்கும் வர்க்கம் சார்ந்து முதலாளித்துவத்திற்கு எதிரான அமைப்புக்கள் ஆகியவற்றுடன் இணைந்து கூட்டாக விடுதலைக்காக போராடுவதற்கு பல தந்திரோபாயங்கள் தேவைப்படுகிறது. பால் ரீதியான மேலாதிக்கம் அமைப்பு உருவாக்கும் பணிகளில் தீங்கு விளைவிக்கும் என்பது எமக்கு தெரியும்.

கேள்வி என்னவெனில் அமைப்பை உருவாக்கும் பணியில் நாம் எவ்வாறான வேலைகளைச் செய்ய வேண்டும் என்பதும் இப் பரந்த செயற்பாட்டுப் படிமுறையில் நாம் ஒருவருடன் ஒருவர் அன்பாக இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதுமாகும்.

## புது வரவுகள்

### ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் இரு நூல்கள்

**தாயும் சேயும்**

**உங்கள் உடல் உளம் பாலியல் நலம் பற்றி.**

வெளியீடு :
மீரா பதிப்பகம்
கொழும்பு



மருத்துவ அறிவியல் பக்கங்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரதி ஓவியம்

(மூல ஓவியமொன்றைத் தழுவி வரையப்பட்டது)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



விடியலை
நேரம் உணர்த்தினாலும்
பனிதூறும் காலத்தில்
சூரியன் வருவதில்லை.
வழமையான
உடல் நிறையை விட
ஆறு ஏழு கிலோவால்
என் நிறை உடை வடிவில்
என்னைத் துரத்தும்.
தொட்டிலுக்குள்
பார்த்தால்
எட்டு மாத செல்ல மகள்
கையால் முகம் போர்த்து
பஞ்சுக்குஞ்சாய்
துயிலும் அழகு.
வெளியில் இறங்கும் போது
நற நற என
என் காலடியில் உடையும்
பனிக்கண்ணாடித் துண்டங்கள் போல்
என் மனசு.
கால்கள் நடுவீதியில் நடக்கும்போது
பூப்பூவாய் தேங்காய்ப்பூ
பனித்தூவலைகள்.
தொட்டுப் பார்த்தால்
வாய் நீர் வடித்துக்கொண்டே
தள்ளுவண்டிக்குள் உறங்கும்
குழந்தையின் கன்னத்தின் மென்மை.
சிரித்து நின்ற
மரங்கள் எல்லாம்
என் உணர்வைப்போல்
மரத்துத்தான் கிடக்கிறது
விழியை மறைக்கும்
உப்பு நீரைப்போல்
மரங்களின்கிளை இலைகளை
மறைக்கும் பனித்துளிகள்
யாரும் ஆறுதல் கூறிவிட்டால்
உடைந்து விழுந்து
கன்னக்கதுப்பை
ஈரமாக்கத் துடிக்கும்
உவர்ப்பு நீரைப்போல்
மரக்கிளைகளிலும்
கட்டிடக் கூரைகளிலும்
தொங்கும் பனிக்கண்டாடிக்
கூர்முனைகள்.
ஊசியாய்க் குளிர் என்னைத் தாக்க
போரில் கண்முன்னே
தாயை இழந்த குழந்தையின்
படபடப்புப்போல்
என் உடல் மெல்ல நடுங்கும்.

மெல்ல அணைத்து
ஓசையின்றி முத்தமிட்டு
காப்பகக்காரியிடம்
குழந்தையைக் கொடுத்துவிட்டு
உணவு விடுதியில்
வேலையில் மூழ்கிறபோது
நெருப்பு
கொதி எண்ணெய் எல்லாமே
என் உடல்மேல் பட்ட வேதனை.
இறைச்சி மீன் வெட்டும்
கூரிய கத்தி கொண்டு
என் உடலை யாரோ
அறுப்பது போன்ற உணர்வு
பீறும் இரத்தமாய்
என் உணர்வுகள் எல்லாம்
என்னைக் கொன்று தின்னும்.
சொல்லமுடியாத துயரம்
என்னைச் சூழும்.
ஓ!! என் செல்ல மகள்
என்னைத் தேடுவாளோ?
உடலில் உள்ள உரோமம்
எல்லாம் சேர்ந்து
ஒருவித சிலிர்ப்பைத் தந்து
யாரும் ஆறதல் கூற முன்னமே
உடைந்து நொறுங்கும் மனசு.

(1-11-2002)

நளாயினி தாமரைச்செல்வன்
(சுவிஸ்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உமா (ஜேர்மனி)




மரியானவை நான் சந்தித்து... பேசி... மரியானாவை சுவாசித்து... படித்து... புரிந்து கொண்டு... ரசித்து... வியந்து... பிரிந்து ஒன்பது மாதங்களாகிவிட்டன.

அந்த வெள்ளிமயிர்க் குவியலுக்குள் பிரகாசித்த அந்த உற்சாக பெட்டகத்தின் நினைவுகள் என் மனதில் இன்னும் உயிர்ப்புடன் எங்கும் வியாபித்து...

குடலுக்குள் குழாய் விட்டு பரிசோதனை செய்வதற்கு முன் குடலைச் சுத்திகரிக்க முன்னையநாள் தரப்பட்ட அருவருக்கத்தக்க மருந்து ஏற்படுத்திய பக்கவிளைவுகளாலும் வயிற்றுவலியின் தாங்காமையினாலும் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்தபடி, அம்பையின் காட்டில் ஒரு மானுடன் மீண்டுமொருமுறை லயிக்க முயற்சித்த போது, நான் தங்கியிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. ஒரு தாதியை தாங்கியபடி ஒரு வயோதிப பெண்ணொருத்தி நின்றுகொண்டிருந்தார். என்னைப் பார்த்து 'குட்டன் ராக்' என ஜேர்மன் மொழியில் உரத்த கரகரத்தக் குரலில் வணக்கம் செலுத்தி, தன்னை பிரவ் கொப்பல் (திருமதி கொப்பல்) என அறிமுகம் செய்து கொண்டார்.

ஐயோ! இரண்டு நாள் தனியறையிலிருந்த சுதந்திரம் பறிபோகப்போகின்றதென்ற சுயநலத்தில் எழுந்த கவலையுடனும், தொடர்ந்து வாசிக்க முடியாதுபோன எரிச்சலுடனும் நானும் வணக்கம் கூறி என்னை அறிமுகம் செய்து கொண்டேன்.

நான்தான் இனி உன்னுடன் இருக்கப்போகிறேன். நீ தனியாக இருக்க விரும்புகிறாயா என எனது மனதைப் படித்தவர் போல் சடுக்கெனக் கேட்டார். இல்லையில்லையென பொய்யிற்கு மறுத்தேன்.

எனக்கு எத்தனை வயது தெரியுமா? என ஒரு குழந்தையின் துடிதுடிப்புடன் கேட்டார். எண்பதுகளுக்கு மேல் இருக்கவேண்டுமென அனுமானித்து எண்பத்தைந்து என்று சொன்னேன்.

எனக்கு சென்ற யூலை மாதத்துடன் தொண்ணூற்றைந்து முடிந்துவிட்டது தெரியுமா என பெருமையுடன் சொன்னார். நான் ஆச்சரியத்துடன் அந்த தொண்ணூற்றைந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வயதுச்சிறுமியை கண்வெட்டாது பார்த்தேன். அறுபத்தெட்டு வயதிலேயே முதுமையின் கோலங்கொண்டு மரணமடைந்த என் அன்பான அம்மம்மா என் கண்முன் வந்து போனார்.

மரியானா மிகவும் மெலிந்த உடல்வாகு கொண்டவர். மற்றைய ஜேர்மனிய பெண்களிற்கு மாறாக மரியானா மிகவும் குள்ளமாகக் காணப்பட்டார். தான் உயரமாகவிருந்ததாகவும் பின்பு சுருங்கிப்போய்விட்டதாகவும் என்னிடம் தெரிவித்தார்.

அவரது குழிவிழுந்த சிறிய கண்களிற்கு மேலாக தடித்த கறுத்த புருவங்கள். மெலிந்த வெள்ளி மயிர்களை ஒன்றாக இணைத்து கட்டியிருந்தார். முகத்தில் மங்கலாக மீசை மயிர்கள். கை நீட்டு பழுப்புநிற மேலங்கியும், தடித்த துணியிலான மண் நிறத்திலும் பழுப்பு நிறத்திலும் கட்டம் போட்ட பிளிட் செய்யப்பட்ட பழங்காலத்து கட்டைப் பாவாடை. அதற்கு பொருந்தும் வகையில் மெல்லிய மண்ணிறத்தில் கார்டிகன். அவருக்கு பக்கத்தில் பழங்காலத்துச் சூட்கேஸ். அதில் அவரது வாழ்வின் அடையா ளங்கள் யாவும் அடங்கியிருந்தது.

கதிரையில் வந்தமர்ந்தவுடனேயே தனது கட்டிலில் வைக்கப்பட்டிருப்பது தனக்கான கோப்பு அல்ல என்று கண்டுபிடித்து, வைத்திய ரிடம் முறையிட்டு தனக்கான சரியான கோப்பை கொண்டுவரும்படி பணித்தார்.

அந்த அறையில் எங்குகெங்கு விளக்கு களும், அதற்கான மின்அழுத்திகளும் உள்ளன என்று தாதியிடம் கேட்டுத் தெரிந்துகொண்டார். தனக்கு இரவுகளில் நித்திரை வருவதில்லை யென்றும் அதனால் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாது நடமாடுவதற்காக முதலிலேயே எல்லாவற்றையும் தெரிந்துகொள்வதாக என்னி டம் கூறினார்.

தொண்ணூற்றைந்து வயதிலும் தனித்து வாழ்ந்து வரும் மரியானா கொப்பல் ஒரு குட்டிக் கதைக் களஞ்சியம்.

அந்த தொண்ணூற்றைந்து வயது உருவத் தில் ஒரு குழந்தையுள்ளமும் ஒரு மனிதாபி மானத்திற்காக உருகும் ஒரு உள்ளமும் ஒருங்கே குடிகொண்டிருந்தது.

கன்னத்தில் கைவைத்தபடி ரஷ்யாவில் கரிச்சுரங்கத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை பதின்மூன்றாக அதிகரித்துள்ளது எனக் கவலைப்பட்டார்.

மலத்துடன் குருதி செல்வதால் குடலை பரிசோதிப்பதற்காக அனுமதிக்கப்பட்டிருந்ததால் அன்று அவர் மதியவுணவு உட்கொள்ளலாமா என்று தீர்மானிக்கப்படும்வரை, அவருக்கு உணவு வழங்கப்படவில்லை. அவருக்கான புடிங் மாத்திரம் அவரது மேசையில் வைக்கப் பட்டு, வைத்தியர் வரும்வரை உண்ணக் கூடாதெனச் சொல்லப்பட்டிருந்தது.

எனக்கு எப்போது உணவு தரப்போகிறீர்கள்? எனக்கு பசிக்கிறது எனத் தாதிமாருடன் ஒரு குழந்தையைப் போல சண்டை பிடித்தார். இந்த புடிங் வேற கண்ணுக்கு முன்னால முழித்துக் கொண்டு பசியை உண்டு பண்ணுது என்று கூறியவாறு புடிங்கை ஒரு பத்திரிகைத் துண்டால் மூடிவிட்டு வந்தார்.

நீங்கள் சாப்பாடு தராவிட்டால் நான் ரெஸ்டெரண்டிற்குச் சென்று சாப்பிட்டு வருவேன் எனப் பொய்யிற்கு பயமுறுத்தினார்.

Alles geht vorüber
Alles geht vorbei
Im September kommt wieder Ei

*கடந்து சென்றவையாகவும்*
*நிறைவுபெற்றதாகவும்*
*அனைத்தும் இருக்கும் செப்டெம்பரில்*
*மீண்டும் முட்டை கிடைக்கும்*

இப் பாடலை தனது தந்தையார் யுத்த காலத்தில் பாடி தம்மை தேற்றுவதாகச் சொல்லி இப் பாடலை அடிக்கடி பாடினார்.

தான் வாழ்நாள் பூராகவும் கறுத்த மயிருக்காக ஆசைப்பட்டதாகவும், திருமண மான புதிதில் கணவனுடன் சிகையலங்காரக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடைக்குச் சென்று கறுத்த செயற்கை மயிரை வாங்க நினைத்ததாகவும், அது தனது வெளிறிய தோல்நிறத்திற்கு பொருத்தமற்றதென அச் சிகையலங்காரக் கடையில் பணிபுரிந்த பெண் கூறியதால் தான் அந்த எண்ணத்தை கைவிட்டதாகவும் கூறினார்.

கொஞ்சம் பொறு! நான் இங்கே தான் வைத்தேன் காணவில்லை என ஆஸ்பத்திரிக் கட்டிலிற்கு அருகாமையிலுள்ள மேசை லாச்சி, அலுமாரி, தனது சூட்கேஸ் எங்கும் ஒரு மூன்று வயதுக் குழந்தையைப் போல் குதித்து குதித்துத் தேடினாள். இங்கே இருக்கிறதென மிகவும் குதூகலத்துடன் ஒரு சிறிய பெட்டியைத் திறந்து காட்டினார். அதற்குள் சிகையலங்காரம் செய்யக்கூடிய சில பொருட்கள் காணப்பட்டன. கம்பியினால் செய்யப்பட்ட வளையம் ஒன்றைக்காட்டி, இதை உபயோகித்துத் தான் நான் கொண்டை போடுவேன் என எனக்கு செய்துகாட்ட முயற்சித்து, தனது மயிர் தற்போது வெகுவாக உதிர்ந்து போனதால் தன்னால் கொண்டை போட முடியவில்லை என மிகவும் கவலைப்பட்டார்.

மரியானா எப்போதும் பேசிக்கொண்டேயிருந்தார். அவற்றில் எனக்கு அறிமுகமற்ற மனிதர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஜேர்மனிய சமூகம், தேவாலயங்கள், உலக அரசியல், உலக அரசியலில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அதிகாரப்போக்கு மீதான விமர்சனங்களை தனது பேச்சுகளுக்கிடையில் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஜேர்மனியில் ஒரு உயர்பள்ளி ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றி பின் உயர்கல்விக்குப் பொறுப்பான அலுவலகத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியிருக்கும் மரியானா, இரண்டு உலகயுத்தங்களையும் கண்டிருக்கிறார்.

முதலாவது உலகயுத்தத்தில் சிறுமியாக இருந்த மரியானா, இரண்டாம் உலகயுத்தத்தின் போது பல்கலைக்கழக மாணவியாக இருந்த மரியானா தனக்குள் பல அனுபவங்களையும், விமர்சனங்களையும் தனக்குள் சுமந்து கொண்டிருந்தார்.

'நாம் ஒருமாதிரி கிற்லரிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டோம். இப்போது அந்த இடத்திற்கு புஷ் வந்துவிட்டார்' எனக் கோபத்துடன் கூறினார்.

கிற்லர் காலத்தில் வாழ்ந்தது பற்றி கொஞ்சம் சொல்லுங்கோவன் என நான் ஆவலாகக் கேட்டேன்.

நான் பிறந்தது பெர்லினில். கிற்லரின் ஆட்சிக்காலத்தில் ஹைல் கிற்லர் என்று வணக்கம் சொல்லும்முறை பெர்லினுக்கு அறிமுகப்படுத்தப் பட்டபோது நாஜி எதிர்ப்பாளரான எமது தந்தை எம்மையும் அழைத்துக் கொண்டு டன்சிக் சென்றுவிட்டார். பின்பு டன்சிக் (இந் நகரம் தற்போது போலன்ட்டிற்கு சொந்தமானது) இல் இந்த வழக்கம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, நாம் லுபெக் சென்றுவிட்டோம். நாம் நெடுநாட்கள் நீட்சிகியிலும் (கிழக்கு ஜேர்மனியில் ஒரு நகரம்) வாழ்ந்தோம். நான் பள்ளி மாணவியாகவிருக்கும் போது என்னுடன் யூதப் பிள்ளைகள் படித்தார்கள். நாளுக்கு நாள் அவர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. பின்பு தான் அதன் அர்த்தம் எனக்குப் புரிந்தது.

நான் சட்டம் படிக்கவே ஆசைப்பட்டேன். ஆனால் நாஜி அரசின் கீழ் பெண்கள் சட்டம் படிப்பதும், நடனமாடுவதும் தடை செய்யப்பட்டிருந்தது. ஆதலால் நான் பௌதிகம் படிக்க முடிவு செய்தேன். பெண்கள் குழந்தைகள் பராமரிப்பு சம்பந்தமான விடயங்கள் கற்பதே பெரிதும் விரும்பப்பட்டாலும், ஆண்கள் யுத்தத்தில் ஈடுபடும் போது இத் துறைகளில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பெண்கள் விஞ்ஞானத்துறையில் கற்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

எமது துறையில் கற்பித்த விரிவுரையாளர்களில் அதிகமானவர்கள் யூதர்களாக காணப்பட்டார்கள். காலப் போக்கில் அவர்கள் கற்பிப்பது தடைசெய்யப்பட்டது. அவர்களின் விரிவுரைகள் எஸ்எஸ் படையினரால் குழப்பப்பட்டது.

நான் ஒருநாள் பெர்லினில் யூதப்பேராசிரியர் ஒருவரின் விரிவுரையைக் கேட்டுக்கொண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிருந்தேன். அப்போது அந்த மண்டபத்தில் நுழைந்த கிற்லரின் எஸ்எஸ் படையினர், ஜேர்மன் மாணவர்கள் யூதப் பேராசியர்களின் விரிவுரைகளில் கலந்து கொள்ளக் கூடாது என எல்லோரையும் கலைந்து செல்லும்படி ஆணை யிட்டார்கள். என்னைத் தவிர எல்லோரும் எழுந்து சென்றார்கள். நான் மட்டும் மிஞ்சியிருந்தேன். அவர்கள் என்னிடம் வந்து, என்னை வெளியேறும்படி கூறினார்கள். நான் மறுத்துவிட்டேன். நீங்கள் ஜேர்மனியர். யூதனிடம் கற்கக் கூடாது என்றனர். நான் அவர்கள் செய்வது அநீதி என்று வாதிட்டேன். அவர்கள் எனது பொருட்களைப் பறிமுதல் செய்தார்கள். எனது பல்கலைக்கழகத்தின் அதிபர் என்னிடம் வந்து நீங்கள் ஒரு திறமையான மாணவி. நீங்கள் மற்றவர்களுடன் ஒத்துப்போக வேண்டு மென என்னை எச்சரித்தார். நான் பல்கலைக் கழகத்தில் இருந்து நீக்கப்பட்டேன். நான் பெர்லினிலிருந்து வெளியேறினேன். அந்த அதிபர் அங்கு பணியாற்றும்வரை எனக்கு பெர்லினில் எந்த வேலைவாய்ப்பும் கிடைப்பதை அவர் அனுமதிக்கவில்லை.

என்னை அவர்கள் அன்று கொன்றிருக்கலாம். ஏதோ அதிஷ்டம். நான் தப்பித்துவிட்டேன். அவர்கள் எத்தனையோ புத்திஜீவிகளைக் கடத்திச்சென்று கொலை செய்தார்கள். தமக்கு எதிராகப் பேசியவர்களை, யூதர்களுக்கு உதவியவர்கள் என பலரைக் கொன்றார்கள்.

இவற்றைக் கூறிமுடித்த போது அவரது குரலில் ஒருவித பெருமிதமும், அதேநேரம் தனது சமூகம் மீதான கோபமும் தெரிந்தது. எனக்கு மரியானா ஒரு துணிச்சல் மிக்க பெண்ணாகத் தோற்றமளித்தார்.

நான் படிப்பை முடித்துக்கொண்டபோது என்னை பொர்டமொண்டில் ராக்கெட் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு விஞ்ஞானியாக பணியாற்ற அழைத்தார்கள். நான் மறுத்துவிட்டேன் எனத் தொடர்ந்தார் மரியானா. மனிதாபிமானமற்ற ஒரு அரசின் தேவைகளுக்குச் சேவைசெய்ய மாட்டேன் என்று மறுத்துவிட்டேன். கிற்லர் எப்போதும் ஜேர்மன் பௌதிகம் பற்றியும், அதை வளர்க்கவேண்டுமென்றும் தனது உரைகளில் பேசினார். முட்டாள். பௌதிகம் என்றால் என்னவென்று அவருக்குத் தெரியாது. பௌதிகத்தில் அணுபௌதிகம், குவாண்டம் பௌதிகம் என்று தான் படித்திருக்கிறேன். அது என்ன ஜேர்மன் பௌதிகம்??

பௌதிகம் எல்லா மனிதஜீவிகளுக்கும் பொதுவானது. அதற்கான விதிகளை கண்டு பிடித்தவர்களில் எத்தனையோ யூத அறிவுஜீவி களும் அடங்குவர் என ஏளனமாகச் சொல்லி விட்டு கலகலவெனச் சிரித்தார்.

நாஜிகாலத்தில் பெண்களின் சுதந்திரம் வெகுவாக வரையறுக்கப் பட்டதென்று தான் நான் சொல்லுவேன். 1940 என்று நினைக் கிறேன். சிறு வயதிலிருந்து எனது பெயரில் உள்ள ஒரு வங்கிக்கணக்கில் எனது தந்தையாரினாலும் பின்பு என்னாலும் சேமிக்கப பட்ட பணத்தை வெளியில் எடுப்பதற்காக பெர்லினுள்ள வங்கியொன்றிற்கு சென்றிருந்தேன். எனது கணவரின் கையொப்பம் இல்லாமல் அந்தப் பணத்தை எனக்குத் தர மறுத்து விட்டார்கள். நான் அவர்களுடன் வாதாடினேன். இது நான் சேமித்த பணம். இதற்கும் என் கணவருக்கும் சம்பந்தம் இல்லையென்று. அவர்கள் இறுதிவரை மறுத்துவிட்டார்கள்.

மரியானாவுடன் பேசிக்கொண்டிருப்பது ஒரு புதுஅனுபவம். அவர் ஒரு விடயத்தைப் பற்றித் தொடர்ந்து பேசமாட்டார். இடையிடையே பாடல்களும், பகிடிகளும், விமர்சனங்களும் இடைச்செருகல்களாக வரும். திடீரென்று ஒரு சிறுமியின் வடிவமெடுப்பார். சிறுவர் பாடல்களை அபிநயம் பிடித்து பாடுவார். இளவேனில் காலத்தை வரவேற்கும் பாடலை ஒரு குழந்தையின் குதூகலத்துடன் பாடுவார்.

Kuckuuck, Kuckuck, ruft´s aus dem Wald
Lasset uns singen, tanzen und springen!
Frühling, Frühling wird es nun bald!

*காட்டிலிருந்து குயில் கூவுகின்றது*
*நாமும் பாடி, ஆடி, குதித்திடுவோம்*
*இளவேனில்காலம் விரைவில் ஆகிடுமே!*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனது கால்களை நீட்டி மெதுவாகத் தடவிவிட்டவாறு, இங்கே பார்! எனது கால்களைப் பார்க்கையில் சோசேஜஸ் மாதிரியில்லையா, எப்படி வீங்கியிருக்கிறது பார்த்தாயா? இவர்கள் எனக்குச் சரியான வைத்தியம் செய்கிறார்களில்லை.

திடீரென்று தனது கால்களையும் கைகளையும் ஆட்டியவாறு பாடத் தொடங்கினார்.

*Zeigt her eure Füsse, zeigt her eure Schuh,*
*Und sehet den fleissigen Waschfrauen zu!*
*Sie waschen, sie waschen, sie waschen den ganzen Tag,*
*Sie waschen, sie waschen, sie waschen den ganzen Tag.*

*உங்கள் கால்களையும்,*
*சப்பாத்துக்களையும் காட்டுங்கள்*
*சுறுசுறுப்பாக வேலை செய்யும்*
*துணிதுவைக்கும் பெண்களைப் பாருங்கள்.*
*அவர்கள் முழுநாளும் துவைக்கிறார்கள்.*

*அந்தத் துணிதுவைக்கும் பெண்கள் பொழுதும் துவைக்கிறார்கள், நடக்கிறார்கள், பாடுகிறார்கள், ஆடுகிறார்கள்* எனத் தொடர்ந்து செல்கிறது அச்சிறுவர் பாடல்.

அதைப்பாடும் போது அந்தத் துணி துவைக்கும் பெண்களின் சுறுசுறுப்பும் ஒரு மூன்று வயதுச் சிறுமியின் துடிதுடிப்பும் மரியானாவில் தோன்றும். அவரது அபிநயமும் பாடல் மீதான லயிப்பும் எனது மூன்றரை வயது மகன் அப்பாடலை என்னுடன் இணைந்து கின்டர்காடனில் தான் கற்ற அபிநயங்களைப் பிடித்து பாடுவதற்கு ஒத்ததாகவே இருந்தது.

மரியானா சிலசமயங்களில் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு மிகவும் கவலையாக உட்காந்திருப்பார். நான் தொண்ணுற்றைந்து வயதுவரை வாழ்ந்து விட்டேன். ஆனால் இனி நாளைய பரிசோதனையின்போது ஏதாவது கொடிய நோயொன்றைக் கண்டுபிடித்தால்... நான் கஷ்டப்படவேண்டிய காலம் வரப் போகுதே... இனி நான் வாழ்ந்தது போதும்...

எனது ஆசை என்ன தெரியுமா? நான் இன்று உறங்கினால் நாளை கண் விழிக்கக்கூடாது.

*ச்சீ....ச்சீ...* அப்படி நடக்காது. நீங்கள் இன்னும் பல காலம் உயிருடன் வாழ்வீர்கள் என்று நான் அவருக்கு ஆறுதல் சொன்னேன்.

இனி நான் வாழ்ந்தது போதும். எனது கணவர் இருபது வருடங்களிற்குமுன் இறந்து விட்டார். எனக்குச் சொந்த சகோதரர்கள் இல்லை. எனது நண்பர்கள், எனது மைத்துனர்மார்கள் எல்லோருமே இறந்துவிட்டார்கள். நான் தனித்தவளாகிவிட்டேன்.

நான் எவங்கலிஸ் மதத்தைச் சேர்ந்தவள். நான் அவர்களுக்கு ஆலயவரியும் செலுத்தினேன். ஆனால் எனது தொண்ணுற்றைந்து வயதுப் பிறந்தநாளிற்கு தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்த்துத் தெரிவிக்கவுமில்லை. வந்து பார்க்கவுமில்லை. நான் இறந்தால் அவர்களுக்கு அறிவிக்க வேண்டாமென்று சொல்லிவிட்டேன்.

சென்ற வருடம் வரை எனது வீட்டிற்கு அருகாமையிலுள்ள சிறிய ரெஸ்டொரண்ட் ஒன்றிற்கு எனது பக்கத்துவீட்டுப் பெண்ணுடன் இணைந்து சென்று மதியுணவு அருந்திவிட்டு வருவேன். இப்போது என்னால் நடக்க முடியவில்லை. கால்கள் பலமிழந்துவிட்டன. நான் தெளிவாகக் கதைப்பதால் என்னைச் சுகதேகியென்றும், எனது வேலைகளை என்னால் செய்யமுடியுமென்றும் எண்ணுகிறார்கள். இது என்னை வேதனைப்பட வைக்கிறது. எனது அனுபவங்களும், நான் வாழ்ந்த காலமும் தான் என்னைப் பேசவைக்கிறது. எனது மூளையை இன்னும் தடையின்றி இயக்குகிறது.

நான் வாழ்ந்தது போதும்... தனது தலையை வேகமாக ஆட்டி சலித்துக்கொள்வார்.

*Jugend ist schön, kommt es nicht wieder!*

*இளமைக்காலம் அழகானது. மீண்டும் அது வராது*

என அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்.

நான் ஒரு குழந்தைக்கேனும் தாயாகவேண்டுமென்று ஆசைப்பட்டேன். நானும் எனது கணவரும் இணைந்து ஒரு முடிவெடுத்திருந்தோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்தக்காலத்தில் குழந்தைகளை பெறுவதில்லையென்று. எமது குழந்தை சமாதானக் காற்றைச் சுவாசித்துக்கொண்டு தான் இந்த உலகிற்கு வரவேண்டுமென்று நாம் முடிவு செய்திருந்தோம். எமது வாழ்விற்கு உத்தரவாத மற்ற ஒரு சூழலில் ஒரு குழந்தையைப் பெறுவது புத்திசாலித்தனமானதல்ல என நினைத்தபடி யுத்தம் முடியும்வரை காத்திருந்தோம். அதன்பின் எனது கருப்பை யில் ஏற்பட்ட வியாதியால் எனது பாதி கருப்பை அகற்றப்பட்டது. நான் குழந்தைகள் இல்லாமல் வாழ வேண்டியவளாகிவிட்டேன்.

எனக்கு இருபது வயதாக இருக்கும் போது எனது பித்தப்பையை அகற்றினார்கள். அதற்குள் இருநூற்றுக்கணக்கில் கற்கள் இருந்தனவாம். சத்திரசிகிச்சைக்குப்பின் எனது அகற்றப்பட்ட பித்தப்பையை என்னிடம் காட்டும்படி தாதியிடம் அடம்பிடித்தேன். அவள் ஒரு தட்டில் வைத்து ஒரு பொருளை என்னிடம் எடுத்து வந்தாள். நான் பித்தப்பையைக் கொண்டு வரச் சொன்னால் நீ என்ன ஒரு சோசேஜசை கொண்டுவருகிறாயே என அவளைத் திட்டினேன். இதுதான் உங்கள் பித்தப்பை. அது மூன்று மடங்காகப் பெருத்துள்ளது என என்னைத் திகைப்புக்கு உள்ளாக்கினாள் எனச் சொல்லிவிட்டு சிரித்தார்.

அதற்கப்புறம் நான் காரம், அமிலம் உண்ணுவதைத் தவிர்த்துவிட்டேன். எனக்குள் எத்தனை வியாதிகள். இப்போது தொண்ணூற்றைந்து வயதில் புற்றுநோயா என்ற சந்தேகம்.

எனது கணவன் அடிக்கடி கூறுவார்,

*Das Leben ist wie ein Hühnerleiter*
*Mit viel Dreck und Schmutz*
*வாழ்க்கை கோழிகள் உட்காந்திருக்கும் ஏணிகள் போன்றது. அழுக்கு நிறைந்தது.*

எனது வாழ்கை ஒரு முற்றுப்புள்ளிக்கு வந்துவிட்டது, அது விரைவில் முடிவடைந்தால் நான் மிகவும் சந்தோசப்படுவேன். நான் துன்பப்பட்டுச் சாகக்கூடாது.

மரியானாவின் உடம்பிலுள்ள வலியை குறைப்பதற்காக ஒரு தாதி வந்து மாசாஜ் செய்தார். மாசாஜிற்குப் பிறகு தனது வலி மிகவும் குறைந்துள்ளதாக அவளுக்கு

பலமுறை நன்றி சொன்னார். எனக்கு செய்யப்படும் சின்னஞ்சிறிய உதவிகள் எல்லாம் எனக்கு அதிக அர்த்தத்தைக் கொடுக்கின்றன. சென்ற மாதம் அல்டியில் மேசையில் வைக்கக் கூடிய மணிக்கூடுகள் மலிவாக போடுவதாக விளம்பரம் செய்திருந்தார்கள். என்னால் புதன் கிழமை காலைகளில் அந்த சனநெருக்குதலில் கியூவில் நின்று அதனை வாங்கமுடியாது. ஆகையால் முதல்நாள் அங்கு சென்று அங்கு பணிபுரியும் பெண்ணிடம், எனக்காக ஒன்றை எடுத்து வைக்கும்படி கூறிவைத்தேன். மறுநாள் அவர் மறந்திருப்பரா என்ற ஐயத்துடன் அங்கு சென்றேன். ஆனால் அவர் என்னை நினைவு படுத்தி எனக்காக அதை எடுத்துவைத் திருந்தாரென நன்றியுணர்வுடன் கூறினார்.

மரியானா எல்லோருடனும் கலகலப்பாகவே பேசினார். எனது விருந்தாளிகளைத் தனது கதைகளாலும், பழகும் சுபாவத்தாலும் ஈர்த்தார்.

என்னோடு கதைத்துக் கொண்டிருந்தவர் திடீரென எழுந்து கால்களை நேரே வைத்து, ஒரு கையை பக்கமாக வைத்துக்கொண்டு, மற்றைய கையை மேலே உயர்த்தி வேகமாக ஆட்டியபடி பாடத் தொடங்கினார்.

*Der Insulaner hofft unbeirrt,*
*dass sein Insel wieder*
*ein schönes Festland wird.*
*தீவுவாசி உறுதியாக நம்புகிறான்.*
*தனது தீவு மீண்டுமொரு*
*அழகான களிப்புமிகக் கொண்ட*
*தேசமாக மாறுமென்று.*

மரியானா இப்பாடலை அடிக்கடி பாடினார். Gunter Neumann என்பவரால் எழுதப்பட்ட இப் பாடல் பெர்லினைச் சுற்றி மதில் கட்டப்பட்ட சமயங்களில் எழுதப்பட்டதாம். இங்கு எல்லாப் பக்கங்களினாலும் மூடப்பட்ட பேர்லின் தீவாகக் குறிக்கப்படுகிறது.

நான் ஆறு வருடங்களுக்கு முன் நான் வசித்த நீட்ஸ்கி நகரிற்குச் சென்றேன். அங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் வாழ்ந்த வீட்டின் எந்த அடையாளமும் காணப்படவில்லை. எனது வீடு இருந்த இடத்திற்கு அருகாமையில் புதிதாக ஜேர்மனிக்குள் வரும் அகதிகளிற்காக ஒரு அகதிமுகாம் அமைக்கப்பட்டிருந்தது. அச் சூழல் சனநடமாட்டமற்று வெறிச்சோடியிருந்தது. அவ்விடத்தைச் சுற்றி நியோ நாசிகளின் சந்திப்புக் கூடங்கள் நிறைய இருப்பதாக நான் அறிந்தேன். இப்படியான பாதுகாப்பற்ற ஒரு இடத்தில் எப்படி இவர்கள் வெளிநாட்டவர்களை தங்கவைக்க முடியும்? என்ன பொறுப்பற்ற செயல் என ஜேர்மன் அரசாங்கத்தைக் கடிந்தார்.

ஏழு வருடங்களிற்கு முன் இலங்கையைச் சேர்ந்த இருவர் நீட்ஸ்கியில் நியோநாஸிகளால் தாக்கப்பட்டனர் என்று நான் அவருக்குச் சொன்னேன்.

பார்த்தாயா! இவர்கள் சரித்திரத்திலிருந்து கற்கமாட்டார்கள். அரசிற்கும் அக்கறையில்லை.

மரியானாவின் கவலை கோபமாக மாறியிருந்தது.

நான் தொலைக்காட்சி பார்ப்பதை நிறுத்திவிட்டேன். அங்கே உதைபந்தாட்டம் என்று பைத்தியமாக இருக்கிறார்கள். வீதியில் கறுத்த இனத்தவர்களைக் கண்டால் அடித்து உதைக்கிறார்கள். தமது உதைபந்தாட்ட அணிகள் வெல்வதற்காக கறுத்த இனத்தவர்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இவர்களிடம் மனிதநேயம் இல்லை. எல்லாம் வெறும் வியாபாரம்தான்.

உனக்கு யுன்கேயின் கதை தெரியுமா. (யுன்கே ஒரு பிரபல டி.வி நட்சத்திரம்)

அவரின் குடிபோதையும், அடாவடித்தனங்களும் தாங்காமல் அவரது மனைவி அவரை விட்டுச் சென்றுவிட்டார். எல்லாப் பத்திரிகைகளும் அந்தப் பெண்ணைத்தான் குறை கூறுகிறார்கள். நான் அந்தப் பெண்ணின் பக்கம். அவரை ஏன் குறை சொல்ல வேண்டும்? ஏன் அவர் பொறுக்கவேண்டும்? எனக்கு இவற்றையெல்லாம் பார்க்கும்போது கோபம்தான் வருகிறது.

தொலைக்காட்சியில் பெண்களும் ஆண்களைத் திருப்திப்படுத்த தமது உண்மைத் தோற்றத்தை மறைத்து பொய்யான வேசங்களைத் தரித்திருக் கிறார்கள். ஏன் இவர்கள் தம்மை கீழ்மைப்படுத்த வேண்டும்.

'ஐயையோ! பதினொன்றரை ஆகிவிட்டது. நீ தூங்கவேண்டும். நாளை நீ வீடு வரும்வரை உனது சின்ன மகன் பார்த்துக்கொண்டிருப்பான். நான்தான் நாளைக்கு தனியாக இருக்கப் போகிறேன். நீ படு' என்றவாறு தானும் தூக்கத்திலாழ்ந்தார்.

மறுநாள் எழுந்ததும் எனக்கு சிரித்த முகத்துடன் காலை வணக்கம் கூறினார். ஒரு சிறிய பரிசோதனைக்குப் பின் நான் வீட்டிற்கு வருவதாக இருந்தது. மரியானாவின் வாயில் குழாய்விட்டு வயிற்றைப் பரிசோதிப்பது என்று இருந்தது. இருவரும் எம்மை வந்து அழைத்துச் செல்லும்வரை காத்திருந்தோம்.

என்னைத் தான் முதலில் அழைத்துச் சென்றார்கள். நான் திரும்பி வந்து பார்த்த போது மரியானாவை அழைத்துச் சென்றிருந்தார்கள். அவரைச் சந்தித்து வீட்டிற்குச் செல்லலாம் எனக் காத்திருந்தேன். அவர் வர நேரமாகும் எனக் கூறப்பட்டது.

'உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி' எனக் கடிதம் எழுதிவிட்டு வீடு திரும்பினேன்.

மரியானாவை நான் மீண்டும் சந்திக்கவில்லை. மரியானாவைக் காணாது வீடுவர நேர்ந்தது மனதிற்குக் கவலை. நான் மரியானாவுடன் அறையில் ஒரு நாள் தான் இருந்தேன். அந்த தொண்ணூற்றைந்து வயதுப் பெண் சிறுமி, யுவதி என யாதுமாகி நின்றார். அவரது நினைவு என்னுள் ஆழமாக... அவரது குரல்... பாடல்கள் என்னுள் எங்கும் வியாபித்தது.

யூலை பதினைந்தாம் திகதி மரியானாவிற்கு தொண்ணூற்றியாறு வயது.

மரியானா அவரது வீட்டில் தனிமையாக... அல்லது அவரது விருப்பத்தின்படி தூக்கத்திலேயே... அல்லது வைத்தியசாலைக் கட்டிலில் கொடிய வலியுடன்...!! (2004/10)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தீக்குள் விரலை வைத்தால்...

நீ
காற்றாய் இருந்தாய்
பரந்த வெளியெங்கிலும்
சுதந்திரமாய்
திரிந்ததுன் மனசு.

மகிழ்வும் துயரும்
இறக்கைகளாக...
சிட்டுக்குருவியாய் வலம் வந்த
நீயோர்
பலூனுக்குள்
சிறைப்பட்டதெப்படி?
அதுவும்
சிறகுகள் முறிக்கப்பட்டு...

சரணாலயம் தேடி
களைத்துப் போன
உன் சிறகுகளில் பட்ட
காய வடுக்கள்
காலநகர்வில்
ஆறிப்போக...
நீ மீண்டும்
சுதந்திரக் காற்றை
உள்வாங்கியபடி
மனசு விரிய...
உயர உயர
பறக்கத்தான் போகிறாய்.

உன் முறிந்த சிறகுகளுக்கு
ஒத்தடமிட்ட
சரணாலயம்
மீண்டும் உன்
பறத்தலுக்காய்
காத்திருக்கிறது

கவனம் சிட்டே!
முறிந்த சிறகுகளை
உடைத்து விடாமல்
பாதுகாப்பது
உன் ஆற்றலில்
தங்கியுள்ளது.

தீக்குள் ஜனிக்கும்
பீனிக்ஸின் இனம் நீ!
பயம் தவிர்.
நேர் பார்வை நோக்கு!
உன் இலக்கே உயிராக
உயர்ந்து செல்.
இனி
முறியப்போவது
உன் சிறகுகளல்ல
சிட்டே!!



பாலரஞ்சனி சர்மா
(மாத்தளை, இலங்கை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கவிஞனின் மனைவி

உன் காதலின் பரிசு
நித்தமும் எனக்கு
புத்தம்புது மலர்களாய்.
அப்போதெல்லாம்
பார்க்கும் பொருளில் எல்லாம்
கவிதையின் சாயல்.

இன்று
காதலி மனைவியானாள்
வசந்தக் காலத்தில்
பாடிக்கொண்டிருந்தக் குயில்
இதோ
பறந்து சென்றுவிட்டது.
கவிதை
உரைநடை ஆகிவிட்டது.
அழுக்குப் பாத்திரமும்
அழுக்கானத் துணியுமே
கவிதையின் கருப்பொருளாய்
வீட்டுச் சிறையில் நான்.

மின்னும் வசீகரமில்லாத
என்னிடமிருந்து
விலகியிருக்கவே
நீ
விரும்புகின்றாய்.

என் வட்டம்
சுருங்கிவிட்டது.
நான்குச்சுவர்களுக்கு நடுவில்
வீட்டின் காவலாய்
உன் கைகளில் தேநீராய்
காத்திருக்கின்றேன்.
நீ
உன் நண்பர்களுடனும்
உன் சனங்களுடனும்
தெருவில்
வலம் வருகின்றாய்.

வீட்டுக்கு வந்ததும்
இப்போதெல்லாம்
நீ கேட்பது
என்ன சமையல்?
என்பது மட்டும்தான்.
மறந்தும்கூட
நீ பேசுவதில்லை
என்னிடம்
இலக்கியம் பற்றி.

இப்படியே
எத்தனை ஆண்டுகள்
உன் ஆயாவாய்
உன் தாதியாய்
குழந்தைக்கு ஆசானாய்
என் நாட்கள்
பறந்துவிட்டன
உன் காலைத் தேநீரிலும்
ரவுப் படுக்கையிலும்
ஆனாலும்
நீ
அதிகம் வெந்த அரிசியிலும்
அடுப்பில் தீய்ந்தக் கறியிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் மனைமாட்சி
மங்கிவிட்டதாக
முகம் கோணுகின்றாய்.

சமைத்தல்
ஊட்டுதல்
துவைத்தல்
துடைத்தல்
இதுவே நானாகி
இதிலேயே
முடிந்துபோன
என் வாழ்க்கையில்
சின்னதாக
ஓர் ஒளிக்கீற்று
என் வாசிப்பு


வாழ்க்கையின் ஓட்டத்தில்
எனக்காக சிலநேரம்
நித்தமும்
வாசிப்பு மட்டுமாவது
வசப்படவேண்டும்
புத்தகம்
தாயைப்போல
என் இதயக்கதவுகளை
தன் பக்கங்களால்
தட்டிக் கொடுக்கின்றது.
தாலாட்டுப் பாடுகின்றது.

நான்
என்
எழுதுகோலை எடுத்து
தட்டுத்தடுமாறி
கவிஞர்களின் வரிசையில்
என் பெயரையும்
எழுதிடும் நேரம்
இதோ...அழுகுரல்
குழந்தையின் அழுகுரல்
நீ
எழுதிக்கொண்டிருக்கின்றாய்
வானொலிக்கு கவிதையோ..
புத்தக விமர்சனமோ...
எதையோ
எழுதிக் கொண்டிருக்கின்றாய்
உன் பார்வையில்
என்னைத் தண்டிக்கும்
இரக்கமற்ற
உன் சாபங்கள்
என் கைகள்
தானாகவே
நழுவவிடுகின்றன
எழுதுகோலை.
என் கைகள்
அழுகின்ற குழந்தைக்கு
தொட்டிலாகின்றன.

நான்... இனி
கவிதைப்பெண் கமலாதாசாக
ஆகவே முடியாதா..?
முடியாது..
ஏனென்றால்
நான் ஒரு
கவிஞனின் மனைவி.

தெலுங்கு கவிதை:
கவிஞர் மந்தரப்பு ஹேமாவதி
*(Mandarapu Hymavathy)*

மொழிபெயர்ப்பு:
புதியமாதவி (மும்பை)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*83ம் ஆண்டின் பின்னர் ஈழத்தமிழர் உலகில் பல பகுதிகளில் புலம்பெயரும் துயர்நிலை ஏற்பட்டது. ஆங்கில அறிவு கொஞ்சம் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் எனப் பலதரப்பட்டோரும் முன்பின் தெரியாத மொழி பேசும் நாடுகளுக்கு புலம்பெயர்ந்தார்கள்.*



*ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் (லண்டன்)*

# இன்றும்

அரசியல், பொருளாதாரம், மேற்படிப்பு என்ற பல காரணிகளால் இலங்கை வாழ் தமிழர் புலம்பெயரத் தொடங்கி கிட்டதட்ட ஐம்பது ஆண்டுகளாகின்றன. தமிழர்களுக்கெதிராக முதன்முதல் நடந்த 1958ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் ஆங்கிலம் படித்த தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். அதே மாதிரியே ஆங்கிலம் படித்த சிங்கள மத்திய தர வகுப்பினரும் 50ம் ஆண்டு நடுப்பகுதி யிலிருந்து இலங்கையை விட்டு வெளியேறத் தொடங்கினர் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

50,60,70 களில் புலம்பெயர்ந்த மத்திய தரத் தமிழர் (பெரும்பாலோனோர்) தங்கள் வாழ்க்கை முறையில் பெரிய மாற்றங்களை உண்டாக்கிக் கொள்ளவில்லை. அவர்களின் பொருளாதார, கல்வி நிலைகள் மேம்படுத்தப்பட்டன. அவர் களின் குழந்தைகளும் தாய் தகப்பன் வழியே பெரிய பட்டப் படிப்புகளில் முன்னேற்றம் அடைந்தார்கள். 83ம் ஆண்டு இனக்கலவரத்தின் முன் தமிழர்கள் பெரும்பாலும் குடியேறிய நாடு இங்கிலாந்தாகும். அதைத் தொடர்ந்து அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா என்ற ஆங்கிலம் பேசும் நாடுகளுக்கும் புலம்பெயர்ந் தார்கள்.


83ம் ஆண்டின் பின்னர் தமிழர் உலகில் பல பகுதிகளில் புலம்பெயரும் துயர்நிலை ஏற்பட் டது. ஆங்கில அறிவு கொஞ்சம் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் எனப் பலதரப்பட்டோரும் முன்பின் தெரியாத மொழி பேசும் நாடுகளுக்கு புலம்பெயர்ந்தார்கள். இந்தப் புலப்பெயர்வால் தமிழர்களின் மொழியார்வம் வேறு பல கோணங்களில் வெளிப்பட்டது. தமிழ்ப் பாடசாலைகள், கட்டுரை, பேச்சுப்போட்டிகள் புலம்பெயர்ந்த தமிழ்க் குழந்தைகளுக்காக நடத்தப்பட்டன. கலாச்சார வளர்ச்சி என்பது பரதநாட்டியம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், சங்கீதம் படித்து அரங்கேற்றுவதில் வெளிப்பட்டது. புலம்பெயர்ந்தோருக்கு இலங்கை யில் கிடைக்காத சுதந்திரம் தாங்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் கிடைத்தன. 83ம் ஆண்டு தொடக்கம் இருபது ஆண்டுகளுக்குப் பின் இன்றுள்ள நிலையை ஆராய்ந்தால் பெண்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றம் நடந்திருக்கிறது என்பது கொஞ்சம் தெரியும்.

ஐரோப்பிய நாடுகளில் குடியேறிய பெண்களா யிருந்தாலும் கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்தவர்களாயிருந்தாலும் சரி பெரும்பாலானவர்கள் ஏதோ ஒரு சின்ன வேலை செய்தாலும் பொருளாதார முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். வாழ்க்கை நியதி அப்படி ஊரிலுள்ள உறவுகள், சொந்தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் என்பனவற்றிற்கு இந்த உழைப்பு அத்தியாவசியமாகிறது. இந்த வாழ்க்கை முறைக்கு அப்பால் இன்றைய தமிழ்ப்பெண்கள் என்ன முன்னேற்றத்தைக் கண்டார்கள் என்பது ஒரு கேள்வி. இலங்கை யில் நடக்கும் அரசியல் அடக்குமுறை களால் பல பெண்கள் வீடுகளுக்குள்ளேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இருபது வருடங்களில் ...

*மேற்கு நாடுகளில் ஆணும் பெண்ணும் முழுக்க முழுக்க சமமாக நடத்தப்படுகிறார்களா என்பது கேள்விக்குரிய விடயம். ஆனாலும் ஆசிய அராபிய நாட்டுப் பெண்களை விட ஓரளவு சுதந்திரமாவது மேற்கத்திய நாட்டுப் பெண்களுக்கு உண்டு.*

அடைபட்டுக் கிடக்க வேண்டிய நிலை வந்தது. மொழி தெரியாத பிரச்சினை, சுவாத்தியப் பிரச்சினை என்பனவற்றால் புலம் பெயர்ந்த பல பெண்களும் வீட்டுக்குள்ளேயே பெரும்பாலான நேரத்தைக் கழிக்க வேண்டியிருக்கிறது. இவர்களின் பொழுதுபோக்குகள் என்னவென்று பார்த்தால் நெஞ்சு வலிக்கிறது. ஏன் என்றால் பெரும்பாலான பெண்கள் சின்னத்திரை சீரியல்களுடனும் பெரியதிரை உதவாக்கரை சினிமா படங்களுடனும் பெரும்பாலான நேரத்தைக் கழிக்கின்றார்கள்.

தாங்கள் வந்த நாட்டு மொழி படித்து முன்னேறுபவர்கள் ஒரு சிலராகாத்தானிருக்கிறார்கள். நல்ல புத்தகங்களைப் படிப்பது பெண்கள் வளர்ச்சிக்கான இயக்கங்களில் ஈடுபடுவது என்பது எங்கள் தமிழ்ப் பெண்களிடம் மிகக் குறைவாக இருக்கிறது.

இப்படியே போனால் எங்கள் தமிழ்க் குழந்தைகளின் அதாவது பெண் குழந்தைகளின் மனவளர்ச்சி எப்படியிருக்கும்?

இந்திய கலாச்சாரம் என்பது சீதை மாதிரியும் திரௌபதி மாதிரியும் செயற்படுவதுதான் என்பதை இந்தியச் சின்னத்திரை சீரியல்கள் அப்பட்டமாகச் சொல்கின்றன. பெண்மையின் சுயமை, பலம், அறிவு என்பவற்றையும் பிரதிபலிக்கும் அல்லது மேன்மைப்படுத்தும் படைப்புக்கள் சினிமாவிலோ சீரியல்களிலோ பெரும்பாலும் இருப்பதில்லை.

தமிழ்ப்படங்களில் தமிழ் கதாநாயகிகள் தமிழ்க்கலாச்சாரத்தின் சேலை சட்டையைத் துச்சாதனன் துணையின்றி படத் தயாரிப்பாளர் உத்தரவால் உதறியெறிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். கவர்ச்சி காட்டாத நடிகைகளுக்கு நடிப்பதற்கு(??) சந்தர்ப்பங்கள் குறைவு. பெண் உடம்பு என்பது வெறும் பாவனைக்கு (ஆண்களின்) என்று இப்படங்கள் அடித்துச் சொல்கின்றன. மேற்கத்திய நாட்டின் நாகரீகத்தைப் பின்பற்றுவதாக நினைத்துக் கொண்டு மிகவும் கீழ்த்தரமான ஆடல்கள் தமிழ்ப்படங்களில் மிக முக்கியமான அம்சமாகப் புகுத்தப்படுகின்றன. கணவனிடம் அடிவாங்குவது அவனுக்காகவே வாழ்வது அவனின் எல்லாத் தேவைகளையும் அப்படியே ஒரு கேள்வியும் கேட்காமல் நிறைவேற்றுவது பெண்களின் கடமை. பத்தினித் தனம் என்று இப்படங்கள் போற்றுகின்றன.

பொழுதுபோக்கு என்ற பெயரில் தங்கள் தாய் தகப்பனுடன் இப்படங்களை பார்க்கும் இளம் பெண்கள் எதை கிரகித்துக் கொள்ளப் போகின்றார்கள்.? மேற்கு நாடுகளில் ஆணும் பெண்ணும் முழுக்க முழுக்க சமமாக நடத்தப்படுகிறார்களா என்பது கேள்விக்குரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடயம். ஆனாலும் ஆசிய அராபிய நாட்டுப் பெண்களை விட ஓரளவு சுதந்திரமாவது மேற்கத்திய நாட்டு பெண்களுக்குண்டு.

தமிழ்க்கலாச்சாரத்தைப் படிப்பிப்பதற்காகத் தமிழ்ப் படங்களைத் தங்கள் குழந்தைகளுக்குக் காட்டும் தாய் தகப்பன் தங்கள் பெண் குழந்தைகள் இந்த சினிமா கதாநாயகிகள் மாதிரிக் கணவனிடம் அடி உதை வாங்கி அவலப்படுவது சரியான வாழ்க்கை முறை என்று நினைக்கின்றார்களா? கட்டாயத் திருமணங்களும் குடும்ப வன்முறைகளும் புலம்பெயர்ந்த மக்களிடையே அதிகம் நடைபெறுவதாக அறிக்கைகள் சொல்கின்றன. அவலமான அமைதியற்ற வாழ்க்கைமுறை மன வியாதிகளைக் கொண்டு வரும் என்பது யாவரும் அறிந்த விடயம்.

அரசியல் பொருளாதார காரணங்களால் புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் பெண் குழந்தைகளின் வாழ்க்கையை எதிர்காலத்தை நிதானமாக யோசிப்பது அவசியம். இன்றைய சந்தோசம் திருப்பதிக்காக எங்கள் எதிர்கால சந்ததியினரை குழப்புவது தர்மமல்ல.

இன்று உலசகமயமாதல் என்ற பெயரில் லாபம் தேடுவதற்காக எதையும் விற்கத் தயாராக இருக்கிறார்கள். உணர்வுகள் குழப்பப் படுகின்றன. மனித உரிமை என்ற பெயரில் தார்மீகமற்ற வழியில் பல பொழுதுபோக்குச் சாதனங்கள் சாதாரண மக்களையடைகிறது. இதன் பலாபலன்களைத் தெரிந்து கொள்ள நாங்கள் சமுதாயத்துடன் இணைந்து செயற் படல் வேண்டும்.

(2004/10)

## புதிய வரவுகள்

படைப்பு: சுமதி ரூபன்
வெளியீடு:
Mithra Arts & Creations




யாதுமாகி நின்றாள்



கோசல்யா கதைகள் கவிதைகள்



ஒரு தாத்தாவும் எருமையும்

படைப்பு: கோசல்யா
email:
links5555@aol.com


படைப்பு: பாமா
வெளியீடு: விடியல்
email:
vitiyal2000@eth.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



*கலைந்து போன அவளின் கருங்கூந்தல் நீண்டு பரந்து அந்த அறைப் பரப்பை மூடிக்கொள்ள சாளரத்தினூடே ஊடுருவிப் புகுந்து கொண்ட மெல்லிய நீல நிலவொளி அவளின் நிர்வாண உடல்பரப்பில் பட்டுத் தெறித்து விட்டத்தில் ஏற்ற இறக்கங்களை காட்டி நின்றது. அவள் மோகித்திருந்தாள். அண்டத்தின் அனைத்தும் அவளின் காலடியில் என்பதாய் மமதையில் மரணத்திற்கும் வாழ்விற்குமான இடைவெளியை ரசித்தபடியே அவள் கலைந்தாள். நாகம் அசைந்தது.*



# நாகதோஷம்

**சுமதி ரூபன் (கனடா)**

மென் கறுப்புத் தோலைக் களைந்து விட்ட நாகம் தனது நுண்மையான கரும் நாக்கால் அவளின் பாதம் தொடங்கித் தலைவரை மெல்ல நகர்ந்து, முகர்ந்து, புகுந்து, நழுவ சூரியனைத் தொட்டுவந்தவள் போல் உடற் தணதணப்பில் அவள் சிணுங்கினாள். நாகத்திற்கு கோபம் தலைக்கேறியது. என்றோ தான் ஏங்க வைக்கப்பட்டு ஏமாந்தது போல் ஆவேசம் வந்தது. நாகம் வேகம் கொண்டு அவள் உடலை சுற்றி ஆவேசமாய் இறுக்க எலும்புகள் மெல்ல நொறுங்கத் தொடங்கின. அவள் உச்சத்தின் வேதனையில் வாய்விட்டுக் கதறினாள். நாகத்தின் பார்வையில் குரோதம் தெரிந்தது. மூடிக்கிடந்த அவள் கண்களை தனது நாக்கால் எச்சில்படுத்தி அவள் கண்விழிகளுக்குள் தனது பார்வையைச் செலுத்தியது. அவள் வார்த்தைகளற்று வதைபட்டாள். அவள் வளைவுகளை அழுத்தி தனக்கான மோகத்தில் திளைத்து எழுந்தது நாகம். அவள் மூச்சுக்காற்று மெல்ல மெல்ல அடங்க களைப்புற்ற நாகம் விலகி அவள் கூந்தலுக்குள் நுழைந்து புரண்டு தனது தோலுக்குள் புகுந்து நகர்ந்து கொண்டது. வரண்டு போய் அசைவின்றிக் கிடந்தாள் அவள்.

கண் விழித்தாள். தெளிவற்று குத்தி நின்றது பார்வை. பல வருட கேள்விகளுக்கு விடைதேடிக் களைத்து இன்று பதில் கிடைப்பதாய் நம்பி மீண்டும் கலைந்து போனாள். மனதுக்குள் குரோதம் வளர்ந்தது. ஆண்மையின் மிதப்பில் நாகம் அசைந்தது. விம்மிப் புடைத்து நிற்கும் தனது மார்புகளினைத் தடவிக்கொடுத்து அதிசயித்தாள்.

நீள்சதுர கண்ணாடி பிம்பத்தை தனக்குள் வாங்கிப் பிரதிபலிக்க, இருப்பதால் இடையளவிலிருந்து தலைமட்டும் கண்ணாடிக்குள் அடங்கிப்போய், இடுப்பில் பிதுங்கும் தசை... பதிவாய் தொங்கும் பருத்த மார்பகங்கள்... உச்சியில் ஊடுருவும் வெள்ளை மயிர்கள்... கண்கள் உடலில் அர்த்தமின்றி மேய்ந்து வலம்வர குளிர்காற்று ஊடுருவி தலைமயிரைக் கலைத்துக் கன்னத்தில் போட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயற்கை தனது கடமைகளைச் சளைக் காது செய்தருள, மனித மனம் மட்டும் குழப்பத்துடன் போராடிக் கொண்டிருக்கும். எனக்கான குழப்பம் இதுதான் என்று சபைமுன்னே எழுந்து நின்று மனம் திறந்து கொட்ட முடிவதில்லை. இது சரி, இது தவறு என்ற எங்காவது அகராதியில் அடையாளப் படுத்தியிருந்தால் அதை வாழ்வின் கோட்பாடாய்க் கொள்ளலாம். நிறைவாய் மனம் திருப்தி பெற தவறென்று சுட்டுவிரல் நீளும். சில, தவறோ என்று தடுமாற சரளமாக மற்றவை செய்து முன்னேறும். வாழ்வின் நிரந்தரமின்னையின் புரிதலால் இருக்கும்வரை இன்புற்றிருப்போம் என்றால், அது எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்ற நியதியை இடித்துக் கொள்ளும்.

அவள் புரண்டு படுத்தாள். உடைகளுக் குள் தன்னைப் புகுத்திக்கொள்ள ஏனோ பிடிக்கவில்லை. தொலைபேசி அலறியது. புகைமூட்டமாய் முகில்கள் அலைந்து அலைந்து உடலைச் சிலுப்புறவைத்த வேதனையை அனுபவித்து அயர்ச்சியாய்க் கிடந்தாள். அவள் சிந்தனையில்...

அவளின் கூம்பிய தோற்றத்திற்கும் தோஷம்தான் காரணம் என்றார்கள். நாகபூசணி அம்மனுக்கு வெள்ளி தோறும் விரதம் பிடிக்கவைத்து சூரியப் பொழுதுக்கு முன்னம் குளிர் நீரைத் தலைக்கு ஊற்றி கோவிலுக்கு நடையாய் அழைத்துச் செல்வாள் அம்மா. தாவணி நழுவி விடும் தட்டையான மார்பு, கிள்ளிப் பார்க்க சதை இன்றி துருத்தி நிற்கும் எலும்புத் தேகம்.. அப்பிவிட்ட கறுப்புத் தோல்.. துருத்திக் கொள்ளும் பற்கள்.. இருந்தும் அவள் பெண். திருமணம் குழந்தைகள் குடும்பம் என்ற கற்பனைகளை வளர்த்து வாழும் சாதாரண உணர்வுடைய இளம் பெண். அவளுக்கு அவளின் தோற்றத்தில் திருப்தியில்லை. மாற்ற முடியுமா? மஞ்சளும் சவர்க்காரமும் கரைந்ததுதான் மிச்சம். திருமணங்கள் தட்டிப்போனது. காரணம் நாகதோஷம் என்றார்கள். அம்மா எள்ளை இடித்திடித்துப் பிடித்து சாப்பிட வைப்பாள். அப்பிய கருப்பு மினுக்கம் காணும். எலும்பை மூடி சதை போடும். பற்களுக்கும் ஏதாவது நடக்கலாம். இருந்தும் எள்ளுச் சாப்பிட்டால் கர்ப்பத்தைத் தாங்கும் பலம் வரும் என்றாள். தோஷத்தின் வேகம் அவளது சாதகத்தில் மட்டும் ஆழமாய் இருப்பதாய் புலம்புவாள். சாத கத்தை யாரிடமாவது கொடுத்து மாற்றி விடலாம் என்ற அப்பாவின் ஆசை பின் வளவுக்குள் நாகம் புற்று அமைத்துக் குடிபுகுந்த போது மறந்து மறைந்து போனது. திரைப்படங்களின் தாக்கம் அதிகமாகி அவளை பால் வார்த்துக் கும்பிடும்படியும் வற்புறுத்தினார்கள். ஜடமாய் நம்பிக்கை யற்றுக் கோவிலுக்குள் வலம் வந்தவளை கோவில் பின் வீதியில் வாழ்ந்து வந்த நாகத்தின் நேரடிப் பார்வை கவர்ந்து விட... பின்னர் கோயிலே கதியெனக் கிடந்தாள்.

மா பூசியது போல் தோல்... சுருள் சுருளான தலைமயிர்... அங்குமிங்கும் சுழரும் கரும் கண்கள்... அவனின் பார்வை தன்னில் விழுந்தபோது அவள் துவண்டு போனாள். காதலுக்குக் கண் இல்லை என்பதை முற்றிலும் நம்பினாள். பெரிய வளான போது நிறுத்தப்பட்ட கல்வி, ஆழமாகப் பிடித்து உலுக்கும் தோஷம், அவலட்டணமாக தோற்றம், முன் படலை தாண்டமுடியாத வாழ்க்கை எல்லாமே அவன் பார்வை அவள் மேல் பட்ட பின்னர் அவளை நெருடுவ தில்லை.. மாலை நேரங்களில் பின்வள விற்குள் சென்று நாகத் திற்குப் பாலூற்றும் தீவிரம் கூடியது. மணிக்கணக்காக பாலூற் றிப் பிரார்த்தித்து இருள் மூழ்கும் போது வீடு திரும்புவாள். அவளை ஒருவரும் கேள்வி கேட்டதில்லை. நாகத்தின் வலிமை அவள் வாழ்வில் மாற்றத்தை உண்டு பண்ணுவ தாகப் பெற்றோர்கள் நம்பினார்கள். எடை போட்டு அவள் உடலிலும் மாற்றங்கள் ஏற்பட்டது. சந்தனம் கலந்த அவள் உடலின் மெல்லிய வியர்வை மணம் திரட்சியற்றி ருப்பினும் நாகத்திற்கு போதை தந்தது. அவளை விழுங்கிவிட தக்க சந்தர்ப்பம் ஒன்றிற்காய் காத்திருந்தது. தினம் தினம் மாலை நேரம் பால் வைத்து இன்புற்றுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போதை ஏற்றி, அவள் வாய் திறந்து கணீர் என்று தேவாரம் பாடும் போது நாகத்திற்கு முறுக்கேறும். மெல்ல எழுந்து வந்து அவள் உடல் சுற்றித் தழுவும். தட்டையான மார்புகளும், வரண்டு போன வயிற்றுப் புறங்களும் அலுப்பைத் தர கண்மூடி அவள் தூரத்தில் இருக்கையில் மெதுவாக அவள் அடிவயிறு நகரும். அவள் கலகலவென்று சிரித்தபடியே ஓடிவிடுவாள்.

வீட்டில் அவள் திருமணப் பேச்சை எடுத்த போது அவளை ஒருவரும் ஒரு பொருட்டாக வேனும் எண்ணவில்லை. தோஷத்தையும் தாண்டி ஜாதகம் ஒன்று பொருந்திவந்த சந்தோஷம் அவர்களுக்கு. வான் பிளக்க உரத்த குரல் எடுத்து நாகம் பற்றி அவள் கதறியது உதட்டோடு உறைந்துகொண்டது. நாகத்தை தன் தொடை அமர்த்தி தலைவருடி பாலைச் சொட்ட ஊற்றி கண் கலங்க தன் விதியை நொந்தாள். நாகம் அவசரம் கொண்டது. கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போகும் பயம் அதற்கு. உடை தளர்த்தி உள்ளே புக முயன்றது. அவளின் வேதனை அவளிற்கு. உதறிவிட்டு எழுந்துகொண் டாள்.

நாகம் பாய்ந்து அவளை வேகமாக அணைக்க அவள் திமிறினாள். மஞ்சள் கயிறைக் கொடுத்து கட்டி அழைத்துப் போ என்றாள். நாகம் தளர்ந்தது. பின்வாங்கியது. அவளின் உருவம் அதற்குப் பயம் கொடுத்தது. கருந் தோலில் துருத்திக் கொண்டிருக்கும் பற்கள் நாகத்தைப் பார்த்துச் சிரித்தன. மெல்ல மெல்லப் பின்வாங்கி ஓடிமறைந்தது நாகம். அவள் தனது தட்டையான மார்புகளைத் தடவிக்கொண்டாள்.

உடல்விறைக்க ஜடமாய்க் கிடந்து, வலி எழும்ப வாந்தி எடுத்து, கண்கள் சிவக்க சாமி ஆடி முயன்று பார்த்து முடியாமல் போய் அவள் கழுத்தில் தாலி ஏறியது. வெறுமனே கிடந்து தொடர்ந்து நான்கு குழந்தைகளை வயிற்றில் தாங்கிப் பெற்றுப் போட்டாள். இருந்தும் ஏங்கும் நாகத்தின் தழுவலுக்காய். நாகத்தை வீணே நழுவ விட்டதாய் மனம் கதறும். தன் வாழ்வின் முழுமை நாகத்துடனான புணர்விலேயே என்றும் தன் காதலை புனிதமானது என்றும் நம்பினாள்.

நீள்சதுர கண்ணாடி பிம்பத்தை தனக்குள் வாங்கிப் பிரதிபலிக்க, இருப்பதால் இடையளவிலிருந்து தலைமட்டும் கண்ணாடிக்குள் அடங்கிப்போய் இடுப்பு இறுக, பதிவாய் தொங்கும் பருத்த மார்பகங்கள்... வரிசையாய் மின்னும் பற்கள்... பதினாறில் தவறவிட்டது நாற்பதில் கிடைத்த சந்தோஷம் அவளிற்கு. உச்சியில் ஊடுருவும் வெள்ளை மயிர்களை மறைக்க மருதோண்டி போட்டுத் தலைகுளித்து தகதகப்பாய், கண்கள் உடலில் அர்த்தத்தோடு மேய பெருமையாய் இருந்தது அவளிற்கு. அவள் அழகாக இருந்தாள். இயற்கையை பணத்தால் வாங்கிவிட்ட சந்தோஷம். அவளை புரட்டிப் புரட்டிப் போட்டு அவள் தானா என்ற சந்தேகத்தை மீண்டும் மீண்டும் தீர்த்துக்கொண்டான் அவன். கண்களில் வீணாக விட்டுவிட்டோமே என்ற ஏக்கம் தெரிந்தது. அவள் குரூரமாகத் திருப்திப் பட்டாள். அவன் போய் விட்டான். இனி அழைப்பான்... குழைவான்... கெஞ்சுவான். அவளிற்குத் திருப்தியாய் இருந்தது.

அவள் மோகித்திருந்தாள். அண்டத்தின் அனைத்தும் அவளின் காலடியில் என்பதாய் மமதையில் மரணத்திற்கும் வாழ்விற்குமான இடைவெளியை ரசித்தபடியே அவள். மூலையில் தேடுவாரற்று புகைமூட்டமாய் அம்மாள். அருகில் பித்தளையில் நாகம்.

தொலைபேசி அலறியது. அவன் அழைத்தான்... குழைந்தான்... கெஞ்சினான். அவள் வெறுமனே ஜும், கொட்ட அவன் குழைவில் தீவிரம் புகுந்தது. அவள் செருமினாள். கண்கள் மின்ன பற்கள் புடைத்தன. எதுவோ அவளை உலுக்கி உயரத்திற்கு நகர்த்தியது. அவள் மீண்டும் குரலைச் செருமி மெல்லிய குரலில் அவனிடம் கேட்டாள்.. ,,நீ ஏதாவது மருந்து சாப்பிடலாமே. பத்துவயதுப் பெடியன்ர போலல்லோ இருக்கு.,,

தொலைபேசித் தொடர்பு அறுந்தது.

(2004/10)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இளமைக்காலம்

உழைத்த செல்வம் அத்தனையும் அள்ளித் தந்தாலும்
கிடைத்த புகழ் முழுவதையும் கொட்டித் தீர்த்தாலும்
அழகொளிக்கும் இளமையெல்லாம் அழிந்து போனாலும்
என் சிறுவயது ஞாபகத்தைத் திரும்பத் தருவாயா
இறைவா திரும்பத் தருவாயா

செம்பாட்டு மண்ணின் மணம் சில்லென்ற காற்றின் சுகம்
கள்ளமில்லா நட்பின் தரம் காணுகின்ற அழகின் லயம்
தாயன்பின் தாலாட்டின் சுகம் காலையிளம் குயில்களின் இதம்
இவையத்தனையும் வேண்டும் நிதம்
தருவாயா இறைவா திரும்பத் தருவாயா

மாமரத்தில் ஊஞ்சல்கட்டி மணிக்கணக்கில் ஆடிப்பாடி
புல்வெளியில் படுத்திருந்து புளுகுக்கதை சொல்லக் கேட்டு
குளக்கரையில் பொத்திகட்டி களைக்காமல் நீச்சலடித்து
சின்னஞ்சிறுவயதில் சிரித்து மகிழ்ந்த காலங்களை
திரும்பத் தருவாயா இறைவா திரும்பத் தருவாயா

பள்ளிவிட்ட நேரத்திலே பாடசாலை நண்பரோடு
மாற்றான் வீட்டு மாமரத்தில்
மாங்காய் பறித்துவந்து உப்போடு தூளும் சேர்த்து
எச்சில்படக் கடித்துச் சுவைத்த காலங்களை
திரும்பத் தருவாயா இறைவா திரும்பத் தருவாயா

மண்ணாலே வீடுகட்டி மணலிலே சோறு காய்ச்சி
சின்ன இலைகளிலே சிரிப்போடு பரிமாறி
கண்ணாலே கதைபேசி கவலையின்றி வாழ்ந்த
இளமைக் காலங்களில் தொலைத்துவிட்ட கனவுகளை
திரும்பத் தருவாயா இறைவா திரும்பத் தருவாயா

மாலைநேரம் ஆனவுடன் கைகால்முகம் கழுவி
சின்னக்கைகளிலே அன்னைதரும் நிலாச்சோற்றை
அக்காவுடன் சேர்ந்து ஆசைதீர உண்ட காலங்களை
தருவாயா இறைவா திரும்பத் தருவாயா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

ஒருநேரம் சண்டையிட்டு மறுநேரம் அணைத்துக்கொண்டும்
பாட்டியுடன் படுத்தவண்ணம் பழங்கதைகள் கேட்டுக்கொண்டும்
நாளைபற்றி கவலையின்றி அகமகிழ்ந்த காலங்களை
தருவாயா இறைவா திரும்பத் தருவாயா

மனதினிலே கள்ளம்இன்றி உயர்வுதாழ்வு ஏதுமின்றி
பொய்யும் புரட்டுமின்றி போதுமென்ற மனதோடு
ஓடித்திரிந்த அந்த துன்பமில்லாக் காலத்தை
பாடிக்களித்த அந்த தோல்விகாணா வேளைகளை
மீண்டும் தருவாயா இறைவா திரும்பத் தருவாயா

இயந்திரமாய் தோன்றகின்ற இயல்புநிலை அழிந்துவிட்ட
இன்றைய வாழ்க்கையிலே
நிலையில்லா அன்பிற்கும் விலைபேசும் மானிடத்தின்
மரணப்பிடியின் இறுக்கத்திலே
இழந்துவிட்ட என் வசந்த காலங்களை
தந்துவிடு இறைவா மீண்டும் திருப்பித் தந்துவிடு

(2004/10)



சௌந்தரி
(அவுஸ்திரேலியா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நகல்கிறது நதி

மோதிப் புரண்டு
சிரித்து சிலும்பி
கரை மீறி நாணல்கள் திருப்பி
எதிர் நீச்சல் போடும் மீன்களோடும்
பாறைகளுக்குள் பதுங்கும் நண்டுகளோடும்
எங்கோ உதிர்ந்த பூக்களின் வாசமோடும்
நீர் தொட்டு விடாது கரையில் தவமிருக்கும்
இலைகளை நனைக்க முயற்சித்த படி
சில நேரம் அருவியாகவும்
சில நேரம் அமைதியாகவும்
தாவித் ததும்பி
ஓடிக் கொண்டிருந்தது நதி
கரை யோரத்து நாணல்கள்
கால்களை நனைத்து
புறணி பேசித் திரியும்
நதியை நதியின் நீரை
சுதந்திரமாய் திரிய இடம் தந்தது
கரைதானென்று பெருமையாய்

அறியாது பேசும் நாணல்கள்
அடித்து சிதைத்தபடி நகல்கிறது நதி

கரையின் மேலும்
பாறையின்மேலும்
வேரூன்றி விட்ட வெறுப்பு
வெடிக்கச் செய்தது
என் சிறை ஓட்டை


சுதந்திரம் நானெப்படி பழகினேன்
என்று நிகழ்த்திய படியும்

யாரும் கை தானம் தந்ததல்ல
எரியும் வெறுப்பு
எரித்து போட்ட சுவர்கள்
சுதந்திரமல்ல

என் வெற்றியையும்
உன்
பெருந்தன்மையாய்
மாற்றிப் போன சூழ்ச்சி
என்று சொல்லிய படியும்

அறியாது பேசும் நாணல்களை
அடித்து சிதைத்தபடி நகல்கிறது நதி

*(2004/10)*



திலகபாமா
(இந்தியா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கல்யாணி இரண்டு பைகளைத் தூக்கிக் கொண்டு பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். யாரோ அவளைக் கூப்பிடுவது கேட்டது. அது சோபி. அவள் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் இருந்த ஒரு வாங்கில் இன்னும் மூன்று பெண்களுடன் அமர்ந்திருந்தாள்.

**மல்லிகா (ஜேர்மனி)**

**சோபி:** ஹலோ! கல்யாணி! மார்க்கட்டுக்குப் போயிட்டு வாறீரே?

**கல்யாணி:** ஓம். நீர் எங்கை போறீர்?

**சோபி:** நான் வேலை முடிந்து வீட்டுக்குப் போகிறன். இது என்னோடு வேலை செய்யிற ஆக்கள். இவ லீ. என்னோடு வேலை செய்யிறவ. இது விமலா. அவவின்ரை மச்சாள் மாயா.

**கல்யாணி:** ஹலோ! ஹலோ! ஹலோ!
இப்ப ஒரு பஸ் வர வேண்டுமெல்லோ?

**சோபி:** இன்னும் ஐந்து நிமிஷத்திலை ஒரு பஸ் வர வேண்டும். நாங்கள் இரண்டு பஸ்களை விட்டுட்டம்.

**கல்யாணி:** ஏன்?

**சோபி:** விமலா, மாயாவுடன் என்னைச் சந்திக்க வந்தவ. பாவம் அவவிற்குக் கன பிரச்சனை. நாங்கள் அவவின்ரை பிரச்சினை பற்றிக் கதைத்துக் கொணடிருந்து இரண்டு பஸ்களை விட்டுட்டம். நீர் வந்ததும் நல்லதுதான். நாங்கள் கொஞ்சம் கதைக்கலாம்

**கல்யாணி:** பஸ் ஸ்ரான்டிலை இருந்து பிரச்சனைகள் தீர்க்கிறது அவ்வளவு நல்லதல்ல.

**மாயா:** (அழுது கொண்டு) ஐயோ! அக்கா எனக்கு உதவி செய்யுங்கோவன். எனக்கு விசர் பிடிக்கப் போகுது.

**கல்யாணி:** அழ வேண்டாம் மாயா! என்ன நடந்தது என்று எனக்குச் சொல்லும்.

**விமலா:** (இடை மறித்து) மாயா என்ரை புருசனுடைய தங்கச்சி. இவவுக்கு 22 வயதாகிறது. அவ சாதிகுறைஞ்ச ஒருவரை விரும்பினவ. நாங்கள் எல்லாரும் அதற்கு எதிர். இதை முறிக்கிறதற்கு என்ரை புருசன் பாவம், கடன்பட்டு, நகையளை அடகு வைத்து இவவை இங்கை கூப்பிட்டு ஒரு கலியாணம் செய்து வைச்சவர்... அவருக்கு ஐந்து சகோதரிகள். ஒரு சகோதரியின்ரை புருசன் சண்டையிலை செத்துப் போனார். பாவம் பொடியள், சண்டையாலை எவ்வளவு கஷ்டம். மற்ற சகோதரி...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கல்யாணி:** இப்ப மாயாவின்ரை பிரச்சனை என்ன?

**விமலா:** இப்ப மாயாவிற்கு அவவின்ரை புருசனோடை பிரச்சனை. கலியாணம் முடிச்சு இரண்டு மாதத்திலேயே ஆரம்பிச்சுட்டது. எந்த நாளும் குடிச்சுப் போட்டு அடிக்கிறாராம். என்ன செய்யிறது. அவரவரின்ரை விதி. நாங்கள் பொம்பிளையள். வாறதைப் பொறுக்கத்தான் வேண்டும். இந்த லீயைப் பார். இரண்டு கலியாணம் முடிச்சிட்டாள். முதல் ஜேர்மன்காரனைக் கட்டினவள், இப்ப ஒரு இந்தியனைக் கலியாணம் செய்திருக்கிறாள். நாங்கள் அப்படி இருக்கேலாது. எங்கடை கலாச்சாரம் வேறு. கலியாணமான பொம்பிளையள் கவனமாகத்தான் இருக்க வேண்டும். எங்கடை குடும்பங்களைப் பற்றி யோசிக்க வேண்டும்.

**கல்யாணி:** விமலா, நீங்கள் சொல்லிறது ஒண்டும் எனக்கு விளங்கவில்லை. இப்ப அவளை என்ன செய்யச் சொல்றியள். முதல் காதலும் முறிந்து போச்சு. இப்ப உள்ள புருசனோடும் சந்தோசமாக இல்லை. அவன் குடிச்சுப் போட்டு அடிக்கிறான் எண்டு சொல்லிறியள். அவ தன்ரை கதையைச் சொல்ல விடுங்கோவன்!

**மாயா:** ஓம் அக்கா! நான் வடிவில்லையாம். கொண்டு வந்த சீதனம் போதாதாம். தான் வடிவான ஜேமன்காரியோட இருந்தவராம். தாய், தகப்பன்ரை சொல்லைக் கேட்டு அவளை விட்டவராம். அவள் தம்பிமாருக்கு விசா எடுத்து இங்கை இருக்க உதவினவளாம். நான்தான் தனக்குப் பிடித்த தரித்திரம் என்று என்னை அடிக்கிறார்.

**கல்யாணி:** நீ, இப்ப என்ன செய்யப் போகிறாய்?

**மாயா:** அவரோடை என்னாலை இனி இருக்க முடியாது. என்னை வீட்டிற்குள்ளை வைத்துப் பூட்டி விடுகிறார். டெலிபோனையும் பூட்டி விடுகிறார். நேற்று குடிச்சுப் போட்டு நித்திரையாய்ப் போனார். நான் அண்ணர் வீட்டிற்கு வந்திட்டன். அண்ணருக்கும் மச்சாளுக்கும் எல்லாக் கதையும் சொல்லியிட்டன். ஆனால் அவை என்னைத் திரும்பிப் போகட்டாம். என்னால் போக முடியாது அக்கா! என்னால் முடியாது!! இந்த முறை அவர் என்னைக் கொல்லுவார். அந்த வீடு சிறை மாதிரி. ஒரு நரகம்.

அவள் அழத் தொடங்கினாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**லீ:** (எழும்பியபடி) என்னுடைய பஸ் வருகுது. எனக்கு நீங்கள் பேசுகிறதும் விளங்கவில்லை. இருக்கிறதில் பயனுமில்லை.

**சோபி:** நல்லது அவள் போனது. அவளுக்கு ஜேர்மன்காரனுக்கு ஒரு பிள்ளையிருக்கு. பிள்ளையைப் பார்க்கக் கூட விடுவதில்லையாம். அவளுக்கும் கவலையில்லை. நாங்கள் அப்படியிருக்கேலாது.

**கல்யாணி:** உனக்கு எப்படித் தெரியும், அவளுக்குக் கவலையில்லையென்று? நீ அவளின்ரை சூழ்நிலமைகளைப் பற்றி யோசிக்கிறாய் இல்லை. அவள் ஏன் அவனை விட்டவள்! அவளை சொந்தப் பிள்ளையை ஏன் அவன் பார்க்க விடுகிறான் இல்லை! அவள் ஏன் இரண்டாவது தரம் கலியாணம் செய்தாள். இது எல்லாம் புதிய விஷயங்கள் இல்லை. சரி. இப்ப நாங்கள் மாயாவின்றை விஷயத்தைக் கதைப்பம். அவள் சமூக(?) வித்தியாசத்தால் - பாகுபாட்டால் (?) பாதிக்கப்பட்டவள். சாதி, சீதனம், ஒழுங்கு செய்யப்பட்ட கலியாணம், குடும்ப கௌரவம்... இப்படியெல்லாம். ஒரு மனிசனாலை அவள் துன்பப்பட்டு அடிவாங்கிக் கொண்டு இருக்கிறாள். அவள், பெண் என்பதாலை துன்பப்படுகிறாள். இப்ப அவள் திரும்பிப் போய் அடி வாங்கி சாக வேண்டுமென்று நீங்கள் சொல்லிறியள். இதுதான் எல்லாப் பெண்களுக்கும் நடக்கிறது. அவள் ஜேர்மனோ, சீனாவோ, அல்லது ஸ்ரீலங்காப் பொம்பிளையாக இருந்தாலென்ன. பெண்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறும் வரைக்கும் இந்த வித்தியாசம் தொடரும்.

**விமலா:** ஓ! நீ பெண்நிலைவாதி போலக் கதைக்கிறாய்! உன்ரை புருசன் வீட்டிலை சமைக்கிறார். நீ சுதந்திரமாய் இருக்கிறாய்!! விடுதலை பெற்று விட்டாய்!!

**கல்யாணி:** இல்லை! நான் பெண்ணிலைவாதம் பேசவில்லை. புருசன் வீட்டில் சமைக்கிறபடியால் ஒரு பெண்ணும் விடுதலையடைகிறது கிடையாது. பெண்ணிலைவாதம் பேசிய முதல் பெண்ணே விடுதலை பெறவில்லை! நாங்கள் விடுதலைக்கு நீண்ட தூரம் போக வேண்டியுள்ளது. ஒரு பக்கத்தில் பெண்களே பெண் ஒடுக்கு முறைக்குக் காரணமாக இருக்கிறார்கள். ஒரு பெண்ணை இன்னுமொரு பெண் விளங்கிக் கொள்ள முடியாவிட்டால், என்ன கலாச்சாரத்தை நாங்கள் காப்பாற்றப் போகிறோம்.

ஓ! என்னுடைய பஸ் வருகுது. நான் போகிறன்.

(2004/10)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேகம் மிக மோசமாய் இருண்டு கொண்டு வந்தது! மெல்லிய குளிர் காற்று வர வர சில்லென்று வீசத்தொடங்கி விட்டது! நேற்று மாலை தொலைக்காட்சியில் அறிவிக்கப்பட்டிருந்த அபாயகரமான காலநிலை அறிக்கை அநேகமானவர்களை இயல்பாகவே துரிதப்படுத்தத் தொடங்கியிருந்தமை ஊகிக்கக் கூடியதாயிருந்தது!

நான் 'எலிசபெத்' றோட்டில் நின்றிருந்தேன். காருக்குள் காத்திருப்பு என்பது மிகப் பெரிய சோதனையாய் நீண்டு கொண்டிருந்தது! 1st Gear ல் நின்று களைத்து neutral ஆக்கி hand brake போட்டு விட்டு நிற்பதிலுள்ள எரிச்சலை விட, ஒரு வாரத்திற்கான பெற்றோல் ஒரு நாளிலேயே தீர்ந்து விடப் போகிறதென்ற எரிச்சல். மகா அவஸ்தையாய், உளைச்சலாய், நமைச்சலாய், ஒப்பாரியாய் உள்ளே இரைந்து கொண்டிருந்தது.



சந்திரா ரவீந்திரன் (லண்டன்)

# பனிமழையும் ஒரு சனிக்கிழமை மாலையும்

**''பனி மழை மேகம் பருவக் குளிர் தரும்! சில்லென்ற காற்றாய்...சேர்ந்து ஒரு பூவாய்...'' - ஒரு காலத்தில் இப்படி உருகியுருகி வானொலியுடன் இணைந்து பாடியது எவ்வளவு சிறுபிள்ளைத்தனம் என்று எண்ணத் தோன்றியது. பனி எப்படியிருக்கும்? பனிக்குளிர் எப்படியிருக்கும் என்று சரியாகத் தெரியாத பருவமும் வாழ்விடமும் அப்போது. தெரிந்திருந்தால் அப்படியா பாடி மகிழ்ந்திருப்பேன்..?**

பவதாரணியின் குரலில் ஒலித்த ஏதோ ஒரு பாடல் முடிவுற்று, இப்போ டப்பாங்கூத்துப் பாடல் ஒன்றிற்கான மேள அடி ஆரம்பமாகியது. எரிகிற நெருப்பில், இது ஒன்று..! சடார் என்று அடித்து நிறுத்தினேன். றேடியோ பழுதானாலும் பரவாயில்லை. அப்படி அடித்து நிறுத்தியது கொஞ்சம் மனதிற்குச் சுகமாக இருந்தது.

எலிசபெத் வீதியின் இரண்டு லைனிலும் வாகனங்கள்... வரிசையாக.! முன்னுக்கு நிற்கும் காரில் கழுத்துத் தோற்பட்டை கட்டிய நாயின் முகம் தெரிந்தது. பின் காரில் முகமெல்லாம் சொக்லேட் வழியும் குழந்தைகள்! பக்கத்தில் ஒரு பென்ஸ் கார். 'அட இந்தத் தாடிக்காரன் இவ்வளவு நேரமும் என்னையா பார்த்தபடி இருக்கிறான்?' நான் முகத்தை மெதுவாக திருப்பிக் கொண்டேன். பின்லாடன் சாங்கமாகவும் இருந்தது! ஆனால் வெள்ளையன் அல்லது இத்தாலியனாகத் தான் இருக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும். அவுஸ்திரேலியாக் காரரும் இப்படி பொன் தாடி வைத்திருப்பதுண்டு. சரி யாராவது இருந்துவிட்டுப் போகட்டும்.

முன்னால் பளீரென்று கோடிட்ட வெளிச்சம் மின்னி மறைய, வின்ஸ்கிறீன் ஊடாய் குனிந்து பார்த்தேன். அடடா மின்னல்! மீண்டும் அதே.! ஆகா...இந்த வெள்ளிக்கோடுகளை எனதூர் பிள்ளையார் கோவில் வீதியில் நின்று பார்த்து ரசித்திருக்கிறேன்... பயந்துமிருக்கிறேன். எத்தனை வருடங்களின் பின் மீண்டும்..! .இன்னொரு தடவை வராதா என்று குனிந்து வானத்தையே பார்த்தபடி இருந்தேன்.. வரவில்லை. அப்படியே இலேசாய் திரும்பிய போது பக்கத்து லைனில் நின்றிருந்த அந்த ஒல்லியான உயரமான தாடிக்காரன் ஸ்ரியரிங்கை முற்றிலுமாக மறந்து விட்டு, வலு சந்தோசமாக பியர் அடித்துக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் கண்ணடித்துச் சிரித்தான்! ‘கிழிஞ்சுது போ!. இவன் இனிப் புறப்படும்வரை இந்த நெளிப்புகளோடுதான் இருக்கப் போகிறான்.

மேகம் மேலும் இருண்டு கொண்டு வர மாலை 4.00 மணிக்கே ஒளிரத் தொடங்கி யிருந்த தெரு மின் விளக்குகள் அதிக ஜொலிப்போடு மென்மஞ்சள் ஒளியைப் பரவவிட்டிருந்தது. ‘ஊ..ஊ.. என்ற இரைச்ச லுடன் சில்லிட்ட காற்று வந்து கார் கதவு களையும் கண்ணாடிகளையும் இடித்துச் சென்றது. வீதியோரம் ஒரு குழந்தை, தாயின் விரல்களைப் பிடுங்கி எறிந்து விட்டு கூச்சலிட்டபடி விளையாட்டாய்த் தாவி ஓடிக்கொண்டிருந்தது! அந்த இளந் தாயும் குழந்தையின் வேகத்திற்கேற்ப அங்குமிங்குமாய் அலைந்தலைந்து ஓடிக் கொண்டிருந்தாள்! அவளின் கம்பிக் கூந்தலும், கழுத்தில் கட்டிய ஸ்காவும் காற்றின் வேகம் தாளாமல் சிதறிச்சிதறி அலைந்து கொண்டிருந்தது! கொஞ்ச மாணவர் கூட்டம் பொறுமைமீறி, எதிர்ப்புறம் நீண்டநேரமாய் நின்று கொண்டிருக்கும் பஸ் இலிருந்து இறங்கி நடக்கத் தொடங்கியி ருந்தார்கள். உயர் வகுப்பு மாணவர்களாய் இருக்க வேண்டும். கோட், சூட், ரை என்று அழகாயிருந்தார்கள். வீடு போய்ச் சேருகிற அவசரம் நடையில் தெரிந்தாலும் ஏதோ ஜோக் அடித்துச் சிரித்தபடியே போய்க் கொண்டிருந்தார்கள். இப்போ குளிர் காற்றின் வேகம் மேலும் அதிகரித்திருப் பதாய் தோன்றியது. வீதியோரமுள்ள மரங்கள் பேயாட்டம் ஆடிக் கொண்டி ருந்தது. தூரத்தில் வாகனநிறுத்த விளக்குகள் தன்பாட்டில் பச்சை சிவப்பு என்று மாறிக் கொண்டிருந்த போதிலும் வாகனங்கள் எதுவும் நகருவதாய் தெரியவில்லை. தூரத்தில் பொலிஸ் சைரன் ஒலியும், அம்புலன்ஸ் ஒலியும் பெரும் ஓலங்களாய் அண்மித்து... அப்பால் போகமுடியாமல் தத்தளித்து... வாகனங் கள் அங்குமிங்குமாய் நெளிந்து, நகர்ந்து இடங்கொடுக்க, ஏதோவிதமாய் நுழைந்து... போய் மறைந்து கொண்டிருந்தன.

எங்கோ விபத்து... அதனால் தான் இந்த வாகன நெருக்கடி என்று தோன்றியது. லண்டனின் காலநிலை விபத்து வாகன நெருக்கடி என்பன வழமை போலவே ஒரு ஒழுங்கு வரிசையில் அரங்கேறிக் கொண்டி ருந்தன. பொறுமையற்றவர்கள் குறுக்கு வீதிகளிற்குத் திரும்புவதற்காக கோர்ண் அடித்துக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பதிலாக தொந்தரவு செய்யாதே என்ற பதில் கோர்ண்கள்! பாட்டுக்குப் பாட்டு மாதிரி இது ட்ரைவர்ஸ் பாஷை.

நேரம் என்னைப் பயமுறுத்தத் தொடங்கியிருந்தது. வேலைக்குரிய நேரம் இன்னும் சில நிமிடங்களில் தான் தங்கி யிருந்தது. திடுமென்று ஏதோ... வெண்மை யாய்க் கண்களை மறைக்க, கண்ணாடி யினூடாய் வெளியே உற்றுப் பார்த்தேன். அட என்ன இது.. குளுக்கோஸை ஊதிவிட்ட மாதிரி..! பார்த்துக் கொண்டி ருக்கும் போதே மேகத்திலிருந்து பஞ்சுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதிகள் பறக்கத் தொடங்கிவிட்டன. எந்தவித ஓசையுமின்றி வெண்பூக்கள் என் காரைஅலங்கரிக்கத் தொடங்கியிருந்தன.

கண்ணிமைக்கும் நேரத்தில் எல்லா வாகனங்களும் பனி மழையில் வெண்ரதங்களென மாறிக்கொண்டிருந்தன. பக்கத்தில் பென்ஸ் கார் ட்ரைவரை இப்போ என்னால் பார்க்க முடியவில்லை. wiper ஐப் போட்டதும் windscreen இலிருந்து பூக்கள் சிதறின. பனிப்பூக்கள் விழுவதும், பின் நீராய் சிதறி வழிவதுமாய், என் முன்னால் பனியும் wiperம் போட்டி போட்டபடி இருந்தன.

'பனி மழை மேகம் பருவக் குளிர் தரும்! சில்லென்ற காற்றாய்...சேர்ந்து ஒரு பூவாய்...' - ஒரு காலத்தில் இப்படி உருகியுருகி வானொலியுடன் இணைந்து பாடியது எவ்வளவு சிறுபிள்ளைத்தனம் என்று எண்ணத் தோன்றியது. பனி எப்படியிருக்கும்? பனிக்குளிர் எப்படியிருக்கும் என்று சரியாகத் தெரியாத பருவமும் வாழ்விடமும் அப்போது. தெரிந்திருந்தால் அப்படியா பாடி மகிழ்ந்திருப்பேன்..?

அதிசயம் ஆரம்பித்திருந்தது. வாகனங்கள் நகரத் தொடங்கியிருந்தன. வாகன இடைவெளிகளில் வெள்ளிப் பூக்கள் வீதியெங்கும் நிரவியிருப்பது தெரிந்தது. பனிமழை வேகம் அதிகரித்திருந்தது. கண்கட்டிவித்தை காட்டுவது போல் எங்கும் மூட்டமாய் வெண்தோரணங்கள் மட்டும் படர்ந்தபடி..! மீண்டும் அம்புலன்ஸ் ஒன்று கூவியபடி வழிகேட்டுக் கடந்து போய்க் கொண்டிருக்கிறது. இந்த நிலை இன்னமும் அதிகரிக்கலாம்.

இன்று சான்ரா தான் செக்அவுட் மனேஜராக இருக்கவேண்டும். லேற் ஆகப் போனாலும் மன்னிக்கிற மனப்பக்குவம் அவளுக்கு மட்டுமே உண்டு என்பது பலருக்குத் தெரியும். ஆனால் எனக்குக் கஷ்டகாலம் என்றால் எப்பவும் மோறின் நிற்பது வழக்கம். விழிகளை ஒரு தடவை உருட்டி சுவரில் தொங்கும் பென்னம்பெரிய மணிக்கூட்டை ஒரு தடவை நிமிர்ந்து பார்ப்பாளாயிருந்தால், 'இந்தச் சேட்டை எல்லாம் என்னோடு சரிவராது' என்று அர்த்தம். அவளின் அந்தச் செய்கை அங்குள்ள எல்லா வாடிக்கையாளர்களையும் ஒருதடவை அந்த மணிக்கூட்டை நிமிர்ந்து பார்க்க வைக்கும். பனி, குளிர், வாகன நெருக்கடி எல்லாம்... அப்போ வார்த்தைகளிற்குள் வராதவையாகிவிடும். அரைவழியோடு பேசாமல் வீட்டிற்குத் திரும்பி விடுவோமா என்று தோன்றியது. பிள்ளைக்குச் சுகமில்லை வரமுடியவில்லை. என்று சொல்லி விட்டால் விடுமுறையில் அல்லது சுகவீன விடுமுறையில் போடக் கூடும். இம் மாதம் busy மாதம் என்பதால் சனிக்கிழமைகளில் விடுமுறை இல்லை என்றாகி விட்டது. சுகவீன விடுமுறை 5 வீதத்திற்கு மேல் என்றால் விசாரணை, வைத்திய சான்றிதழ் என்று ஒரே ரகளையாகிவிடும். அதைவிட ஒரு விழியுருட்டலும் முகம் நீட்டலும் பரவாயில்லையோ என்று தோன்றியது.

மீண்டும் நெரிசல். வாகனங்கள் முட்டுப் பட்டுக்கொண்டு நின்று விட்டன. பின்னால் நீளமாக fog, ஒளியைப் பாய்ச்சியபடி வரிசையில்! பெற்றோல் புகையாய்க் கரைந்து கொண்டிருந்தது. தூரத்தில் மீண்டும் பொறுமையற்ற கோர்ண் சத்தங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பனிமழை இப்போ அழகியலைத் தாண்டி எரிச்சலியலாய் மாறிக் கொண்டிருந்தது. கார்ச் சில்லுகள் பட்ட இடமெல்லாம் வீதியில் கருங்கூழாய் மாறிக்கொண்டிருந்தது.

லண்டன் மாநகர் வீதிகளில் பனிமழையினூடாய் வாகனங்களில் ஊருவதென்பது கடவுளும் காலநிலையும் சேர்ந்து மனித குலத்திற்குச் செய்யும் மிகப் பெரும் வாழ்க்கைச் சோதனை.

இப்படியே ஊர்ந்து, தவழ்ந்து, உருண்டு, புரண்டு, மனசிற்குள் சொல்லொணாசோகம் இசைத்து...வேலைத்தளம் போய்ச்சேர்ந்த போது 35 நிமிட நேரம் தாமதமாகியிருந்தது. நிச்சயமாய் ஒரு மணிநேரச் சம்பளம் வெட்டித் தள்ளப்படும். அதில் எந்தவித சந்தேகமும் கிடையாது!

*car park* பனிச்சேற்றில் உழுதுகிடந்தது. அதற்குள் புதைந்து...புதைந்து இடம் தேடி, *par;* செய்துவிட்டு உள்ளே நுழைந்தேன். *clock machine* 5.40 காட்டிக் கொண்டிருந்தது. மாலை 5.00 மணிக்கு வேலையில் இருக்க வேண்டிய நான், ஒரு மணி நேர ஊதிய இழப்பின் வேதனையோடு *clock card* இனை இழுத்து விட்டு, மாடிப்படிகளில் தாவி ஏறி, லேடீஸ் அறையில் 'கோட்' ஐக் கழற்றிக் கொழுவிவிட்டு, லொக்கரில் *hand bag* இனைத் தள்ளிப் பூட்டிவிட்டு அவசரமாய்க் கீழே இறங்கிய போது, கையிலிருந்த பேனா உருண்டு... கதரின் காலடியில் போய் நின்றது. அவள் சிரித்தவாறே தூக்கித் தந்தாள்.

*"Are you allright chan? I need to come to work at 4.00. See me, just I came. horrible weather..."*

அவள் புறுபுறுத்தவாறே மேலே ஏறிப் போய்க் கொண்டிருந்தாள். நான் பரவாயில்லையோ என்று தோன்றியது.

ஸ்ரோர், வாடிக்கையாளர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. பனிமழை ஆரம்பமாவதற்கு முன்பே இவர்கள் இங்கு வந்தருளியிருக்க வேண்டும். போதிய ஊழியர்கள் வந்து சேர்ந்திடாத பற்றாக் குறை நிலை, மனேஜர்ஸ் ஐ திக்குமுக்காட வைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. சாதாரண *filling* செய்பவர்கள் எல்லாம் செக்அவுட்டில் நிரப்பப்பட்டிருந் தார்கள். 26 செக்அவுட்ஸ் உம் மிகச் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.

என்னைக் கண்டதும் சான்ட்ரா முகம் மலர வரவேற்றாள். *"Are you all right chan?"* என்றாள் அக்கறையாக. பனிமழையையும் வாகன நெரிசலையும் அவளும் அனுபவித்திருப்பாள் என்று தோன்றியது. 24 வது செக்அவுட் இல், அடிஸ் ஐ *take off* செய்யும்படி கூறி அனுப்பினாள். வாடிக்கையாளர்களின் நீண்ட வரிசைகளை துளைத்து 24 வது செக்அவுட் ஐ அடைந்தேன். மேலே பெரிய போஸ்ரர் *"Best quality of products and Biggest store in North London- service in 24 hours- TESCO"* என்ற எழுத்துக்களுடன் காற்றில் இலேசாய் அசைந்து கொண்டிருந்தது.

அடிஸ் என்னைக் கண்டதுமே சோர்வு கலைந்து குதூகலத்துடன் துள்ளி எழுந்தான். *"Thanks so much chan!"* என்றான், முகமெல்லாம் புன்னகை யில் மலர. இதுவரை சேர்ந்த *cash* ஐக் கூட lift up செய்யாமல் *sign off* செய்து விட்டுப் போய்விட்டான். அவ்வளவு அவசரமாயிருக்க வேண்டும். தண்ணீர் ஏற்றவேண்டிய தேவை, அல்லது தண்ணீர் இறக்க வேண்டிய தேவை மிகக் கட்டாயமானதாய் இருந்திருக்க வேண்டும்.

வாடிக்கையாளர்கள் பெரும் சுமைகளுடன் வரிசையாகக் காத்து நின்றிருந்தார்கள். சிலர் இவ்விரண்டு றொலிகளில் கூட நிரப்பி வைத்திருந்தார்கள். ஒவ்வொருவராய் சிரித்த முகத்துடன் *clear* பண்ணிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருந்தேன். சிரிப்பு வருகிறதோ இல்லையோ சிரித்தபடியே பரிமாறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு வேறு பல கதைகள் உண்டு. செக்அவுட் இல் புன்னகையை இழந்து பணியாற்றிக் கொண்டிருப்பது ஈற்றில் பல விசாரணைகளில் போய் முடிந்து விடும். நிறைய அனுபவப்பட்டதால் எப்பவும் அந்த விடயத்தில் மிகக் கவனமாகவே இருப்பதுண்டு.

இப்போ முன்னுக்கு நின்றவனின் cash card முரண்டு பண்ணிக் கொண்டிருந்தது. அவனின் கையில் ஜொலித்துக் கொண்டிருக்கும் தடித்த வெள்ளி வளையமும், கழுத்தில் வடமிட்டிருக்கும் வெள்ளிச் சங்கிலியும் அவனை கறுப்பின ஜமேய்க்காக்காரன் என்று சொல்லாமல் சொல்லியது.

Card accept பண்ண முடியுதில்லை, வேறு method ஏதும் உண்டா? என்று கேட்டேன். அவ்வளவுதான். அவன் ஆ...ஊ... என்று கத்தத் தொடங்கி விட்டான். ஆக , ஒரு சான்விச் உம் டெய்லிமிரா பத்திரிகையும் தான் வாங்கியிருந்தான். 2.25 பவுண்ஸ் இற்கே card இழுக்க முடியவில்லை. கள்ளக் card ஆக இருக்க முடியாது. ஏனென்றால் கள்ளக் card என்றால் அள்ளுகிற அளவுக்கு அள்ளப் பார்த்திருப்பான்- கூடவே cash back ற்கும் முயற்சி செய்து பார்த்திருப்பான். 'என்னிடம் வேறு card ஏதும் இல்லை, இதில் தான் pay பண்ணுவேன்' என்று தடித்த குரலில் அடம்பண்ணிக் கொண்டு நின்றான் அவன்.

நல்ல முழுவியளமடா சாமி, நான் எரிச்சலில் suppervisor calling button ஐ ஊன்றி அழுத்தினேன். சிவப்பு ஒளி விட்டு விட்டு மின்னத் தொடங்கியது. யூனிஸ் பரக்கப் பரக்க ஓடி வந்தான். 'அடக் கறுமமே,சான்ட்ரா வருவாளென்று பார்த்தால் இவன் வருகிறான். அப்போ சான்ட்ரா டியூட்டி மாறிவிட்டாள். இந்தப் பாவியுடன் இன்று break எடுத்த மாதிரித்தான். இவனிடம் break கேட்டால் தன் வீட்டுச் சொத்தைத் தூக்கித் தருவது போலல்லவா துடித்துப் போய்விடுவான். இன்றைய நாளை, எனக்குரிய அதிர்ஷ்டம் மிக்க நாளாக பிரகடனப்படுத்தப் போகிறவன் போல அவன் இப்போ வந்து கொண்டிருந்தான். ஒரு தேசிங்குராஜா போல நடந்து வரும் இவன் எப்பவும் குனிய மாட்டான், வளைய மாட்டான், குனிய வேண்டிய தேவை வரின், அருகில் அவசர வேலையில் மூழ்கிக் கிடப்பவனையும் சட்டென்று அழைத்து, இருத்தி எழுப்பி விட்டுப் போகிறவன். திடீரென்று காணாமல் போவான். பின் hand phone இல் சிரித்து வழிந்தபடி திடுமென்று முன்னால் தோன்றுவான்! இப்போ சிரிக்காமல் வந்து நின்றான்.

"chan! whatproblem...?"என்றான். விளக்கினேன். Card உடன் custermer ஐயும் சேர்த்துக் கூட்டிக்கொண்டு போய் விட்டான். வரிசைகளிற்கிடையே முத்தச் சத்தம் கேட்டபடி இருந்தது. இந்த முத்தக் காட்சிகளை இன்னும் துணிந்து முழுமையாகப் பார்க்கிற தைரியம் வந்துசேரா விட்டாலும் சாடைமாடையாகப் பார்த்த படியே பணியாற்றிக் கொண்டிருந்தேன். வயிற்றின் நடுக்குழியில் வெள்ளி வளையம் மின்னிக் கொண்டிருந்த சிவந்த இடையை ஒரு கருங்காலிக் கை நெரித்தபடி இருந்தது. எனக்கு மூச்சுத் திணறிவிடும் போலிருந்தது. அவள் கிளுக்..கிளுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கென்று சிரித்தபடியே இருந்தாள். பனி மழை, பியர் மழை, தூஷண மழை...இப்படிப் பலவிதமான மழைத் தூறல்களிடையே இந்த முத்த மழையும் இம் மண்ணில் மிகப் பிரசித்தமானது என்பதால் அதனை ஓரள வேனும் பார்க்காமல் முகத்தைத் திருப்பிக் கொள்வது ஒரு அனுபவ இழப்பு என்பது போல பின்னும் முன்னும் நிற்பவர்கள் அவர்களைப் பார்ப்பதும் பின் வேறெங்கோ பார்ப்பதுமாய் இருந்தார்கள். வரிசை தொடர்ந்து நகர்ந்து கொண்டேயிருந்தது.

ஒருவாறு இடுப்பும் கை மூட்டும் பிரிகிற நிலை ஆரம்பிக்கத் தொடங்கி விட்டது. பெரிய பெரிய பியர் கான் பெட்டிகளும், கோக் பெட்டிகளும், தொலைக்காட்சிப் பெட்டிகளையும் இழுத்துப் பறித்து ஸ்கான் செய்வதில் ஒவ்வொரு மூட்டுகளும் ஆட்டம் காணத் தொடங்கிவிடும். ஜனங்களின் வரிசை, முற்றுப்புள்ளிக்கு இடமில்லாமல், முடிய முடிய நிரவிக்கொண்டே இருந்தது. தொடர்ந்து நான்கு மணிநேரம் இழுத் தெறிந்தாயிற்று. இனி break இல்லா விட்டால் தேறுவது கஷ்டம் என்ற நிலையும் வந்தாயிற்று! மாசி மாதங்களில் வரும் பிரசித்தமான நாளைய நாள் வலன்ரைன்ஸ் நாள் என்பதால் அநேக மானோர் பூங்கொத்துகளும் வாழ்த்து மடல்களுமாகவே நின்றிருந்தார்கள். குழைந்தைகள் ஏறுமாறாய் குதித்துக் கொண்டு திரிந்தார்கள். யாரோ ஒரு இளைஞன் தரையில் கொட்டியிருந்த தயிர்க் கட்டியின் மேல் கால்வைத்து, சறுக்கி விழப்பார்த்து, இலேசாய் கைகளை ஊன்றிக் கொண்டு எழுந்துவிட்ட போதும், அம்புலன்ஸ் ஐக் கூப்பிடு என்று ஒற்றைக் காலில் நின்று, எல்லோரையும் இரண்டு பண்ணிக் கொண்டிருந்தான்.

யூனிஸ் அண்மையில் வரும் சமயங்களி லெல்லாம், நான் என் break இனை ஞாபகப்படுத்தியபடியே இருந்தேன். அவன் இரக்கத்துடன் பார்ப்பான், பின்பு அப்படியே போய்விடுவான். போனமாதம் கர்ப்பிணியாய் இருந்த ரதிக்கா, இந்த யூனிஸ் break கொடுக்காமல் அசௌகரியப்படுத்தியதி லிருந்து சுகவீன விடுமுறையில் நிற்கிறாள்.

திடுமென்று, நான் சற்றும் எதிர்பாராத வகையில் supervisor ஸ்ரீவ், மினுங்கு கிற phone ஒன்றை இடுப்பில் சொருகிய படி என்னை நோக்கி வந்து கொண்டிருந் தான். *"Hi chan...have your break 20 minutes ...after this four coustermers...."* என்றவாறே செக்அவுட் door ஐ இழுத்து மூடிவிட்டு, கண்ணைச் சிமிட்டினான்.

நான் மிகவும் நன்றி கூறினேன். அவன் சிரித்தவாறே போய்விட்டான். நான் அனைவரையும் கவனித்து அனுப்பி விட்டு, cash pot ஐயும் தள்ளிவிட்டு ladies room ஐ நோக்கி நடக்கத் தொடங்கி னேன். போகிற வழியில் வழக்கம் போலவே வாடிக்கையாளர்கள் எமது பிரத்தியேக அலுவலக உடைகளைப் பார்த்து விட்டு, கோட் இல் பொறிக்கப்பட்டிருந்த பெயரை உச்சரித்து உரத்து அழைத்தார்கள்.

அவர்களுக்கு பொருட்களைத் தேடிப்பிடிப் பதற்கு ஒரு உதவி தேவை. அவர்களிற் கெங்கே எமது நிலை விளங்கப் போகிறது? தேவையான உதவிகளை செய்துவிட்டுப் போவதில் ஒன்றுமில்லை ஆனாலும் எமக்குரிய breaktime க்குள் செக்அவுட் திரும்பாவிட்டால், உடனே வரும்படி ஒலி வாங்கி பெயர் சொல்லி அழைக்கத் தொடங்கிவிடும் என்பதெல்லாம் அவர்க ளிற்கு விளங்கப்படுத்திக் கொண்டிருக்கும் அளவிற்கு உடலில் சக்தி இல்லாமல் இருந்தது. கேட்டவிடயத்தை முடித்துக் கொண்டு staffroom வழியாக மாடியில் ஏறத்தொடங்கினேன். Staff restaur -ant இல் ஏதேதோவெல்லாம் வெந்து மணந்து கொண்டிருந்தது. முன் கதிரையில் சபீரா வெண்ணெய் தடவிய பாண் துண்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மென்று கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் உற்சாகமாய் "hi…" என்றாள்.

நான் ஒரு தேனீரும் ரோஸ்ற் பண்ணிய பாண் துண்டுமாய் அவளருகில் வந்தமர்ந்தேன். அன்றைய பனிமழையும் வாகனநெரிசலும் பற்றிப் பரிமாறப்பட்ட பின் அவள் யூனிஸ் ஐ திட்டத் தொடங்கியிருந்தாள். அவள் இந்தியாவில் கோவா மாநிலத்தை சேர்ந்தவள். ஆயினும் ஒரு மொறிஸியனை மணம் முடித்திருந்தாள். ஆதலால் அவளின் ஆங்கில உச்சரிப்பு எப்பவும் வேடிக்கையாக இருக்கும். அலுவலக ரீதியான மந்திர தந்திர விடயங்களை எப்பவும் என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்வாள். அதிகம் தெரியாத விடயங்களையும் ஒரு ஊகிப்பில் சொல்லி வைத்து விடுவேன் -அது அவளுக்கு அளவற்ற திருப்தியைத் தரும் என்பதால்.

இருவருமாய் கீழே store க்கு திரும்பிய போது, செக்அவுட் முன்பைவிட அதிக பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருப்பதாய் தோன்றியது. திருப்பி அடுக்கப்பட வேண்டிய பொருட்கள் றொலிகளில் நிரப்பப்பட்டு பின்னால் குவிந்து கிடந்தன!

'இன்று.. returns அடுக்கி முடிந்த மாதிரித்தான்! வீடு போக தாமதமாகப் போகிறது' என்று முணுமுணுத்தபடியே சபீரா செக்அவுட் நோக்கி நடந்து கொண்டிருந்தாள். ஸ்ரீவ் என்னைக் கண்டு விட்டு, எக்ஸ்பிரஸ் க்குப் போகும்படி பணித்தான். எக்ஸ்பிரஸில் 3 செக்அவுட்ஸ் ஏற்கனவே துரிதமாக இயங்கியபடி இருந்தன. நான்காவதை நான் போய் open செய்தேன். நீண்ட வரிசைகள் அவசரமாய் முறிந்து என் பக்கம் நிரல் போடத்தொடங்கியது.

சரியாக 9.50 ற்கே ஒலிபெருக்கியில் தொடர் அறிவிப்பு ஆரம்பமாகியிருந்தது. 10.00மணிக்கு ஸ்ரோர் பூட்டப்பட்டுவிடும் என்றும் எல்லா வாடிக்கையாளர்களும் உடனடியாக செக்அவுட் இற்குப் போகும் படியும் பிறிசில்லாவின் குரலில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஒரு வெள்ளையன் மூச்சிரைக்க ஓடிவந்தான். '24 hours open என்று விளம்பரம் போட்டுவிட்டு எப்படி 10.00 மணிக்கே பூட்ட முடியும்?'என்று ஆதங்கப்பட்டான். பக்கத்தில் சனிக் கிழமைகளில் 10.00 மணிக்கு பூட்டப்படும் என்றும் அறிவிப்புப் போடப்பட்டிருக்கிறது... அதை நீ கவனிக்கவில்லையா..? 'என்றேன். அவன் நிமிர்ந்து பார்த்துவிட்டு சினத்தோடு அப்பால் நகர்ந்தான். பின்னால் நின்றவர்கள் கண்களை அசைத்து, கிண்டலாகப் புன்னகைத் தார்கள்.

"Hi…chan!" பக்கவாட்டில் பெரிய குரலெழுப்பியபடி ஜோர்ஜ் கிழவன் good night சொல்லக் காத்திருந்தான். நானும் goodnight சொல்லி கைகாட்டிய பிறகு சந்தோசமாகப் புறப்பட்டான். நான் வேலைக்குச் சேர்ந்த இரண்டரை வருடங்களாக இந்த ஜோர்ஜ் கிழவன் வராத நாட்களுமில்லை, hello சொல்லாத நாட்களுமில்லை. இப்போ அவன் வரவில்லை என்று அறிய நேர்ந்தால் அது அசாதரண நாளாக இருக்கும் என்றுதான் எண்ணத் தோன்றியது.

வாடிக்கையாளர்கள் சனிக்கிழமைகளில் குழந்தைகள் சகிதம் குடும்பமாக அள்ளுப் பட்டுக் கொண்டு வருவதும், ஆசைப்பட்ட பொருட்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வருவதும், பின் பணம் போதாமையால் செக்அவுட் இல் அவற்றை விட்டுவிட்டுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போவதும் வழமை. அப்படி விடப்பட்ட *frozen* பொருட்கள் செக்அவுட் ஓரங் களில் குவிந்து கிடந்தன. அவற்றை உடனுக்குடன் திருப்பி அனுப்ப வேண்டியது எமது பொறுப்பு. அதனால் *Radio-phone* இல் ஏதோ கட்டளை பிறப்பித்தபடி அவசர மாய் போய்க்கொண்டிருந்த பிறிசில்லாவை அழைத்து அவற்றை உரிய இடத்திற்கு அனுப்புவித்தேன். போகும்போது *frozen* அல்லாத மிகுதியை கடைசியாக என்னை எடுத்து வைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொண்டாள்.

10.30 மணியாகியும் வாடிக்கையாளர்கள் வெளியேறாமல் பொருட்களுடன் நின்றிருந் தார்கள். செக்கியூரிட்டி புறுபுறுத்துக் கொண்டிருந்தான். ஒலிவாங்கியில் பல மணி நேரம் ஒருத்தி கத்திக் களைத்து விட்ட தாலோ என்னவோ யாரும் இப்போ குரல் கொடுப்பதாயில்லை.

நான் செக்அவுட் இனை *clear* பண்ணி, 10.30ற்கே எழுந்துவிட்டேன். *returns* ஐ ஓடியோடி உரிய இடத்தில் அடுக்கிக் கொண்டு நின்றேன். என்னைப் போலவே சபீரா, கிறிஸ், அண்லீலா, வத்னா, றீசா..எல்லோரும் ஓடியோடி அடுக்கிக் கொண்டு இருந்தார்கள்.

*clock out* பண்ணும் போது 10.40 மணியாகிவிட்டிருந்தது! இரண்டு ஏக்கர் பரப்பளவுள்ள உட்புற ஸ்ரோரில் அங்கு மிங்குமாய் அலைந்த கால்களும், அசைந்த கை மூட்டுகளும் இப்போ பூட்டுப் பூட்டாய் வலியெடுக்கத் தொடங்கி யிருந்தன. நாக்கும் வறண்டு, வயிறும் சுருங்கி, வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தால் காணும் என்ற நிலை! வினோஅக்கா ஓடி வந்தா. 'போகிற வழியில் என்னை *drop* பண்ணி விடுவீங்களா?' என்று கேட்டா.

வழமையான பாதைக்கு எதிர்ப்புறமாகத் திரும்பி, சுற்றிவரும் பிரதான வழியாகப் போனால்தான் அவவின் வீடு வரும். சரியென்று , அவவையும் கூட்டிக்கொண்டு *car park* ற்குள் இறங்கினால், கால் வழுக்கிக் கொண்டிருந்தது. பனிமழை கொட்டோ கொட்டென்று கொட்டி, கற் களாய் இறுகிப்போய் இருந்தது! விழுந்து விடலாம் என்ற உணர்வில் இருவரும் கைகளை இறுகப் பற்றியபடியே மெதுமெது வாய் நடந்து *car* இல் ஏறினோம். பனிப்படலத்தின் மேலாய் நழுவிநழுவி *car* ஊர்ந்து கொண்டிருந்தது. வழியில் மரங் கள், வீடுகள், எல்லாம் ஒரே வெண்மையாய் தூங்கி வழிந்து, மூளித்தனமாய் சலிப்பூ ட்டிக் கொண்டிருந்தன.

வீடு போய்ச் சேர நள்ளிரவு 11.40 ஆகிவிட்டிருந்தது. கதவை ஓசைப்படாமல் திறந்தேன். இருப்பறையில் தொலைக் காட்சியின் மெல்லிய ஒலியும், மின்விளக் கின் மெல்லொளியுமாய் அசைவியக்கம் ஏதுமற்ற அமைதிநிலையாக இருந்தது. ஷோபாவில் கணவரின் நீண்ட கால்கள் தொங்கியபடி கிடந்தன- கூடவே இலேசான குறட்டை ஒலி! இரவுணவு என்னால் பரிமாறப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தில் காத்திருந்து, களைத்து, உறங்கி விட்டிருப்பார்!!

ஓசைப்படாமல், விடுவிடுவென்று மேலே மாடிப்படிகளில் ஏறினேன். குழந்தைகள் எங்கள் படுக்கையறைக் கட்டிலில் ஏறு மாறாய் பிணைபட்டு உறங்கிக்கிடந்தார் கள். உடைகளை மாற்றி, குளித்துவிட்டு கதவை இலேசான ஓசையுடன் அடித்துப் பூட்டிக்கொண்டு வரும் போதும், கணவர் ஆழ்ந்த உறக்கத்திலேயே கிடந்தார். சமையலறைக்குள் நுழைந்தேன்.சாப்பாட்டு மேசை ஒரே களேபரமாகிக் கிடந்தது. பிளேற்ஸ் இல் உண்டது பாதி, உண்ணா தது பாதியாக உணவின் மீதி! கறிகள் நினைத்தபடிக்குக் கொட்டிச்சிந்தி, சரியாக மூடப்படாமல், அல்லோலப்பட்டுக் கிடந்தது. குழந்தைகள் செய்துவிட்டிருந்தஅட்டகாசம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிச்சலை ஊட்டிய அதேநேரம், அவர்கள் மீது ஒருவித பச்சாதாபத்தையும் ஏற்படுத்தியது. பகல், மாண்டு மாண்டு பலமணிநேரம் செலவழித்து, சமைத்த உணவெல்லாம் சரியாகப் பரிமாறுவதற்கு ஆளில்லாமல், இயன்றவரை முயற்சி செய்துபார்த்து விட்டுப் போய் படுத்துவிட்டிருக்கிறார்கள். மனதிற்குள் இனம்புரியாத வேதனை பொங்கி வழிய எல்லாவற்றையும் கழுவி ஒதுக்கினேன். எல்லாம் முடிய 1.00 மணியாகிவிட்டது!

இருப்பறைக்கு வந்து, கணவரை மெதுவாகத் தட்டி எழுப்பினேன். அவர் சாப்பிட வரும் நிலையில் இல்லை. ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிக் கிடந்தார். ஆழ்ந்த நித்திரையை முறித்துக் கொண்டு அவர் சாப்பிட வருவதென்பது நடக்காத காரியம்! அவரைப் பொறுத்தவரை அதுவே மிகப் பெரும் எரிச்சலூட்டக்கூடிய விடயம். அது மட்டுமல்ல, இன்று over time செய்து உடலை நன்றாக முறித்திருப்பார், பாவம் நாளை காலை மீண்டும் 6.00 மணிக்கு வேலைக்கு அவர் எழும்ப வேண்டும். பேசாமல் விட்டுவிட்டேன். சுடச்சுட ஒரு தேனீர் தயாரித்துக் கொண்டு வந்து இருப்பறையில் ஷோபாவில் அமர்ந்து கொண்டேன்.

தொலைக்காட்சியில் இருண்ட குகையின் மத்தியில் யாரோ ஒருத்தி கத்தியால் குத்தப்பட்டு அலறிக்கொண்டிருந்தாள். அவசரமாய் channel ஐ மாற்றினேன். தமிழ் chanel இல் செந்தூரப் பூவைப் பிடித்துக் கொண்டு ஸ்ரீதேவி பாடிக்கொண்டிருந்தாள். நீண்ட நாட்களின் பின் ஸ்ரீதேவியைப் பார்ப்பது வித்தியாசமாக இருந்தது. நான் பதினாறு வயதாக இருந்த அந்த இனிய நாட்களில் இந்தப் 'பதினாறு வயதினிலே' படம் யாழ் ராணித் தியேட்டரில் ஓடிக்கொண்டிருந்தது!.. நான் தொழில்நுட்பக் கல்லூரி வகுப்புகள் முடிய வழமைபோல் யாழ் பஸ், நிலையத்தில் வந்து நின்றதும், 750 பஸ்ஸிற்காகக் காத்திருந்த போது என் சின்னண்ணா வந்ததும், பின் இருவருமாய் படம் பார்க்கும் ஆசையில், அம்மாவுக்கும் சொல்லாமல் ராணித் தியேட்டருக்குள் நுழைந்ததும், பின் வீடு போய்ச் சேர்ந்து அம்மாவிடம் அடிவாங்கியதும் கனவுகளாய் விரிய... ஸ்ரீதேவி பூப்பந்தின் மேல் உருண்டுகொண்டிருந்தாள். இப்போ shampoo விளம்பரம் ஒன்று போய்க்கொண்டிருந்தது... தொலைக்காட்சியை நிறுத்திவிட்டேனாயினும் எழும்ப மனமில்லை.




இரவின் அமைதி, கனவுகளும் நினைவுகளுமாய் கணவரின் மெல்லிய குறட்டை ஒலியோடு கரைந்து கொண்டிருக்க, இமைகள் என்னை அறியாமல் சரிவதும் நிமிர்வதுமாய்...!!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



# பிரச்சினைகளுக்கு முகவரியிடுவோம்

சமுதாய பரப்புதனில் விழுப்புண் அடைந்த
அரிதார பழக்கங்கள் அதிகமாய் நிதம்
துரிதமாய் விரட்டுகையில் ஓரமாய் ஒதுங்க
வீரியமற்ற பெண்கள் அல்ல நாம்


புடைத்தெழும் துன்பங்களின் வார்ப்பில்
சிறைப்பட்டு நாளும் கசங்கிவிடாது
நிலத்திடை மாதர்களின் நிலைமை
இன்னும் விழிப்படைய வழிசமைப்போம்.

அற்ப சுகங்களுக்காய் அலையும் நிலைமாறி
துணிவினை சிறகுகளாய் செதுக்கியும்
பக்கங்கள் நன்றாய் பயமிது போக்கிட
சுற்றங்களில் விழிப்புணர்வை பெற்றிடுவோம்

வெட்டிப்பொழுது வேக்காடு போக்காது
பெண்ணியப்பார்வை நன்றென போட்டே
கட்டுப்பெட்டியாய் கனதியானது போக்கு
வெட்டி எழுவோம் தடைகளை இன்றே

தேய்வனவு எமக்கா தேதியிடு எழுச்சிக்கு
மோதியெழுந்து பிரச்சினைகளுக்கு முகவரியிடுவோம்
பாதி எமக்கு ஆண்கள் தரவேண்டாம்
சேதிநாம் பிறப்பாலே சமமென்று தெளியவேண்டும்.

(24.04.2004)



சுகந்தினி சுதர்சன் (ஜேர்மனி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விதைச் சொல்


மழை பொய்த்த நிலமென
எனது மொழி விரிசலுற்று
எத்திசைக் காற்றிலும் ஓதவில்லை
இனி பச்சை பிடிக்க

டாங்கிகள் உழும் வயலெல்லாம்
ஏவுகணைகள் விதைக்கும்
கந்தகம் குமையும் வெளி
எனது வார்த்தைகள் மூச்சுமுட்டி
கரையில் கவிழ்ந்த படகென
குப்புறக் கிடக்கிறது

கொடு மரணம்
எல்லோரது முற்றத்திலும் பொட்டலமாய்
தக்கை இட்ட கோக் புட்டிக்குள்
அடைக்கப்பட்ட மழை மேசை மீது

மறுநாள் பால் வார்க்க
சொற்கள் முளை பாரிக்கும்
அவரவர் புதைமேட்டில்

(2004/10)



மாலதி மைத்ரி (இந்தியா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நான் பேச நினைப்பதெல்லாம்...

என்னை!
ரசிக்கவும் வாங்கவும்
ருசிக்கவும் வாழவும்
உனக்கு இஸ்டம் தான்!
அதுவும்
என் உணர்வுகளை
விலக்கியும் விற்கவும்- என்
கொள்கைகளை
முடக்கியும் கொழுத்தவும்
தலைப்பட்டுக் கொண்டு!

உனக்காக நான்
என்னை மாற்றி
உன்னைத் தேற்றி
உன்னுடனே ஒன்றித்துப் போக...
நீயோ
நீர் விலக்கி பால் பருகும் பட்சியாய்
சுயநலத்தை சொந்தமாக்கியவனாய்
உனக்காகவே மட்டும்
வாழ நினைக்கிறாய்.

இனியாவது
ஒன்றைத் தெரிந்துகொள்
என்னைப் புரிந்துகொள் - என்
உள்ளத்து உணர்வுகளிடமும்
உறவாடு!

நீயாக, உனக்காக
தயாரித்த ஏணிப்படிகளில்
லாவகமாக ஏறிக் கொண்டு
இழக்காரமாய் கீழ்நோக்கி
எனைப் பார்ப்பதை
இன்றுடன் நிறுத்திக்கொள்!

உன்
அத்தனை அற்ப பார்வைகளையும்
மாற்றிக் கொள்!

ஒன்று
நீயாக நானிருக்கும் படிக்கு இறங்கிவிடு
அல்லது
என்னையாவது உன்
சமநிலைக்குள் வாழவிடு!

உன்
வரட்டுப் பிடிவாதங்களால்
வாதங்கள் ஒன்றும்
வலுப்பெறப் போவதுமில்லை.
உணர்வுகளும் உரிமைகளும் கூட
உனக்கு மட்டுமே சொந்தமில்லை.

மானுட வர்க்கத்தில்
நானும் நீயும்
சமமாக நோக்கப்பட வேண்டியவர்களே
சரிநிகரானவர்களே!

(2004/10)




முகைசிரா முகைடீன்.
(பாலையூற்று, இலங்கை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





நன்றி:stern

# கைவிடப்பட்டவளாய்...

நூரிஜாவுக்கு மூன்று வயதாய் இருந்தபோது, அவள் தந்தை அவளை அவளின் பெரியப்பாவுக்கு பரிசாகக் கொடுத்து விட்டான். பன்னிரண்டு வருடங்களின் பின் அவன், அவளை இரண்டாவது தாரமாக ஒரு வயதானவனுக்கு விற்று விட்டான். வயதான கணவன் இப்போது இறந்து விட்டான். ஆனால் அவனின் இறப்புக்குக் காரணமென்று குற்றஞ்சாட்டப் பட்டவளாய், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அந்தச் சிறுமி இப்போது சிறையிலிருக்கிறாள்.

நூரிஜா இப்போது ஒரு சிறைக்கைதி. தூசி படிந்த கம்பளத்தில் குந்தியிருந்தபடி அவள் அந்த அறையை வெறித்துக் கொண்டிருக் கிறாள். சில வேளைகளில் அவள் பேசும்போது முகம் திறந்திருக்கிறது. அவளின் ஒல்லியான வாய் தெளிவாகத் தெரிகிறது. குழந்தை முகம். அவளுக்கு இப்போதுதான் பதின்மூன்று வயது ஆகிறது. வெள்ளையடிக்கப்பட்ட மதிலும் தூண் களும் வடக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள அந்த பெர்கானின் சிறையைச் சுற்றி நிற்கின்றன. பக்கத்துப் பாலைவனங்களிலிருந்து வீசும் மெல்லிய மணற்காற்று ஒவ்வொரு இடைவெளி யிலும் கிறீச்சிடுகிறது. அங்கே 1000 தலிபான்கள் பாதாளங்களில் அடைக்கப் பட்டிருக்கிறார்கள். பெண்கள் பகுதியோ ஒரு இருட்டான மண்வீடு. களவு, ஏமாற்று, விபச்சாரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்றவற்றிற்காக ஐந்து பெண்கள் வரை இங்கு அடைக்கப் பட்டிருக்கிறார்கள். நூரிஜா கொலைக் குற்றத்தோடு இங்கு அடைக்கப் பட்டிருக்கிறாள். அவளின் கணவனின் கொலையைத் திட்டமிட்டதாக அவளின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இறக்கும்போது அவனுக்கு 62 வயது. 'ஒரு வருடத்திற்கு முன் என் பெரியப்பா இந்த மனிதனிடம் என்னை விற்றுவிட்டார். நான் மகிழ்ச்சியாய் இருந்ததில்லை' என்று முணு முணுக்கிறாள் அந்தப் பெண். ஆனால் 'அவர் கொலைசெய்யப்படுவதை நான் தூண்டவில்லை' என மறுக்கிறாள்.

நூரிஜாவின் சோகக் கதை அவள் குழந்தையாய் இருந்த பொழுதே ஆரம்பித்து விட்டது. பெற்றோருக்கு நாலாவது பிள்ளையாய் 1990 இல் மாரிவ்வில் பிறந்தாள். இவளின் தந்தை ஜாக்கோப் வீட்டுச்சாமான்கள், குடிபானங்கள், இனிப்புகள் விற்கும் ஒரு சிறு கடையை நடத்தி வந்தார். தாய் ஒரு சமையற்காரி. தேவைக்கு ஏற்ப வருவாயோடு வாழ்ந்து வந்த குடும்பத்தில் நூரிஜா ஒரு ஆரோக்கியமான அழகான குழந்தை. திருமணமாகியும் குழந்தைகள் இல்லாதிருந்த ஜாக்கோபின் மூத்த சகோதரன் இவர்களைப் பார்த்து பொறாமைப்பட்டான். மூன்று மாதங்களேயான நூரிஜாவை அவன் தனக்கெனக் கேட்டபோது இளையவன் மறுக்காமல் கீழ்ப்படிந்தான். தன் மகளைக் கொடுத்து விட்டான். அன்றிலிருந்து நூரிஜா பெரியப்பா அப்துல் அசிசின் சொத்தாகிப் போனாள்.

அப்துல் அசிஸ் இன்று மெலிதான வயதான ஒரு நோயாளி. கலைந்து கிடக்கிற தாடி அவன் வாடிய முகத்தை மூடிக்கிடக்கிறது. நோயாளியாகவும் காது சரியாகக் கேளாதவனாகவும் இருந்ததால், கொலையோடு சம்பந்தப்பட்டவனாக கைதுசெய்யப்பட்ட போதும் உடனடியாக விடுவிக்கப்பட்டு விட்டான்.

வயதான அவன் நூரிஜாவைப் பார்த்து உணவு கொடுக்க சிறைச்சாலையின் முன் காத்திருக்கிறான். ஏன் நூரிஜா அவனைப் பார்க்க விரும்பவில்லை என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'என் தம்பி நூரிஜாவை எனக்கு பரிசளித்தான்' என கரகரத்த குரலில் சொன்னான்.

முதல் வருடங்களில் நூரிஜாவும் பெரியப்பாவும் ஜாக்கோபின் வீட்டில் தான் வாழ்ந்தார்கள். 'அப்போது என் பெற்றோரைப் பார்க்கவும், சகோதரங்களுடன் விளையாடக் கூடியதாக வேனும் இருந்தது' என ஞாபகப்படுத்திப் பார்த்தாள். இதன்பிறகு மனைவி இறந்துபோக, அப்துல் அசிஸ் தன் தம்பியின் வீட்டை விட்டு வேளியேறினான். எப்பொழுதும் வேலை தேடிய படி சிறியவளான நூரிஜாவுடன் வடக்கு ஆப்கானிஸ்தானினூடாகப் பயணம் செய்தான்.

நூரிஜாவுக்கு ஒன்பது வயதானபோது அஹ்ஹாவை வந்தடைந்தார்கள். அது மணல் பிரதேசத்தின் மத்தியில் ஒருசிறு நகரம். இங்கு வாழ்பவர்கள் கம்பளம் நெய்பவர்களாகவும், மரத்தொழில் செய்பவர்களாகவும், வியாபாரிகளாகவும் இருக்கிறார்கள். தங்கள் மண்வீடுகளில் சாதாரணமாக இருந்தாலும் திருப்தியாக வாழ்கிறார்கள். மின்சாரமும் தார்வீதியும் கூட அங்கிருக்கிறது.

அங்குதான் நூரிஜாவின் பெரியப்பாவுக்கு பொஸ் மமட் அறிமுகமானான். அப்போது 59 வயதாயிருந்த மரத்தொழிலாளியான அவன், தனது பெரிய குடும்பத்துடன் பல மண் வீடுகளுக்கு சொந்தமான வசிப்பிடத்தில் வாழ்ந்து வந்தான். அவன் அப்துல் அசிசுக்கு தன் வீட்டு நிர்வாகியாக வேலை வழங்கியிருந்தான். பொஸ் மமட் திருமணமாகி ஆறு குழந்தைகளுக்கு தந்தையாயிருந்தான். அவன் எப்போதும் நூரிஜாவின் அழகு குறித்து பாராட்டுக்களை அவள் பெரியப்பாவிடம் தெரிவிப்பான். 'ஒரு ரோஜாவைப் போல் இருக்கிறாள்' என்று சொன்ன அவன் தன் மகன்களில் ஒருவனை நூரிஜாவுக்கு திருமணம் செய்து வைப்பதாக வாக்களித்திருந்தான். ஆனால் எல்லாம் வேறு மாதிரியாக நடந்தது.

பொஸ் மமட் நூரிஜாவின்மீது தானே ஆர்வம் கொண்டான். அழகான அவள் தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாவது மனைவியாக வரவேண்டும் என ஆசைப்பட்டான். நூரிஜாவுக்கு 12 வயதான போது மேலும் அவன் காத்திருக்க விரும்ப வில்லை.

அவன் அவள் பெரியப்பாவை அதிகம் வற்புறுத்த வேண்டிய அவசியமும் இருக்க வில்லை. 2600 யூரோவை விலையாக நிர்ண யித்தான். இவ்வளவு காலம் தொடர்பில்லாமல் இருந்த அவள் தந்தைக்கும் இதுபற்றி தெரிவிக்கப்பட்டது. ஜாக்கோப் தனது பங்கான 2600 யூரோவைப் பெறுவதற்காக அஹ்ஹாவை நோக்கி விரைந்தான்.

'என் தந்தை என்னை சிறிது நேரம் மட்டுமே சந்தித்து, வயதான அந்த மனிதனை நான் கட்டாயம் திருமணம் செய்ய வேண்டுமென்று சொன்னார்', சிறையில் சிறுமி சொல்கிறாள். ஆனால் இப்போதும் தனது சிறிய கடையில் மாரிவ்வில் வேலைசெய்து வரும் அவள் தந்தையோ திருமணத்தை நிறுத்தவே தான் அஹ்ஹாவுக்குப் போனேன் என அதை மறுக்கிறான். அதுதவிர அவன் ஆக 200 யூரோக்களே பெற்றுக் கொண்டான்.

'வயதான அவனின் பக்கத்தில் கிடக்க நான் விருப்பப்படவில்லை' என்கிறாள் நூரிஜா. ஆனால் அவளின் அபிப்பிராயத்தை யாரும் கேட்கவில்லை. அவளிலும் வயது கூடிய பிள்ளைகள் கொண்ட ஒரு குடும்பத்தில், அவளை விட 49 வயதால் முதியவனான கணவனுக்கு சேவகியாக, இரண்டாவது மனைவியாக வாழவேண்டியிருந்தது. பொஸ் மமட் பரிசுகளால் நூரிஜாவின் மனதில் இடம் பிடிக்க முயற்சி செய்தான். அவள் மிகவும் விரும்புகிற இந்தியப் படங்களைப் பார்ப்ப தற்காக ஒரு டி.வி.டி.பிளேயர் வாங்கிக் கொடுத்தான். பொஸ்மமட் முதல் மனைவி யாகிய அற்றிவா, நூரிஜாவுடனான அவன் திருமணத்தின் பின் எந்தக் கருத்தும் வெளியிட முடியாதவளாக இருந்தாள். பொஸ் மமட் அவளை அடிக்கவும் ஆரம்பித்திருந்தான்.

மமட்டின் குடும்பம் ஆரம்பத்தில் இந்தத் திருமணத்தை எதிர்த்தது. இது நூரிஜா இளையவள் என்பதால் அல்ல; அவள் அந்தப் பிரதேசத்தை சேர்ந்தவளில்லை ஒருவருக்கும் அவள் குடும்பத்தை தெரியாது என்பதாலேயே..

'ஆனால் மமட் மட்டும் நூரிஜா மீது ஒரு கண் வைத்திருந்தான்' என்கிறான், -மமட்டைவிட ஆறு வயதால் இளையவனான- அவன் தம்பி குல். ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போவதை இவன் ஊகித்திருந்தான். ஆனால் முல்லா இந்தத் திருமணத்தை ஆசீர்வதித்திருந்தார். அதனால் எல்லாம் சரியாகவே இருந்தது.

இரண்டாம் திகதி ஒக்ரோபர் மாதம் அந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது. மாலையில் யாரோ படலையில் அடித்தார்கள். ஒரு மணல் சுவர்தான் அந்த வீட்டையும் வளவையும் பாதுகாத்தது. பொஸ் மமட் அப்போது தன் முதல் மனைவியுடன் இருந்தான். 'நான் அவனின் மகள்மாருடன் தேநீர் குடித்து விட்டு ஒரு இந்தியத் திரைப்படம் பார்த்தேன்' நூரிஜா ஞாபகப்படுத்திக் கொள்கிறாள். சத்தம் கேட்டு பொஸ் மமட் உள்ளாடையுடன் வெளியே ஓடினான். அவன் படலையைத் திறந்தபோது சூட்டுச் சத்தங்கள் கேட்டன. சோவியத்தின் இயந்திரத் துப்பாக்கி கலாஷ்னிக்கோ ஒரே நேரத்தில் பல ரவைகளை கக்கியிருந்தது. 'நாங்கள் அலறியபடி கதவை நோக்கி ஓடினோம்', நிறுத்தி நிறுத்தி நூரிஜா விபரிக்கிறாள். அதன்பிறகு அவன் இரத்தத்தில் தோய்ந்தபடி இறந்துபோயிருக்கக் கண்டோம்.

தன்னை எவ்வாறு அந்தக் குடும்பம் அந்தக் கொலையைத் திட்டமிட்டதாக உடனே பழி சுமத்தியது என்று சொல்லும்போது நூரிஜாவின் குரல் கிரீச்சிடுகிறது. அங்கு அழைக்கப் பட்டிருந்த அஹ்ஹாவ் பொலிஸ் அதிபரிடம் கொல்லப்பட்டவனின் முதல் மனைவியும் மகன்களும், நூரிஜாவும் அவள் பெரியப்பாவுமே இந்தச் சம்பவத்திற்கு பின்னணியில் காரணமாக இருக்கமுடியும் என உடனேயே கூறிவிட்டார்கள்.

இன்னொருவனும் இந்தக் கதையில் இணை க்கப்படுகிறான். 'நூரிஜா நீண்ட காலமாக கிர்ப்டோருடன் தொடர்பு வைத்திருக்கிறாள் என்று எங்கள் எல்லோருக்கும் முதலே தெரியும்' என கொலை செய்யப்பட்டவனின் சகோதரன் கூறுகிறான். 'அவள் படங்கள் வாடகைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எடுக்கும் வீடியோக் கடைக்கார இளைஞனுடன் தொடர்பு வைத்துக் கொண்டாள். ஒவ்வொரு நாளும் அந்தக் கடைக்கு ஓடியோடிப் போவாள். கிர்ப்டோர் நூரிஜாவை திருமணம் செய்ய விரும்பினான்' இவ்வாறு சொல்கிறான் குல். 'இருவரும் இணைந்து, 21 வயதான அந்த இளைஞனின் மாமாவை (இவர் முன்னாள் இராணுவவீரர்) பொஸ் மமட்டை சுடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இதுதான் உண்மை...' பலமான கை அசைவுகளோடு, தாடியிலிருந்த மண்ணைத் தடவியபடி குல் சொல்கிறான். கொலை நடந்த அன்றிரவே நூரிஜாவும் அவள் பெரியப்பா அப்துல் அசிசும் கிர்ப்டோரும் அவன் மாமனாரும் கைதுசெய்யப் பட்டார்கள்.

அஹ்ஹாவின் பொலிஸ் அதிபருக்கு இந்தச் சிறுமி மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றம் மேல் அவ்வளவாக நம்பிக்கை இல்லை. பள்ளமாய்க் கிடந்த குன் கதிரையில் சௌகரியமாக அமர்ந்து, தேய்ந்து தூசி படிந்து கிடக்கிற மேசையில் தாளம் போட்டுக் கொண்டிருக்கிறான். அதே நேரத்தில் இவளுக்கு அந்த இளைஞனுடன் தொடர்பு இருக்கும் எனவும் உறுதியாய் நம்புகிறான். ஆனால் 'சாட்சி? பொலிஸ் அதிகாரி தூசு பறக்கும் வண்ணம் மேசையில் தட்டுகிறான். 'கிர்ப்டோருக்கு மேல் தொடையில் ஒரு மச்சம் இருப்பதாக நூரிஜா சொல்லியிருக்கிறாள். அதை நாங்களும் கண்டுபிடித்தோம்' என்கிறான்.



அஹ்ஹாவில் சிறை இல்லாததால் ஆண்கள் மூவரும், சிறுமியான அவளும் பிரதேச தலைநகரத்தில் சிறையில் அடைக்கப்பட்டனர். நூரிஜா பெண்கள் சிறையில் காத்திருக்க அவள் காதலன் கிர்ப்டோரும் அவனது மாமாவும் பாதுகாப்புப் பொலிஸ்பிரிவின் பாதாளத்தில் இருக்கிறார்கள்.

**தமிழில் : மதனி ஜெக்கோனியாஸ் (ஜேர்மனி)**



ஒரு உயர்ந்த அறையிலிருந்து மங்கலான வெளிச்சம் சிறையினுள் வந்துகொண்டிருக் கிறது. மணல் நிலத்தில் பரவிக்கொண்டிருக் கிறது. சிறிய மீசையுடன் தோற்றமளிக்கும், நன்கு வளர்ந்த ஆப்கானிஸ்தானிய இளைஞனான கிர்ப்டோர் நிமிர்ந்து சப்பாணி கட்டிக்கொண்டு அழுக்கான விரிப்பில் உட்கார் திருக்கிறான்.

அவனருகில் கொஞ்சம் குனிந்தபடி அவனது மாமனார் குந்தியிருக்கிறான். 'எனக்கும் நூரிஜாவுக்கும் எப்போதும் உறவு இருந்ததில்லை' மறுக்கிறான் அந்த இளைஞன்.

ஒரு வருடத்தின் முன்புதான் பாகிஸ்தானில் இருந்து அஹ்ஹாவுக்கு வந்திருந்தான் அவன். இவன் சாதாரணமாகத்தான் கடையில் அவளுடன் கதைத்திருந்தான். ஆனால் அவள் ஒரு நடத்தை சரியில்லாத பெண்ணென்றும் 'எல்லா ஆண்களுடனும் தொடர்பை விரும்புபவள்' என்றும் அயலவர்கள் வதந்தியைப் பரப்பித் திரிந்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'அவளுக்கும் எனக்கும் இடையில் எதுவுமில்லை. நான் குற்றமற்றவன்' என அழுத்தமாகச் சொல்கிறான் கிர்ப்டோர். இரு மாதங்களுக்கு முன்புதான் வீடியோக் கடையில் தன் வேலையை விட்டுவிட்டு அதே வீதியில் ஒரு தையல் கடையைப் பொறுப்பெடுத்திருந்தான். 'அதன்பிறகு நான் நூரிஜாவை சந்திக்கவேயில்லை' என்கிறான்.

காவலாளிகள் பார்த்து விடுவார்களோ என்று ஒருமுறை சுற்றிப்பார்த்தான். கைது செய்யப்பட்ட பின்னர் நூரிஜாவின் கண்களுக்கு முன்னாலேயே மின்சாரக் கம்பியால் அடிக்கப் பட்டதாக கிர்ப்டோர் இரகசியமாகச் சொன்னான். 'அப்போது எனது காற்சட்டை நழுவியதால் நூரிஜா என் மச்சத்தைப் பார்த்து விட்டாள். அதனாலேயே அவளுக்கு அதைப்பற்றித் தெரிந்திருந்தது' என விளக்குகிறான்.

நூரிஜா கிர்ப்டோருடனான உறவு பற்றி எதுவும் சொல்ல விருப்பமில்லாமல் கண்களைத் தாழ்த்தியபடி அமைதியாக இருந்தாள். அப்படியே அவள் குற்றம் செய்திருந்தாலும் அவளின் வயது காரணமாக தண்டிக்க முடியாது என பிரதேசத் தலைநகரத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் அரசாங்க வக்கீல் கூறுகிறார். அவர்தான் நூரிஜாவின் பெரியப்பா அப்துல் அசிசை மாரிவுக்கு அனுப்பி அவளின் பெற்றோருக்குத் தகவல் சொல்லியிருந்தார். அவளின் தாய் பெர்கானுக்கு வந்து மகளைச் சிறையில் பார்த்தாள். 'நாங்கள் கொஞ்சமாகக் கதைத்தோம்; மற்றும்படி அழுதோம்...' பெருமூச்செறிந்தபடி அவள் சொல்கிறாள்.

அவளை எங்கு விடுவதெனத் தெரியாமல் அரசாங்க வக்கீல் குழம்பிப் போயிருக்கிறார். விசாரணைகள் முடியும் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். பர்தா அணிந்த இவ்வாறான ஒரு பின்னணிக்கதை உள்ள சிறுமியை சிறுவர் பாராமரிப்பு நிலையத்தில் விடலாமா? "சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் மற்ற சிறுவர்கள் என்னை 'கொலைகாரி' எனத் தூற்றிச் சிரிப்பார்கள்" என முறையிடுகிறாள் நூரிஜா. கொல்லப்பட்டவனின் உறவினர் பழிவாங்குவதைத் தவிர்த்தால் மட்டுமே தனது மகளை மீண்டும் தன்னிடம் வைத்துக் கொள்வதாக தந்தை ஜாக்கோப் உறுதி கூறுகிறான். 'எனக்கு எந்தப் பிரச்சனையும் வேண்டாம்'.

ஆனால் கொல்லப்பட்டவனின் குடும்பமோ கைம்மாறு கேட்கிறது.

'நூரிஜா ஒரு குற்றவாளி' என மிகுந்த கோபத்தோடு சொல்கிறான் குல் மமட். 'நீதிமன்றங்கள் அவளைத் தண்டிக்காதுவிட்டால் நாங்கள் அதை எங்கள் கையில் எடுக்க வேண்டிவரும்' என்கிறான்!



*மூலம்: ஜேர்மன் மொழியில் , மார்க்குஸ் பெண்ஸ்மான் (நன்றி: stern)*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீடு

சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி)



எங்கு பார்த்தாலும் ஒரே இருட்டு. இருட்டைக் கீறிக்கொண்டு கரும் பாம்புபோல் நீண்டு நெளிந்து கிடந்த தெருவை 'வான்' கடந்து கொண்டு இருந்தது. எப்ப யாழ்ப்பாணம் வரும்? பிள்ளைகள் நித்திரையை துரத்திவிட்டு மகிழ்வில் மூழ்கி இருந்தார்கள். அவர்களுக்கு முகம் தெரியாத பெரியம்மா வையும் பிள்ளைகளையும் பார்க்கும் மகிழ்வு எனக்கும்தான்.

ஒவ்வொரு வசந்தம் மலரும் பொழுது எனது மனமும் முகமும் சுருங்கிவிடும். அந்தப் பெயர் தெரியாத பூவுக்கு பயப்படுகிறமாதிரி நான் சிறுவயதில் பயப்பட்டது கணக்கு மாஸ்ரருக்கு மட்டும்தான். அந்தப் பூ பார்க்கும் பொழுதெல்லாம் சிரித்தபடி இருக்கும், சில மனிதர்களைப்போல. ஆனால் அது காய்ந்து பின் வெள்ளைப் பஞ்சு மாதிரி பறக்கும் போது எனக்கு பயம் வந்திடும். ரவியும் புல்லுவெட்டுற மெசினால அதன் தலையை வெட்டிவிட்டு சூரன்ர தலையை வெட்டிப்போட்டன் இனி பயமில்லை என்று நிமிர்றதுக்கிடையில் ராவணனின் தலை முளைக்கிறமாதிரி பச்சைப் புல்லுக்கிடை யில் தலையை நீட்டி என்னைப் பார்த்துச் சிரிக்கும். இந்தச் சின்ன மரத்தின் உறுதி என்னை சிந்திக்கத் தூண்டியது. இப்படித்தான் எங்களையும் வேரோட அழிச்சிடலாம் என்றுதான் நினைத்தார்கள்.

'வான்' மெதுவாக ஊர்வதுபோல் இருந்தது.

திரும்பவும் செக்பொயின்ரோ? நினைவு அச்சப்படுத்தியது. ஆனாலும் முகமாலையில் அந்த பெண் ராணுவம் நடந்து கொண்ட விதம் மனம் எடைபோட முடியாமல் தவித்தது. ராணுவப் பெண்ணின் அருகாமை என்னை பயப்படுத்தியது. ஆனால் பாவாடையில் பதிந்து கிடந்த கறையை பின்னால் குத்தி மறைத்த பொழுது மனம் நெகிழ்வில் மூழ்கியது. நன்றியை சிரிப்பால் உணர்த்திவிட்டு நகர்ந்தாலும் என் நினைவுகள் அந்த இடத்திலேயே வேர்விட்டு நின்றது. பிள்ளைகள் ரொம் அன்ட் ஜெரியைப் பார்த்து மகிழ்ந்து கொண்டு இருந்தார்கள். இந்த ரொம் ஜெரி விளையாட்டு பார்க்க எனக்கு மிகவும் பிடிக்கும். அதில் ரொம் ஜெரியை ஏமாற்ற பல சதிகள் புரியும். சின்ன ஜெரி ரொம்மிட்ட ஏமாறுகிற மாதிரி ஏமாந்துவிட்டு கடைசியில ரொம் விரித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலையில அதையே விழவைத்து அதன் பொய் முகத்தையும் காட்டிக்கொடுத்துவிடும். போர்த் தந்தந்திரத்தில இதுவும் ஒன்று. ஆயுதத்தால் ஆயிரம் மனிதரை கொன்று குவிப்பதை விட ஒரு மனிதரின் மனதை மாற்றுவதுதான் மிகப்பெரிய வெற்றி என எங்கேயோ படித்தது நினைவில் உதிக்க மனம் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தது.

இருள் மெல்ல விலகிக்கொண்டிருந்த நேரத்தில் நான் விளையாடிய தெருவையும் என் நண்பிகளின் வீட்டையும் இமைகள் தடவிக் கொண்டு சென்றது. எல்லாமே மாறியிருந்தது. வீட்டு கேற் அருகில் 'வான்' நின்றது. எத்தனை வருடம் எவ்வளவு ஏக்கம் ஒவ்வொன்றையும் தொட்டுத் தழுவ மனம் துடித்தது. அழுது விடுவேனோ என பயப்பட்டது. முதலில் என் விழிகளில் விழுந்த அந்த மஞ்சள் மதில் நான் பாடசாலையால் வரும் பொழுது எனக்காக அதில் சாய்ந்து நிற்கும் என் அம்மாவும் ஜிம்மியும்...

அழுகை கண்ணை மறைக்க... அக்காவின் முகம் மங்கலாக தெரிந்தது. அக்கா என்னை இறுக அணைத்த பொழுது அம்மா என்னை அணைப்பதுபோல் ஓர் உணர்வு எழுந்து அழுகையை அதிகப்படுத்தியது. இருபது வருடத்தின் பின் என்னுடைய வீட்டை எனக்குள் இருந்துகொண்டு எப்பொழுதும் தன்னையே நினைக்கவைக்கும் என்ர கனவு வீட்டைக் கண்டேன். சிரிப்பும் சத்தமும் நிறைந்திருந்த வீடு மௌனத்தில் ஆழ்ந்து கிடந்ததை பார்க்க மனம் வலித்தது. ஒவ்வொரு இடத்திலும் அம்மாவின் நினைவுகள் உறைந்துபோய்க் கிடந்தன. அம்மாவின் கற்பனையை, சிரிப்பை, அழுகையை எல்லாவற்றையும் உள்வாங்கி தனக்குள் புதைத்து வைத்திருந்த என்ர அம்மாவின் வீடு இன்று அம்மா இல்லாமல் துயருள் ஆழ்ந்திருந்தது. இறுதிக்காலம் மட்டும் என்ர குஞ்சு அம்மாவை மழையில், வெய்யிலில், துயரில் எல்லாவற்றிலும் உடனிருந்து காத்த வீட்டை மெல்ல தடவினேன். 'பிள்ளையள் மனை உதவுறமாதிரி மக்கள் உதவமாட்டார்கள்.' அம்மாவின் தீர்க்க தரிசனம் கன்னத்தில் கோடுகளை வரைந்தன.

அக்காவின் தோற்றத்திலும் காலம் கைவைத்திருந்தது. கால ஓட்டத்தை மனிதனின் கைகளிலும் கால்களிலும் புரிந்து கொள்ளமுடியும் என்பது மாறி புன்னகை தொலைத்த வறண்ட முகம். எந்த உணர்வையும் என்னால் புரிந்து கொள்ள முடியாது இருந்தது.

'களைச்சுப் போய் வந்திருக்கிறியள். முதல்ல குளிச்சிட்டு வாங்கோ' என்று கூறியபடி அக்கா மெல்ல நகர்ந்தா.

வீட்டின் பின்பக்க சுவர் இடிந்து பாதி மண்ணில் படுத்துக்கிடந்தது. ஏதோ ஒன்று தன் கோபத்தை சுவரில் பதித்திருந்தது. இடிந்த சுவரில் சரித்தும் நெளித்தும் எழுதத் தெரியாத கை எதையோ கிறுக்கியிருந்தது. என்னவாக இருக்கும்? இந்த மண்ணும் வீடும் தனது என்று எழுதியிருப்பானோ.? அழகான எழுத்தை கோணலாக எழுதியவனின் மனமும் அப்படித்தான் இருந்திருக்கும். புரியாத எழுத்தை சுற்றியே மனம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஒன்று மட்டும் நிச்சயமாக தெரிந்தது. எமது ரணங்களுக்கு முதல் காரணம் புரியாத மொழியாகத்தான் இருக்க வேண்டும். இதனால் விழுந்த இடைவெளிகள் அதிகம். ஆனால் வெளிநாட்டில் மட்டும் எந்த நாட்டில் வாழ்கின்றோமோ அந்த நாட்டு மொழியை கற்று அழகாக பேசிக்கொண்டுதானே இருக்கின்றோம்.

'அங்க நிண்டு யோசிச்சுக்கொண்டு நிக்காமல் கெதியா குளிச்சுபோட்டு வா'. அக்காவின் குரல் மறுபடியும் அம்மாவை நினைவுபடுத்தியது.

'சுகந்தி கிடாரத்துக்க இருக்கிற தண்ணி முழுவதையும் அள்ளிக் குளி. வாழையெல்லாம் வாடுது'. நல்லா வாடட்டும். எனக்குப் பிடிக்காத வாழைக்கு தண்ணிபோகக் கூடாது. என்ன செய்யலாம் ? என யோசித்தே நேரத்தைக் கடத்துவன். அம்மாவின் முகம் சிவந்து போகும். பின் மறுபடி சிரிக்கும். சிரித்த முகத்துடன் வளைய வரும் அம்மா இல்லாத வீடு... கத்தி அழவேண்டும்போல் இருந்தது. எங்கள் வீட்டில் மனிதர்களைவிட மரங்கள்தான் அதிகமாக இருந்தது. மனிதர்களோடு பேசுவதைவிட மரங்களோடு பேசுவது எவ்வளவு மகிழ்வை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரும். அண்ணா குறோட்டன் வளர்ப்பார். விதம் விதமா சுருண்ட தலையோட குழந்தைகள்போல் சிலிர்த்து சிரித்தபடி நிற்கும். அண்ணாவுக்கும் மாமாவின் மகனுக்கும் குறோட்டன் வளர்பதில் ஒரே போட்டி. மாமா வீட்டில முதல் நாள் பார்க்கும் பொழுது வெறுமையாக இருந்த இடத்திலெல்லாம் புதுசா குறோட்டன் தானே நடந்து வந்து நிற்பதுபோல அதிசயமாக நிற்கும். பிறகுதான் புரிந்தது அதெல்லாம் சுப்பிரமணியம் பூங்காவின் மர்மம் என்று.

அம்மா நித்திய கல்யாணி, தேமா, செவ்வரத்தை, அரளி, மல்லிகை என்று சுவாமிக்கு தேவையான பூமரத்தில் எப்பவும் கண்ணாக இருப்பா. அப்பா சாமிநாதனை ஏவிக்கொண்டே இருப்பார். எங்கள் வீட்டில் நாய் செத்தால் அதை தாட்டுவிட்டு தேசிக்காய் மரம் நடுவது சாமிநாதனின் வேலை. எத்தனை நாய் செத்தது என்று அடிவளவுக்குள் நிமிர்ந்து நிற்கும் தேசிக்காய் மரங்களை பார்த்தால் புரிந்து விடும். எனக்காக வளர்ந்த மரம் என்ர செரிமரம். கைகளை பரப்பி நிழலும், பழமும் தந்த அந்த மரம் நின்ற இடத்தில் இப்போ வாழையும் இல்லாமல் கிடங்குகள் வெட்டி மூடினமாதிரி... என்னவாக இருக்கும்?

அக்காவின் அழைப்பு என்னை குளிக்கத் தூண்டியது.

சாப்பாட்டறையில் அம்மாவின் சமயலையும் அந்த சங்கீதக் குரலையும் தவிர மிகுதி எல்லாம் இருந்தன. என்னால் சாப்பிட முடிய வில்லை.

'சுகந்தி உனக்கு எப்பபார்த்தாலும் கதைக்கிறதும் சிரிக்கிறதும்தான் வேலை. முதல்ல சாப்பிடு.' அம்மாவின் குரல் அந்த அறை முழுவதும் எதிரொலித்தது.

கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. எதுவும் நடக்காததுபோல் ரவி சாப்பாட்டில் கவனமாக இருந்தார். அக்கா என் தலையை தடவிவிட அதுபோதுமாக இருந்தது. அக்காவை கட்டிபிடித்து அம்மா அம்மா என்று விக்கி அழத்தொடங்கிவிட்டேன். நான் அழுவ தைப் பார்த்து பிள்ளைகளும் அழத் தொடங்கி விட்டார்கள்.

இப்பிடித்தான் அங்கேயும் எப்ப பார்த்தாலும் தானும் அழுது பிள்ளைகளையும் அழவைச்சுக் கொண்டு இருப்பா.

இவள்தானே ரவி எங்கட அம்மான்ர செல்லம். கடைசி நேரத்திலையும் இவளைத் தான் கூப்பிட்டுக்கொண்டே இருந்தா. கடைசி நேரம்... நெஞ்சுக்குள் அடங்கியிருந்த தீ எழும்பி எரிந்தது. எனக்குத் தெரியும் என்ர குஞ்சு அம்மா என்னைத்தான் தேடியிருப்பா எப்படி தேடியிருப்பா? மனதுக்குள் அழுது அழுது தேடியிருப்பா. எந்த அறையாக இருக்கும்? அக்காவிடம் கேள் கேள் என மனம் தூண்டி யது. வாய் மௌனித்து இருந்தது.

என் சின்ன அறை. நானும் அம்மாவும் ஒன்றாகப் படுத்து, கதைத்து, சிரித்து களித்த அறைப்படிகள் என்னை பார்த்துக்கொண்டே இருந்தன, அவை ஏதோ சொல்ல நினைப்பது போல்.

இந்தப் படியில்தானே அம்மாவின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்து ஆகாயத்தையும் நகரும் முகில்களையும், வேப்பமர இலைகளை யும், அதில் கட்டியிருக்கும் ஊஞ்சலையும் ரசித்தபடி இருப்பேன். படியில் அம்மா இருந்து என்னைப் பார்த்து சிரிப்பதுபோல், வா என கை நீட்டி அழைப்பதுபோல்... மெதுவாகப் போய் படியில் தலைவைத்து நிமிர்ந்து பார்த்தேன். அதே முகில்கள் அந்த வேப்ப மரம் ஊஞ்சல் உரசிய அடையாளத்துடன். எல்லாம் அப்ப டியே. ஆனால் என்ர அம்மா மட்டும்... கண்ணீர் படிகளை கழுவின.

நினைவுகள் எப்போதும் இறப்பதே இல்லை. சாம்பலிலிருந்து எழும் பீனிக்ஸ் பறவையைப் போல எழுந்து கொண்டே இருக்கும். சில நேரங்களில் இந்த நினைவுகள்தான் என்னை உயிர்ப்புடன் வாழவைக்கின்றன. பல சமயங் களில் என்னை மூலையில் முடக்கியும் விடுகின்றது. இவைகளை உதறிவிட்டு எழவேண்டும் என மனம் துடிக்கும். ஆனால் ஏதோ ஒன்று என்னை திரும்ப திரும்ப அதற்குள்ளே அழுத்திக் கொண்டே இருக்கும். இப்பவும் அப்படித்தான் அக்காவுக்கு என்ன சொல்லப் போகிறாய்? என எனக்குள்ளேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்வி எழுந்து என்னையே கேள்வி கேட்டபடி இருக்க என் மனமோ அடிவளவையும் மரங்க ளையும் சுற்றிக் கொண்டே இருந்தன.

மரங்கள் சூழ்ந்த அடிவளவில் நிழல்கள் படர்ந்து பரவிப்போய்க் கிடந்தன. இந்த மரங்களெல்லாம் சிரித்த நாட்களை விட என்னிடம் அடிவாங்கி அழுத நாட்கள்தான் அதிகம். சின்ன வகுப்பில் சிவஞானம் ரீச்சர், முருங்கைகாய் மாதிரி நீட்டு விரல் இருக்கிற பஞ்சலிங்கம் மாஸ்ரர் அவர் வகுப்பு தொடங்குவதற்கு முதல் நீட்டு விரலால தலையைச் சுற்றி தலையே நீ வணங்காய் என்ற தேவாரத்தை சொல்லத் தொடங்கின உடனே திருராசா அழத்தொடங்குவான். அவன் அழுவதை பார்த்தால் எனக்கு அம்மாவின் நினைவு வரும் நானும் அழுவன். என்னைப் பார்த்து ராகினியும் அழுவாள்.

பிறகு மூன்று பேரும் கதிரையில் ஏறி நிற்கவேணும். அதில் ஏறி நிற்க்கேக்க வில்லூன்றிச் சுடலைக்கு சவம்போகும். பள்ளிக்கூடத்துக்கு கிட்ட மேளம் அடிக்காமல் நமச்சிவாய பதிகம் பாடிக்கொண்டு போவார்கள். திருராசா என்னைக் கேட்பான், எங்க சவம் போகுது? என. இவன் இப்படிக் கேட்பான் என்று தெரிந்து கவனமா கையை பின்னால கட்டிக்கொண்டு நிற்பன். ஏனோ தெரியாது எப்பவும்போல ஏமாந்து கையை காட்டிடுவன்.

பிறகு அவன், 'எனக்கென்ன உன்ரை கை அழுகப்போகுது' என்று சொல்லிச் சிரிப்பான். ராகினியும் சேர்ந்து சிரிப்பாள். நான் விரலை சூப்பிவிட்டு அன்று முழுவதும் கையைப் பார்த்து பயந்துகொண்டே இருப்பன். சில நேரங்களில் சிலேற் பென்சிலை சுவரில் தேய்த்துவிட்டு கன்னத்தை உப்பென்று செய் கூரா இருக்கா எண்டு பார்ப்பம் என்று சொல்லிப்போட்டு குத்திவிடுவான். சுடுகாயாலும் சுடுவான். நான் றிங்பொட்டில் திறக்கேக்க நல்ல பிள்ளைமாதிரி சிரிப்பான். நான் அம்மாவிடம் சொன்னால் அம்மாவும் சிரிப்பா அம்மா அவனுக்கும் செல்லம். தன்ரை அண்ணான்ர மகன் என்று தடவுவ. எனக்கு அம்மாவில கோபம் கோபமா வரும்..

என்ர செரிமரத்தை வெட்டினது அவனுக்கு சந்தோஷம். நான் அதில ஏறி நித்திரை கொண்டு விழுந்தததாலதான் அம்மா சாமி நாதனிட்ட சொல்லி செரி மரத்தை வெட்டினவ. சாமிநாதன் கோடாலியோட நின்ற காட்சி என்னை என்னவோ செய்தது. மரம் என்னைப் பார்த்து அழுதது, கெஞ்சினது நானும் அழுதனான். ஆனா யாருக்கும் எங்கட அழுகை தெரியவே இல்லை. அதை வெட்டின இடத்தில அம்மா வாழைவைக்கச் சொன்னா. அதுவும் வளர்ந்தது. நான் அதின்ர இலையை நுள்ளி கிளித்து ஏதாவது செய்து கொண்டே இருப்பன்.

கணக்கு மாஸ்ரரின்ர கோபத்தை எல்லா தென்னை மரங்களிலையும், நாவல் மரத்திலை யும் காட்டுவன். அந்த மரங்களெல்லாம் பொல்லாத கணக்கு ரீச்சரை பார்த்து பயப்படு கிறமாதிரி கற்பனை செய்து மகிழ்வன். ஆனா நான் அடிக்காதது பாலப்பழ மரத்துக்கு மட்டும்தான். ஒரு வீட்டிலையும் இல்லாத பாலமரம் எங்கட வீட்டில மட்டும் இருக்கு என்று எனக்கு ஒரே பெருமை. எல்லோரிடமும் கேட்பேன், 'எங்கட வீட்டில பாலமரம் நிக்குது. உங்கட வீட்டில இருக்கே?' அவையளின்ர முகம் சுருங்கிபோகும். அப்பபார்த்து ராகினி சொல்லுவாள், 'ஆனா காய்க்காது என்ன...' இப்ப நான் சுருங்கிபோய்விடுவன். ராகினியில கோபம் கோபமா வரும். இவள் சரியான எரிச்சல் பிடிச்சவள். எவடம் எவடம் விளையாடேக்க இவளை எறும்புப் புற்றுக்குக் கிட்ட விடவேணும் என்று மனதுக்குள்ள நினைத்துக்கொள்வேன். இந்த மரம் ஏன் காயக்கிதில்ல. அடியாத மாடு படியாது எண்டு அம்மா சொல்லிறது சரியோ? இதுக்கும் அடிச்சிருக்கலாமோ? என பல கேள்வி முளைத்து நிற்கும். யாரோ சொன்னவர்கள் என்று சாமிநாதன் விளக்கீட்டு க்கு வீட்டு மேல்கூட்டில, மதிலில எல்லாம் சுட்டி வைத்துவிட்டு, விளக்கு மாறால பாலை மரத்துக்கு அடிச்சவர். 'இண்டைக்கு அடிச்சா நாணத்தில அடுத்த வருஷம் காய்க்கும் அம்மா' என்று சொல்லி அடிக்கேக்க எனக்குப் பாவமாக இருந்தது. எண்டாலும் காய்க்கட்டும் எண்டு பார்க்காத மாதிரி இருந்தனான். பாலப்பழ காலம் வந்து வந்து போனது. பழத்தைச் சாப்பிட்ட பிறகு வாய் கதைக்கேலாமல் ஒட்டிக்கொண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கிற மாதிரி மரமும் மௌனமாகவே நின்றது.

'அம்மா இந்த மரம் ஏன் காய்க்கிதில்ல?'

'அது ஆள் நடமாட்டம் இல்லாத இடத்திலதான் காய்க்குமாம்.'

'அப்ப எங்க காய்க்கும்?'

'காட்டுக்க காய்க்கும்'

'எங்கட வீட்டிலையும் ஆரையும் அடிவளவுக்க போகாமல் செய்தா காய்க்குமே?'

அம்மா என்னைப் பார்த்து அப்பவும் சிரிப்பா. அம்மா சிரிக்கேக்க அவவின்ர வைரத்தோடு மாதிரியே சிரிப்பும் பளிச்சென்று இருக்கும். எனக்கு ஓடிப்போய் அம்மாவை கட்டிப்பிடிக்க வேணும்போல இருக்கும். ஆனாலும் கேள்வியை அடுக்குவன்.

'சொல்லுங்கம்மா'

'என்னத்தை சொல்ல?'

'அதுதான் · ஆரும் அடிவளவுக்க போகவேணாம் எண்டு சொல்லுவமே? ஐயோ அம்மா அப்புத்துரை??'

அம்மா 'ம்' எண்டு சிரிப்பா

'அப்புத்துரையை எப்பிடி மறிக்கிறது அம்மா? அவர் இல்லாட்டி எனக்கு விருப்பமான அப்பத்துக்கு ஆர் கள்ளுத் தாறது?

அக்கா சொன்னா நீ போன பிறகு 'வீட்டில அப்பமே சுடேல்ல.'

அப்பம் எண்டா எனக்கு ஒரே புழுகமா இருக்கும். அம்மாவும் ரம்ளரை தந்து சொல்லுவா, 'கோடியால அப்புத்துரை போகும். எங்கேயும் பிராக்குப் பாராத்துக்கொண்டு இருந்திடாத'. அடுத்த நாள் ஐஞ்சு மணிக்கு நடராசா தேங்காய் துருவிற சத்தம் கேட்கத் தொடங்க நானும் எழும்பி முதல்ல பிய்யிற அப்பத்தை சாப்பிடத் தொடங்குவன் பிறகு நல்ல அப்பம் வரேக்க எனக்கு வயிறு நிரம்பிவிடும். முட்டை அப்பம், நல்ல அப்பம் எல்லாம் அக்கா சாப்பிடுவா. அம்மா என்னை கவலையா பார்ப்பா. இப்பவும் அப்படித்தான் என்ர அம்மா இங்க எங்கயாவது இருந்து என்னை பார்த்துக்கொண்டே இருப்பா. வாழ்க்கையில் சுகத்தை மட்டும் சுவாசித்து வாழ்ந்த அம்மாவின் மீது துன்பத்தின் நிழல் படர காரணமாய் இருந்த நான் பிறந்திருக்கவே கூடாது. அந்தக் கடைசி நாள் பிரிவின் பாதை நீண்டு என்னையும் அம்மாவையும் பிரித்த அந்த கணம் இப்பவும் அம்மாவின் அழுத முகம் என் மனதில்.

நான் அக்காவுக்கு எப்பிடி சொல்லப்போறன்? ஒவ்வொரு விடியலும் நடுங்கிக்கொண்டே விடிந்தது. அக்காவின் உடைபடாத மௌனம் என்னுள் பயத்தை அதிகரித்தது. அக்கா மட்டும் அல்ல, இந்த வீடும், மண்ணும், வீட்டைச் சுற்றி நிறைந்து நிற்கும் மரங்களும் எல்லாமே மௌனம் காத்தன. ஆனால் அவர்களின் முகங்களில் சோகம் படிந்துபோய் இருந்தது. அக்கா சுகந்தி என்று கூப்பிடும் பொழுதெல்லாம் மனம் பயப்பட்டது. என்னுடைய கருத்தை அக்கா கேட்கப்போவதே இல்லை. மனம் உடைந்து உடைந்து விழுந்து களைத்துப் போயிருந்தது. நித்திரை கூட என்னைவிட்டு தூர விலகியிருந்தது. நிலவு முற்றத்தை நிறைத்து நின்றாலும் மனித இருப்பைத் தொலைத்த மௌனம் நிறைந்து கிடந்தது. வெளியில் முள்முருங்கையின் பூக்கள் சத்தமில்லாமல் உதிர்ந்து கொண்டே இருந்தன. குசினி விறாந்தையில் வரிசையாக நிற்கும் முருங்கை கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அத்தானையும் நினைவுபடுத்தியது. எத்தனை முருங்கைகள் நின்றாலும் எனக்கு ஏழு வயதாக இருக்கும் போது நட்ட முருங்கையைத்தான் நான் மிகவும் விரும்பினேன். அதற்குத்தான் நிறைய தண்ணீர் விடுவேன். அதுவும் வளர்ந்து கிளைகளைப் பரப்பி நிழல் தந்தது. நெருப்பு வெக்கைக் காலத்திலும் சிவப்பாய் பூத்து குளிர்மையைத் தந்தது. மரங்களையும் பிராணிகளையும் நேசித்த காலம் எங்கேயோ தொலைந்து போயிருந்தது. இந்த மரங்களெல்லாம் என்னை தேடியிருக்குமோ? அம்மா மாதிரியே என்னை நேசித்த ஜிம்மியை எங்க தாட்டிரிப்பினம்? விடை தெரியாத கேள்விகளை சிந்திக்க சிந்திக்க பொழுதுகள் சுமையாக அழுத்தின.

என்னோடு சிரித்து, விளையாடி, சண்டை போட்ட வாசுகியை அக்கா அறிமுகப்படுத்தும் அளவிற்கு அடையாளம் அழிந்து 'அந்த வாசுகியா இவள்' என ஆச்சரியப்படவைத்தாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போரின் நிழல் அவளின் அகத்திலும் முகத்திலும் ஆழப் பதிந்திருந்தது. அவளின் சோகக் கதையை அக்கா சொன்னவுடன் அவளோடு தனிமையில் பேச வேண்டும்போல் இருந்தது. வாசுகியின் வீட்டுக்கு போகும் வழிகளில் இராணுவம் எத்தனையோ அப்பாவிகளை கொன்று குவித்த களைப்பிலும் பெருமிதத்திலும் அவர்களும் அவர்களின் ஆயுதங்களும் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தன. இவர்களில் யாரோ ஒருத்தன் சிலவேளை இவனாகவும் இருக்கலாம் வாசுகியின் ஒரே மகளையும் தேடிப்போன கணவரையும்....?

உடல் நெருப்பாய் எரிந்தது. காகமும் குயிலும் சேர்ந்து கத்தி என்னை திடுக்கிடவைத்தது. என்னவாக இருக்கும்? காகம் கஸ்ரப்பட்டு கட்டின வீட்டை குயில்பிடித்திருக்குமோ? சும்மா முட்டை மட்டும்தான் போட்டுக்கொண்டிருந்தது. காகமும் இனம் காணும்மட்டும்தான் காத்திருக்கும். இன்று என்ன நடந்தது, இங்க மனிதர்களே அடுத்து என்ன நடக்கும் என புரியாமல் தவிக்கும்போது.

வாசுகியின் வீட்டு முற்றம் உதிர்ந்த சருகுகளால் மூடிக்கிடந்தது. அவள் கதைக்கும் பொழுது எந்த மாற்றமும் தெரியவே இல்லை. இவள் சோகத்தை எல்லாம் மறந்திட்டாளோ? அக்கா ஏன் அப்படி சொன்னவ? என்றெல்லாம் என்னை சிந்திக்கவைத்தாள்.

இருட்டுது வாசுகி அக்காவும் ரவியும் தேடுவினம். நான் போயிற்றுவரட்டே.

இங்க பொறு நானும் வாறன் இவள் கலா தெரியும்தானே எங்களடோ படிச்சாள் அவளும் நான் படிப்பிக்கிற பள்ளிக்கூடத்திலதான் படிப்பிக்கிறாள். அவள் என்ர மகள் சுமதிக்கு டாப்பில ஒரே வட்டம் போடுறாளாம். அதுதான் ஏன் எண்டு கேக்கபோறன். இருண்ட வெளி நீண்டு கொண்டு போனது.

அந்தப் பாதையும் நீண்டு கொண்டுதான் இருந்தது. அக்கா சொன்னவ, 'பேசாமல் தாவடியால போய் வைத்தீஸ்வராவால போங்கோ. அங்கதான் ஆள்நடமாட்டம் இருக்கும்'. அண்ணா சொன்னான், 'ஆக்கள் இல்லாத இடத்தால போனால் ஸ்பீடா போகலாம். வா! நாவந்துறையால போய் சோனகத் தெருவால போவம்'.

நாவந்துறைச் சந்தியில் அன்னிய மணம் மணந்து வயிற்றுக்குள் என்னவோ செய்தது. அண்ணாவையும் ஸ்கூட்டரையும் மற்றப் பக்கம் நிற்பாட்டிச்சினம். தடுமாறி விழப்போன என்னை அப்பா மாதிரி கவனமா பிடிச்சினம். இவை வரேக்க எல்லாரும் கதைச்சவை, 'இனி எங்களுக்குப் பயமில்லை. காந்தி சொன்ன மாதிரி இரவிலையும் பயமில்லாம நடக்கலாம். இவை எங்கட சகோதரம்' என்றெல்லாம் சொல்லி மகிழ்ந்தவை. ஆனா அப்பாமாதிரி இருந்தவரின்ர கை அப்பான்ர கை மாதிரி இருக்கேல்ல, குரலும்கூட.

'எங்க போறீங்க?'

'வீட்டை'

'வீடு எங்க இருக்கு?'

'அங்க ஆஸ்பத்திரி றோட்டில'

நீட்டின கையைப் பிடிச்சவன். தங்கச்சி சட்டைக்கே என்ன வைச்சிருக்க? அந்த நேரம் பார்த்து அவர்களுக்கு அவசர அறிவிப்பு வர தப்பிய மான்களாய் நாங்கள். அண்ணா சொன்னான், 'அம்மாட்டை சொல்லாத என்ன. பிறகு எங்களுக்குதான் அடிப்பா'. ஓம் என்றுதான் தலையாட்டினான். ஆனால் அம்மாவை கண்டவுடன் என்னையறியாமல் நான் வாழ்க்கையில் ஒருநாளும் அப்படி அழுததே இல்லை. அம்மாவின் முகத்திலும் நான் என்றுமே காணாத துயரவெள்ளம் நிறைந்திருந்தது. சீயாக்காயும் மஞ்சளும் போட்டு தேச்சுத் தேச்சு முழுக வார்த்தா. கிடாரத்தில் சுடுதண்ணீர் கொதித்துக் கொண்டு இருந்தது. தீயும் சுவாலைவிட்டு எரிந்தது. அம்மம்மா தன்ர அறையில ஆசையா வைத்திருந்த இந்திராகாந்தியின் படத்தை கழற்றி ஓரமாக வைத்தா.

இரவு படுத்திருக்கும்போது அம்மாவின் கண்ணை தொட்டுப்பார்த்தான். ஈரமா இருந்தது.

'அம்மா ஏன் அழுகிறீங்க?'

'ஒண்டுமில்லை குஞ்சு'. பிறகு அம்மா என்னை தடவித் தடவி அழுதா.

'இப்ப ஏன் அழுகிறீங்க?'

'குஞ்சு பயப்பிட்டனியே?'

ஓம் எண்டு சொன்னா அம்மா இன்னும் அழுவா, இல்லையெண்டு சொல்லுவமோ என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைத்தாலும் தலை தன்பாட்டில் ஓம் என்றது. அம்மா இறுக்கி கட்டிப்பிடிச்சா. அம்மா இப்பிடித்தான். ஆனால் உங்கட கைமாதிரி இருக்கேல்ல. பயமா இருந்தது. அம்மா சத்தமா விக்கி அழுதா. என்னை இறுக்கி கட்டிப் பிடிக்கேக்க அம்மான்ர மூச்சு இன்னும் சூடா இருந்தது. அன்று மட்டும் அம்மா கர்ணன் கதை சொல்லாத இரவாய்க் கழிந்தது. எனக்காய் தூக்கம் தொலைத்து, சுகம்துறந்து என்னையே சுவாசித்த என்ர அம்மாவின் நினைவுகள் இரகசியமாய் அழவைத்தது.

நினைவுகளில் மூழ்கியிருந்த என்னை அக்கா என் மடியில் அல்பத்தை வைத்து மீண்டும் அழவைத்தா. முதல் பக்கத்தில் என்ர குஞ்சு அம்மா தலைமாட்டில் குத்துவிளக்கு. பக்கத்தில் பெரியம்மா, அக்கா. ஒரு கணம் என் உடலெல்லாம் தீப்பற்றியதுபோல் இருந்தது. வெளியில் சோவென மழை கொட்டிக் கொண்டிருந்தது. என் உதடுகளில் மெல்ல உப்புக்கரித்தது. உணர்வே இல்லாமால் பக்கங் களை கை புரட்டின. சாய்மனைக்கதிரையில் அம்மா படுத்திருக்க இளநீராலும், பாலாலும் கரணவாய் குருக்கள் அம்மாவை அபிஷேகம் செய்து கொண்டிருந்தார். என் கண்களிலிருந்து அம்மா கொஞ்சம் கொஞ்சமாக மறைவதுபோல்.

என்ர குஞ்சு அம்மாவை பெட்டியில்வைத்து மூடப்போகும் படம் நெஞ்சில் ஆயிரம் ஊசியால் குத்துவதுபோல் வலித்தது. அம்மாவின் கண்கள் என்னையே பார்ப்பதுபோல். நீ வருவாய் வருவாய் என்று கடைசி நிமிஷம் மட்டும் காத்திருந்தனான். ஏன் என்னை ஏமாற்றினீ? என கேட்பதுபோல் இருந்தது.

'என்னால முடியேல்லையே அம்மா'. கண்ணீர் அம்மாவை கழுவிக்கொண்டு ஓடியது.

அம்மா.

ம்

அம்மா

ஓம்

'நான் செத்தா என்னை சவப்பெட்டிக்குள்ள வைச்சு மூடுவீங்களே?'

அம்மா என்னை ஒரு பார்வை பார்த்தா விழி ஓரத்தில் மெல்லிய கசிவு தெரிந்தது.

'அம்மா ஏன் எண்டு கேட்கமாட்டீங்களே? ஏனெண்டா மூடினா இருட்டா இருக்கும் மூச்சு விட ஏலாம பயமா இருக்கும். பிறகு மேளம் அடிக்கக் கூடாது. ஆ... சொல்ல மறந்திட்டன் முக்கியமா நமச்சிவாய பதிகம் பாடவே கூடாது. நீங்க விரும்பினா அம்மா எண்ட பாட்டை மட்டும் பாடுங்க என்ன'.

தன்னை மறந்து சிரித்த அம்மா வாய்மூடி, விரல்கட்டி உயிர் பிழியும் துயரம் கவிழ்ந்து கிடந்தது.

என்ர மனசில அலையும் சூறாவளியும் சேர்ந்தே அடித்தபடி. இனி கதைக்காட்டி இந்த சூறாவளி பெருத்துப் பெருத்து என்னையே அடிச்சு அழிச்சிடும். அம்மா அடிக்கடி சொல்வா, 'குஞ்சு உண்மையை சொல்ல நீ ஆருக்கும் பயப்பிடக்கூடாது. எது பேசினாலும் வார்த்தை கள் கைவீசி நடக்கவேணும்'.

'அக்கா'

'என்ன?'

அம்மா சொல்லித்தந்த மாதிரி வார்த்தைகள் வரவில்லை. அவை ஓடி ஒளிந்தன.

'அம்மா எந்த அறையில...?'. அக்கா இருட்டில் நின்றா. பெருமூச்சுடன் சின்ன அறையைப் பார்த்தா. ஓ என்ர அறை அம்மா வும் நானும் சிரித்து, கதைத்து எனக்கும் அம்மாவுக்கும் பிடித்த அறை. உணர்வின்றி கால்கள் அறையை நோக்கி நடந்தன. இங்கதான் என்ர அம்மான்ர மூச்சு இந்த அறையிலதான் அமைதியாய், பெருமூச்சாய் மூசி மூசி கழிஞ்சிருக்கும். அம்மான்ர உயிர் எங்கேயும் போயிருக்காது. இந்த அறையிலதான் இங்கதான் என்னைத் தேடித் தேடி எனக்காக வில்லூன்றிப் பிள்ளையாரை வேண்டியபடி இருக்கும். என்ர வீட்டில இந்த அறையில ஒரு நிமிஷம் என்றாலும் இருக்க வேணுமென்று எத்தனை நாட்கள் ஏங்கி அழுதிருப்பன். இனி என்ர ஒரு கை எழுத்தால எல்லாம் மாறிப் போகப்போகுது. எங்கட வீட்டை தங்கட வீடு என்று யாரோ எல்லாம் சொல்லப்போகினம். முகம் தெரியாதவர்களின் பாதங்கள் என்ர அம்மா நடந்த தடயங்களை அழிக்கும். ஓம் என்ர அம்மாவின் எல்லா அடையாளங்களையும் அழிக்கும். பிறகு என்ர அம்மான்ர உயிர் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிமிஷம் கூட இங்க இருக்காது. ஓ என்று கத்தியபடி ஏதாவது ஒரு வெட்ட வெளியில் அலைஞ்சு அலைஞ்சு என்னைத் தேடுவா. இது நடக்கக்கூடாது. நடக்க விடவும் மாட்டன். நான் என்ன அம்மா செய்ய? என் உயிரை யாரோ வேரோடு அறுப்பதுபோல் இருந்தது, எல்லாமே என் கையை விட்டு நழுவுவதுபோல்.

சுகந்தி... இது என்ர அம்மா. என்ர அம்மா சுவரில் சிரித்தபடி என்னையே பார்த்துக்கொண்டு இருந்தா. சுகந்தி... அம்மா என்னை அழைப்பது போல். 'அம்மா கூப்பிட்டனீங்களாம்மா?'. அம்மா என்னைத் தொடுவதுபோல், என் தலை தடவி அணைப்பதுபோல் விரலுடன் விரல்கோர்த்து என்னை இறுகப் பிடித்து, 'என்னை தவிக்க விட்டுட்டுப் போனமாதிரி இந்த வீட்டையும் விட்டுடாதே'. ஒரு நிமிடத்தில் எல்லாம் கனவுமாதிரி. 'அம்மா என்னை பாருங்கம்மா என்னோட கதையுங்கம்மா, என்னை தனியா விட்டிட்டு எங்கேயும் போகாதேங்கம்மா'. அம்மா வின் படத்திலிருந்த ஆணி என்கையை கீறி இரத்தம் வழிந்துகொண்டு இருந்தது. அக்கா கத்தினா, 'சுகந்தி அழாத. வா, வந்து கையைக் கழுவு.'

'கழுவு'. எனக்குள் இருந்த வார்த்தை அகல கைவீசியது.

## விக்னா துளிப்பாக்கள்

வயோதிபத் தாய்க்கு நான் காவல்
அடுத்தவீட்டு ஜேர்மானியப் பெண்ணோ
தன் நாய்க்குக் காவலாக ஒரு நாள் லீவு

கிழிந்த உடைகள்
நாகரீக உச்சத்தின் வெளிப்பாடு
ஊசி நூலுக்கு ஓய்வு

கோடைகாலச் சூரியனுக்கு அஞ்சி
உடைகள் வீடுகளில் ஒதுக்கம
திறந்த மேனிகள் வெளியிலே

உணவு வகைகள் பெருக்கம
உடற் கட்டுறுதியில் அவா
பட்டினி வைத்தியம் இங்கே

பங்குனி பதினைந்தில் ஒரு தினம்
இன்றுபோலென்றும் என வாழ்த்த முடியவில்லை
ஊனமுற்றோர் தினம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பிரிந்து விலகியிருக்கும் போதில்
தாய்மனதை முழுதாக முற்றுகை
மழலையின் ஸ்பரிசம்

வேலைகள் வெற்றிடம்
அனுபவம் உள்ளவர் விண்ணப்பிக்க!
நாய்முடி(மயிர்) திருத்தும் நிலையம்

கழிவுகளை உண்டு
தூய்மையாக்கும் பணி
குப்பை வாளி

சூறாவளிக் காற்று
மாமரத்துடன் மோதல்
சிறார் கையில் மாங்காய்கள்

காலையில் கூவி எழுப்பிய சேவல்
கொதிக்கும் கறிச்சட்டிக்குள்
சேவற்குஞ்சுக்குப் புதிர்



வாழையிலைக்குச் சோறு
ஏழையோ பசியால் போராட்டம்
நான் வாழையிலை ஆனால்.?

விலையுயர் பழைய தளபாடங்கள்
கூலிகொடுத்து குப்பைமேட்டிலே
ஜேர்மனியச் சந்தையில் நவீனமாதிரிகள்

(2004/10)


விக்னா பாக்யநாதன்
ஜேர்மனி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**கற்பு நிலை என்று சொல்ல வந்தார் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்று 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பாரதி பாடிய போதும் கற்பு என்பது எப்போதும் பெண்களுக்குரிய கோட்பாடாகவே கருதப்பட்டு வந்தது, இன்றும் வருகிறது.**

சந்திரலேகா வாமதேவா (அவுஸ்திரேலியா)

# கற்பு நிலை என்று சொல்ல வந்தார்...

கூன், குருடு, செவிடு, பேடு என்று இவ்வுலகில் பிறக்கக்கூடாத பிறவிகள் பற்றிய பட்டியலில் பெண்ணும் அடங்கியிருப்பது துரதிஷ்டமே. இன்னொரு வகையில் கூறுவதாயின் எவ்வாறு கூன் முதுகுடனோ அல்லது செவிடாகவோ குருடாகவோ பிறப்பவர்கள் இவ்வுலகில் கஷ்டப்படுகிறார்களோ அவ்வாறே பெண்ணும் இவ்வுலகில் பிறந்து பெரும் துன்பங்களை அனுபவிக்கிறாள் என்று அதைப் பாடியவர் எண்ணியிருக்கலாம். எது எவ்வாறாயினும் பெண்ணுக்கு எதிரான அடக்குமுறைகள் எக்காலத்துக்கும் உரியனவாக இருப்பதுதான் பெருந்துன்பகரமானது. அண்மையில் இங்கு அவுஸ்திரேலியாவில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று புகைத்தல், மது அருந்துதல் ஆகிய பிரச்சினைகளை விட பெண்களுக்கு எதிராக வீடுகளில் நடைபெறும் வன்முறைகளே பெரிய பிரச்சினையாக உள்ளது என்று கூறுகிறது. சர்வதேச நிதி நிறுவனம் ஒன்றில் கடமை புரிந்த பெண்கள் எவ்வாறு ஆண்களின் அடக்குமுறைக்கு உள்ளானார்கள் என்றும் அந்த நிறுவனம் எந்த வகையிலும், அதனைக் கட்டுப்படுத்தாததால் அதற்கு எதிராக பெண்கள் இப்போது வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்றும் இங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆண் கட்டியெழுப்பிய இவ்வுலகில் அனைத்தும் ஆணுக்குச் சாதகமாகவே அமைந்துள்ளன. ஆரம்பத்தில் பெண் வெளியே வராது பின்னணியில் நின்று அவனுக்கு உதவியதால் இவ்வாறு அவன் ஆண்களுக்கேற்ற முறையில் உலகை, சமூகத்தை அமைப்பதை அவள் அறியாதே போய்விட்டாள். பின் அவள் வெளியே வந்து முழு அளவில் இயங்க ஆரம்பித்ததும்தான் அவளால் இந்தக் கசப்பான உண்மையை விளங்கிக் கொள்ள முடிந்தது. சமூகத்தில் தனக்குரிய இடத்தை எடுக்க அன்றிலிருந்து ஆரம்பித்த போராட்டம் இன்றுவரை ஓயவில்லை. ஆணுக்குச் சமமாக அவள் தனக்குரிய இடத்தை எடுக்க நீண்ட வழி போகவேண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பது தெரிகிறது. பெண் என்ற தமிழ்ச் சொல் பெள் என்ற வினையடியிலிருந்து தோன்றியது. பெள் என்பதன் கருத்து விரும்பு அல்லது ஆசைப்படு என்பதாகும். இந்த வினையடியி லிருந்தே பெண்டு, பேடை, பெட்டை, பெண்மை போன்ற பெண்களைக் குறிக்கும் சொற்கள் அனைத்தும் உருவாகியதாகத் தொல்காப்பியம் என்ற பண்டைய இலக்கண நூல் கூறுகிறது. பெண் எதற்கும் ஆசைப்படுபவள் என்ற கருத்தில் இந்தச் சொல் உருவாக்கப்பட்டது என்று கூறுவதைவிட, ஆணின் பார்வையில் பெண் ஆசைப்படுவதற்குரியவள் என்ற கருத்தில் இச்சொல் உருவானது என்று கூறுவது அதிகம் பொருத்தமானது போல தெரிகிறது. ஏனெனில் ஆணின் ஈர்ப்பு எப்போதும் பெண்ணை நோக்கியே அமைந்திருக்கிறது. பெண்ணைப் பற்றிய கோட்பாடுகள் அனைத்தும் அந்த முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. அழகு பற்றிய கருத்து முதற்கொண்டு கற்பு பற்றிய வரையறை வரை அனைத்தும் ஆணின் நோக்கிலேயே அமைந்துள்ளன என்பதில் சந்தேகமில்லை. நாம் கற்பு என்ற விஷயம் பற்றி மட்டும் இங்கு நோக்குவோம்.

கற்பு நிலை என்று சொல்ல வந்தார் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்று 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பாரதி பாடிய போதும் கற்பு என்பது எப்போதும் பெண்களுக்கு உரிய கோட்பாடாகவே கருதப்பட்டு வந்தது, இன்றும் வருகிறது. சேறு கண்ட இடத்தில் மிதித்து தண்ணி கண்ட இடத்தில் கழுவுதல் பற்றிய ஒரு தமிழ்ப் பழமொழி ஆணுக்கு கற்பு அத்தனை முக்கியமானதல்ல என்ற கருத்தைக் கூறுகிறது. இவ்வாறு ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என இவ்விஷயத்தில் பாரபட்சம் இருப்பினும் ஆணும் பெண்ணும் கற்புடன் இருப்பதே குடும்பத்தின் ஆரோக்கியத் திற்கும் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கும் சிறந்தது. சிறப்பாக எயிற்ஸ் என்ற ஆட்கொல்லி நோய் பரவ ஆரம்பித்ததும் கற்பின் அவசியம் கீழைத்தேய நாடுகள் போல மேலைத்தேய நாடுகளிலும் உணரப்பட்டது. அண்மையில் பிபிசி தமிழோசையில் இடம்பெற்ற எயிற்ஸ் பற்றிய சிறப்பு நிகழ்ச்சியில் தமிழ் நாட்டில் வேறு பெண்களுடன் தொடர்புகொண்ட ஆண் களால் எயிற்ஸ் பெண்களுக்கும் பிள்ளை களுக்கும் பரவி எவ்வாறு குடும்பங்கள் சீரழிந்து போயின என்று சுட்டிக்காட்டப்பட்டது. இது பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்கும் கற்பு என்பது அவசியமான ஒன்று என்பதை நன்கு விளக்கியது.

கற்பு என்பது உலகில் எல்லாப் பண்பாடு களிலும் காணப்படுவது ஒன்றாகும். அண்மைக் காலம் வரை மேற்கத்தைய நாடுகளிலும் இது கடைப்பிடிக்கப்பட்டே வந்தது. இருவர் ஒருவரை ஒருவர் விரும்பி காலம் முழுவதும் ஒருவருக்கு ஒருவர் விசுவாசமாக வாழ்வதே முறையாக இருந்தது. கருத்தடைச் சாதனங்கள் அறிமுகப் படுத்தப்பட்ட பின்னர் மேல்நாட்டில் நிலைமை மாறத் தொடங்கியது. மிக இளம் வயது தொடக்கம் மனம் விரும்பிய அனைவருடனும் தொடர்பு வைப்பதென்பது சாதாரண நடைமுறை யாயிற்று. இதனால் பாதுகாப்பு வழிமுறை களைச் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் நேரிட்டதால் பாடசாலைகளிலும் இது சம்பந்தமான கல்வி அவசியமாயிற்று. ஆயினும் திருமணத்தின் முன் எவ்வாறு வாழ்ந்தாலும் இருவர் ஒருவரைஒருவர் விரும்பி வாழ்க்கையை ஆரம்பித்த பின்னர் ஒருவருக்கு ஒருவர் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருக்கிறது. கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதா யினும், சிறப்பாகப் பெண்ணுக்கு வற்புறுத்தப் படுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. ஒரு குடும்பத்தில் வளரும் பிள்ளைகள் தமது தந்தை யார் என்று அறிந்து கொள்வதற்கும் குடும்பச் சொத்துக்கள் சரியான வாரிசுக்குச் செல்வதற்கும் பெண் கற்புடன் இருக்க வேண்டி யது என்பது மிக அவசியமாகக் கருதப் படுகிறது. பெண் பிள்ளையைத் தனது கருவில் தாங்கி உருவாக்கும் உடலமைப்பைக் கொண்டுள்ளதால் அவள் கற்புத் தவறும் போது குடும்பத்தில் வாரிசு பற்றிப் பெருங் குழப்பங்கள் ஏற்படுகின்றன. இன்று இங்கு ஆங்கிலேயர் மத்தியில் சில சமயங்களில் யாருடைய குழந்தை என்பது தாய் சொல்லும் வரை தந்தைக்குத் தெரிவதில்லை. இதனால் சில சிக்கலான சந்தர்ப்பங்களில் டி.என்.ஏ செய்து யார் தந்தை என்பது உறுதிப்படுத்த வேண்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஒரு கணவன் வேறு இடங்களில் இன்பம் தேடுபவனாயினும், நல்ல குணங்களோ இயல்புகளோ இல்லாதவனாயினும் அவனை மனைவியானவள் கடவுளாகத் தொழுவதுடன் அவனுக்கு உண்மையானவளாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது மனு தர்ம சாஸ்திரம்.**



**கற்புக்கரசிகள் பற்றிய கதைகள் அனைத்தும் ஆண்களால் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.**

யிருக்கிறது. இதனால் குடும்பங்கள் குலைகின்றன. ஆண் கற்பு தவறுவதால் பெரிதாக அனர்த்தங்கள் விளையாது போயினும் குடும்பம் குலைவதற்கு அதுவும் ஏதுவாகிறது. எது எவ்வாறாயினும் பெண்களுக்குரியதாக கற்பு நெறியை காலம் காலமாக தமிழர் வற்புறுத்தியே வந்துள்ளனர். இதுபற்றி நோக்குவதன் முன்னர் கிமு இரண்டாம் நூற்றாண்டுக்கும் கிபி இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் எழுந்து, பெண்கள் சுதந்திரமாக இருப்பதற்கு அருகதையற்றவர்கள், எனவே அவர்களை எப்போதும் விழிப்புடன் அவதானிக்கவேண்டும் என்றுகூறி பெண்ணை இரண்டாம் தரத்துக்குத் தாழ்த்திய மனு தர்ம சாஸ்திரம், கற்பு பற்றி என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

ஒரு கணவன் வேறு இடங்களில் இன்பம் தேடுபவனாயினும், நல்ல குணங்களோ இயல்புகளோ இல்லாதவனாயினும் அவனை மனைவியானவள் கடவுளாகத் தொழுவதுடன் அவனுக்கு உண்மையானவளாக இருக்க வேண்டும் என்று கூறியதுடன் நின்றுவிடாது கற்புத் தவறிய பெண்ணுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதையும் அது கூறத் தவற வில்லை. தனது கணவனுக்கு உண்மையாக இல்லாத பெண் இந்த உலகில் இழிவுபடுத்து தற்கு உரியவள். அவள் அடுத்த பிறவியில் நரியின் கருவில் பிறந்து அவளது கெட்ட நடத்தையால் ஏற்பட்ட நோயால் துன்பப்படுவாள் எனக் கூறுகிறது.

கற்பு என்ற சொல் கல் என்ற வினையடி யிலிருந்து தோற்றம் பெற்றது. அதன் கருத்து கிண்டு என்பதாகும். அதாவது ஒரு பெண்ணின் மனதின் ஆழத்தில் வேறு ஆணைப் பற்றிய நினைப்பு எதுவுமின்றி தனது கணவனுடன் மட்டும் அன்பு பூண்டுள்ளவளாக இருக்கிறாளா என்பதைக் கிண்டிப் பார்ப்பது என்பதுவே அதன் அடிப்படையான கருத்தாகும். அதாவது கற்பு என்பது ஒரு மனைவி கணவனுக்கு உடலள வில் மட்டுமின்றி மனதளவிலும் நம்பிக்கைக் குரியவளாக இருத்தல் என்பதாகும். அது பெண்ணுக்குமட்டுமல்ல ஆணுக்கும் பொருந்தும்.

பெண்கள் கற்புடன் இருக்கவேண்டும் என்ற கருத்து சங்க இலக்கியங்களிலேயே அறிமுக மாகிவிட்டது. "கற்பின் மெல்லியல்" என்று பெண்ணின் கற்பின் சிறப்பை சிறுபாணாற்றுப் படை என்ற இலக்கியம் குறிப்பிடுகிறது. "அருந்ததி அனைய கற்பு" என்று ஐங்குறுநூறு என்ற இலக்கியம் கூறுகிறது. "பெருநல் வானத்து வடவயின் விளங்கும் சிறுமீன் புரையுங் கற்பி னறு நுதல்" (வானத்தின் வடபகுதியில் விளங்கும் நட்சத்திரமான அருந்ததியைப் போலும் கற்புடைய அழகான நெற்றியையுடைய பெண்) என்று பெரும்பா ணாற்றுப்படையும், "வடமீன் புரையுங் கற்பின் மடமொழி" என்று புறநானூறும் குறிப்பிடு கின்றன. அருந்ததி என்ற வடநாட்டுப் பெண் ணின் கற்பு தமிழ்நாட்டுப் பெண்ணின் கற்புக்கு எவ்வாறு உவமையாக அமைந்தது என்பது வியப்புக்குரிய தொன்றாகவே உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறீஸ்துவின் பிறப்போடு ஒட்டி எழுந்த சங்க இலக்கியங்களில் மட்டுமல்ல இன்றுவரை இந்த அருந்ததி என்ற வடநாட்டு இதிகாச புராணங்களில் கூறப்பட்ட பெண்ணின் கற்பு தமிழரது வாழ்வில் இடம்பிடித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் தமிழரது திருமணங்களில் அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல் என்பது முக்கிய அம்சமாக இடம்பெறுகிறது. கற்பை இழந்து கல்லாகிப் போன அகலிகையைப் போல இருக்காது அருந்ததி போல மணமகளானவள் கற்புடன் இருக்க வேண்டும் என்பதே அதற்கான எதிர்பார்ப்பாகும். அல்லது அருந்ததியைப் போல கற்பில் கல் போன்ற உறுதியுடன் இருக்க வேண்டும் என்றும் இதற்கு கருத்துக் கூறலாம்.

அருந்ததி என்ற கற்புக்கரசியின் கதை பின்வருமாறு அமைந்திருக்கிறது. அருந்ததி என்பவள் பிரஹ்மரிஷி வசிட்டரின் மனைவி. கணவனுக்கு முழுமையாகத் தமது வாழ்வை அர்ப்பணித்த பெண்களில் இவள் மிக உயர்ந்தவள் என்று கூறப்பட்டுள்ளது. பிரமாவின் வேண்டுகோளுக்கிணங்க அவளது தந்தை அவளுக்கு சிறந்த கல்வியை வழங்கியிருந்தார். பின் திருமணமானதும் அவள் கணவனை விட்டு ஒரு போதும் விலகியதுமில்லை, அவரது காரியங்களுக்குத் தடை போட்டதுமில்லை என்று கதை செல்கிறது. சிவனால் அவளது கற்புக்கு நடத்தப்பட்ட பரீட்சையில் அவள் வெற்றி பெற்றதால் அவளது புகழ் மேலும் அதிகரித்தது. பின்னர் அவளது கற்பின் சிறப் பால் அவள் வடக்கு வானத்தில் மின்னும் ஒரு தாரகையானாள். அவளருகிலேயே அவளது கணவனான வசிட்டரும் ஒரு நட்சத்திரமானார் என்று கதை நிறைவு பெறுகிறது.

பொதுவாகவே இந்திய பெண்கள் அனை வரும் தமது கணவனுக்கு விசுவாசமாக கற்புடன் இருந்தபோதும் தனது கணவனுக்காக ஒரு மனைவி செய்யும் அளப்பரிய செயல் மூலமே அவள் கற்புக்கரசி ஆகிறாள் என்று கூறுகின்றன கற்புக்கரசிகள் பற்றிய கதைகள். உதாரணமாக சாவித்திரி யமனுடன் போராடித் தனது கணவனின் உயிரை மீட்டு வந்ததால் கற்புக்கரசி என்று போற்றப்பட்டாள். மாண்டவியா என்ற ரிஷியால் விடிவதன் முன் உன் கணவனது உயிர் பிரியும் என்று சபிக்கப் பட்டதால் அனுசூயா என்ற பெண் தனது கற்பின் சக்தியால் சூரியனை உதிக்கவிடாது தடுத்து வைத்திருந்தாள். பின் கடவுளர் வந்து அந்த சாபத்தை நீக்கியதாலே அவள் சூரியனை உதிக்க அனுமதித்ததாகவும் அனுசூயா என்ற கற்புக்கரசியின் கதை சொல்கிறது. சீதை இராமரது ஆணையின் படி தீயில் பிரவேசித்துத் தனது கற்பை நிரூபித்ததாக இராமாயணம் கூறுகிறது. கண்ணகி கோவலனான தனது கணவனைக் கள்வன் என்று சந்தேகித்துக் கொலை செய்த பாண்டிய அரசனின் முன்னிலையில் அவன் கள்வனல்லன் என்று நிரூபித்ததன் பின் தனது மார்பகங்களை பிடுங்கி வீசி மதுரையை எரித்த பின்னர் வானுலகம் சென்று தனது கணவனை அடைந்ததாக சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்தக் கற்புக்கரசிகள் பற்றிய கதைகள் அனைத்தும் ஆண்களால் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கற்புக் கோட்பாட்டை மிக அதீதமாகச் சொல்லும் ஒரு கதை மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ளது. ரேணுகா என்பவள் ஜமதாக்கினி யின் மனைவி. தினமும் ஆற்றுக்கு தண்ணீர் எடுத்துவரச் செல்லும் அவள் தனது கற்பின் வலிமையால் ஆற்று மணலிலே குடம் செய்து அதில் தண்ணீர் எடுத்து வருவது வழக்கம். ஒரு நாள் வானத்தில் சென்று கொண்டிருந்த வித்தியாதரரின் உருவங்கள் ஆற்று நீரிலே பிரதிபலிப்பதாகக் கண்டு “இவர்கள் எவ்வளவு அழகாக இருக்கிறார்கள்“ என்று ஒரு கணம் நினைத்தாள். அதனால் அன்று அவளால் ஆற்று மணலில் குடம் செய்ய முடியவில்லை. இதை அறிந்த கணவன் அவள் கற்பில் தவறிவிட்டாள் என்று கொண்டு தனது மகனான பரசுராமனை அழைத்து தாயைக் கொல்லும்படி கட்டளையிட்டான். தந்தையின் சொல்லை மீறமுடியாத மகன் அதை நிறைவேற்றும் வகை யில் தாயைக் கொன்றான். இக் கதையிலும் கற்பு என்பது பெண்ணின் செயற்கரிய செயலை வைத்தே எடை போடப்படுகிறது. மணலில் குடம் செய்ய முடியாததாலேயே கணவன் அவளது கற்பில் சந்தேகம் கொள்கிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்துடன் கற்பு என்பது ஒரு கணம் கூட பிற ஆடவரை ரசிக்காதிருப்பதே என்று மிக அதீத முறையில் கற்புக்கு வரைவிலக்கணம் தருகிறது இக் கதை.

தமிழ்நாட்டில் கண்ணகி சிறந்த கற்புக்கரசி யாகப் பிரசித்தி பெற்றது போல வேறு எந்தக் கதைகளும் சிறப்புப் பெறவில்லை என்று கூறலாம். பல பெண்களின் கற்பு இலக்கியங் களில் சிறப்புப் பெற்ற போதும் கற்புக்கரசி என்று புகழப்படும் அளவிற்கு எந்தக் கதையும் பிரபலியம் அடையவில்லை. மணிமேகலை யிலும் சிலப்பதிகாரத்திலும் சாதுவன் என்பவ னின் மனைவியாகிய திரையின் கற்பு சிலாகித்துக் கூறப்பட்டுள்ள போதும் அவளது பெயர் கண்ணகியின் பெயர் போல சிறப்படைய வில்லை. கணவன் இறந்ததை அறிந்து தீ மூட்டி மாள நினைத்த அவளை நெருப்பு எரிக்க மறுத்துவிட்டதாக இக் கதை கூறுகிறது. மணிமேகலை அவளிடமிருந்தே தனது அமுத சுரபியில் முதல் கையளவு உணவு பெற்றதாக மனிமேகலை என்ற காவியம் சொல்கிறது.

பெண்ணை வெறுத்தொதுக்கிய சமணம் "மின் நேர் இடையார் சொல் தேறான் விண்ணகத்தும் இல்" என்பது போன்ற கருத்துக்களைத் தாம் எழுதிய அறநூல்களில் சேர்த்துக் கொண்ட போதும் அக்காலத்தில் எழுந்த அறநூல்கள் ஆங்காங்கே கற்புடைய பெண் பற்றிக் குறிப்பிடுகின்றன. "கற்புடைய பெண் அமிழ்து" என்கிறது சிறுபஞ்சமூலம் என்ற அறநூல். அக்காலத்தெழுந்த திருக்குறள் கற்பு பற்றி சிறிது அழுத்திக் கூறுகிறது. வாழ்க்கைத் துணைநலம் என்ற பகுதியில் "கற்பென்ற சக்தியை உறுதியாகக் கொண்ட பெண்ணை விடப் பெரியவர் யார் இருக்கிறார்?" என்று கேட்கும் வள்ளுவர் "தெய்வத்தைத் தொழாது தனது கணவனைத் தொழுபவள் பெய் என்று சொன்னால் மழை கூட பெய்யும்" என்று ஆசை காட்டுகிறார்.

தமிழ் இலக்கியங்கள் பொதுவாக கற்புள்ள பெண்களையே காலம் காலமாகச் சித்தரித்து வந்துள்ளன. பெரியபுராணத்தில் இயற்பகை நாயனார் தனது மனைவியைத் தானமாகக் கேட்ட சிவனடியாருக்கு அவளைக் கொடுத்த போதும், அதைத் தடுக்க வந்த உறவினர் களைக் கொன்ற போதும், இறுதியில் கடவுளே சிவனடியாயராக வந்ததாகவும் அவர் தமக்கு ஊர் எல்லைவரை காவலாக வந்த நாயனாரிடம் மனைவியை திரும்ப ஒப்படைத்து மறைந்த தாகவும் கதையை முடிக்கிறார் சேக்கிழார். தமிழர் காலம் காலமாக வலியுறுத்தி வந்த கற்பு என்ற கோட்பாட்டுக்கு களங்கம் வருவதை சேக்கிழார் விரும்பவில்லை போல தெரிகிறது.

ஆயினும் சோழர் காலத்தின் பின் எழுந்த சிற்றிலக்கியங்கள் சில தாம் எடுத்துக் கொண்ட தலைவனின் புகழைப் பாடுவதற்காக ஏழு பருவப் பெண்களும் அவனைக் கண்டு மையல் கொள்வதாகப் பாடுகின்றன. இங்கே தலைவ னின் புகழ் பாடுவதே முக்கிய நோக்கமாக இருந்தததால் அதற்காக சமூகத்தின் மற்றைய முக்கிய பெறுமதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. உதாரணமாக உலா வரும் தலைவனது அழகைக் கண்டு ஏழு வயது தொடக்கம் 40 வயது வரையுள்ள பெண்கள் மையல் கொள்வதாகக் கூறிய போதும் அது அடிப்படையில் கற்புக் கோட்பாட்டுக்கு மாறுபாடானதாக இருந்த போதும் அங்கு இலக்கிய நயம் கருதி அவ்வாறு பாடப்பட்டதே தவிர உண்மையில் சமூகத்தில் அவ்வாறு நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கற்புடைய பெண்ணின் கழுத்தில் முத்து வளரும் என்றும், அவளது கட்டளைக்கு இயற்கை கூட அடி பணியும் என்றும் கூறப்பட்டு பெண்களது கற்பு அதிகளவில் வற்புறுத்தப்பட்டு வந்துள்ள போதும் பொது மகளிர் என்ற விலை மாதர் பற்றிய பற்றிய குறிப்புகளும் சங்க காலத்திலிருந்தே இலக்கியங்களில் இடம்பெற்று வந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. குடும்ப அமைப்பைக் குழப்பமின்றிப் பேணுவதற்கும், சரியான வாரிசுக்கு சொத்தைக் கைமாற்று வதற்கும் குடும்பப் பெண்களுக்கு கற்பு வற்பு றுத்தப்பட்டு வந்துள்ளபோதும் சில ஆண்களா வது தமது மகிழ்ச்சிக்காக வேறு பெண்களை நாடிச் சென்றதால் சில பெண்கள் கற்பிழந்து பொது மகளிராகவே காலம் கழிக்கவேண்டிய தாயிற்று. இந்த மரபு தமிழர் மத்தியில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பரந்தளவில் உள்ளது என்பது யாவரும் அறிந்ததே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# கட்டுடையும் நகரம்

பழையவற்றைகளை
கட்டுடைக்கும்
பிடிவாதங்களுடன் இருந்த தந்த வீடு
இதுவரை இருந்த ஆண்கள் போலென
பெண்களின் கேசங்கள் வெட்டப் பட்டிருக்க
தலையோ சுதந்திரமென குதூகலித்தது

மரபுகளை மீறிய
அடையாளமாய்
ஆண்கள் கூந்தல் நீண்டு
அலை பாய்ந்து கிடக்க
சிடுக்குகளாய்
தொலைக்க முடியா
மரபுகளின் கழிவுகள்

புதிய நடை பயின்று
கொண்டிருந்த இளம் தளிர்
தன் இயல்புகளை தானே
வடிவமைக்க முயன்று
முன்னே பீருடன் இருந்த
முந்தைய தலைமுறையை
பிரதி எடுத்துக் கொண்டிருந்தது

இவர்கள் கலகக் குரல்
ஊரெல்லாம் காற்றெல்லாம்
கட்டுடைக்க



சமையலறை கரப்பான்
காலாவதியாக்கிக் கொண்டிருந்தது
எல்லா கட்டுடைப்புகளையும்

அமைதியான கொதிப்புகளுடன்
இவர்களது குரல்களை
வானொலியில் இட்டு
வறுத்து தொட்டுக் கொள்ள
பரிமாறித் தர

கட்டுடைப்பில் உடைபடாத
சாப்பாட்டு அறையின் புனிதம்
கழிவறை அதே மூலையில் ஒதுக்கமாக

கட்டமைக்க முடியா
துகள்களை தின்று
சீரணித்து விட முடியாத படி
நெளிந்து கிடந்தனர்
வரவேற்பறையில்
எதையும் வரவேற்க இயலாதபடி

ஆறறிவுகளை சுமந்த வீட்டோ
பூக்களை புனிதங்களை
கட்டுடைத்து
முட்களாய் முகிழ்க்க
வாசலில் ஓரறிவு பூச்செடி
எல்லா முரண்களையும்
முட்களாய் தாங்கிய போதும்
பூத்திருந்தது
முட்களை கட்டுடைத்து

அடையாளங்களில்
அநர்த்தங்களின் அர்த்தம் கற்பிக்கும் வீடு
மொழியின் பொருள் தொலைத்து
வெற்று எழுத்துக்களாய் உதிர

பூக்கள் தன் உதிர்தலுக்குப் பின்
கனியாகி எல்லா அசைவுக்கும்
பொருள் கொண்டிருந்தது. *(2004/10)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# குற்றமில்லை

**பெண்கள்** கதை சொல்லிச் சொல்லியே தொலைந்து விட்டார்களோ... கதை சொல்லி பெண்கள் எப்படி கொலை செய்வது...? மண்டையை குடையத் தொடங்குகிறது. சுபம் சொல்லி எழுதவும் முடியாது... முடிக்கவும் முடியாது... இது பெண்ணின் கதையே. கண்ணீருடன் ஒரு பெண் கண்ணீருடன் இன்னொரு பெண். உயிரை தக்க வைத்துக் கொள்வதற்காய் கொலை செய்ய வேண்டிய நிலை இவளுக்கு.

**நான்கு சுவர்களுக்குள் வாழ்ந்த பெண் சுவர் ஏறிக்குதித்து கொலை செய்ய வரும் காமுகன் முன்னே ஆபரணம் ஆவதா ஆயுதம் ஆவதா?**



ஓவியம்: சௌந்தர்

**விஜயலட்சுமி சேகர்**
**(இலங்கை மட்டக்களப்பு)**

உயிரைப் பறிக்கும் யமனாய் மாறி உயிரைப் பறிகொடுத்த மகனைப் பெற்ற பெண்ணாய் அவள். இனி கதை மட்டுமா இவர்கள் சொல்ல வேண்டும்.

உயிரைக் காப்பாற்ற இரவு அவனுடன் போராடியதை விட இப்போது மிக மிக களைத்து களைத்தே போய்விட்டாள். மனசால்... உடலால்... எதிர்காலத்தால்... இனி வாழ்வால்.... கேள்விகளுடன் தள்ளப் பட்ட தனிமையுலகில் கழிக்கும் ஒவ்வொரு வினாடிகளிலும் சோர்ந்தே போய் விட்டாள்.

ஒன்றரை வயது மகளுக்கு காலையில் ஏற்பட்ட விடாத காய்ச்சல். உடல் அனலாய்க் கொதிக்கிறது. பால் கொடுத்து விட்டு, வாடியபடி அனுங்கிக் கொண்டிருக்கும் மகளின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் நுகா. அவளிடம் மட்டும் பால் குடித்த குழந்தை வேறு உணவு எதையும் உட்கொள்ள மறுக்கிறது. கணவன் இருந்தாலும் ஆறுதலாவது இருந்திருக்ககும். அவன் வெளிநாடு போய் 6 மாதங்களாகிறது. துணைக்கு இருக்கும் அவள் தாய் மூலையில் சாய்ந்தபடி பாதி உறக்கத்தில் இருக்கிறாள்.

ஊரில் ரேப்பும் கொலையும் கொள்ளையும் செய்யும் கும்பல் ஒன்று உருவாகி உலாவத் தொடங்கி விட்டது. அண்மைக் காலமாய். சிலவேளைகளில் நடு இரவுக்குப் பின் வெளியில் கேட்கும் காலடிச் சத்தம், ஓசைகள், காணாமல் போன வெளி 'வல்வ'. இந்தக் கும்பலுக்குப் பயந்த நுகா இரவில் தாயை துணைக்கு வைத்துள்ளாள்.

மகளை மடியில் போட்டபடியே கண்மூடுகிறாள் நுகா. கொஞ்ச நேரத்தில் வெளியில் ஜன்னல் தட்டும் ஓசை. திறப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓட்டைக்குள் ஏதோ நெருடும் ஓசை. கால் அரவம், கிசுகிப்புக்கள் நித்திரை கலைய சத்தங்களை அவதானிக்கிறாள். உடல் மெல்ல வியர்க்கிறது பதட்டம் பயத்தில். முந்திய சம்பவங்கள், கோரக்கதைகள். ரேப்பண்ணப்பட்டு கொடூரமாய் கொலை செய்யப்பட்ட பெண்கள் வரிசையில் இன்று இந்த நிமிடம் தன்னை வைத்துப் பார்க்கவே உடல் சில்லிடுகிறது. இரும்புப் பாறையாய் இறுக்கமான கணங்கள். தொண்டை உலர தாயைத் தட்டுகிறாள். கண் விழித்த தாயை பேச வேண்டாம் என சைகை காட்டி குழந்தையை தாயிடம் கொடுக்கிறாள். அரை குறை உறக்கத்தில் திடுக்கிட்டு எழுந்து நிலைமையை உணர்ந்து கொண்ட தாயின் முகம் பீதியில் உறைகிறது. வீட்டின் கூரையில் சத்தம். இப்படித்தானே அமீனாவின் வீடும் பிரிபட்டு... மரத்தில் ஆடைகளற்று கழுத்து திருகுபட்டு பிணமாய் அமீனா...

இதே கும்பலால் பாலியல் பலாத்காரத் திற்கு உள்ளாகி அவலட்சணமாக்கப்பட்ட சபீதா... கம்பில் கட்டித் தொங்கவிடப்பட்ட நண்பி...

ஓடு கழட்டும் ஓசை... அனைத்து நாடிகளும் உறைந்து விட்டது. தனக்காக இருக்கும் நிமிடங்கள் சொற்பமே. குசினிக் கதவுக்குப் பின்னே குசுகுசுப்புச் சத்தங் கள்... மறைவாய் இருப்போமா, தாயின் பரபரப்பு. ஓட்டின் கீழே அடித்திருந்த பொலித்தீன் கிழிபடும் ஓசை. மேலிருந்து இரண்டு கால்கள் கீழே தொங்கி இறங்கி... குதித்து விட்டான். குதித்தவன் குசினிக் கதவுக்குப் போக எத்தனிக்க....எது உந்தியதோ ஒரு நொடிக்குள் நுகா அவன் கால்களை கெட்டியாய்க் கட்டிப்பிடிக்க, அவன் இடறி விழுந்து விட்டான். நுகாவை பலமாய் தள்ளி விட்டு மீண்டும் அவன் எழ, அவனது சேட்டை இழுத்தபடி விடாமல் போராட... குசினிக் கதவிற்குப் பின்னால் நிற்கும் கும்பல் கதவை உடைப்பது போல் படபடவென கதவை ஆட்டும் சத்தம்... தொடரும் போராட்டம்... உதறி விட்டபடி குசினிக் கதவை திறக்கச் செல்லும் அவனை இழுத்தபடி இழுபட்டுச் செல்லும் நுகா...

பயங்கரத்தில் நெஞ்சுபிளக்க தொண் டையில் இருந்து ஓசையே எழுப்ப முடியா மல் போராடிப் போராடி இழுபட்டுச் செல்லும் மகளை விறைத்தபடி பார்த்திருக்கும் உம்மா. தாக்கிய அவனது கையால் அவள் கடைவாய் கிழிபட்டு இரத்தம் வடிகிறது. குசினிக் கதவிற்கு போட்டிருந்த வார் தடி, அவன் கைக்குக் கிடைக்கிறது. கீழே கிடந்து காலையும் இடுப்பையும் இறுக்கிய படி இழுபடும் நுகாவின் முதுகில் பலமாய் தாக்குகிறான். அடிபட்டு பிளேற் றக்கில் விழுந்த நுகாவின் கையில் அதிலிருந்த சமையல் கத்தி கிடைக்கிறது. வெளியே நிற்கும் கும்பலை உள்ளே எடுப்பதற்காக கதவைத் திறக்கும் அவன் முதுகில் தன் பலம் கொண்ட மட்டும் ஓங்கி குத்துகிறாள். நுகா மீண்டும் மீண்டும்... திரும்பியவன் தடுமாறுகிறான். இரத்தம்... ஏங்கியபடி மூலைக்குள் ஒடுங்குகிறாள் நுகா. நிலத் தில் உருண்டு... சுருண்டு... கண்முன்னே அவன் உயிர்பிரிய... விறைத்துப்போய் பார்த்துக் கொண்டிருக்கும் இவர்கள்...

கதைத்தே ஆகவேண்டும். பல கதைகள் கேட்டே ஆக வேண்டும் இனி.

இரும்புக் கம்பிக்கு அப்பால் இருந்த படியே பலமணி நேரம் குழந்தைக்குப் பால் கொடுக்காததால் இறுகிய மார்புடன் உம்மாவின் கையில் வாடியபடி உறங்கும் தன் குழந்தையை பார்க்கிறாள் நுகா. குழந்தையுடன் வாழ்ந்த தன் இயல்பு வாழ்க்கை இல்லாமல் போய் மானுட வர்க்கத்தில் இருந்து மாற்றுருக் கொண்ட வளாய் தன்னை உணர்கிறாள் நுகா.

'இனந்தெரியாதவர்களால் குடும்பப் பெண் பாலியல் பலாத்காரத்திற்கு உள் ளாக்கப்பட்டு படுகொலை செய்யப் பட்டுள்ளார்.' பத்திரிகையில் வழமையாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரும் செய்தி இம்முறை மாறிவிட்டது. கொலைகாரனே இம்முறை கொலை செய்யப்பட்டுள்ளான்.

தன் கைக்குள் உறங்கிய குழந்தை யார் யாரோ கை மாறவும்...?

பிணையில் எடுப்பதென்றால்... ம்... சட்டப்படி இது மேடர் கேஸ்தான். வக்கீலின் மௌன கசிவிலும் பொலிஸின் பாது காப்பிலும்... 'இவளோட எவனோ இருந்தி ருக்கணும் அத கையும் களவுமா பிடிக்கப் போன என்ர பிள்ளையை இவள் கொலை பண்ணிட்டாள்.' எதிர்பாராத பழியிலும் இவள் தான்! தன்னை சுட்டிக் காட்டும் பல விரல்களிலும் உடைந்து உலர்ந்தே விட்டாள் நுகா.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பெண் ணின் ஆபரணமாம். நான்கு சுவர்களுக்குள் வாழ்ந்த பெண் சுவர் ஏறிக்குதித்து கொலை செய்ய வரும் காமுகன் முன்னே ஆபரணம் ஆவதா ஆயுதம் ஆவதா?

## துர்க்கா கவிதைகள்

1.

யாருமில்லாத தீவு
யன்னல் ஓரம் ஆர்ப்பரிக்கும் கடல்
மழை வடித்த தெரு
நிலவை ஒளித்து வைத்திருக்கும்
நட்சத்திரக் காடு
காதுக்குள் இடைக்கால எஸ்.பீ.பீ (SPB)
மனதுக்குள் சித்தாரின் சுருதி
ஆட்களில்லாத ஆலய சந்நிதி
தீர்க்கமாய்ப்படும் ஞானியின் பார்வை
கண்ணீருக்காய் இதமான நினைவுகள்
ஆத்மாவை நுரைக்க அம்மா ஞாபகம்
புரிந்து படிக்க ஒரு கவிதை
புரியாது ரசிக்க ஒரு கஸல்
குழந்தையாய்ப் போக உன் மடி
(2003)

2.

பொய் மயக்கங்களில் புதைந்து
போய்
நானும் இங்கே

மனது உடைந்து
கண்கள் காயமாக
மறுபக்கங்களின் வேதனை
கிளர்ச்சிகள்.
மீளவும சந்தோஷங்கள் தேடுகையில்
பூவாகும் மனம்

இனியெப்போ உடையும்,
இன்பக் கணத்தின்
கடைசித் துணிக்கையிலும்
தவித்துக் கொள்ளும்
(2003)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3.
கனக்கின்ற காயங்கள்
மழை மேகமாய்
கண்களில்
கசக்கின்ற இரவு
கைகளில் குழந்தைகள்
தொலை பேசியில் தொடரும்
மாங்கல்ய உறவு
நேசித்துப் பேசும்
முகமூடி முகங்கள்
அவமானமும் பரிதாபமும்
மாறி மாறி
பார்வை காட்டும்
நிலவுக்குத் துணையாக
நீ
நனைக்கின்ற இரவுகள்
(2003)

4.
வெளிறிய வார்த்தைகள்
கீறிப் போக
வேதனை முட்டி
விழுந்து கொள்கிறது

அதில் ஒரு துளி
உன் யன்னல் அருகே
காயப்பட்டு இயல்பிழந்து
கலைந்து நீராகும்

ஆனாலும் உன் பார்வை
வானத்தை நோக்கி
பூக்களாக இறங்கும்
புதுத் துளிகள் மீது.
(2003)



துர்க்கா (கனடா)

5.
## எதிர்வீட்டின் பதிவு

மெல்லிய நீலத்தின் ஊடே
அந்த வீட்டின் பழைய நிறம்
ஒரு உயிரி இருந்ததற்கான
அடையாளங்கள்
அகற்றி,
எல்லாமே புதிதாய்
வீட்டை நிறைத்ததில்
புது மனைவியின்
*சென்ற்* வாசனை.
அசௌகரியமாய்
சகலவும் இடம் மாறி.
இயல்பாய் மாறிக் கொண்டும்
சற்றுத் தூரத்தே
உண்மையைக் கண்டு
மிரளுவதாய்
அந்த வீட்டின் விழிகளும்.
சுர பேதமாய்
மனங்களுக்குள்
ஓர் அந்நிய சுருதி.
மௌனத்தை உடைத்து
அவன் வீசும் முதல் வார்த்தை
குற்ற மனதின் குளறலாய்...
என் புற வெளிச்சங்களில்
அந்த பல்க்கனியும்
அவளின் பொறுமைக் கூட்டின்
நெரிசற் கம்பிகள் உடைத்து
சிதைந்த ஒரு பறவையாய்
அவள் ஆத்மா.
அவன் விழிகளிலும்
பல்க்கனிக் கம்பிகளின் ரேகைகள்
சற்றுப் பருமனாகவே.
(2003)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# நமக்கான நட்பு

சூரிய அஸ்த்தமனத்தால்
என் பின்னே ஓடி மறையும்
எனது நிழல்.
கடற்கரை மணலில்
தாளமிட்டு நடைபயின்ற
என் பாதச் சுவடுகளின் ஆழத்தை
கரைத்துப்போகும் கடல் அலை.
பூத்துக்குலுங்கி
காய்த்து கனிந்த மரங்களை
மொட்டையாக்கிப்போகும் பனிக்காலம்.
கலக்கமில்லா
நீர்த்தடாகத்துள்
வானத்து முகில்களை
பறக்கும் பறவைகளை
இரசித்த என் வழிகளை
கலைத்துப்போகும்
தடாகத்து மீன்.
இப்படியா உனதான நட்பும்?
இல்லை...
மெல்லியதாய் என் மேனி தடவி
எனைச் சிலிர்க்க வைக்கும் மலைக்காற்று
பனிப்பாறைகளிற்குள்ளும்
உருகி வழிந்தோடும் நீர்த்துளி.
கற்பாறைகளிற்குள்ளும்
அழகாக பூத்து நிற்கும்
சின்னச்சின்ன மலர்கள்.
ரயில் பயணத்தில்
என் தலை கோதி எனை தூங்க வைக்கும்
யன்னல் காற்று
உச்சிச் சூரியனின்
வெப்பம் தாங்காமல்
எனது நிழலுக்கே குடையாகும்
உடல் மனசு
கடற்கரைக் காற்று
குளிரச்செய்து விடுமோ என
எனக்கு போர்வை தரும் கரம்.
ஓ அப்படியா...
வா..!
நமக்கான நட்பை
பூக்கச்செய்து அழகு பார்ப்போம்.

02-06-2003

நளாயினி தாமரைச்செல்வன்
(சுவிஸ்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இணையத்தில் குடில் போடலாம் வாருங்கள்!

மதி கந்தசாமி (கனடா)

சினிமா என்ற ஒன்று இருந்தால், பாரலல் சினிமா ஒன்று இருக்கும். எஸ்.வீ சேகர், கிரேசி மோகன் போடும் நாடகங்களுக்கு இணையாக வீதி நாடகம் என்கிற எதிர்ப்பு இயக்கம் ஒன்று இருக்கும். வெகுசனப்பத்திரிக்கைகளுக்கு இணையாக சிற்றிதழ்கள் இருக்கும். இந்த தர்க்கப்படி, பெரும்பான்மையாக வலையிலே இருக்கும் தளங்களுக்கு இணையாக ஒரு புதிய அமைப்பு தோன்றி இருக்கிறது. அவைதான், வலைப்பதிவுகள் எனப்படும் ப்ளாக்குகள் (BLOGS)

சினிமா என்ற ஒன்று இருந்தால், பாரலல் சினிமா ஒன்று இருக்கும். எஸ்.வி சேகர், கிரேசி மோகன் போடும் நாடகங்களுக்கு இணையாக வீதி நாடகம் என்கிற எதிர்ப்பு இயக்கம் ஒன்று இருக்கும். வெகுசனப்பத்திரிக்கைகளுக்கு இணையாக சிற்றிதழ்கள் இருக்கும். இந்த தர்க்கப்படி, பெரும்பான்மையாக வலையிலே இருக்கும் தளங்களுக்கு இணையாக ஒரு புதிய அமைப்பு தோன்றி இருக்கிறது. அவைதான், வலைப்பதிவுகள் எனப்படும் ப்ளாக்குகள் (BLOGS).

வலைப்பதிவு என்றால் என்ன? என்னவெல்லாம் செய்யலாம் என்று பார்ப்பதற்கு முதல் அதன் பூர்வீகத்தைக் கவனித்து விடுவோமா? சமீபத்தில் 1998ஆம் ஆண்டுதான் வலைப்பதிவுகள் Web Logs என்ற பெயருடன் பிரபலமாகத் தொடங்கின. சிறிது காலத்திலேயே சுருக்கமாக Blogs என்றாகிவிட்டது. ஆரம்பத்தில் வலைத்தளங்களை நிர்மாணிக்கத் தெரிந்தவர்களே ஒரு கூட்டமாகச் சேர்ந்து அவர்கள் இணையத்தில் உலாவும் இணையத்தளங்களின் முகவரியைக் கொடுத்து, தங்களின் கருத்துகளையும் தெரிவித்தார்கள். இப்போதும் சிலர் அப்படி செய்கிறார்கள். அதில் முக்கியமானது இங்கிலாந்திலிருந்து வரும் கார்டியன் (Guardian) பத்திரிகையின் வலைப்பதிவு. இவர்கள், உலகெங்கிலும் இருந்து வரும் சிறந்த செய்திகளை அதை வெளியிட்ட பத்திரிகையின் சுட்டியுடன் http://www.guardian.co.uk/weblog பக்கத்தில் தருகிறார்கள்.

அதே இங்கிலாந்தில் கடந்த ஜூலை வலைப்பதிவாளர்கள் இங்கிலாந்து நாட்டில் பாராளுமன்றத்தில் ஒருங்குகூடி அந்நாட்டு அரசியல்வாதிகளிடம், அவர்கள் வலைபதிய வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறினார்கள். எதிர்பார்த்ததை விட அதிக கூட்டம் கூடிவிட்டதனால், அமைப்பாளர்கள் பெரிய இடத்திற்கு மாறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வலைப்பதிவுகள் மூலம் அந்நாட்டு எம்.பிக்கள் மக்களுடன் நேரடித்தொடர்பு வைத்துக்கொள்ளலாம், மக்களின் கருத்துகளை கேட்டறியலாம், கூடவே பாராளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் குறித்து மக்கள் கருத்தையும் கேட்டு, பாராளுமன்றத்தில் விவாதிக்கலாம் என்று கூறப்பட்டது. கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களின் வலைப்பதிவு இதோ - http://www.voxpolitics.com/



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"In war, the first casualty is truth". ஈராக் போரும் இதற்கு விதி விலக்கல்ல. அமெரிக்க ஊடகங்களுக்கும், அல்-ஜசீரா செய்திநிறுவனத்துக்கும் இடையே எதை நம்புவது என்று குழம்பியவர்கள் தேர்ந்தெடுத்தது ஈராக்கிலிருந்து வரும் நேரடி வலைப்பதிவுகளை. 'Baghdad Burning' என்னும் தலைப்பில் ஒரு பெண் கணினி வல்லுனர் எழுதுவதைப் பலர் படிக்கிறார்கள். http://riverbendblog.blogspot.com இல் அவர் தினமும் எழுதுவதில்லை. பாக்தாத் இலிருந்து Faiza வும் அவருடைய மூன்று மகன்களும் எழுதும்,

'A Family in Baghdad' (http://afamilyinbaghdad.blogspot.com) சுவாரசியமானது.

உலகின் மறுகோடியில் அமெரிக்க அதிபர் தேர்தலில் நிற்கும் ஜோன் கெர்ரியும் வலைபதிகிறார்.

(http://blog.johnkerry.com).

நம் நாட்டு அரசியல்வாதிகளில் காதில் விழுந்து, அவர்கள் அனைவரும் வலைப் பதிவுகள் அமைக்குமுன், நாம் வலைப்பதிவுகள் பற்றியும், தமிழில் வலைப்பதிவுகள் அமைப்பது பற்றியும் பார்க்கலாமா? அதற்குமுன் இணையத் தளத்திற்கும் வலைப்பதிவிற்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தைச் சொல்லி விடுகிறேன். இணையத்தளம் அமைப்பதற்கு அதற்கான தொழில்நுட்ப அறிவு இருக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் அதைப்பற்றி தெரிந்து கொள்ளவேண்டும். அதற்குப் பிறகே வலைத்தளம் அமைக்கமுடியும். தொழில்நுட்ப அறிவு மட்டுமல்ல, நல்ல வேகமான இணைய இணைப்பு வேண்டும். சில பிரத்யேக செயலிகளை வலையிறக்கம் செய்யவேண்டும். நாம் அமைத்த பக்கங்களை வலையேற்றம் செய்யவேண்டும். தமிழை இணையத்தில் தெரியவைப்பது எப்படி என்று தேடித்தெரிந்து கொள்ள வேண்டும். இதில் பிரச்சினை ஏற்பட்டால் யாரிடம் கேட்பது என்ற குழப்பம். அத்தனையும் சரியாக செய்தபிறகு விளம்பரம் செய்யவேண்டும். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

மேலே சொன்ன பிரச்சினைகள் இல்லாத தொழில்நுட்பம்தான் வலைப்பதிவு. முதன் முதலில் வலைப்பதிவு செய்ய இடம் கொடுத்த Pitas தொடக்கம் பல அருமையான அம்சங்களை தன்னுள் அடக்கி, சமீபத்தில் கூகுள் (Google) நிறுவனத்தால் வாங்கப்பட்ட ப்ளாக்கரில் (Blogger) இருந்து இந்திய நிறுவனமான ரீடிப் வரை பலர் வலைப்பதிவு செய்யும் வசதிகளையும் இடத்தையும் இலவச மாகத் தருகிறார்கள்.

தமிழில் வலைப்பதிவு 2003 ஜனவரி மாதம் தொடங்கியது. பொங்கல் கொண்டாட்ட தருணத்தில் தன் சொந்த முயற்சியால் யூனிகோடு எழுத்துரு பயன்படுத்தி வலைப்பதிவில் தமிழைப் பயன்படுத்தியவர் நவநீதகிருஷ்ணன்

(http://navan.jokealot.net).

தமிழில் வலைப்பதிவை அடுத்துப் பயன்படுத்தியவர் முனைவர்.பத்ரி நாராயணன். அவருடைய எண்ணங்களையும், அனுபவங்களையும் தமிழில் பிப்ரவரி மாதத்தில் இருந்து தொடர்ந்து அவருடைய வலைப்பதிவில் பதிகிறார் (http://thoughtsintamil.blogspot.com.)

கொஞ்சம் பத்ரியின் வலைப்பதிவை எட்டிப்பார்க்கலாமா? சென்னையில், 2003 ஆகஸ்டு மாதம் 'தமிழ் இணையம் 2003' மாநாடு நடந்தது. உலகெங்கும் உள்ள பல தமிழர்கள் மாநாட்டில் என்ன நடக்கிறது என்று ஆர்வமாக கவனித்து வந்தார்கள். அவர்களுக் கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது பத்ரியின் வலைப்பதிவு. தான் கலந்து கொண்ட கருத்தரங்குகளில் விவாதிக்கப்படும் விஷயங் களை உடனுக்குடன் புகைப்படங்களோடு வலையில் பதிந்தார். அத்தோடு நிற்கவில்லை அவர், உடனே அவரை மின்னஞ்சலில் தொடர்பு கொண்டு எழுப்பப்படும் கேள்விகளை சம்பந்தப் பட்டவர்களிடம் தெரிவித்து பதிலையும் வலையேற்றினார். வலைப்பதிவின் வீச்சும், அதன் பரிமாணமும் அப்போது பலருக்கும் புரிந்தது/தெரிந்தது. இதன்பிறகு கணிசமான வர்கள் வலைபதியத் தொடங்கினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகின் பல இடங்களுக்குச் செல்லும் பத்ரி சமீபத்தில் லண்டன் பத்மநாப ஐயரை முதன் முதலாகச் சந்தித்ததையும், கொழும்பில் கவிஞர் வில்வரத்தினம் மற்றும் எழுத்தாளர் மு.பொன்னம்பலம் ஆகியோரைச் சந்தித்துப் பேசியதையும் படங்களோடு வலைபதிந்திருக் கிறார்.

இப்போது இருக்கும் வலைப்பதிவுகளில் என்னமாதிரி விஷயங்கள் எல்லாம் பதிவு செய்யப்படுகின்றன என்று கொஞ்சம் பார்ப்போமா? சிங்கை வாழ் ஈழநாதன் (http://www.kavithai.yarl.net/) 'அக' விதைகள் என்னும் வலைப்பதிவில் தன் படைப்புகளையும், கருத்துகளையும் பதிந்து வைக்கிறார். அவர் 'ஈழநாதம்: ஈழத்து இலக்கியங்களின் வரலாற்றுப் பதிவு' (http:/ www.eelanatham.yarl.net) என்ற வலைப்பதிவில் ஈழத்தமிழ் இலக்கியத்தை அறிமுகப்படுத்துகிறார். அவுஸ்திரேலியாவில் இருந்து வலைபதியும் ஷ்ரேயா (http:// mazhai.blogspot.com/) அவருடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்.

இவர்களிடமிருந்து மாறுபட்டு முனைவர் வெங்கட்ரமணன் பல தொழில்நுட்ப, அறிவியல் விஷயங்களை எளிய தமிழில் விவரிக்கிறார். அவ்வப்போது அருமையான நினைவலைக் கட்டுரைகளையும், நையாண்டிக் கட்டுரை களையும்கூட படைக்கிறார். முனைவர் வெங்கட் ரமணனின் வலைப்பதிவு இதோ, http://www.tamillinux.org/ venkat/myblog/.

அரசியல், இலக்கியம், எண்ண அபிப்பிராயப் பகிர்வு, இணையத்திலும் ஊடகங்களிலும் சந்திக்கும் சுவாரசியமான விஷயங்கள் மற்றும் ஊர்நடப்புகள் பற்றிய விவரங்களும் அவை பற்றிய தன் கருத்தும் என்று வலைப்பதிவுகளின் இலக்கணப்படி சரியாக வலைபதிபவர் சித்தார்த்த சேகுவேரா. http://aging-wanderer.blogspot.com/ என்னும் முகவரியில் வலைபதியும் இவரின் வலைப்பதிவு தினசரி பலரால் படிக்கப்படுவது. மிகவும் சுவாரசியமான நடையில் எழுதும் இந்த இலங்கை எழுத்தாளர், பல இடங்களில் தனது ஆணித்தரமான கருத்துகளை வைப்பதற்கு தயங்குவதில்லை. அவ்வப்போது அவர் படிக்கும் ஏனைய தமிழ் வலைப்பதிவுகளைப் பற்றியும் சொல்கிறார்.

http://www.

உங்களுக்கென்று இலவசமாக குடில் அமைக்க, உங்கள் குரலை கருத்துகளை, எழுத்துகளைப்பதிவு செய்ய, சந்திரமண்டலத்துக்கோ, செவ்வாய்க் கிரகத்துக்கோ போகத் தேவையில்லை. இணையத்திற்கு வந்தால் போதும்.

http://www.

தமிழ் வலைப்பதிவுலகில் முக்கியமானவராக திகழ்பவர் சந்திரவதனா. (http://manaosai.blogspot.com) 'மகளிர்', 'மனவோசை', 'மாவீரர்கள்', 'படித்தவை', 'பெண்கள்', 'Rehabilitation', 'Summlung' என்று ஏழு வலைப்பதிவுகளை ஒரு வருடத்துக்கும் மேலாகத் திறமையுடன் பராமரித்து வருகிறார். அத்தோடு இவர், உலகின் பல பாகங்களில் வசிக்கும் பெண் களோடு சேர்ந்து 'தோழியர்' கூட்டு வலைப்பதிவில் ஆர்வத்தோடு பங்குபெறுகிறார். 'தோழியர்' கூட்டு வலைப்பதிவு (http:// womankind.yarl.net) சொந்தமாக வலைப்பதிவு வைத்துக்கொள்ள முனையாத பெண்களுக்கு எழுத, விஷயங்களைப் பகிர்ந்துகொள்ள ஓரிடத்தைக் கொடுக்கிறது. பல வருடங்களாக எழுதுபவர்களோடு இப்போதுதான் எழுதத் தொடங்குகிறவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். தோழமையுடன் பரஸ்பரம் ஊக்குவித்துக் கொள்கிறார்கள். ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இணையத்தில் சந்தித்துக் கொண்டவர்களே. வலைப்பதிவு களினால் இணைந்தவர்கள் இந்தத் 'தோழியர்'. கவிதை, கதை, கட்டுரை, ஓவியம் ஆகியவற்றோடு தம்மைக் கவர்ந்த படைப்பு களையும் கொண்டுவருகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களுக்கிருக்கும் பலவிதமான பிரச்சினைகளையும் இவர்கள் விவாதிக்கின்றனர்.

இதுவரை கூறியவர்களோடு தமிழில் வலைபதியும் ஏனையவர்களின் பதிவுகளைப் படிக்க இலகுவாக ஒரு பட்டியல்,

http://tamilblogs.blogspot.com/ இல் கிடைக்கிறது.

எல்லாம் சரி. தமிழில் வலைப்பதிவு செய்வது எப்படி என்று சொல்லவில்லையே என்று கேட்கிறீர்களா? நீங்கள் இப்படிக் கேட்கமாட்டீர்களா என்றுதான் நானும் காத்திருந்தேன். வலைப்பதிவு, இணையத்தில் உங்களுக்கே உங்களுக்கான ஒரு குடில். இதில் நீங்கள் இரண்டு வரி எழுதலாம். இருபது பக்கம் எழுதலாம். தினமும் எழுதலாம். இல்லை மாதம் ஒரு முறைதான் எழுதுவேன் என்றால் அப்படியும் செய்யலாம். தமிழில் இருக்கும் பாமினி, திஸ்கி, யூனிகோடு எழுத்துருக்களில் நீங்கள் வலைபதியலாம். ஆனால் யூனிகோடில் எழுதும் வலைப்பதிவுகள் கூகுள், யாகூ போன்ற 'தேடி இயந்திரங்களின்' கண்ணில் படுகின்றன. எழுத்துரு இல்லாதவர்களாலும் இலகுவாக வாசிக்கமுடிகிறது. தமிழில் வலைபதிவதற்கான எழுத்துருக்கள், செயலிகள் அனைத்தும் இலவசமாக இணையத்திலேயே கிடைக்கிறது. இது பற்றியும், தமிழில் வலைபதிவது எப்படி என்பது பற்றியும் விளக்கமாக http://tamilinblogs.blogspot.com இல் கிடைக்கிறது. உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் நீங்கள் அங்கே கேட்கலாம்.

உங்களுக்கென்று இலவசமாக குடில் அமைக்க, உங்கள் குரலை கருத்துகளை, எழுத்துகளைப் பதிவுசெய்ய, சந்திரமண்டலத்துக்கோ, செவ்வாய்க்கிரகத்துக்கோ போகத் தேவையில்லை. இணையத்திற்கு வந்தால் போதும்.

(2004/10)

## புதிய வரவுகள்

*திலகபாமாவின்*

**எட்டாவது பிறவி**

-கவிதைத் தொகுப்பு-

2003 டிசம்பர்

வெளியீடு:

காவ்யா





*ஜெயந்தி சாம்சனின்*

**தேடல் வலி**

-கவிதைத் தொகுப்பு-

2003 யூலை

வெளியீடு:

முகம் பதிப்பகம், பிரான்ஸ்

*புதியமாதவியின்*


**ஹேராம்!**

-கவிதைத் தொகுப்பு-

2003 மே

வெளியீடு:

மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றம், மும்பை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நீ சொல்லலாம் நான்?

அழகான பெண்
அவள் சிரித்தாள்
கவிதை
-நீ சொல்லலாம்..
நான் சொல்லமுடியுமா?

முதல் சந்திப்பு
முதல் முத்தம்
முதல் காதல்
முடிவுப் பெறாதக் கவிதை
நீ சொல்லலாம்..
நான் சொல்ல முடியுமா..?

அவளைக் கண்டதும் காதல்
காதலுக்கு கடிதம்
எழுதியதில்
கவிதை
கவிஞனை
ரகசியமாயக் காதலித்தது
நீ சொல்லலாம்...
நான் சொல்ல முடியுமா..?

அடுத்தவன் மனைவியை
ரசிப்பதுதான்
கவிதை..
அடடா..
நீ சொல்லலாம்
அதையே
நான் சொல்லமுடியுமா?
நான் சொன்னால்
என்னிடம்-
கோவல புத்திரர்கள்
கொடுவாளை எடுத்திடுவார்
கண்ணகிப் பரம்பரை
கழுவேற்ற வந்திடுவார்.

*(2004/10)*


# உன் குற்றம்

நீ-
காதலிக்காமல்
கல்யாணம் செய்தாயே
அது குற்றமில்லை.

நீ-
காதலிக்காமலேயே
காதலிக்கப்படாமலேயே
கருசுமந்தாயே
அதுவும் குற்றமில்லை..

நீ-
கடைசிவரை
காதல் அறியாமலேயே
விதவை ஆனாயே..
அது..
அதுமட்டும்தான்
குற்றம்.

*(2004/10)*



புதியமாதவி
(மும்பை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



- ஜெயந்தி சங்கர் (சிங்கப்பூர்)

# தையல்

இன்னமும் கூட நடக்கச் சிரமப் பட்டாள். இரண்டு நாட்களுக்கு முன்பு தான் அவளின் ஒன்பது தையல்களும் பிரிக்கப்பட்டிருந்தன. இருந்தாலும், இன்னும் புண் நன்றாக ஆறவில்லை. விடாமல் ஆயின்மெண்ட்டை இரண்டு வேளையும் தடவி வந்தால், இன்னும் ஒரு வாரத்திற்குள் நன்றாகக் காய்ந்து குணமாகி விடும் என்று டாக்டர் சொல்லியிருந்தார்.



ஓவியம்: அருந்ததி

ஐப்பசிமாத அடைமழையில் குழந்தையின் துணிகள் காயாமல் உள்கொடிகளில் மின்விசிறியின் வேகத்தில் லாலிபீலியென்றாடின. வெயில் படாமல் அவை வாடையடித்தன. சுதா குளிப்பாட்டிக்கொடுக்கப்பட்ட தன் பத்து நாள் குழந்தையைப் பார்த்தாள். பிறந்த போதிருந்ததை விட கொஞ்சமே கொஞ்சம் மெலிந்திருந்தான். பிறந்தபோது ஒன்பது பவுண்ட் எடையில் இன்னும் அதிக ஆரோக்கியமாக இருந்தாற்போலத் தோன்றியது. ரப்பர் ஷீட்டின் மீது தன் அப்பாவின் பஞ்சுபோன்ற வெள்ளைவேஷ்டியின் மீது படுக்க வைத்து, பிஞ்சு உடலெல்லாம் பவுடர் போட்டுவிட்டாள.

நாளைக்குக் குழந்தைக்குப் புண்ணியாஜனம் மற்றும் நாமகரணம். மாலையில் தொட்டில். இன்று மதுரை யிலிருந்து எல்லோரும் வந்து விடுவார்கள். குறிப்பாக ரகுவைப் பார்க்கப்போகும் ஆவலில் சுதாவிற்கு உடலிலும் உள்ளத்திலும் ஒரு துள்ளல் பிறந்தது. ‘குட்டியோட அப்பா வராப்போறாளா? அப்பா, அம்மாவோட நெறைய விஷயம் பேசுவா. கோந்தையோட வெளையாடுவா. அத்தே, பாட்டி, தாத்தா எல்லாரும் வரப்போறாளா? ம், வேற ஆரெல்லாம் வரப்போறா, குட்டியப் பாக்க? என்று பச்சைக் குழந்தையோடு வாய்க்கு வந்ததைப்பேசிக்கொண்டே ‘டையப்பரை’ படுக்கையருகில் இருந்த ஷெல்பிலிருந்து எட்டி எடுத்தாள்.

டையப்பரையும் அணிவித்து, மேல்ச்சட்டை யையும், கால்ச்சட்டையையும் போட்டு விட்டாள். குளிருக்கு இதமாய் கையுறை, காலுறைகளையும் மாட்டிவிட்டாள். வயிறு நிறைந்து, வெந்நீர் குளியலும் முடிந்ததில் குழந்தை குட்டி வாயைத் திறந்து கொட்டாவி விட்டுத் தன் தூக்கத்தைச் சொன்னான். குருவிக்குஞ்சு தன் வாயைத் திறந்தது போல் இருந்தது. அதன் செக்கச்சிவந்த வாயினுள் உற்று நோக்கி அதன் முகம் செய்த சேஷ்டைகளையும் பூரிப்புடன் ரசித்தாள் சுதா.

முதல் முறையாகத் தாயாகியிருந்த சுதா, உடல் ரீதியில் கடந்த சில நாட்களில் அதிகஅவஸ்தைகள் பட்டுவிட்டாள். அவற்றை ஈடு செய்வதைப்போல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தையின் வரவு அவளுக்கு கோடை மழையைப்போல் உற்சாகத்தைக் கொண்டு வந்திருந்தது. தன் உணர்வு களையெல்லாம் ரகுவுடன் பகிர்ந்து கொள்ள ஒரு குழந்தையின் ஆர்வத்தோடு காத்திருந்தாள். போனில் எத்தனை தான் பேசினாலும் நேரில் பேசுவது போல வராது என்றே எல்லோரையும்போல நம்பினாள். பிரசவ நாளன்று ஞாயிற்றுக்கிழமை. காலை ஏழரையிலிருந்து வலிய ஊசி போட்டு வரவழைக்கப்பட்ட வலியில் மதியம் நான்கு மணிவரை உடலிலிருந்த கடைசித்துளி சக்திவரை செலவிட்டு விட்டுத் துவண்டு போயிருந்தாள்.

ஏற்கனவே அம்மா நிறைய அறிவுரைகளை அள்ளிவிட்டிருந்தாள். வலி வரும்போது தன்னை மறந்தும் வயிற்றுக்குள் இருக்கும் குழந்தைக்குப் பாதகமாய் எதையும் செய்துவிடாமல் கவனமாய் இருக்க வேண்டும். வயிற்றை அமுக்கிக்கொள்வது, ஒரேயடியாய் ஆடுவது போன்றவை ஆபத்து என்று படித்துப் படித்துக் கூறியிருந்ததால், சுதா மிகவும் கவனமாய் இருந்தாள், அத்தனை வலியிலும். பிரசவ வேதனையின் போது படுக்கையை விட்டு எழவேயில்லை. மல்லாக்கப் படுத்தபடியே கவனமாக கட்டிலின் பின்பக்கக்கம்பியைப் பிடித்துக் கொண்டு, பல்லைக்கடித்து வலிவிட்டாள், ஒவ்வொரு முறையும். ஒரு வாரத்திற்குப் பல் வலி இருந்தது. ஈறுகளிலிருந்து ரத்தம் கசிந்தது.

சாட்டையாய் விழுந்த வலியில் அவள் கண்கள் இருட்டும். பக்கத்தில் இருந்த நர்ஸிடம் சொட்டுத் தண்ணீர் கேட்டாலும் கொடுக்க மாட்டாள். பஞ்சை நீரில் நனைத்து உதட்டில் தடவுவாள். அந்தச் சொட்டுத் தண்ணீர் பார்வையைத் தெளிவாக்கும். அத்தனை வலியிலும் கூட அது அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. தண்ணீர் கொடுக்கக்கூடாது என்ற டாக்டரின் மீது கோபமும் வந்தது.

மறுபடியும் மின்னல்வலி, கண்ணிருட்டு என்று பட்டுத்தீர்த்தாள். தான் எங்கிருக் கிறோம் என்பதே சிந்தையில் இல்லாத நிலை. வலி படிப்படியாக அதிகரித்து கடைசி கட்டத்தை அடையும் போது சுதாவிற்குத் தான் யாரென்றும் தெரிய வில்லை. இந்தப் பத்து நாட்களில் நினைத்து நினைத்து அசைபோட்டு வியந்தாள்.

லேபர் வார்டிற்குள் அவளைக் கொண்டு போன போது சுதாவிற்குத் தன் வாழ்க்கை யின் கடைசி நிமிடத்தைஎட்டிவிட்டதாய்த் தோன்றியது. பிரசவம் என்பது மறுபிறப்பு என்று பலமுறை சொல்லிக் கேட்டதல்ல காரணம். அவளிருந்த நிலையே அவளை அப்படி நினைக்க வைத்தது. லேபர் வார்டில் படுக்க வைத்திருந்த கட்டிலின் தலை மாட்டில் பிடிக்கக் கம்பி இல்லாதிருந்ததால், பயங்கர வலியில் சட்டென்று பக்கத்தில் நின்ற நர்ஸ் ஒருத்தியின் கையைப் பிடிக்க, அவள் ஆவென்று அலறிவிட்டாள். மறுநாள் கன்றிக் கருரத்தம் கட்டியிருந்த அவளது கையைக் காட்டிக் கேலிசெய்தாள் சுதாவை.

அரை மயக்கத்தில் இருந்தாலும், 'மாமி, பயப்படாதீங்கோ. தெரியும். இன்னிக்கு நாலரை ஆறு ராகுகாலம். நாலு கூட ஆகல்ல. இதோ இன்னும் அஞ்சு நிமிஷத் துல கொழந்த பொறந்துடும்' என்று டாக்டர் அம்மாவிடம் சொன்னது உள்ளே யிருந்த சுதாவின் காதில் விழுந்தது.

ஐந்து நிமிடத்தில் குழந்தை பிறக்கட்டும், இல்லை என் உயிராவது போகட்டும் என்று தான் அவள் நினைத்தாள். டாக்டர் உள்ளே நுழைந்தார். குழந்தை பெரிதாக இருந்ததாலும், சுதாவால் முக்கி வெளித் தள்ளமுடியாததாலும் டாக்டருக்கு ஆயுதத்தை உபயோகிப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. தாயையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேயையும் சேதமில்லாமல் பிரிக்க டாக்டர் மரத்துப்போகும் மருந்தை ஊசிமூலம் உள்தொடைப்பகுதிகளில் செலுத்திவிட்டு, பிறப்புறுப்பைக் கத்திகொண்டு கிழித்து அகலமாக்கினார். குழந்தை ஒருவழியாகப் பிறந்தது. பிறகு ஒன்பது தையல்கள் போடப்பட்டன. அத்துடன் முடியவில்லை அவஸ்தை. பின் வந்த நாட்களில் தான் சுதா மேலும் அதிக அவதிப்பட்டாள். ஒவ்வொரு முறை சிறுநீர் கழிப்பது நரக வேதனையாக இருந்தது.

தாதி வந்து அறையிலிருந்த மற்றவரை வெளியேற்றி விட்டு 'பெட்பானை' அடியில் வைத்து விட்டு, மருந்து சேர்த்திருந்த வெந்நீரை தையல் போடப்பட்டிருந்த பகுதியில் சிறிது நேரம் குழாய் மூலம் பாய்ச்சுவாள். முதல் நாள் அதைப் பற்றி தெரியாததால், சுதா பேசாமலிருந்தாள். நீர் பட்டதும் எரிச்சல் பயங்கரமாய் இருந்தது. அமிலத்தை ஊற்றியதைப் போலக் கடும் எரிச்சல். இது தினமும் இரண்டு வேளை. அந்த நர்ஸ் கையில் தேவையான உபகரணங்களுடன் ஒவ்வொரு அறையாக வருவது தெரியும் போதே சுதாவிற்கு எங்காவது ஓடி விடலாமா என்றிருக்கும். படுக்கையை விட்டு எழவே சிரமம். இதில் எழுந்து ஓடவாவது.

டாக்டர் அவளை மூன்றாம் நாளிலிருந்து மெல்ல எழுந்து நடக்கச் சொன்னார். நடக்கும் போது உராய்வினால் ஏற்பட்ட வலியில் சுதா துடிதுடித்தாள். புண்ணில் ஓர் இறுக்கம். அதனால், அவளுக்கு ரணவலி தாங்காமல் கண்ணீர் பெருகியது. மதியம் சீக்கிரமே எல்லோரும் வந்தனர் மாமியாரைத் தவிர. உள்ளே வந்தவுடன், நலம் விசாரித்தானதும், 'அம்மா, வரல்ல?' என்று சுதா கேட்டதற்கு ரகுவும், 'ம்,,இல்ல. அம்மா வல்லனுட்டா', என்று அதுவரை பல்லெல்லாம் தெரியத் தன் வாரிசைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த முகத்தை விசையை அழுத்தினாற்போல் சட்டென்று சீரியசாக்கிக்கொண்டு சொன்னதன் காரணம் அவளுக்குப் புரியவில்லை.

குழந்தையைச் சுற்றி நின்றுகொண்டு ஆளாளுக்கு 'ஜாடை' கண்டு பிடித்தனர். ஒரே சிரிப்பும் கலாட்டாவுமாய் சூழல் மாற, குழந்தை பெரும்குரலெடுத்து வீறிட்டு அழ ஆரம்பித்தான். சுதாவின் மனதில் 'ஏன் மாமியார் வரவில்லை' என்று ஒரே அரிப்பு. முதல் பேரனின் முதல் விசேஷத்திற்கு வராமல் போனது சுதாவிற்குப் பெரும் புதிராய் இருந்தது. 'ரகு, அப்பிடியே நம்மாத்தக் கொண்டிருக்காண்டா என் மருமான் ', என்றார் நாத்தனார், குழந்தையை வைத்தகண் வாங்காமல்.

அறையில் தனியாக சுதா கேட்டபோதும் கூட ரகு முகத்தில் வெறுப்பை அப்பிக் கொண்டு, ' ஆ....மா, இப்பக் கேளு. அன்னிக்கி ஆஸ்பத்திரிக்கி அம்மா கொழந்தையப் பாக்க வந்தாளாமே. நீ புண்யாஜனத்துக்கு வாங்கோன்னு கூப்ட லயாம். அதான் கோபம். வரல்லன்னுட்டா. நானும் எவ்வளவோ சொல்லிப் பாத்தேன்.'

மாமியார் ஆஸ்பத்திரிக்கு வந்ததே சுதாவிற்கு கனவில் பார்த்தது போல அரைகுறையாய்தான் நினைவில் இருந்தது. உடற்சோர்வு தெரியாமலிருக்க கொடுத்த மருந்துகள் அவளை இரண்டாம் நாள் முக்கால் மயக்கத்தில் வைத்திருந்தன. அம்மா தன் சம்பந்தியை ஆட்டோ ஸ்டாண்ட் வரை உடன்சென்று வழியனுப்பிவிட்டு, புண்யாஜனத்துக்கும் வரச்சொல்லி அழைத்துவிட்டு வந்திருந்தார்.

'ம்,..ம்.நா வராமயா மாமி', என்றும் மகிழ்ச்சியுடன் சொன்னாராம். காலையில் சுதாவின் மனதில் நிரம்பி வழிந்த உற்சாகம் காற்று வெளியேறிய பலூனாய் இருந்த சுவடே இல்லாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புஸ்ஸென்று மறைந்தது. 'ஒனக்கு கொஞ்சம் கூட பெரியவான்ற மரியாதை யில்லன்னு அம்மா ரொம்பவே வருத்தப் பட்டா, தெரியுமா? ஒரு வார்த்தை கூப்பிட றதுக்கென்ன, ம்?' - யாரோ அந்நியனிடம் பேசும் தோரணயில் ரகு. 'ஐய்யோ, நா அப்போ அரைமயக்கத்துல இருந்தேன்னா. அம்மா தான் கூப்பிட்டாளாமே...'

ஹஹம், ரகுவிற்கு எந்தச் சமாதானமும் காதில் விழந்ததாகத் தெரியவில்லை. டில்லியிலிருந்து நேராக சென்னை வழி மதுரைக்குப் பறந்து, அங்கிருந்து தான் அவளையும் குழந்தையையும் பார்க்கவே வந்திருந்தான். அதுகூடப் பெரிதாகத் தெரியவில்லை அவளுக்கு. அம்மா வராததற்கு அவளே காரணம் என்று குற்றஞ்சாட்டும் பாவனையில் அவளிடம் முகம் கொடுத்துக்கூடப் பேசாதது தான் அவளுக்கு மிகவும் வருத்தமாய் இருந்தது.

வளைகாப்பு முடிந்து திருச்சி வந்திருந் தாள். பிறகு ஒருமுறை கூட அவளைப் பார்க்கவே வரவில்லை. போன் செய்த போது லீவில்லை என்று ரகு சொன்னான். பிரசவத்தின் போது அவன் கிட்டவே இருக்க சுதா மிகவும் ஆசைப்பட்டாள். அதுவும் நடக்கவேயில்லை. அந்திவானில் இருள் கவிவதைப் போல வருத்தம் அவள் மனதிற்குள் மெல்லப்படர்ந்தது.எல்லோரும் சாப்பிட்டுவிட்டு மலைக்கோட்டைக்குக் கிளம்பினர். ரகு அவளுடன் இருப்பா னென்று நினைத்திருந்தாள். அடுத்த நாள் மற்றவருடன் கிளம்பிவிடப் போவதாக வேறு சொல்லியிருந்தானே. மற்றவரோடு அவனும் கோவிலுக்குக் கிளம்பினது சுதாவிற்கு பெரும் ஏமாற்றம். அவனிட மிருந்து அவள் எதிர்பார்த்தது ஒருசில அன்பான ஆறுதலான வார்த்தைகளே. அம்மா, அப்பா மற்றும் தம்பி தங்கை எல்லோரும் எவ்வளவு தான் தாங்கினாலும் ரகுவின் சில வார்த்தைகளுக்கு ஈடாகுமா. ரகு அதை வழக்கம்போல உணர வேயில்லை. எல்லோரும் போனவுடன், அடக்கி வைத்திருந்த வருத்தமெல்லாம் சேர்ந்து வெடித்தது, அவளிடமிருந்து ஓவென்ற அழுகையாக. அவள்அழுவதைப் பார்த்த அம்மா பதைபதைத்தாள். 'பச்சை உடம்புக் காரி அழக்கூடாதே', என்று பெற்றவளுக்குக் கவலை. அவளைச் சமாதானப் படுத்தித் தூங்க வைக்க முயன்றாள். போர்த்திய இரண்டு போர்வை களையும் மீறி சுதாவிற்குக் குளிர்ந்தது லேசாக.

'சுதா, நீ இப்ப கண்டதையும் நெனச் சிண்டு, அழுதுண்டு இருக்கறது ஒன்னோட ஒடம்புக்கு நல்லதில்ல. சொன்னாக்கேளு. பேசாம தூங்கு. இதப்பத்தியெல்லாம் அப்புறமா பேசிக்கலாம்', படுக்கையின் விளிம்பில் உர்கார்ந்து கொண்டு சின்னக் குழந்தைக்குச் சொல்வது போல அம்மா சொல்லிக்கொண்டிருந்தார். அவள் சமாதானமாகி தூங்க ஆரம்பித்ததும் தன் அடுப்படி வேலையைக் கவனிக்கச் சென்று விட்டாள்.

சில நிமிடத் தூக்கத்திலேயே சுதாவின் உடல் நடுங்க ஆரம்பித்தது. அவள் கைகால்கள் சில்லிட்டன. உதடு நீலமாக ஆரம்பித்தது போலத் தெரிந்தது. பற்கள் கிடுகிடுவென்று அடித்துக் கொண்டன. அந்தப் பக்கம் எதேச்சயாக வந்த அப்பா பார்த்துவிட்டு, அம்மாவையும் தம்பி தங்கைகளையும் பதறியடித்துக் கூப்பிட்டு, ஆளுக்கொரு கால்கை என்று சூடுபறக்க தேய்க்க ஆரம்பித்தனர். தேய்க்கத் தேய்க்க வெப்பம் பரவிஉடல் நடுக்கம் மெதுவாகக் குறைந்தது. உடனே பக்கத்திலிருந்த டாக்டரை வரவழைத் தார் அப்பா. வந்த டாக்டர், ரத்தஅழுத்தப் பரிசோதனை செய்தார். தையல் போட்டிருந்த இடத்தில் ஏதும் ''இன்பெக்ஷன்' இருக்கிறதா என்று மட்டும் கேட்டார். இல்லையென்று சொன்ன பிறகு ஒரு ஊசியைப் போட்டுவிட்டு கொஞ்ச நேரம் தூங்கச் சொன்னார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயப்படவேண்டாம். ஆனால் நிறைய ஓய்வு தான் தேவை என்று கண்டிப்பாகக் கூறினார்.

அம்மா குழந்தையை எடுத்துக்கொண்டு ஹாலுக்குப் போய்விட்டார். அழுது ரகளை செய்யாமல் குழந்தையும்ஒத்துழைத்ததில் இம்முறை அசந்துதூங்கினாள். மாலையில் எழுந்தபோது சுதாவின் நிலையில் முன்னேற்றம் தெரிந்தது. தலைவலி தவிர. சூடாக 'மதர்ஸ் ஸ்பெஷல்' குடித்ததும் தலைவலியும் மறந்தது.

எல்லோரும் வந்ததுமே. அப்பா ரகுவிடம் சுதா அழுததையும். அவளுக்கு 'பிட்ஸ்' போல வந்ததையும். டாக்டர் வந்து போனதையும் நடித்துக் காட்டாத குறையாகச் சொல்லிவிட்டார். அப்பாவிடம் முன்பே சொல்லவேண்டாமென்று சொல்ல மறந்திருந்தாள் சுதா. அம்மா அப்பாவிற்கு மத்தியானத்திலிருந்து மனதே சரியில்லை. பெரும் அதிர்ச்சியிலிருந்து மீண்டிருந்தனர்.

அம்மா. 'எங்க பாட்டி சொல்லுவா. பிரசவிச்சவளுக்கு ஒரு மண்டலத்துக்குக் கட்டை அடுக்குவானாம் எமன். அவ்வளவு ஜாக்கிரதையா இருக்கணும்னு. இந்தப் பொண்ணானா அழுது. தலைவலி வரவழச் சுண்டு, நடுங்கி எல்லாரையும் பதற வச்சுட்டா' என்று கண்கள் பளபளக்கப் புலம்பினார். நாத்தனார் கேட்ட, 'இதுக்கும் முன்ன சுதாக்கு இது மாதிரி வந்திருக்கா? 'என்ற விவகாரமான கேள்வி அவர்கள் இருந்த மனநிலையில் யாருக்கும்அப்போது புரியவில்லை. ரகு இப்ப எப்படியிருக்கு என்றுமட்டும் சிக்கனமாய்க் கேட்டுவிட்டுத் தன் அக்காவுடனும் தன் அப்பாவுடனும் பேசிக் கொண்டேயிருந்தான். மச்சினனுட னும் மச்சினியுடனும்கூட பேசத் தோன்ற வில்லை அவனுக்கு. தம்பிக்கும் தங்கைக் கும் அத்திம்பேரின் திடீர் 'பாராமுகம்' சரியாகப் புரியவில்லை.
சுதா தன் அப்பாவிடமும் கூட ரகு விட்டேற்றியாகப் பேசுவதைக் கவனித் தாள். வேண்டுமென்றே அவன் அவ்வாறு நடந்துகொண்டதைச் சுதா மட்டுமே அறிந்தாள். அம்மா வராத கோபத்தை சுதாவிடமும் அவள் குடும்பத்தினரின் மீதும் காட்டுவதாக நினைத்து எல்லோரை யும் உதாசீனப்படுத்தினான்.

சீக்கிரமே தன் அறைக்கு வந்து பேச மாட்டானா என்று சுதா ஏங்கினாள். அவளுக்குப் பேசுவதற்கு நிறைய இருப்பது போல ஒரு சமயமும் ஒன்றுமே இல்லாதது போல மற்ற சமயங்களிலும் தோன்றியது. நாளை அவன் ஊருக்குப் போய்விட்டால், மறுபடியும் குழந்தையோடு டில்லிக்குத் தான் போகும் வரை நேரில் பார்க்கவோ பேசவோ முடியாதே என்று அவள் மனம் காலக்கணக்கிட்டது. அவன் வரவே யில்லை. மதியம் நடந்ததை நினைத்து எச்சரிக்கையுடன் அழுது விடாமல் தன்னைத் தானே தேற்றிக்கொண்டாள்.

விசேஷத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் இரண்டு பந்தியாக இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு.கிடைத்த அறைகளில் போர்த்திப் படுத்து விட்டனர். தூளியில் குழந்தையைத் தூங்க வைத்து விட்டு அம்மாவும் நகர்ந்துவிட்டார்.

சுதா தூங்க ஆரம்பித்திருந்தாள். சம்பந்தா சம்பந்தமில்லாமல். கனவு வந்தது. மயில் பீலியெல்லாம் வைத்துக் கொண்ட அவள் கிருஷ்ணனாய் பாறையின் மீது அமர்ந்து குழல் வாசித்தாள். கலர் கலராய் பாவாடையணிந்த ரகு ராதை யாய்த் தன் முகம் சாய்த்து அவளின் முகம் பார்த்து ரசித்தபடி கீழே உட்கார்ந்திருந்தான். தூக்கத்திலேயே சுதாவின் இதழ்களில் புன்முறுவல் பூத்தது. சுதாவின் அறைக்குள் அவள் ஆசைப்பட்ட படியே பின்னிரவில் ரகு வந்தான். ஆனால். அவள் ஆசைப்பட்டபடி அவளுடன் மனம் விட்டுப் பேச நினைத்தல்ல.

(2004/10)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


www.tamilarangam.net



# கண்டறியாத பிள்ளை!!

குப்பிறக் கிடந்து அழவும் பயம் கூடப் போகுமோ எண்டு. வழக்கமாய் ஒண்டுக்குப் போவதற்கே பெரிய அவதிப்பட்டு பாத்ருமுக்குள்ளை கன நேரம் நிண்டு குளிக்காத குறையாக் கை கால் எல்லாம் கழுவி வாறது. இப்ப தொடர்ந்து கீழாலை போய்க் கொண்டே இருக்கு. அது இரத்தம் எண்டும் தெரிய அதன் சூடு அடிவயித்திலை இருந்து அருவருப்பும் பயமுமாய் உடம்பெல்லாம் பதறுது. ஆனா அம்மா முகமெல்லாம் சந்தோசமாய்த் திரியிறா.

எனக்கு அப்ப பதின்னாலு வயசு. என்ரை மச்சாள் அதுக்கு முதலே சாமத்தியப்பட்டவள். மச்சாள் சாமத்தியப்பட்ட நேரம் அவவுக்குத் துணையாக என்னைக் கொண்டு போய் விட்டிச்சினம். அவள் அறைக்குள்ளை கட்டிலிலை குந்தியிருப்பாள். நான் பக்கத்திலை குந்தியிருக்கக் கதைச்சுக் கொண்டிருப்பம். அவள் அடிக்கடி பதுங்கிப் பதுங்கி பாத்ரூம் போவாள். மச்சான் அறைக்கு வெளியாலை யன்னல் பக்கமாய் எங்களுக்குத் தெரியிற மாதிரி பந்தெறிஞ்சு பிடிச்சுக் கொண்டோ, புளியங் கொப்பிலை ஆடிக் கொண்டோ இருப்பான். கன பொம்பிளையள் மச்சாளை வந்து பாத்துட்டு முட்டை உழுத்தம்மா எண்டு குடுத்திட்டுப் போவினம். தண்ணி கனக்க குடிக்கக் குடுக்க மாட்டினம். அவளுக்கு ரகசியமாத் தண்ணி எடுத்துக் குடுக்கிறது, அவளுக்குப் பிடிக்காத சரக்குச் சாப்பாடுகளை ஒருத்தருக்கும் தெரியாமல் வெளியிலை வீசுகிறது எண்டு முதல் இரண்டு நாள் பம்பலாகப் போய் அடுத்த நாள் அலுப்படிக்கத் தொடங்க நானும் வீட்டுக்கு வெளியாலை மச்சானோட பந்தடிக்கப் போயிட்டன்.



கொண்டாட்டத்தண்டைக்கு அவளைத் தோய வார்த்து வடிவா வெளிக்கிடுத்திக் கொண்டு வந்து மணவறையிலை நிறையப் பரிசெல்லாம் குடுத்தது சந்தோசமாய்த்தான் இருந்துது. நல்ல காலம் பொம்பிளைப் பிள்ளையாய் பிறந்தது எண்டு கூட நினைச்சன், இண்டைக்கு எனக்கு இப்பிடி நடக்கிற வரைக்கும். (ஆம்பிளைப் பிள்ளையளுக்கு இப்பிடியில்லை எண்டு தெரியும)

இவ்வளவு நாளும் பள்ளிக்கூடத்திலையும் அப்பிடித்தான். சாமத்தியப்படுகிறதெண்டால் ஒரு கொண்டாட்டம் எண்டுதான் தெரியும், பள்ளிக்கூடத்திலை இருக்கேக்கை வெள்ளைச் சட்டையிலை சிவப்புக்கறை தெரியும், டீச்சர் அவசரமாக அந்தப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போய் பக்குவமாய் வீட்டுக்கு அனுப்பி வைப்பா. வகுப்புக் கொஞ்ச நேரம் குழம்பும், அதிலையிருந்து கொண்டாட்டம் தான். பிறகு திரும்ப பள்ளிக்கூடம் வரேக்கை பெரிய ஒரு அல்பத்தோட வருவினம். அதுக்குப் பின்னாலை இவ்வளவு பெரிய அவதி இருக்கிறதை ஒருத்தரும் வடிவாச் சொல்லேல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைக்க நினைக்க ஏன்தான் பொம்பிளையாப் பிறந்தனோ எண்டு இருக்கு. இனி விளையாட ஏலுமோ?

என்ரை அழுகைக் கதை எல்லாருக்கும் புதினமாய்க் கிடக்கு இவள் என்னத்துக்கு இப்பிடி ஆர்ப்பாட்டம் பண்ணுறாள் எண்டு அம்மா வுக்கு ஏசுகினம்.

பின் வீட்டு சாந்தி அக்கா சாமத்தியப்பட்ட நேரம் அவவும் அழுதாவாம். அப்ப டொக்ட ருக்குப் படிச்சுக் கொண்டிருந்த அவவிடை அண்ணை இது அழுகிற விசயமில்லை. பயப்பிட ஒண்டுமில்லை. எல்லாருக்கும் நடக்கி றதுதான் எண்டு அந்த உடல் மாற்றங்களைப் பற்றி விளங்கப்படுத்தி யிருக்கிறார். அவதான் எனக்கு விளங்கப்படுத்தினா. இதுக்கும் கொண்டாட்டத்துக்கும் என்ன சம்பந்தம் எண்டு எனக்கு விளங்குதில்லை.

அழுகையைச் சமாதானப்படுத்த சாமத்தியக் கொண்டாட்டம் பற்றி ஆசை காட்டினம், எந்த மேளம் பிடிப்பது, எந்தப் படக்காரனைக் கூப்பி டுவது மணவறை எதிலை வைக்கிறது, எண்டு கதைக்கக் கதைக்க எனக்கு. கோவம் ஏறுது. சேலை உடுக்க நெஞ்சு காணாது, அதுக்கு என்னெண்டு பொய்க்கோலம் போடுறது எண்டு கதைக்கேக்கை நெஞ்சு வெடிக்கிற மாதிரி அழுகை பெருக்குது.


எனக்கு இப்பிடியெல்லாம் செய்தா நான் பள்ளிக்கூடம் போகமாட்டன், வெளியிலை போக மாட்டன், எனக்கு வெக்கம் எண்டு கத்திறன்...!

சொந்தக்காரர் ஒவ்வொருத்தரா வெளிக்கிட்டுப் போகினம்.

"கண்டறியாத பிள்ளை வளர்த்து வைச்சிருக்கிறா" என்ற பேச்சு வழக்கம் போலை எதிரொலித்தது.

– கமலா வாசுகி (இலங்கை)

**ஆரதி ஓவியம்**






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்கள் சந்திப்பு மலர் ௨00௨

## - ஒரு பார்வை -



(Australia)
designed by Germani Greer

'பால்வினை' என்ற எனது கட்டுரையை எழுதுவதற்காக நான் வாசித்தவை, பால்வினைத் தொழில் மையங்களில் ஏதோ ஒரு மூலையிலேனும் கடமையாற்றுவோர், இணையத்தளம்.. என்று பலதையும் நாடினேன். அதன் பயனாக இங்கு நான் கட்டுரையில் தந்ததை விடப் பன்மடங்கு அதிகமான என்னை வதைப்பதான தகவல்களைப் பெற்றேன். இதற்கான தகவல்களைத் திரட்டும் இந்தக் காலகட்டத்தில் என்னால் வேறெதிலும் கவனம் செலுத்த முடியாதபடி மனசு ஏதோ ஒரு சோகத்தில் ஆழ்ந்து போயிருந்தது. இப்படியும் நடக்கிறதா..? இப்படியெல்லாம் சின்னஞ்சிறு சிறுமிகளும், பெண்களும் துயருறுகிறார்களா..? உலகம் இத்தனை ஏமாற்றுத் தனமும் நயவஞ்சகமும், சுயநலமும் நிறைந்ததா..? என்றெல்லாம் கேள்விகள் எனக்குள் எழுந்து கொண்டே இருந்தன. சில விடயங்களை நம்பவும் முடியாமல், நம்பித்தான் ஆக வேண்டும் என்ற நிலையில் உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் பால்வினைத் தொழிலுக்காகவும், பாலியல் துர்ப்பிரயோகத்துக்காகவும் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்ட பெண்களின் துயர்களை மனசை விட்டு அகற்றவும் முடியாமல்.. அவஸ்தைப் பட்டேன். அடிக்கடி போலந்து, தாய்லாந்து, உக்ரையின், கென்யா, சீராலியோன்... போன்ற நாட்டுப் பெண்குழந்தைகளும் அவர்களது கண்ணீரும் என் நினைவில் வந்து கொண்டே இருந்தன. என் மனதை முழுமையாக இல்லா விட்டாலும் ஓரளவுக்காவது இந்த நினைவுகளிலிருந்து விடுவித்துக் கொள்ள எனக்குச் சில மாதங்கள் தேவைப் பட்டன.

சந்திரவதனா
செல்வகுமாரன்
(ஜேர்மனி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்வுகள் கூடாத போதும் ஒருவனுடன் கூட வேண்டிய உளவலி தரும் பால்வினைத் தொழிலால் உலகளாவிய ரீதியில் பெண்கள் துன்புறும் போது அதுபற்றி நாம் பேசுவதே தப்பு என்றும், பாரதூரமான குற்றமென்றும், அருவருப்பான செயலென்றும், அதுபற்றிப் பேசுபவர்கள் பண்பற்றவர்கள், அத் தொழிலில் ஆர்வம் கொண்டவர்கள்... என்றும் எமது சமூகத்துள் பல்வேறு திசைகளிலிருந்தும் குரல்கள் எழுகின்றன.

இப்படியான - நமக்கில்லைத்தானே..! நாம் ஏன் பேச வேண்டும்..! என்ற எண்ணம் கொண்ட, உலகளாவிய ஒரு பிரச்சனை பற்றிய எந்த விதமான பிரக்ஞையுமின்றிய பெருபான்மை யானோரைக் கொண்ட, நமது தமிழ் சமூகத்தின் மத்தியில் ஏழாவது மலரான 2002ம் வருடப் பெண்கள் சந்திப்புமலர், பால்வினைத்தொழிலை மையமாகவும், கருப்பொருளாகவும் கொண்டு துணிகரமாக வெளிவந்துள்ளது.

பால்வினை பற்றிப் பேசுதலே தவறென்று கருதுவோர் மத்தியில் பால்வினை சம்பந்தமான தகவல்களைத் திரட்டுவது என்பது சுலபமான காரியமல்ல. இணையத்தளங்களில் தேடும் போதும் சரி, அது பற்றிய பத்திரிகை, சஞ்சிகை களை பொதுநூலகங்களிலோ அல்லது கடைகளிலோ பெற்றுக் கொள்ளும் போதும் சரி அவை தமிழர்கள் யாராவது கண்களில் பட்டுவிட்டால் போதும். ஒரு துச்சமான ஏளனப் பார்வை. 'இந்தளவுக்கு முன்னேறிட்டீங்களோ..?' என்பது போன்றதான அநாகரிகக் குத்தல் பேச்சு.... இந்த நிலையில் இத் தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்களோடோ அல்லது இத் தொழில் நடைபெறும் இடங்களில் கடமையாற்றுபவர்களிடமோ இவை பற்றிப் பேசித் தகவல்களை எடுக்க முனைந்தால், இன்னும் சற்று அதிகப்படியான ஏளனத்துடன் 'சமூகத்தைக் கெடுக்க வந்த பொழுதுபோக்குப் பெண்ணியவாதிகள்' என்கின்ற முத்திரை குத்தல்.... இப்படியான எத்தனையோ இடர்ப்பாடுகள்!

இவைகளின் மத்தியில் பால்வினைத் தொழிலை மையமாகவும், கருப்பொருளாகவும் கொண்டு மலரை வெளியிட நினைந்தது மட்டுமல்லாமல், நினைத்ததைச் செயற்படுத்தி யும் காட்டியது பெண்கள் சந்திப்பு மலர்க் குழு.

இத் துணிச்சலான செயற்பாடு உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பெண்கள் அடக்கப்பட்டுக் கொண்டும் ஒடுக்கப்பட்டுக் கொண்டும் இருந்தாலும் ஆங்காங்கு ஒரு சில பெண்களாவது விழிப்படைந்து விட்டதையும் தாம் நினைத்ததைச் செயற்படுத்துமளவுக்கு தன்நம்பிக்கை கொண்டு விட்டதையுமே எடுத்துக் காட்டுகிறது.

தொழில் நுட்பம், வடிவமைப்பு... என்று நோர்வே தயாநிதி, லக்சுமி. றஞ்சி போன்ற பெண்கள் உள்ளுக்குள் நின்றே உழைக்க, கவித்ரா, ஜெயந்திமாலா, கோசல்யா, சந்திரவதனா, சிந்துக்கரையாள், தீபா, தேவா, ஈஸ்வரி, ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், பாமதி, உமா, றஞ்சி, பார்வதி கந்தசாமி, அந்திரியா ட்வார்கின், நிருபா ஆகியோர் முனைந்து முனைந்து தகவல்களையெல்லாம் தேடி எடுத்து ஆக்கங்களை மிகுந்த அக்கறையுடன் தயாரித்து கட்டுரைகளாகவும், கவிதை களாகவும், கதை வடிவிலும் தந்திருந்தார்கள். அத்தனையும் பொய்மை கலக்காத உண்மைத் தகவல்கள்.

இவைகளுள் கட்டுரைகள் பால்வினைத் தொழில் பற்றிய பேச்சுக்கே முக்கியத்துவம் கொடுத்து, பால்வினைத் தொழில் பற்றிய ஏராளமான தகவல்களைத் தந்திருந்தன. பால்வினைத்தொழில் செய்பவர்களை கீழ்த்தர மானவர்களாகவே அனேகமானோர் கணிக்கி றார்கள். ஏன்..! அவர்களிடம் பணம் கொடுத்து தமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் ஆண்களும் கூட அவர்களை மிகவும் கீழ்த்தர மான ஸ்தானத்தில் வைத்துத்தான் கதைக்கி றார்கள். அந்தக் கணிப்பினூடான கண்ணோடு தான் பார்க்கிறார்கள். ஆனால் பால்வினைத் தொழில் என்பது ஆணாதிக்க சமூகத்தின் சுயநலத் தேவையின் பொருட்டு, பெண்களை அடிமை கொண்டு சுகிக்கு முகமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட தொழில் என்பதையும், பால்வினைத் தொழிலின் முக்கிய காரணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வறுமை என்பதையும் இக் கட்டுரைகளின் மூலம் எவரும் புரிந்து கொள்ளலாம். 30 வீதமான பெண்கள் வறுமையின் நிமித்தமும், 70 வீதமான பெண்கள் தரகர்களால் ஏமாற்றி அழைக்கப்பட்டு வந்து கட்டாயத்தின் பேரிலும் பால்வினைத் தொழிலைச் செய்து கொண்டிருப்பது உலகளாவிய ரீதியான கணிப்பீடு.

இம்மலரில் இடம் பிடித்திருக்கும் இக் கட்டுரைகளில் இவை பற்றிய ஆதாரபூர்வமான பல தகவல்கள் தரப்பட்டுள்ளன. வாசிக்கும் போது தலைவிறைக்குமளவுக்கு பால் வினைத் தொழில் செய்வோர் அனுபவிக்கும் துயர்கள் பற்றிப் பேசப்பட்டுள்ளன.

பால்வினைத் தொழிலை சட்டபூர்வமாக்க லாமா? என்ற தலைப்பின் கீழ் பிரெற்லெவி எழுதியதொரு கட்டுரையை தமிழில் கவித்ரா மொழிபெயர்த்துத் தந்திருந்தார். இதில் பால்வினைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் எப்படியாக ஏமாற்றப்பட்டு அழைத்து வரப்படுகிறார்கள் என்பதிலிருந்து இதை சட்டபூர்வமாக்கலாமா..? அதனாலான நன்மை தீமை என்ன என்பவை பற்றி ஆராயப் பட்டிருந்தன. பால்வினைத் தொழில் குற்றமற்ற தாக்கப்படுவது என்பதற்கு ஒரு இலகுவான விடை இல்லை என்பதும் இக் கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருந்தது.

சட்டத்தரணியான Catharine Mackinnon மற்றும் போர்ணோகிராபி எதிர்ப்புக் கோட்பாட்டாளரான Andrea Dworkin போன்ற தீவிரப் பெண்ணியலாளர்கள் பாலியல் தொழிலை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்பதையும், இன்னும் இதுசம்பந்தமான பல ஆதாரத்துடனான தகவல்களையும் 'பால்வினை தொழில் - பெண்ணிய நோக்கு" என்ற கட்டுரையின் மூலம் றஞ்சி தந்திருந்தார்.

இடைச் செருகலாக வளர்ச்சி அடைந்த நாடாக இருந்தால் என்ன..! வளர்ச்சியடையாத நாடாக இருந்தால் என்ன...! எங்கும் பெண்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கையாளப் படுகிறார்கள் என்பதையும் பெண்கள் இன்னும் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதையும் தாயகத்தில் நடைபெறும் பாலியல் துர்ப்பிரயோகங்களையும் றஞ்சி சுட்டிக்காட்டியிருந்தார்.

**4 வருடங்கள் பால்வினைத் தொழிலாளியாக இருந்த Carmen என்ற பெண், "இப்போதுள்ள அமைப்பு முறையில் நாம் கைதுசெய்யப்பட்டால் இரும்புக் கம்பிகளின் பின் தள்ளப்படுகிறோம். பாலியல் தொழிலைச் சட்ட ரீதியாக்கிய பின் நாம் முட்கம்பிகளின் பின்னால் தள்ளப் படுவோம்" என்கிறார்.**

ஜெயந்திமாலா 'பால்வினைத்தொழில் - மறுபக்கம்' என்ற தனது கட்டுரையில் உலகின் திறந்தவெளிப் பால்வினைத்தொழில் விடுதியைக் கொண்ட கியூபாக் கடற்கரை, தாய்லாந்து, சுவிஸ் போன்ற இடங்களில் எப்படியெல்லாம் பெண்கள் பயன்படுத்தப் படுகிறார்கள் என்பதை ஆய்ந்திருந்தார். தாய்லாந்தில் கட்டாயப் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்குழந்தைகள் சிறுவயதிலேயே எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகி சீரழிக்கப் படுகிறார்கள் என்பதையும் பௌத்த மதக் கோட்பாட்டைக் காரணம் காட்டி முற்பிறப்பில் அவர்கள் செய்த கர்ம வினையாலேயே இப்படி ஆனார்கள் என்ற நியாயப் படுத்தலை ஆணாதிக்க பௌத்த மதம் நியாயப் படுத்துகிறது என்பதையும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இடத்தில் நின்று நிதானித்து நாம் யதார்த்தமாகச் சிந்தித்துப் பார்ப்போமேயானால், பால்வினைத்தொழிலை முற்றாக அழிப்பது என்பது இயலாத காரியம். அப்படியிருக்கும் போது அறநெறிப் பண்புகளைக் காரணம் காட்டி அதற்கு அங்கீகாரம் வழங்க மறுப்பது ஏற்கனவே துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் கட்டாயப் பால்வினைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்களை இன்னும் துன்பச் சகதிக்குள் தள்ளுவதற்கே சமனாகும். இத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலை சட்டபூர்வமாக்கும் போது இந்தப் பாழ்ங்கிணற்றுள் கட்டாயமாகத் தள்ளி விடப்பட்ட பெண்களோ அன்றில் குழந்தை களோ எவராயினும் பயமின்றித் தமது பிரச்சினைகளையும், உள்ளுக்குள் நடைமுறைப் படுத்தப்படும் வன்முறைகளையும்... வெளியிலே சரியான இடங்களில் எடுத்துக்கூறி தம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம். தம்மை முறைப் படியான உடல் நலப் பரிசோதனைக்கு உட்படுத்தலாம். இவைகளால் எத்தனையோ விதமான நடைமுறைச் சீரழிவுகள் குறையும். இதுபற்றி கவித்ராவின் மொழிபெயர்ப்புக் கட்டுரையில் மட்டுமல்லாது இம் மலரில் இடம்பெற்ற மற்றைய அனேகமான எல்லாக் கட்டுரைகளிலும் குறிப்பிடப் பட்டிருந்தது.

இதேநேரம் ரஞ்சியின் கட்டுரையில் நான்கு வருடங்கள் பால்வினைத் தொழிலாளியாக இருந்த Carmen என்ற பெண், "இப்போதுள்ள அமைப்பு முறையில் நாம் கைது செய்யப் பட்டால் இரும்புக் கம்பிகளின் பின் தள்ளப் படுகிறோம். பாலியல் தொழிலைச் சட்டரீதி யாக்கிய பின் நாம் முட்கம்பிகளின் பின்னால் தள்ளப்படுவோம்'' என்று கூறியதும், சட்டங் களை அமுல் படுத்தும் அதிகாரிகள் எப்படிச் சட்டங்களை தமக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள் என்பது பற்றியும் குறிப்பிடப் பட்டிருந்தது.

அப்படியானால்...? பால்வினைத் தொழிலை சட்டரீதியாக்கினாலும் கூட இதனுள் வீழ்ந்த பெண்களுக்கு விமோசனம் கிடையாதா..? மீண்டும் எம்மிடம் கேள்வி எழுகிறது.

சிந்துக்கரையாளின் 'உலகமயமாக்கலும் தென்கிழக்காசியாவின் பால்வினை வர்த்தகமும்' என்ற கட்டுரையும் கவித்ராவினதைப் போல ஒரு மொழிபெயர்ப்புக் கட்டுரையே. இவர் Peoples Solidarity for Social Progress (pssp) 'என்ற மாத சஞ்சிகையில் மார்ச் 2001 இல் கொரிய மொழியில் மின்சூய் என்பவரால் எழுதப்பட்ட ஒரு கட்டுரையை மொழிபெயர்த் திருந்தார். பெண்கள் மீதான சுரண்டல் பற்றியும் 2001 இல் குன்சான் இல் உள்ள பால்வினைத் தொழிலாளர் விடுதி எரிக்கப்பட்ட போது அதற்குள் சிறைவைக்கப்பட்டிருந்த பால்வினைத் தொழிலாளிப் பெண்கள் கருகியது பற்றியும் இக் கட்டுரை கூறுகிறது. மேலும் இக் கட்டுரை யில் பால்வினைத் தொழிலாளர் பற்றியும் அவர்கள் மீதான சுரண்டல்கள் பற்றியுமான இன்னும் பல தகவல்கள் தரப்பட்டுள்ளன.

தீபா தனது 'பால்வினை -பரிணாமம்' என்ற கட்டுரையின் மூலம், முந்திய காலத்தில் பணக்கார ராஜாக்களும் வணிகர்களும் இன்னும் சுகபோக வாழ்வில் மையல் கொண்ட மானுடரும் போகும் இடமெல்லாம் சுகபோகம் காண விளைந்ததின் பயனே பால்வினைத் தொழில் தோன்றியதற்கான அடிப்படைக் காரணம் என்றும், கைசர் என்று அழைக்கப் பட்ட ஆரம்பகால விலைமாதர்கள் எப்படி உருவாக்கப் பட்டார்கள் என்பது பற்றியும் மிகவும் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தார்.

தேவா 'சில முரண்கள் -குறிப்புகள்' என்ற கட்டுரையினூடு தொழில் நிலையங்களில் பாலியல் வன்முறை... மதம் சார் பால்வினைத் தொழில்... அரசுசார் பாலியல் வன்முறை, குடும்ப வறுமை காரணமாக பெற்றோர்களால் பால்வினைத் தொழிலுக்கு விற்கப்படும் பிள்ளைகளின் அவலம்... என்று பல விடயங்களைத் தொட்டிருந்தார். குறிப்பாக தமிழ்ச் சமூகங்களில் பாலியல் என்பது ஆணுக்கான ஒரு விடயமாகக் கருதப்பட்டு, பெண்ணுக்கு அதுபற்றியதான எந்த அறிவும் கொடுக்கப்படாமல், அது தெரியாமல் இருப்பதுதான் பெண்ணுக்கு அழகு என்னும் விதமாக வளர்க்கப்படுவது பற்றியும், அவள் உடல் பாலியல் உறுப்பு என்பவைகளை கருத்தில் வைத்தே சடங்குகளும் சம்பிரதாயங்க ளும் நடாத்தப்படுவது பற்றியும் குறிப்பிட் டிருந்தார். இவரது எழுத்தில் தமிழ்ச் சமூகத்தின் மூடுமந்திரத் தன்மையின் மீதான இவருள்ளான கோபம் தெரிந்தது.

உமா 'மானிடராய் வாழ...' என்ற கட்டுரை மூலம் எங்கெங்கெல்லாம் பால்வினைத் தொழிலைச் சட்ட பூர்வமாக்கப் படுவதற்கான கோஷங்கள் எழுகின்றன, எங்கெங்கெல்லாம் பால்வினைத் தொழிலைச் சட்ட பூர்வமாக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுள்ளார்கள், எங்கெங்கெல்லாம் மறுக்கப்படு கின்றன என்பது பற்றியும், பெண்கள் மீதான ஆண்களின் பாலியல் சுரண்டல்கள் பற்றியும், ஆணாதிக்க சமுதாயத்தை நிலை நிறுத்து வதற்கான முக்கிய கூறாகவே பெண்ணொடுக்கு முறை இருப்பது போலவே இச் சமுதாயத்தில் பால்வினைத் தொழிலாளர்களின் பங்கும் ஆணாதிக்கத்தின் ஸ்திரத் தன்மையுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை யும் குறிப்பிட்டிருந்தார்.

பார்வதி கந்தசாமி 'பாலியல் சிக்கல்களா? உரிமைமறுப்புக் களா?'என்ற கட்டுரை மூலம் தமிழ்ச் சமூகத்தில் எப்படியெல்லாம் ஆண்கள் மேன்மைப் படுத்தப்பட்டு, பெண்கள் தாழ்த்தப் படுகிறார்கள் என்பதையும் அதனாலான பிரதிபலிப்பு களையும், அதனால் பெண்கள் தாங்கிக் கொண்டுள்ள அசௌகரியங்களையும் சற்றுக் கோபமாகச் சுட்டியிருந்தார்.

மேலும் மிக்சிக்கன் சட்டக்கல்லூரியில் 'பால்வினைத் தொழில் -சர்வகலாசாலையில் இருந்து செயற்பாட்டுக்கு' என்ற தலைப்பின் கீழ் அந்திரியா ட்வார்கின் (Andrea Kworkin) ஆற்றிய உரையொன்று மொழிமாற்றம் செய்யப்பட்டு 'பால்வினைத் தொழிலும் ஆண் மேலாதிக்கமும்' என்ற தலைப்பில் தரப்பட்டிருந்தது.

இக் கட்டுரைகளின் நடுவே எனது கட்டுரை யான 'பால்வினை' என்ற கட்டுரையும் இம்மலரில் இடம்பெற்றிருந்தது. நான் எழுதிய கட்டுரைக்கு நானே வியாக்கியானம் சொல்ல முடியாது. ஆனாலும் அந்தக் கட்டுரையை எழுதுவதற்காக நான் வாசிகசாலை, பால் வினைத் தொழில் மையங்களில் ஏதோ ஒரு மூலையிலேனும் கடமையாற்றுவோர், இணை யத்தளம்.. என்று பலதையும் நாடினேன். அதன் பயனாக இங்கு நான் கட்டுரையில் தந்ததை விடப் பன்மடங்கு அதிகமான என்னை வதைப்பதான தகவல்களைப் பெற்றேன். இதற்கான தகவல்களைத் திரட்டும் இந்தக் காலகட்டத்தில் என்னால் வேறெதிலும் கவனம் செலுத்த முடியாதபடி மனசு ஏதோ ஒரு சோகத்தில் ஆழ்ந்து போயிருந்தது. இப்படியும் நடக்கிறதா..? இப்படியெல்லாம் சின்னஞ்சிறு சிறுமிகளும், பெண்களும் துயருறுகிறார்களா..? உலகம் இத்தனை ஏமாற்றுத் தனமும் நயவஞ்சகமும், சுயநலமும் நிறைந்ததா..?

**ஏன் ஐரோப்பியப் பெண்களுக்கு மட்டுந்தான் சுதந்திர உணர்வுகள் உள்ளதா? நாமெல்லாம் என்ன ஜடங்களா? உலகின் அதி புரதான தொழில் ஒன்றினால் பெண்கள் மீது அதி உச்ச அடிமைத்தனத்தை உலகம் பிரயோகித்துக் கொண்டு இருக்கும் போது பெண்கள் நாம் பேசாதிருக்கலாமா?**

என்றெல்லாம் கேள்விகள் எனக்குள் எழுந்து கொண்டே இருந்தன. சில விடயங்களை நம்பவும் முடியாமல், நம்பித்தான் ஆக வேண்டும் என்ற நிலையில் உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் பால்வினைத் தொழிலுக்காகவும், பாலியல் துர்ப்பிரயோகத் துக்காகவும் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்ட பெண்களின் துயர்களை மனசை விட்டு அகற்றவும் முடியாமல்.. அவஸ்தைப் பட்டேன். அடிக்கடி போலந்து, தாய்லாந்து, உக்ரையின், கென்யா, சீராலியோன்... போன்ற நாட்டுப் பெண்குழந்தைகளும் அவர்களது கண்ணீரும் என் நினைவில் வந்து கொண்டே இருந்தன. என் மனதை முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது இந்த நினைவுகளிலிருந்து விடுவித்துக் கொள்ள எனக்குச் சில மாதங்கள் தேவைப் பட்டன.

நிருபாவினது 'பயந்தாங்கொள்ளி' யும், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்களின் 'சென்னையில் ஒரு சின்ன வீடும்' பால்வினைத் தொழில் பற்றிப் பேசாவிட்டாலும், பாலியல் துர்ப்பிரயோகம் பற்றிப் பேசின. இரண்டுமே வெவ்வேறு கோணங்களிலான கதை வடிவங் களில் தரப்பட்டிருந்தாலும் உள்ளடக்கம் சிறுமிகள் மீதான பாலியல் துர்ப்பிரயோகம் சம்பந்தமானதாகவே இருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதை சொல்லும் உத்தி நிருபாவுக்குக் கை வந்த கலை. எப்படியெல்லாம் எழுதுகிறார்..! வியக்க வைக்கிறார். யதார்த்தம்.. முழுக்க முழுக்க யதார்த்தம். கதையின் நடை, வார்த்தைப் பிரயோகம்... சொல்லும் விடயங்கள் அத்தனையிலும் யதார்த்தம் ஒட்டியுள்ளது. பல சிறுமிகளின் வாழ்வுகள் எப்படி நகர்கின்றன என்பது பலருக்குத் தெரியாது. சொல்லப் படாமலே, எழுதப் படாமலே மனசுக்குள்ளே விழித்திருக்கும் அந்த அருவருப்புகளை பயந்தாங்கொள்ளியில் வரும் கதாநாயகியான அந்தச் சிறுமி அனுபவித்திருக்கிறாள். எத்தனையோ விடயங்களை சிறுமியாக இருந்து பார்த்திருக்கிறாள். கதையிலே வரும் மலரக்கா வினதும் விக்கியினதும் தொடர்பை அவள் அந்த வயதில் விளங்கிக் கொண்ட விதத்தையும், அந்த விக்கியாலேயே அவள் பாலியல் துர்ப்பிரயோகத்துக்கு ஆளாகிறாள் என்பதையும், ஆனால் இதில் எதையும் அவள் வெளியில் சொல்ல முடியாத படிக்கு பேய் பிசாசு என்று பயமுறுத்தப் பட்டுள்ளாள் என்பது மட்டுமல்லாமல் இப்படியான விடயங்களை எல்லாம் மனம் விட்டுப் பேசுமளவுக்கு அவள் தாயோ, ஆச்சியோ இடம் கொடுப்பதில்லை என்பதையும் நிருபா மிகவும் தத்ரூபமான முறையில் சொல்லியுள்ளார். ஆச்சிக்கு எப்பவும் அயதி. மழை பெஞ்சுதெண்டால்.. என்று நிருபாவின் பிறப்பிடம் வடமராட்சியோ என்று எண்ணும் அளவுக்கு, வடமராட்சி மண்ணின் தமிழ் வாசனையைக் கலந்து அடுக்கிக் கொண்டே போகிறார்.

நிருபாவின் கதையை வெறும் கதையாகக் கருத முடியாது. ஒரு உண்மையின் பிரதி பலிப்பு. இப்படியான விடயங்கள் அன்று மட்டுமல்ல. இன்றும் தொடர்கின்றன. இதைப் பெரும்பாலானவர்கள் ஏற்க மறுத்தாலும் லண்டனில் சமூகநலப் பணியில் ஈடுபட்டிருக்கும் ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் 'சென்னையில் ஒரு சின்ன வீடு' என்ற கதை வடிவிலான ஆக்கம் உண்மை என்று அத்தாட்சிப் படுத்துகின்றது. சாந்தி என்ற பெண்குழந்தை தனது பன்னிரண்டாவது வயதிலேயே அவளது தாய்மாமனால் சிதைக்கப் படுகிறாள். அவள் சிதைக்கப் பட்டதோ அல்லது தொடர்ந்தும் அவள் பாலியல் துர்ப்பிரயோகத்துக்கு ஆளாகிக்கொண்டிருப்பதோ அவளது தாய்க்குத் தெரியாது. அல்லது புரியவில்லை. அல்லது புரிந்தும் அது பற்றிப் பேசவோ, நடந்ததை ஒப்புக் கொள்ளவோ தைரியமில்லை. எத்தனையோ விதமாகக் கலாச்சாரம் பண்பாடு என்று பேசிக் கொண்டிருக்கும் எமது சமூகத்துக்குள்ளும் இப்படியான கொடுமைகள் நடக்கின்றன. அவைகளும் வீட்டுக்குள்தான் கூடுதலாக நடக்கின்றன. இதை ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்கள் தனது ஆதங்கம் நிறைந்த வரிகளால் மனதைத் தொடும் படியாகச் சொல்லியுள்ளார்.

இதே கருத்தை அதாவது குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் மிக நெருங்கிய உறவுகளாலேயே நிகழ்த்தப் படுகிறது என்பதை பார்வதி கந்தசாமியும் தனது கட்டுரையில் சுட்டியிருந்தார்.

இன்னும் விலங்கிடாப் பெண் என்ற கவிதை மூலம் கோசல்யாவும்,

எய்ட்ஸ் நீ வாழ்க என்ற கவிதை மூலம் ஈஸ்வரியும்

தலைப்பிடப் படாத கவிதை ஒன்றின் மூலம் பாமதியும்

தத்தமது உணர்வுகளை அழகாக வெளிப் படுத்தியிருந்தார்கள்.

மிகுந்த சர்ச்சைக்குள்ளான, பெண்கள் சந்திப்புமலரின் அட்டைப்படத்தை அவுஸ்திரேலி யாவைச் சேர்ந்த பெண்களுக்காகக் குரல் கொடுத்த Germani Greer வரைந்திருந் தார். இப்படம் 1970ம் ஆண்டு முதற் தடவையாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தாலும், 1981 Granada publication, லண்டன் என்ற அமைப்பினால் The female eunach என்ற பெண்கள் சஞ்சிகையில் மீண்டும் பிரசுரிக்கப்பட்டது. ஆனாலும் இந்தப் படத்தை பெண்கள் சந்திப்பு மலரின் அட்டைப் படமாக்கிய போது இதையும் பிரசுரிக்கலாமா..? என்ற கருத்துப்பட குற்றப் பட்டியல் தயாரித்து வைத்துக் கொண்டு ஆர்ப்பரித்தவர்கள் பலர். ஆர்ப்பரித்தவர்களில் ஆண்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட பெண்கள்தான் அதிக பங்கு வகித்தனர் என்பதுதான் வருத்தத்துக்குரிய விடயம். நியத்தில் பெண்களின் சுயம் வதைபட்டுக் கொண்டிருக்கும் போது அதுபற்றி வருத்தப் படாதவர்கள், படத்தில் வந்த உள்ளாடைக்காகக் குதித்தார்கள். அது ஒரு ஓவியம் என்பதை அவதானிக்கக் கூட முயலாமல் கூச்சலிட்டார்கள்.

தன் முகம் காட்ட துணிவற்ற ஒரு பெண் எழுத்தாளர் நிலவன் என்ற பெயரில் இணையத்தளமொன்றில் இப்படி எழுதியிருந்தார்,

''அண்மையில் பாலவினைத் தொழிலாளர் எனும் நூலொன்று வெளிவந்துள்ளது. எனக்கும் பார்க்கக் கிடைத்தது. புத்தகத்தை நண்பர் நிச்சயம் படிக்கும்படி வலியுறுத்தியதனால் நானும் வாங்கிப் படித்தேன். புத்தகத்தைக் கையில் எடுத்தவுடன் இது எமது பெண்களால் வெளியிடப்பட்டதா? அல்லது ஐரோப்பியரது வெளியீடா என எண்ணவைத்தது. அப்படியொரு அட்டைப்படம். இதிலிருந்து எமது பெண்ணிய வளர்ச்சியை மதிப்பிடக் கூடியதாக இருந்தது. இதில்.உமா (ஜேர்மனி), றஞ்சி (சுவிஸ்), சந்திரவதனா செல்வகுமாரன்(ஜேர்மனி), சிந்துக்கரையாள், பார்வதி கந்தசாமி, ஜெயந்திமாலா குணசீலன், தேவா(ஜேர்மனி), ராஜேஸ்வரி போன்ற படைப்பாளர்கள் எழுதியுள்ளார். இப் பாலவினைத் தொழிலாளர் நூலில் அடக்கப்பட்ட விடயங்கள் மிகுந்த சர்ச்சையை உண்டுபண்ணும் விடயங்களாக உள்ளன. அதனை முன்னட்டைப்படமே சொல்கிறது. இதில் எழுதியுள்ள பெண்களில் எத்தனைபேர் நல்ல தெளிந்த பெண்ணியச் சிந்தனைகளுடன் உள்ளார்கள் என்று ஆராய்ந்தால் பூச்சியமே விடையாகக் கிடைக்கும் என்பது என் தனிப்பட்ட கருத்து. இது பெண்ணியத்துக்கோ அல்லது பெண்விடுதலைக்கோ எதிரான குரலாக யாரும் தூக்கவேண்டாம். ஏனெனில் இந்நூலில் பேசப்பட்டுள்ள விடயம் எமது பெண்களுக்கான பிரச்சினையாக இல்லை. நமது உரிமைகளை நாமே தவறாகப் பயன்படுத்தி ஒரு நல்ல சமூகத்தின் சிந்தனைகளின் மீது குப்பையை வாரக்கூடாது,, என எழுதியுள்ளார்.

அட்டைப் படத்துக்கும் பெண்எழுத்தாளர் களின் வளர்ச்சிக்கும் முடிச்சுப் போட முனைந்த இவரது அறியாமையை என்ன சொல்ல. ஆண்களில்தான் சிலர் பெண்விடுதலை பற்றிப் பேசினாலே 'ஐரோப்பியக் கலாச்சாரம்' என்று சொல்கிறார்கள் என்று பார்த்தால், ஒரு அட்டைப் படத்தைப் பார்த்து இது ஐரோப்பிய வெளியீடா...! என்று விழிக்கும் பெண்கள் மத்தியில் என்ன செய்யலாம்? ஏன் ஐரோப்பிய பெண் களுக்கு மட்டுந்தான் சுதந்திர உணர்வு கள் உள்ளதா? நாமெல்லாம் என்ன ஜடங்களா? உலகின் அதி புரதான தொழில் ஒன்றினால் பெண்கள் மீது அதி உச்ச அடிமைத் தனத்தை உலகம் பிரயோகித்துக் கொண்டு இருக்கும் போது பெண்கள் நாம் பேசாதிருக்கலாமா? என்பதான கேள்விகள் எம்முன் எழும்போது...

**குறிப்பு:**
**2003ம் ஆண்டு சுவிஸில் நடைபெற்ற பெண்கள் சந்திப்பில் இந்த விமர்சனம் வாசிக்கப்பட்டது.**

நாம் பேசத்தான் வேண்டும் என்கின்றன
பெண்கள்சந்திப்பு மலரில்
இடம்பிடித்துள்ள
ஆக்கங்களும் தகவல்களும்!
(30.9.2003)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# யுத்தம்

வசந்த காலம்
காற்றினால் காவிச்செல்லப்பட்டு
கொலை செய்யப்பட்டது.

பிரபஞ்ச வெளிகள் எல்லாம்
குருதித் தடயங்கள்
புறநிலைக்குள்ளும்
அகநிலைக்குள்ளும்
அவலக் கதறல்

எங்கும் எழுந்து எரிகின்றது நெருப்பு
வெடித்துச் சிதறுகின்றது உயிர்கள்
துடித்துப்பிரிகின்றது இயக்கம்
உடைந்து அமிழ்கின்றது தேசம்
சுருள் சுருளாய் கருமலைப் பாம்பாய்
திசைதேடிச்சென்றது
அகதிக்காற்று
அண்டம் எங்கும்
சிதறி ஓடியது
மனிதம் மனிதம்




பாமதி (அவுஸ்திரேலியா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்